# இந்து நாகரிகம்

## தரம் 12

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

# ,eJ ehfupfk

## juk - 12

## Mrpupau mwpT iugG topfhlb

Njrpa fytp epWtfk
,yqif
2009

**இந்து நாகரிகம்**
**தரம் - 12**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

**முதற் பதிப்பு - 2009**

**சமயக் கல்வித் துறை**
**மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

**பதிப்பு:**

# முகவுரை

2007 ஆம் ஆண்டில் 6 ஆம் 7 ஆந் தரங்களில் அறிமுகஞ் செய்யப்பட்ட, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட, கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை, படிப்படியாக, அடுத்தடுத்த வருடங்களில் 7 ஆம் 11 ஆம் மற்றும் 8 ஆந் தரக் கலைத்திட்டங்கள் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டது. 2009 இல் க.பொ.த. உயர்தர வகுப்புகளிலும் அவ்வணுகு முறையை விரிவுபடுத்துவதில் தேசிய கல்வி நிறுவக கலைத்திட்டம் வகுப்போர் வெற்றி கண்டுள்ளனர். எனவே, 12 ஆம் 13 ஆந் தரங்களின் பல்வேறு பாடங்களுக்கும் உரிய பாடத்திட்டங்களிலும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலும் மாணவரிடத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன தொடர்பான விரிவான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள், தங்கள் பாடம் தொடர்பான கற்றல் - கற்பித்தல் சந்தர்ப்பங்களை வகுத்துக் கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு உறுதுணையாக அமையும்.

கலைத்திட்டம் வகுப்போரால் கனிஷ்ட இடைநிலை (6 - 9), சிரேஷ்ட இடைநிலைத் (10-11) தரங்களுக்கு உரிய கலைத்திட்டங்களைத் தயாரிப்பதற்காகக் கையாண்ட அணுகுமுறையிலும் பார்க்க க.பொ.த. உயர்தர பாடங்களுக்காக, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்காக, வேறுபட்ட ஓர் அணுகுமுறை அனுசரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். 6, 7, 8, 9, 10, 11 ஆந் தரங்களில் பாட விடயங்களைக் கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் தொடர்பாக ஆசிரியர்கள் குறித்த மாதிரி ஒன்றின்பால் வழிப்படுத்தப்பட்டனர்.

க.பொ.த. உயர்தர வகுப்புக்குரிய பாடத்திட்டங்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி களும் ஆசிரியர்களுக்கு தமது விருப்பின்படி செயற்படுவதற்கான சுதந்திரத்தை உயரிய மட்டத்தில் அனுபவிப்பதற்கு இடமளிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பாட அலகுக்கு அல்லது பாடத்துக்கு (lesson) உரிய தேர்ச்சியையும், தேர்ச்சி மட்டத்தையும் விருத்தி செய்வதற்காக, உத்தேச கற்றல் முறைகளையும், தாம் விரும்பும் முறைகளையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதே இம்மட்டத்தில் ஆசிரியர் ஊடாக எதிர்பார்க் கப்படுகின்றது. தாம் பயன்படுத்தும் கற்பித்தல் அணுகுமுறையை வெற்றிகரமான வகையில் பிரயோகித்து மாணவர்களை உத்தேச தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் என்பவற்றின்பால் இட்டுச் செல்லும் பணியை ஆசிரியர்கள் குறைவேதும் இன்றி நிறைவேற்றுதல் வேண்டும். க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முக்கியத்துவம், அப்பரீட்சை தொடர்பாக கல்வித் துறையைச் சேர்ந்த சகலரும் காட்டும் கரிசனை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே ஆசிரியருக்கு இவ்வாறான சுதந்திரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஒரு கைந்நூலாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். எமது பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்கு, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல்களும் முறைகளும் அறிவுறுத்தல்களும் எமது ஆசிரியர்களுக்குச் சரியாக வழிகாட்டும் என பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
08.06.2009

# முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 12 ஆந் தரத்திற்குரிய கற்றல் - கற்பித்தற் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்கு துணையாக அமையும்.

இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறு பாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை அதற்காக நீண்ட காலம் எடுக்கலாம். எனினும் தேர்ச்சி மட்டங்களையும் அந்தந்த தேர்ச்சி மட்டத்தின் கீழ் தரப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்துக்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணை யாகும். இக் கற்றற்பேறுகளை கற்றல் - கற்பித்தற் செயல்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கு மான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்து, கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும், இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணையத் தளங்கள் (Web Side) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

நீங்கள் ஆக்கபூர்வமான ஓர் ஆசிரியர்களாகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனே உத்தேசச் செயற்பாடுகள் இங்கு மாதிரி செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் மைய வகுப்பறைச் செயன்முறையை மாணவர் மையச் செயன்முறையாக மாற்றியமைத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களின்பால் மாணவரை இட்டுச் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் கவனம் செலுத்தல் வேண்டும். கற்பித்தலின்போது, மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலாக, கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலான வற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழினுட்பத்தை உச்ச அளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழினுட்பச் சாதனங்களை இயன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

இப்பாடத்தை 12 ஆந் தரத்தில் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு, இப் பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல் - கற்பித்தல் திட்டங்களை அறிமுகஞ் செய்வதால்

கற்றலின்பால் சகல மாணவர்களதும் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும், முழுப் பாடத் திட்டத்தையும் கற்பதற்காக மாணவர்களைப் பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பின் ஊடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் தெள்ளத்தெளிவான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத் திட்டத்தையும், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்வி மான்களுக்கும் ஆசிரியர்களுக்கும், தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் பேராசிரியர். லால் பெரேரா அவர்களுக்கும் அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றி உடையவன் ஆவேன்.

**விமல் சியம்பலாகொட,**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

தேசிய கல்வி நிறுவக இந்து சமயத் துறையின் ஊடாக தரம் - 12 இந்து நாகரிக புதிய பாடத்திட்டத்திற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரித்து, பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியை அடைகின்றோம்.

பாடசாலைகளில் சமய பாடம் கலைத்துறைப் பாடமாகக் கொள்ளப்பட்டாலும், வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுக்கும் விடயங்கள் பல அதில் உள்ளன. அதனாற் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாத் துறையினரும் இந்து நாகரிக பாடத்தைக் கற்க முன்வர வேண்டும். இதற்கு இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பண சிந்தனை, முயற்சி என்பன தேவை. அவ்வகையில் இப்பாடத்தை மாணவர் விருப்புடன் பயிலக்கூடியதாக ஆசிரியரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படு கின்றது. இப்பாடம் பரீட்சைக்குரியது மட்டுமன்றி முழுவாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது இரண்டு பகுதிகளைக் கொண்டது.

- விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு

என்பன அவையாகும்.

மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூலின் முதற்பகுதி அமைகின்றது. இவை யாவும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டலையே வழங்குகின்றன. எனவே, ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைக்கும் ஏற்றதான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு பூரண உரிமை உண்டு.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் கற்றல் - கற்பித்தற் செயற் பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்குரிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் தவணைக்கு மூன்று என்ற ரீதியில் தரம் - 12 க்கு 9 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கணிப்பீட்டுக் கருவிகள், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரிவதுடன், குழுச் செயற்பாடு, ஆய்வுகள் என்பவற்றுக்கும் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றின் விருத்திக்கும் இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : **பேராசிரியர். லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
**திரு. விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு,
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு** : **கலாநிதி மாபுல்கொட சுமணரத்ன தேரர்**
பணிப்பாளர்,
சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்** : **செல்வி. வ. விஜயலெட்சுமி**
பிரதான செயற்திட்ட அதிகாரி,
சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை** : **பேராசிரியர். வை. கனகரத்தினம்**
தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
**திருமதி. நா. செல்வநாயகம்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
**திரு. எஸ். முகுந்தன்**
விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

**எழுத்தாளர் குழு** : **திரு. பெ. பேரின்பராசா**
ஆசிரியர், மட் / களுதாவளை ம.வி.
**திரு. செ. கமலநாதன்**
ஆசிரியர், மட் / செட்டிபாளையம் ம.வி.
**திரு. ந. பத்மானந்தன்**
அதிபர், புத் / உடப்பு த.ம.வி.
**திரு. அ. சிவலிங்கம்**
ஆசிரிய ஆலோசகர், நுவரெலியா கல்வி வலயம்.
**செல்வி. எஸ். நிசாந்தினி**
ஆசிரியர், மட் / கிரான் ம.வி.
**செல்வி. வ. விஜயலெட்சுமி**
பிரதான செயற்திட்ட அதிகாரி,
சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**பதிப்பு** : **செல்வி. வ. விஜயலெட்சுமி**
பிரதான செயற்திட்ட அதிகாரி,
சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**கணினித் தொழினுட்பம்** : **செல்வி. கமலவேணி கந்தையா**
விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்.

**காரியாலய உதவி** : **திருமதி. எஸ். சி. பிரியதர்ஷினி**
சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
**திரு. ஐ. ஜி. போஜித**
சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

# உள்ளடக்கம்


| **விடயம்** | **பக்கம்** |
| --- | --- |
| முகவுரை | iii |
| முன்னுரை | iv |
| அறிமுகம் | vi |
| எழுத்தாளர் குழு | viii |
| 1. விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர் | 01 |
| 2. பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் | 147 |
| 3. பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்கருவிகள் | 150 |

**தேர்ச்சி 1.0 :** இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.1 :** நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களை யும், அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் அறிந்து, அவற்றைப் பேணி நடப்பர்.

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**

- நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங் களை அறிந்து கூறுவர்.
- நாகரிகம், பண்பாடு என்பவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் வேறுபாடுகளையும் பட்டியற்படுத்திக் காட்டுவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி : 1.1.1 நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கம்

## இந்து நாகரிக வரலாற்றின் பொருள் விளக்கம்:

- இந்து நாகரிக வரலாற்றில் அரசியல் வரலாறு, பொருளாதார வரலாறு என்பவற்றை விட பண்பாட்டு வரலாறே கூடுதலாக மேலோங்கி நிற்கின்றது. பண்பாட்டுப் பகிர்வால் சமய நெறிகளும் தத்துவக் கோட்பாடுகளும் பல்கிப் பெருகியுள்ளன.

- **culture** (பண்பாடு) எனும் ஆங்கிலச் சொல், இலத்தீன் சொல் அடியிலிருந்து தோன்றியது. விவசாயம் - மண்ணைப் பண்படுத்தல் எனும் சொல்லிலிருந்து **Agriculture** என்ற சொல் பிறந்தது. மண்ணை விவசாயத்திற்குப் பண்படுத்தல் போல வாழ்வியலுக்கு **மனதினைப் பண்படுத்தல் பண்பாடு** ஆகும். **culture** என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ரி. கே. சிதம்பரநாத முதலியார் பண்பாடு என்னும் பதத்தை முதன்முதலில் பிரயோகித்தார். ஆயினும், பழந்தமிழ் இலக்கியங்களில் **சால்பு** என்ற பதம் இதனைச் சுட்டுவதாகவே உள்ளது.

### பண்பாடு பற்றிய வரைவிலக்கணங்கள்:

- பண்பாடு பற்றி பலவிதமான வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள், ஒரு சமூகத்தின் உறுப்பினரின் அறிவு நலம், கருத்து நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய ஒரு நடைமுறையே பண்பாடு ஆகும் எனவும்,

- பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம் என்பவற்றின் முழுமைத் தொகுதியாகும் எனவும்,

- பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்று அறியப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் குறிக்கும் எனவும் கூறப்படுகின்றது. பண்பாட்டில் உள்ளடங்கும் கூறுகளில் சமயம் முக்கியமானது.

## பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு

### T.S. எலியட்டின் கூற்று

பண்பாட்டின் அமைப்பையும் மீட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரதான காரணியாக சமயம் விளங்கும். இந்துப் பண்பாடு, இந்துக்களின் மரபுவழியான வாழ்வியலுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கின்றது.

1. பண்பாட்டு மரபுகள்
2. பண்பாட்டு வாழ்வு

இவை இரண்டும் இந்துப் பண்பாட்டில் பிரதானமானவையாகும். விழுமியப் பண்புகளை நூல்களில் இருந்து கற்பது பற்றியும் அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பது பற்றியும் இந்துப் பண்பாடு வலியுறுத்துகின்றது.

இந்து சமய நூல்களான வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், பன்னிரு திருமுறைகள், ஆழ்வார் பிரபந்தங்கள் அனைத்தும் இந்துக்களைப் பண்படுத்தும் சாதனங்களாகவே அமைந்துள்ளன.

இவ்வாறு நோக்குகையில் இந்து ஒருவரால் இந்து சமூகத்திற்கு கையளிக்கும் மரபுகள், நம்பிக்கைகள் என்பனவும் இந்து சமூகம் தனி ஒருவருக்காக ஒப்படைக்கும் பண்பாட்டம்சங் களும் பண்பாட்டில் பிரதானமானதாக இடம் பெறும்.

## நாகரிகம் என்பதன் வரையறை

**CIVITAS** இலிருந்து **CITIZEN** என்பதும், இதில் இருந்து **CIVILIZATION** என்னும் ஆங்கில சொல்லும் உருவானது. இது இலத்தீன் சொல்லில் இருந்தே உருவானது.

நகர மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பது நாகரிகமாகும். இதனை நகர் + அகம் எனப் பிரித்து நோக்கலாம். தமிழில் **நாகரிகம்** என்ற சொல் முதலில் வந்தது திருக்குறளிலே ஆகும்.

## பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடு

உ - ம்:

- பண்பாடு அகவயமானது. நாகரிகம் அகவயமானதும் புறவயமானதும் ஆகும்.
- பண்பாட்டின் உட்கூறுகள் வெளிப்படுத்தப்படுகையில், அது நாகரிகமாகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

- இந்து சமய முறைகளைக் கையாண்டு, தமது பிரதேசத்திலும், சமூகத்திலும் இடம் பெறும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு பண்புத்தரம் மிக்க முடிவினை முன்வைப்பர்.

**படி I** : பண்பாடு என்னும் விடயப்பரப்பில் உள்ள ஒரு பகுதியைத் தெரிவு செய்து மாணவர்களைக் கவரும் விதத்தில் முன்வையுங்கள்.

**படி II** : மாணவர்களை இரு குழுக்களாக்கி நாகரிகம், பண்பாடு என்னும் இரு விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்குமாறு வழிப்படுத்துங்கள்.

**படி III** : ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் வீதம் தாம் தேடித் தொகுத்த தகவல்களை முன்வைக்க இடமளியுங்கள்.

**படி IV** : முன்வைத்த விடயங்களை ஒழுங்குபடத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்தச் செய்யுங்கள்.

**உசாத் துணைகள்:**

| | | |
|---|---|---|
| வியத்தகு இந்தியா | - | ஏ. எல். பசாம் |
| இந்தியாவின் பண்பாட்டு வரலாறு ஓர் அறிமுகம் | - | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| இந்தியாவின் சிறப்பு வரலாறு | - | மஜுந்தார் |

**தேர்ச்சி 1.0** : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களை நூலாதாரங்களுடன் விளங்கி, வெளிப்படுத்துவர்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்:**

- ஏனைய பண்பாடுகளுடன் இந்துப் பண்பாட்டம்சங்களை ஒப்பிடுவர்.
- உலகப் பொதுமைக்கான ஒழுக்கக் கருத்துக்களை தோத்திரப் பாடலாதாரங்கள் மூலம் எடுத்துக்காட்டுவர்.
- இந்துப் பண்பாட்டில் அறியவேண்டிய பொருள் மரபினை சமயம், கிரியை, பண்பாடு, கலை, தத்துவம் என வேறு பிரித்துக் கூறுவர்.
- இந்துப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் இலக்கியங்களைப் பாடி இரசிப்பர்.
- ஏனைய சமய நூல்களின் கருத்துக்களை, இந்து இலக்கியக் கருத்துக்களுடன் ஒப்பிட்டு நோக்குவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 1.2.1 இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்**

- உலகின் பல்வகை சமயப் பண்பாடுகளிலே இந்துப் பண்பாடு தனித்துவமானது; சிறப்புத்தன்மை வாய்ந்தது. அத்தகைய தனித்துவமான பண்பாட்டுக்கூறுகளே இந்துமதம் எனும் பெருவிருட்சம் இன்றும் உலகப்புகழ் பெறக் காரணம் எனக் குறிப்பிட முடியும்.
- வைதிகநெறியின் அடிப்படையில் இறை உண்மை, இறை நம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழ்தல்.
- மானுட ஆற்றலை விட இறை ஆற்றலே மேலானது என்னும் கருத்துக்கள்.
- வாழ்வியல் தர்மத்தை வாழ்க்கை விதிகளாக எடுத்துக்காட்டியுள்ளமை. இதற்கு ஆச்சிரம தர்ம வாழ்வு, புருடார்த்தங்கள் என்பன சான்றாகும்.
- பண்பாட்டின் பரிணாமங்களான சமூகம், சமயம், தத்துவம், கலை, அரசியல், அறிவியல் என்பவற்றில் இந்துப் பண்பாட்டின் சிறப்புக்களை அவதானிக்கலாம். இந்துப் பண்பாடு திட்டமான மூல நூல்கள் சாத்திரமயப்படுத்தப்பட்டு, அமையப்பெற்ற சிறப்பு வாய்ந்தது. (உ-ம்: அரசியல் - அர்த்தசாத்திரம்)
- இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்துள்ள முறைமை மேலும் சிறப்பானது. சைவசித்தாந்தமானது, சமய வாழ்வியல் தத்துவமாகவும் அறிவியல், உளவியல் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.
- இந்துப் பண்பாடு அறிவியல், வானியல், வைத்தியம் முதலிய துறைகளையும் உள்ளடக்கி இருப்பதால் உலகளாவிய பெருமை இதற்கு உண்டு.
- சனாதன தர்மமாக விளங்குகின்றது. மண்ணில் நல்லவண்ணம் வாழும் எண்ணங்களை பதிவுசெய்த இலக்கியங்கள் இந்து ரிஷிகளால் படைக்கப்பட்டுள்ளன. பிறர் நலம், பிறருக்கான பிரார்த்தனைகள், விருந்தோம்பல் உணர்வுகள் என்பன சமயமாக, வாழ்வாதாரமாக, தர்மமாக இந்துப் பண்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவில் பல்பண்பாட்டுச் சங்கமத்தை எடுத்துக்காட்டும் பெருமையும் இந்துப் பண்பாட்டிற்கு உண்டு. வடமொழிக் கலாசாரம், தமிழ்க் கலாசாரம் என்பவற்றின் பிணைப்பை அங்கு அவதானிக்க முடியும்.
- உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களை உள்ளடக்கிய சிறப்பும் இந்துப் பண்பாட்டிற்குண்டு.
- உலக விடுதலைக்கான வேண்டுதல்கள் நாளாந்தம் ஆலயங்களிலே ஒலிக்கின்றன. ‘‘வான்முகில் வழாது பெய்க...’’ என்னும் பாடலில் குறைவிலாது உயிர்கள் வாழ வழிகாட்டும் சைவநீதிக் கருத்துக்கள் பிரதானமானவையாகும்.
- பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்துப் பண்பாடு. ‘‘கடமையைச் செய்; பயனை எதிர்பாராதே’’ என்றும், ‘‘என்கடன் பணி செய்து கிடப்பதே’’ என்றும் பணிவான தொண்டை உயர் தொனியாகக் கொண்டுள்ளது.
- காலம் காலமாக வளர்ந்து வரும் கலைப்பண்பாட்டைக் கூறுவதுடன் கலை கலைக்காகவே என்பதை விட, கலை ஆன்மீக அனுபவத்திற்காகவே என்னும் கலைத்துவத்தையும் அழகியல் ரசனையையும் அரவணைத்துக் கொண்டுள்ளது.

- பிற மதக் கருத்துக்களை ஏற்றும் மதித்தும் போற்றும் தன்மை இந்துப் பண்பாட்டின் மற்றொரு சிறப்பம்சமாகும்.
- உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு உன்னதமானது.
- இம்மை உலகம் மட்டுமல்லாது, மறுமை உலக வாழ்வையும், இந்த உலக வாழ்வியலில் இருந்து விடுபடும் ஆர்வத்தைத் தூண்டும் சிறப்பும் முக்கியமானதாகும்.
- இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழமையானது. தனக்குச் சம காலத்தில் தோன்றிய பிற பண்பாடுகள் சுவடுகள் அழிந்து போக, கால தேச வர்த்தமானங்களைக் கடந்து இன்று வரை நிலைத்துள்ள சிறப்பும் இந்துப் பண்பாட்டிற்கு உண்டு.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களில் மாணவர்கள் தமக்குத் தெரிந்த வற்றைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி II** : மாணவர்கள் மேற்படி தலைப்பு தொடர்பான மேலதிக தகவல்களைத் திரட்டுவதற்காக நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.

**படி III** : மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களைத் தேடித் தொகுக்குமாறு கூறுங்கள்.

**படி IV**: தொகுத்த விடயங்களை ஒழுங்குபட எழுதி வகுப்பறையில் காட்சிப் படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

இந்துப் பண்பாட்டு மரபுகள் - பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

இந்துப் பண்பாடு அன்றும் இன்றும் - பேராசிரியர் வி. சிவசாமி

**தேர்ச்சி 1.0** : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : இந்து நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை வரலாற்று ஆதாரங்களின் துணைக் கொண்டு, கால கட்டங் களாக வகுத்து நோக்குவர்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்:**

- இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவர்.
- வரலாற்று மூலங்களை உறுதிப்படுத்தக்கூடிய வரலாற்று மூலங்கள், ஊகமான வரலாற்று மூலங்கள் என இரு வகைகள் அடங்குகின்றன எனப் பிரித்தறிவர்.

- தொல்பொருள் பொறிப்பு சான்றுகளைத் தாமே வாசித்து அறியும் ஆற்றலைப் பெறுவர்.
- இந்துப் பண்பாட்டின் வளர்ச்சியைக் காலங்களுக்கு ஏற்பப் பிரித்தறிவர்.
- ஒரு நாட்டில் இந்துப் பண்பாடு நிலவியமையை அறிய கல்வெட்டுக்கள் அல்லது தொல்பொருட் சான்றுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குவர்.
- இந்து நாகரிகத்தின் வளர்ச்சிக்கு வேதமும் ஆகமும் பிரமாண நூல்களாகக் கொள்ளப் படுமாற்றை தெளிவுபடுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 1.3.1 இந்து நாகரிகத்தின் மூலாதாரங்கள் (பொது)**

- வரலாற்று மூலாதாரங்கள் உண்மையை நிறுவக்கூடிய சான்றுகளாகும். இவற்றுள் இலக்கிய ஆராய்ச்சி, கல்வெட்டுகள், தொல்பொருட் சின்னங்கள், பிறநாட்டு அறிஞர் குறிப்புகள் முதலானவை அடங்கும்.

- வரலாற்று இலக்கிய மூலங்களில் பிரமாண நூல்கள், மெய்க்கீர்த்திகள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், நாடகங்கள், பழங்கதைகள் என்பவற்றின் மூலம் தகவல்கள் பெறப்படும்.

- எழுத்து ஆதாரங்களில், வேறுநாட்டுப் பயணிகள் குறிப்புகள், கற்பாறை தூண் எழுத்துக்கள் (கொடைகள், தானங்கள்) நாணயங்கள் பற்றிய குறிப்புக்கள் பிரதான மானவை. அரசர்களின் மெய்க்கீர்த்திகள், செப்பேடுகளில் பொறிக்கப்பட்ட விடயங்கள் என்பனவும் எழுத்து ஆதார வகைக்குள் அடங்கும்.

- தொல்பொருள் ஆய்வுடன் தொடர்பான ஆதாரங்களில் அடங்கும் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என்பனவும் அவற்றில் வெளியிடப்படும் பலவகை மொழிகளும் எழுத்து ஆதாரங்களுக்குச் சிறந்த ஆதாரங்களாகும்.

- கல்வெட்டு அமைப்பு பின்வரும் பகுதிகளை உடையது.
  1. மங்கல வாசகம்
  2. கல்வெட்டின் காலம்
  3. கல்வெட்டின் நோக்கம்
  4. ஓம்படைக் கிளவி என்பனவாகும்.

- கல்வெட்டுக்களிலுள்ள ‘‘ஸ்வஸ்தி ஸ்ரீ’’ என்பது ‘‘மங்களமுண்டாகுக’’ என்னும் பொருளைத் தருகின்றது.

- கல்வெட்டுப் பொறிப்புக்கள் போல நினைவுச் சின்னங்களும் இந்துப்பண்பாட்டை அறிய உதவும் மூலாதாரங்களாக விளங்குகின்றன. மட்கலம், ஜாடிகள், வணிகப் பொருட்கள் என்பன இவற்றில் அடங்கும்.

- அயல் நாட்டவர் குறிப்புக்களும் இந்துப் பண்பாட்டை அறிய உதவும் மூலாதாரங் களாகும். உ-ம்: மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்னும் நூலில் பாண்டிய அரசர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பிளினி - தமிழகத் துறைமுகம் பற்றியும் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பாகியன், யுவான் சுவாங் என்பவர்களின் குறிப்புக்கள் குப்தர் பண்பாட்டைக் குறிப்பிடுகின்றன.

- சங்க, பல்லவ, சோழ, நாயக்கர் கால இலக்கியங்கள் அக்காலத்தில் நிலவிய சமயப் பண்பாடு பற்றி அறிய உதவுகின்றன.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி: I** : இந்து சமயத்தின் மூலாதாரங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து, மாதிரிகளுடன் முன்வையுங்கள்.

**படி: II** : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, முறையே இலக்கிய ஆராய்ச்சி, கல்வெட்டுகள், தொல்பொருட் சின்னங்கள், பிற நாட்டு அறிஞர் குறிப்புகள் என்ற தலைப்புகளை வழங்குங்கள். அவை தொடர்பான படங்கள், மாதிரிகள், கருத்துக்கள் என்பவற்றைத் தேடித் தொகுக்க வழிகாட்டுங்கள்.

**படி: III** : தேடித் தொகுத்தவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.

**உசாத் துணைகள்:**

| | |
|---|---|
| வியத்தகு இந்தியா | - ஏ. எல். பசாம் |
| தமிழக சமுதாய, பண்பாட்டு வரலாறு | - பேராசிரியர் ந. க. மங்கள முருகேசன் |
| இந்தியாவின் சிறப்பு வரலாறு | - மொழி பெயர்ப்பு |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | - டாக்டர் கே. கே. பிள்ளை |
| சாசனமும் தமிழும் | - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை |
| இலங்கையில் இந்துக் கலாசாரம் | - பேராசிரியர் சி. பத்மநாதன் |

**தேர்ச்சி 1.0** : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : இந்து நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை வரலாற்று ஆதாரங்களின் துணைக் கொண்டு, கால கட்டங் களாக வகுத்து நோக்குவர்.

**பாடவேளைகள்** : 48

**கற்றல் பேறுகள்** :

- இந்து நாகரிகத்தின் தொன்மையை தொல்பொருட் சின்னங்கள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலான ஆதாரங்கள் மூலம் அறிந்து கூறுவர்.
- இந்து நாகரிகத்தின் வளர்ச்சியில், சிந்துவெளி நிலப்பரப்பில் கிடைத்த காலத்தால் முந்திய புதைபொருட்களின் முக்கியத்துவத்தினை அறிந்து மதிப்பளிப்பர்.
- வேத காலத்தில் நிலவிய இந்து சமய மரபுகளை விளங்கி எழுதுவர்.
- ஆகமங்கள் சைவ சமயத்தின் முக்கிய நூல் என்பதை ஆதாரங்களுடன் முன்வைப்பர்.
- மௌரியர், குஷாணர், குப்தர் காலங்களில் நிலவிய இந்து சமயத்தின் நிலை பற்றிய கருத்துக்களை முன்வைப்பர்.
- இதிகாசங்களும் புராணங்களும் தருமசாத்திரங்களும் இந்து நாகரிக வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்கிக் கூறுவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி : 1.3.2 வட இந்தியாவில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சி - அறிமுகம்

- கி.மு.1500 - கி.மு.800 வரை வேத இலக்கிய மரபில் பிராமணங்கள், கிருகசூத்திரங்கள், உபநிடதங்கள் என்பன செல்வாக்குப் பெற்ற காலமாகும். வேத இலக்கியம் இயற்றப்பட்ட காலம் அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. கி.மு. 1500 - கி.மு.800 கால கட்டத்தில் வேத இலக்கிய மரபுகளும் அதனைச் சார்ந்த சமய சாத்திரங்களும் இயற்றப்பட்டன. பிராமணங்கள், உபநிடதங்கள் என்பன தோற்றம் பெற்றன. இருக்கு வேத மந்திரங்களை முந்திய வேதமாகவும் அதன் மரபாகத் தோன்றிய ஏனைய வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள் என்பன பிந்திய வேதமரபுகள் என்று கூறுவதும் வழமையாகிவிட்டது.

- வேத மரபுகள் வளர்ந்த வேளையில் விதேக நாடு, காசி, கோசல நாடு என்பன பண்பாட்டு நிலையங்களாக விளங்கின. இத்தகைய அரசுகள் நிலை குலைய, மகத இராச்சியம் கங்கைக் கரையில் எழுச்சியடைந்தமையே காரணமாகும்.

- கி.மு. 6 ஆம் நூற்றாண்டு உலக சிந்தனை வரலாற்றில் எழுச்சிக் காலமாகும். இந்தியர்கள் சமய, ஆன்மீகக் கருத்தில் தமது சிந்தனைகளை வெளிப்படுத்தினர். இந்தியாவில் வைதீக நெறிக்கு மாறான அவைதீக சிந்தனைகளைப் பரப்பிய புத்த பகவான் தோன்றி வாழ்ந்த காலமும் இதுவாகும். புத்தர் போதனைகளை உள்ளடக்கிய பௌத்த சமய இயக்கம் முதன்மை இடம் பெற்று, மௌரியப் பேரரசில் விரிவடைந்தது. அப்போது வட மேல் இந்தியாவில் கிரேக்கர், பாரசீகர் என்போர் ஆதிக்கம் பரவிக் காணப்பட்டது. அக்காலம் வேதம், பிராமணம், உபநிடதம் என்பவற்றைத் தழுவிய இந்துப் பண்பாடு, பிராமணியமதம் என்றும், வைதீக மதம் என்றும் அழைக்கப்பட்டது. இவை இரண்டும் வேறுபட்ட மரபுடையவை. ஒன்று சமயச்சடங்கை வற்புறுத்துவது. மற்றையது வேதாந்த மரபை வற்புறுத்துவது ஆகும்.

- மௌரிய அரச வம்சத்தில் சந்திரகுப்த மௌரியன், அசோகன், பிம்பிசாரன், பிருகத்திரன் முதலியோர் பிரதான அரசர்கள் ஆவர். அவர்கள் காலத்தில் மகதப் பேரரசு முதன்மையடைந்து. மகதத்தின் தலைநகரம் பாடலிபுரம். பிருகத்திரன் அரச சபையில் இருந்த புசியமித்திர சுங்கனே சுங்க அரசை உருவாக்கினான். புசிய மித்திரன் ஆட்சி கி.மு. 188 இல் நிகழ்ந்திருக்க வேண்டும். அவனைத் தொடர்ந்து அக்கினிமித்திரர், வசுமித்திரர் என்னும் அரச வம்சத்தவர்கள் ஆட்சி செய்தார்கள் என பாணரும், காளிதாசனும் தங்கள் நூல்களில் குறிப்பிடுகின்றனர். சந்திரகுப்த மௌரியரின் ஆட்சிக்காலம் கி.மு. 325 என வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றது.

- சுங்க அரசர்களைத் தொடர்ந்து குஷாண அரசு எழுச்சியடைந்தது. கனிஷ்கன், ருத்திரதாமன் முதலிய அரசர்கள் அவர்களில் பிரதானமானவர்கள். அவர்களுடன் இணைந்த வகையில் சாதவாகன அரசர்களும் ஆட்சி செய்தனர். சுங்கர், குஷாணர், சாதவாகனர் முதலானோர் ஆட்சியில் இந்து வம்சப் பேரரசுகள் உன்னதநிலை பெற்றன. வைதீக வேள்விகள் மறுபடியும் வளர்ச்சியடையலாயின. சைவமும் வைணவமும் மேலோங்கின.

- குஷாண அரசர்களின் ஆட்சியைத் தொடர்ந்து குப்த அரசர்கள் ஆட்சி செய்யலாயினர். சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், இராமகுப்தன் ஆகியோர் ஆட்சி செய்தனர். சைவநெறி, வைணவம், ஆலய அமைப்பு, புராணக்கதை மரபுகள், இதிகாச மரபுகள், தர்ம சாத்திரங்கள் என்பன இக்காலத்தில் முக்கிய வளர்ச்சியும் உச்சநிலையும்

பெற்றன. குப்தமன்னர் ஆதிக்கம் வட இந்தியாவில் பொற்காலமாக குறிப்பிடப் பட்டது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டு வரை அவர்களின் ஆட்சி வட இந்தியாவில் நிலவியது.

## விடய உள்ளடக்க வழிகாட்டி : 1.3.3 சிந்துவெளிக் காலம்

- உலகின் பல பாகங்களிலும் பல்வேறு நதிக்கரை நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. அவ்வாறு தோன்றிய ஏனைய நதிக்கரை நாகரிகங்களுக்கு ஒப்பான சிறப்புடையதாக சிந்துவெளி நாகரிகமும் அமைகின்றது.
- இந்து நாகரிகம் கி.மு. 3250 தொடக்கம் கி.மு. 2750 வரையான காலப் பகுதியில் சிறப்புடன் விளங்கி இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் துணிபு.
- சிந்துவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்து சமய நம்பிக்கைகளைக் கடைப் பிடித்தனர் என்பது வரலாற்று ஆதாரங்கள் தரும் உண்மையாகும்.
- எனவே இந்துசமயம் இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழமை உடையதெனக் கொள்ள இடமுண்டு.
- சிந்து நதி பாயும் பகுதியானது 1922 தொடக்கம் 1930 வரையான காலத்தில் சேர். ஜோன் மார்ஷலின் தலைமையில் அலெக்ஸ்சாண்டர், கன்னிங்காம் முதலான புதைபொருளாய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
- அவர்களால் மொகஞ்சதாரோ, ஹரப்பா, தகஞ்சோதரோ போன்ற பல நகர அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- அவற்றுள் ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்திலும், மொகஞ்சதரோ பாகிஸ்தானிலும் உள்ளன.
- அந்நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்கள், கற்சிலைகள், இலிங்க வடிவங்கள், களிமண் பொம்மைகள், சித்திர வடிவ எழுத்துக்கள் போன்ற புதைபொருட்களைக் கொண்டு சிந்துவெளி மக்களின் சமயநிலை, வாழ்க்கை முறை என்பன பற்றி அறிய முடியும்.

### சமய நிலை

- சிந்துவெளிப் பிரதேச புதைபொருட்கள் இந்து சமயச் சார்புடையனவாகவே உள்ளன.
- இப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட் சின்னங்கள் வாயிலாக இம்மக்கள் இந்துத் தெய்வங்களை வழிபட்டனர் என்பர்.
- சைவத்தின் பரம்பொருளாகிய சிவனை அக்கால மக்கள் முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டனர்.
- முத்திரைகள், இலிங்க வடிவங்கள் என்பன அக்கால சிவ வழிபாட்டை அறிய உதவுகின்றன.
- முத்திரை ஒன்றில் யோக நிலையில் அமர்ந்த ஒரு வடிவம் காணப்படுகிறது. இவ் வடிவம் தலை மீது வளைந்த கொம்புகள், இடுப்பில் இரட்டைப் பட்டையாக அரைக்கச்சை என்ற அங்க இலட்சணங்களுடன் காட்சியளிக்கிறது.

- யோகி வடிவத்தின் கீழ்ப் புறத்தில் யானை, புலி, எருது, காண்டாமிருகம் போன்ற அம்சங்களைக் காணலாம். அவ்வடிவத்தினை சேர். ஜோன் மார்ஷல் போன்றவர்கள் சிவனுடன் இனங்காண்கின்றனர்.

- தற்காலச் சக்தி வழிபாட்டுடன் இனங்காணத்தக்கதாக சிந்து வெளி மக்களிடையே நிலவிய தரைப்பெண் வழிபாடு அமைகிறது.

- ஒரு பெண்ணின் கருப்பையில் இருந்து கொடி ஒன்று முளைப்பது போன்று பொறிக்கப் பட்டுள்ள முத்திரையை இதற்கு ஆதாரமாகக் காட்டுவர். உற்பத்திக்குக் காரணமான பூமியை இம்மக்கள் தாயாக வழிபட்டனர் எனக் கொள்வர்.

- ஆய்வாளர்கள் இத்தெய்வத்தை தரைப்பெண் வழிபாடு அல்லது தாய்த் தெய்வ வழிபாடு என்று குறிப்பிடுகின்றனர்.

- களிமண் தாயத்தொன்றில் முக்காலி ஒன்றின்மேல் பாற் கிண்ணம் காணப்படுகின்றது. அருகில் பாம்பு தனது படத்தை விரித்தபடி உள்ளது. இன்றும் எமது சமயத்தில் நல்ல பாம்பை பால், பழம் படைத்து வழிபடும் மரபு இருந்து வருகின்றது.

- சில முத்திரைகளில் மரங்களும், அம்மரங்களில் உறையும் பெண் தேவதைகளின் வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு முத்திரையில் மரங்களுக்கு இடையில் பெண் உருவம் அம்மணமாகக் காணப் பட அதன் கீழ் ஒரு பெண் அவ்வடிவத்தினை வழிபடும் வகையில் காட்சியளிக்கின்றது. எனவே அம்மக்கள் விருட்சங்களை அல்லது அவற்றில் உறையும் தெய்வங்களை வழிபட்டிருக்க வேண்டும் என்று கொள்வர்.

- சூரிய வழிபாட்டுடன் தொடர்புடைய ஆதாரங்களும் சிந்துவெளிப் பகுதியில் காணப் படுகின்றன.

- இன்றைய இந்து மதத்தில் காணப்படும் வழிபாடுகளுக்கு ஒப்பான சமயச் சடங்கு கள் அக்கால மக்களிடையே நிலவியதை உணரலாம்.

- உயரமான கோயில்களை அமைத்த சுமேரியர் மக்களோடு வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்த சிந்துவெளி மக்கள், நிலையான கோயில்களை அமைத்திருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. இப்பிரதேசத்தில் கோயில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படும் இடம் இதுவரை அகழ்வாய்வு செய்யப்படவில்லை.

- இங்குள்ள செய்குளத்திற்கருகே எட்டு அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வெட்டு அறைகளும் மேலே ஏறுவதற்கு படிக்கட்டுக்களைக் கொண்டுள்ளன. கட்டிடத்தின் அமைப்பை அவதானித்த ஆய்வாளர்கள் இங்கு வாழ்ந்தவர்கள் சமயச் சார்புடையவர்களாக இருந்திருக்க வேண்டுமென கருதுவர்.

- முத்திரைகளில் இறைவனின் முன் ஆட்டைப் பிடித்திருப்பதனைப் போலவும், ஒரு பெண் மண்டியிட்ட வண்ணம் இருக்க, ஒருவன் வாளை ஓங்குவது போலவும் காணப்படுகிறது. இம்மக்களிடையே பலியிடுதல் முக்கிய சடங்காக இடம்பெற்றமைக் குரிய சான்றாக இது அமைகிறது.

- இன்றைய இந்து சமயத்தில் நிலவும் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடையதாகவுள்ள நிவேதன வழிபாட்டினை வெளிப்படுத்தும் ஆதாரங்களையும் காணலாம்.

- முத்திரையொன்றில் பெண்கள் படைக்கும் தட்டுக்களை ஏந்தியவாறு காணப்படுகின்றது.

- பூசைத் தட்டுகள் கிடைக்கப் பெற்றமையினைக் கொண்டு, தெய்வங்களுக்கு பூசைப் பொருட்களை நிவேதனமாகப் படைத்து வழிபட்டிருக்க வேண்டுமெனக் கருதுவர்.

**நுண் கலைகள்**

- சிந்துவெளிப் பிரதேசத்தில் கலைகளின் வளர்ச்சியையும் காணலாம்.
- மொஹஞ்சதரோ, ஹரப்பா போன்ற இடத்துக் கட்டடங்களும் அக்கால கட்டடக் கலையின் வளர்ச்சியை அறிவதற்கு உதவுகின்றன.
- இப்பிரதேசத்தில் மாளிகை போன்ற கட்டிட அமைப்புகள், களஞ்சிய அறை, நீராடு கின்ற குளம், மாடி வீடுகள், வீடுகள் என்று பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கட்டடம் ஒன்று 242 அடி நீளமும் 112 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.
- மழைநீருக்குத் தாக்குப் பிடிக்கும் வண்ணம் வெளிப்புறச் சுவர்களுக்கு சுட்ட செங் கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- உட்புறச் சுவர்களுக்கு சூளையிடப்படாத செங்கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- அடுக்கு மாடி வீடுகளுக்கு அதன் பாரத்தைத் தாங்கும் வகையில் நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- மொஹஞ்சதரோ, ஹரப்பா போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு சிற்ப வடிவங்களும் அக்கால சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.
- சிந்துவெளி காலம் சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவதாக பல ஆய்வாளர் கருதுவர். சேர். ஜோன். மார்ஷல் ‘இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது’ என்று கூறுவதனையும் காணலாம்.
- சிந்துவெளி மக்கள் சிற்பங்களுக்கு வெண்கலம், பழுப்பு நிறக் கற்கள், சுண்ணக் கற்கள் போன்றவற்றினை மூலப்பொருளாகப் பயன்படுத்தினர்.
- சிந்துவெளி பிரதேசத்தில் வெளிப்படுத்தப்பட்ட சிற்பங்களுள் ஆணின் வடிவம், வெண் கலத்தினாலான நடனமாதின் வடிவம், ஆடவர் வடிவங்கள் போன்றவற்றைக் கூறலாம்.
- வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ள நடன மாதின் வடிவம் வழுவழுப்பாகவும் ஒழுங் காகவும் செப்பனிடப்பட்டுள்ளது. இவ்வகைச் சிலைகள்: ‘சிவபெருமானது பிற்கால நடனத்திற்கு தோற்றுவாய் ஆகலாம்’ என்று மா. இராசமாணிக்கனார் கருதுகின்றார்.
- துளைகளை உடையதாகக் காணப்பட்ட ஊதுகுழல் வாசிக்கும் நிலையில் இருந்த தாக அறிஞர் மாக்கே குறிப்பிடுகிறார்.
- இங்கு கிடைக்கப் பெற்ற மட்பாண்டங்கள் மீது பாம்புகள், மீன்கள், வட்டங்கள், சதுரங்கள், இலைகள் என்று பல உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.
- மட்பாண்டங்களில் காணப்படும் வடிவங்கள் அக்கால ஓவியக்கலை பற்றி அறிய உதவுகின்றன.
- முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள மிருதங்கம், தவில் போன்ற சான்றுகள் அக்கால இசைக் கலை பற்றி அறிய உதவுவன.

### வாழ்க்கை முறை

- சிந்துவெளிப் பிரதேச மக்கள் நாகரிகம் உடைய வாழ்க்கையை வாழ்ந்தமைக்கு அப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபொருட் சின்னங்களே சான்றாக அமையும்.
- சிந்துவெளிப் பிரதேச மக்களின் முக்கிய தொழிலாக வாணிபமே இருந்தது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகள், மட்பாண்டங்கள், கருவிகள் போன்றவை சுமேரியா, மொசப்பதேமியா, எகிப்து போன்ற நாடுகளில் கிடைக்கப் பெறுகின்றமை யைக் கொண்டு சிந்துவெளி மக்கள் மேற்கூறிய நாட்டு மக்களுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருந்தனர் எனக் கொள்வதற்கு இடமுண்டு.
- கப்பல் கட்டுதல், தச்சுத் தொழில், சிற்பத் தொழில், கைவினைத் தொழில் என்பன போன்ற தொழில்களிலும் அம்மக்கள் ஈடுபட்டனர்.
- அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் உடற்பகுதியொன்றில் பூவேலைப்பாட்டுடன் கூடிய ஆடையினைக் காணமுடிகின்றது.
- ஆண்கள் மேலாடைகளை அணியும் அளவிற்கு அக்கால மக்கள் நாகரிகமுடைய வர்களாக வாழ்ந்தனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

## 1.3.4 வேதம்

- இந்து இலக்கியங்களுள் வேதம், ஆகமம் என்பன முதன் நூல்கள் எனவும் பிரமாண நூல்கள் எனவும் கொள்ளப்படுகின்றன.
- வேதம் என்ற சொல் 'வித்' என்னும் வினையடியிலிருந்து தோன்றியது. அது அறிவு என்னும் பொருள் தரும். அதனால் வேதங்களை அறிவு நூல் எனக் கொள்வர்.
- வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது மேலோர் மரபு.
- வேதங்களை வகுத்தவர் அல்லது தொகுத்தவர் வியாசர் ஆவார். வியாசர் என்பது ஒரு காரணப்பெயர். அதற்குத் தொகுப்பாசிரியர் எனப் பொருள் கொள்வர்.
- வரலாற்று அடிப்படையில் வேத இலக்கியங்கள் கி.மு. 1500 - கி.பி. 600 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.
- வேதங்களை எழுதாமறை, எழுதாக்கிளவி, சுருதி, மறை, அபௌருஷேயம், சுயம்பு, ஆம்நாயம் முதலான பல பெயர் கொண்டு அழைப்பர்.

### வேதங்களின் வகையும் அமைப்பும்

- ஆரம்பத்தில் வேதங்கள் 'திரயீ வித்யா' என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு, யசுர், சாமம் என்பனவாகும். பின்னர் வழக்கில் இருந்த அதர்வ வேதமும் இணைக்கப்பட்டு, நான்காகக் கூறப்பட்டன.
- வேதங்கள் நான்கு என்பதனால் அவை சதுர்மறை, சதுர்வேதம் என அழைக்கப்பட்டன.
- இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது.

- 101 சாகைகளைக் கொண்ட யசூர் வேதம் கிருஷ்ண யசூர், சுக்கில யசூர் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது.

- சாம வேதம் 1549 பாடல்களைக் கொண்டுள்ளதுடன் பூர்வ ஆர்சிகம், உத்தர ஆர்சிகம் என்னும் இரு பிரிவுகளையும் கொண்டுள்ளது.

- அதர்வண வேதம் 20 காண்டங்களையும், 731 சூக்தங்களையும், 6000 பாடல்களையும் கொண்டுள்ளது.

- நான்கு வேதங்களும் இரண்டு காண்டங்களையும் நான்கு பகுதிகளையும் உடையன.

- சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்பன நான்கு பகுதிகளாக உள்ளன. அவற்றுள் சங்கிதை என்பது மந்திரங்களின் தொகுப்பாகும். பிராமணம் என்பது வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும். ஆரணியகம் என்பது வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்களைக் கூறும். உபநிடதம் என்பது உண்மைப்பொருள் பற்றிய விசாரணைகளைக் கொண்டது.

- சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்டப் பகுதியைச் சார்ந்தவை.

- ஆரணியகம், உபநிடதம் என்பன வேதத்தின் ஞான காண்டப் பகுதியைச் சார்ந்தவை யாகும்.

## வேதங்களில் தெய்வங்களும் வழிபாடுகளும்

- வேத இலக்கியங்கள் அக்காலத்தில் நிலவிய சமய நிலை பற்றி அறிய உதவுகின்றன.

- வேத கால மக்களிடையே காணப்பட்ட இயற்கை வழிபாடு பற்றி இவை விபரிக்கின்றன.

- இயற்கை அம்சங்களே நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றன.

- வேதங்களில் கூறப்படும் 33 தெய்வங்களையும் அவை வாழும் இடங்களின் அடிப்படையில் விண்ணுலகத் தெய்வங்கள், இடையுலகத் தெய்வங்கள், மண் உலகத் தெய்வங்கள் என வகைப்படுத்துவர்.

- தெய்வங்கள் வழிபடுவோருக்கு வரங்களை கொடுப்பனவாகவும் பகைவர்களை அழிப்பனவாகவும் வேதங்கள் குறிப்பிட்டன.

- வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே பிற்கால சமய வளர்ச்சியின் தெய்வீக நம்பிக்கையில் பிரதான இடத்தை பெறுகின்றன.

- வேதகால மக்கள் தெய்வங்களுக்கு செய்த வழிபாடுகள், கிரியைகள் பற்றி வேதங்கள் கூறுகின்றன.

- வேதங்களில் அஷ்வமேதம், இராஜசூயம், வாஜபேயம், புருஷமேதம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.

- வேள்வி வழிபாட்டில் புரோகிதன், அக்கினி பகவான், சோமன் என்போர் பிரதான இடம் வகித்தனர்.

- வேள்விக் கிரியைகளின்போது ஓமகுண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானஸ் துதி பாடுதல், பலியிடுதல், தானம் வழங்குதல், தட்சணை வழங்குதல் முதலான கிரியைகள் இடம்பெற்றன.

- வேள்விகளின் பிரதான நோக்கம் உலகியல் இன்பங்களேயாகும்.

- நீண்ட ஆயுள், போரில் வெற்றி, நோய் நீக்கம் முதலான உலகியல் இன்பங்களை அவாவி வேள்விகள் செய்யப்பட்டன.

- சவித்திரு எனும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய காயத்திரி மந்திர செபம், விபூதி தாரணம் பற்றியும் வேதங்களில் காணலாம்.

- சுக்கிலயசூர் வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையைக் கூறுகின்றது. **உ-ம்:** சதருத்திரியம்

- சாம வேதம் இறை வழிபாட்டிற்குரிய இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது.

- இருக்கு வேதம் தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக என்று இசையால் இறைவனை வழிபடுதல் பற்றிக் கூறுகின்றது.

- அதர்வண வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

- பௌஷ்டிகாணி, ஆயுஸ்ஸானி, ஸ்திரீகர்மாணி, ராஜகர்மாணி போன்ற பகுதிகள் செல்வச் செழிப்பையும், நிறைந்த ஆயுளையும் பெண்களின் சுபீட்சம் பற்றியும், அரசனின் நன்மை பற்றியதாகவும் அமைந்தவை.

**தனிமனித வாழ்வும் சமூக நிலையும்**

- வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விபரிப்பன.

- தனிமனித வாழ்க்கைப் படிநிலைகளாகிய பிரமச்சரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன தொடர்பான சிந்தனைகளை வேதங்கள் கொண்டுள்ளன.

- இருக்கு வேதத்தில் உள்ள பிரம்மசரிய சூக்தம், முனி சூக்தம், திருமணம் பற்றிய பாடல்கள் போன்றவற்றில் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. திருமணம், கணவன் மனைவி உறவு, குடும்ப வாழ்வு, கணவரின் கடமைகள் பற்றியும் அவை குறிப்பிட்டுள்ளன.

- கணவன் - மனைவி என்போரைச் சுட்டும் 'தம்பதி' என்னும் தொடர் இருக்கு வேதத்தில் உள்ளது.

- குடும்பத் தலைவனின் கடமைகளுள் முக்கியமானது வேள்விச் சடங்கினை ஆற்றுதல்.

- வேத இலக்கியங்கள் ஊடாக, அக்கால சமூகக் கட்டமைப்பு, சமூகத் தொடர்புகள் என்பனவற்றை அறியலாம்.

- பிற்காலத்தில் வலுப்பெற்ற நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை இருக்கு வேத புருஷ சூக்தப் பாடல்கள் கொண்டுள்ளன.

- நால்வருணத்தவருள் பிராமணர் சமூகத்தில் முக்கிய நிலையில் காணப்பட்டனர். சதபதப் பிராமணம் - 'பிராமணர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்' என்று கூறுகின்றது.

- வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்பன பிராமணர்களின் முக்கிய கடமைகள் எனக் கூறப்படுகின்றன.
- வேத காலச் சமூக அமைப்பில் சத்திரியர்களும் முக்கிய இடத்தை வகித்தனர்.
- வேத கால மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். அதனை அடுத்து குழுத் தலைவர்கள் அரசர்களாக உயர்வு பெற்றனர்.
- அரசர்கள் மாளிகையில் வசிப்பவர்களாகவும், உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிபவராகவும் கூறப்பட்டுள்ளது. மக்களின் நலன்களைப் பேணும் வகையில் அரசனின் ஆட்சி அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.
- அரசரின் மகுடாபிஷேகத்தின்போது 'மன்னராகிய நீர் இன்று முதல் வலியோரையும் மெலியோரையும் சமமாக நடத்துவீராக' என்று புரோகிதன் வேண்டிக் கொண்டான்.
- அரசனுடன் தொடர்புடைய சபா, சமிதி முதலான நிறுவனங்கள் பற்றியும் வேதங்கள் கூறியுள்ளன. அரசனது அன்றாடச் செயற்பாடுகளுடன் தொடர்பு உடையனவாக இந்நிறுவனங்கள் காணப்பட்டன.

## தத்துவ சிந்தனைகள்

- வேத இலக்கியங்கள் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளையும் கொண்டுள்ளன.
- பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், ஐம சூக்தம், வருண சூக்தம் போன்ற பகுதிகளில் உண்டு.
- ரிக் வேத 1:164:46 வது பாடலில், 'ஏகம் சத் விப்ரா வகுதா வதந்தி' என்னும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாக உள்ளது.
- இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீயப் பாடலில் இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.
- வேத இலக்கியங்களில் பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பான சிந்தனைகளையும் காணலாம்.
- இருக்கு வேதத்தில் உள்ள யம சூக்தம், இறப்பு பற்றிய பாடல்கள் போன்ற பகுதிகளில் ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
- பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்களை இருக்கு வேதத்திலுள்ள நாஸதீய சூக்தத்தில் காண முடிகின்றது.
- இருக்கு வேதத்திலுள்ள வருணன் பற்றிய பாடல்களில் வரும் வருண சூக்தம் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது.
- ரிதத்துக்குரிய பொறுப்புடையவன் வருணன். அதனால் ரிதஸ்ய கோபா என்ற பெயர் அவனுக்குண்டு. வருணன் உலக ஒழுங்கைப் பேணுபவனாகவும், மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் கூறப்படுகின்றான்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருப்பதுடன் அவை பிற்கால மெய்யியல் வளர்ச்சிக்கும் முன்னோடி என்பர்.

**வேதங்களின் முக்கியத்துவம்**

- இந்து சமய வளர்ச்சியில் வேதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.
- இந்து சமயம் சார்ந்த இறை நம்பிக்கை, தத்துவ சிந்தனைகள், அரசியல், சமூக சிந்தனைகள் போன்றவற்றின் வளர்ச்சியில் வேதங்கள் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- வேதங்கள் இறை சம்பந்தமுடையது என்பதுடன், அக்கால மக்களின் சமய நம்பிக்கை பற்றி அறிய உதவும் முக்கியமான இலக்கிய மூலமாகவும் அமைகின்றன.
- பிற்காலத்தில் வைதீக மரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு வேதங்கள் பிரமாணமாய் அமைந்தன.
- நால்வகை ஆச்சிரம நிலைகளின் வளர்ச்சிக்கும் வேதங்களே அடிப்படையாகும்.
- தரும சாத்திரங்கள், தருமசூத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றின் உருவாக்கத்தில் வேதங்களுக்கு முக்கிய பங்குண்டு.
- இறைவனைத் துதித்துப் பாடிய முதல் துதிப் பாடல்களாக இருக்கு வேதப் பாடல்கள் உள்ளன. பிற்காலத்தில் எழுந்த துதிப்பாடல்களுக்கு வேதங்களே முன்னோடி. **உ-ம்:** நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாசுரங்கள்

### 1.3.5 ஆகமம்

- **ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்**
    - தொன்றுதொட்டு வரும் அறிவு
    - ஆன்மா, மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல் எனப் பலவாறு பொருள் கொள்ளப்படும்.
- **ஆகமங்களின் சிறப்பு**
    - இந்து சமய வரலாற்றில் வேதங்களைப் போல் ஆகமங்கள் முதனூல்கள் ஆகும்.
    - சிரௌதம், சுப தந்திரம் என ஆகமம் சிறப்பிக்கப்படுகிறது.
    - வேதங்கள் பொது நூல் எனவும், ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப் படுகின்றன.
    - ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்ற வகையில், சைவ ஆகமங்கள் **சிவாகமங்கள்** எனவும், வைணவ ஆகமங்கள் **சங்கிதைகள்** எனவும், சாக்த ஆகமங்கள் **தந்திரங்கள்** எனவும் அழைக்கப்படும்.
    - இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றில் ஆப்த வாக்கியப் பிரமாணமாக அமையும் சிறப்புடையது. **உ-ம்:** சைவ சித்தாந்தம் - 'நாதனுரை......'
    - இந்துக்களின் கோயில் கட்டட, சிற்பக் கலைகளை எடுத்துக் கூறுவது ஆகம மாகும்.
    - இந்துக்களின் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதில் ஆகமங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.
        - ஆகமங்கள் வழிபாட்டை கிரியை நெறி மூலம் வழிப்படுத்துகின்றன. இக்கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூலே பத்ததிகள் ஆகும்.

- ஆகமங்கள் ஆலய வழிபாடு, சமய அனுட்டானங்கள், சைவ சித்தாந்த சிந்தனைகள் போன்ற பல விடயங்களின் ஊடாக மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றன.

- **ஆகமங்களின் பொருள் மரபு**

  (அ) கிரியைகள்

  (ஆ) ஆலயக் கட்டட அமைப்பு

  (இ) சிற்பம், ஓவியம், நடனம்

  (ஈ) விக்கிரகவியல்

  (உ) தத்துவம்

- **ஆகமங்களின் முக்கியத்துவம்**

  - சமயம், தத்துவம், வாழ்வியல், கலை முதலானவற்றில் ஆகமங்களின் செல்வாக்கு.

- **சிவாகமங்கள்**

- **சைவ ஆகமங்களின் பொருள் விளக்கம்**

  - ஆ - பசு, க - பதி, ம - பாசம். அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்.
  - ஆகமம் என்பதில் உள்ள ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம். அதாவது மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது எனவும் பொருள்படும்.

- சிவாகமங்களைச் சிவனே அருளினார் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கை.

  - மாணிக்கவாசக சுவாமிகள்

    ''ஆகமமாகி அண்ணிப்பான்......'' எனவும்

    ''அண்ணல் அருளல் அருளும் சிவாகமம்......'' எனவும் பாடியுள்ளமை, ஆகமம் தெய்வீக நூல் என்பதை உணர்த்தும்.

- சிவாகமங்களுள் மூலாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக 28. இவை சிவபேதம் கூறுபவை, உருத்திரபேதம் கூறுபவை என இருவகைப்படும். உபாகமங்கள் 207

- சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. அவையாவன:

  1. சரியா பாதம் - பிராயச்சித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு உமாமகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்.
  2. கிரியா பாதம் - மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்களை அணியும் முறை.
  3. யோக பாதம் - அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், ஆறுவகை ஆதாரங்கள்.
  4. ஞான பாதம் - முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம்.

**ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்**

- சிவாகமங்கள் கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு, ஆன்மாக்கள் ஆற்றும் வினைகள், சைவ சமய வாழ்க்கை, ஆலய அமைப்பு, ஆலயக் கிரியைகள், சித்தாந்த சிந்தனைகள் என்று சைவநெறிசார் பல விடயங்களைக் கூறுகிறது.
- சைவாகமங்கள் சைவ மக்களின் ஆன்மீக வாழ்வை ஆலயங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றமையைக் காணலாம்.
- ஆகமங்கள் கூறும் ஆன்மீக வாழ்வும், அதனுடன் இணைந்த ஆலய வழிபாடும் வேத மரபின் பரிணாம வளர்ச்சியென்றோ அல்லது அதன் மாறுபட்ட வளர்ச்சியென்றோ கொள்ள முடியும்.
- வேத மரபுகளுக்குப் புறம்பாக அனைத்து மக்களும் ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற வகையிலேயே ஆகமங்கள் ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
- வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைவுறுகின்றன.
- ஆலய வழிபாட்டையும் அவைசார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்கு வதனால் சிவாகமங்களுக்கு சாத்திரங்கள் என்ற பெயரும் உண்டு.
- சிவாகமங்கள் ஆலயம் அமைக்கும் இடம், ஆலய அமைப்பு, ஆலயத்தின் உறுப்புகள், அவை அமைய வேண்டிய இடங்கள், அவற்றின் அளவைப் பிரமாணங்கள், கோயிற் கிரியைகள், ஆலய அனுட்டானங்கள் போன்ற விடயங்களை விதிகளாக விபரிக்கின்றன.
- சிவாகமம் கூறும் கிரியைகளுள் கர்ஷணம் என்னும் கிரியை ஆலயம் அமைப்பதற் குரிய இடத்தைப் பண்படுத்தல் பற்றியதாக உள்ளது.
- சிவாலயம் ஒன்றில் இடம்பெற வேண்டிய கருவறை, மண்டபங்கள், பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள் மற்றும் கோபுரம், விமானம் என்பன அமைய வேண்டிய விதிகள் பற்றி இவற்றில் உண்டு.
- ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி காமிக ஆகமம் 'பிரகார லட்சண விதிப்படலம்' எனும் தலைப்பில் விபரிக்கிறது.
- சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகிறன.
- சிவனின் சிவலிங்கம், அர்த்தநாரீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர், தட்சணாமூர்த்தி போன்ற 25 மூர்த்தி பேதங்களை அமைக்க வேண்டிய விதிகளை ஆகமங்களே வகுத்துக் கூறுகின்றன.
- திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் 'சிலாபரீட்சணம்' என்ற தலைப்பில் கூறுகின்றன.
- திருவுருவங்களினுடைய பங்க அமைதிகள், அங்கலட்சணம், அவற்றின் அளவுப் பிரமாணம், ஆடை ஆபரணம் என்பன பற்றியும் அவற்றில் உண்டு.
- சுக்கிர நீதி - 'திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல' என்கின்றது.
- திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமப் பிரமாணம் முதன்மையான இடம் பெறுகின்றது.

## ஆலயக் கிரியைகளும் அனுட்டானங்களும்

- அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர் நாதமாக உள்ளது. சிவாகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன.
- மணிவாசகர் - 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு
  ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே' என்னும் வாக்கின் செயல் வடிவமாக ஆகமம் கூறும் உருவ வழிபாடு அமையும்.
- சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை.
- கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூசையின் அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் என்பன பற்றிக் கூறுகின்றன.
- சிவாகமங்களில் வரும் பூஜா விதிப்படலம், மந்திராவதாரப் படலம் போன்ற பிரிவுகளில் மேற்கூறிய அம்சங்களுடன் தொடர்புபட்டவை.
- கோயிற் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளன.

  கர்ஷணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல்.

  பிரதிட்டை - ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை செய்தல்.

  உற்சவம் - ஆலயத்தில் வருடமொரு முறை இடம் பெறும் திருவிழா

  பிராயச்சித்தம் - ஆலய கிரியைகளின்போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

## சைவ சித்தாந்த சிந்தனைகள்

- சிவாகமங்கள் ஆலய வழிபாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளையும் கொண்டுள்ளன.
- சிவாகமங்களின் யோகபாதம், ஞானபாதம் என்பனவற்றில் சைவ சித்தாந்தக் கருத்துகள் அதிகம் உண்டு.
- கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் முதலான ஆகமங்கள் சித்தாந்த சிந்தனைகளைப் பெரிதும் கொண்டவை.
- பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்புகள் பதியின் மூவகைத் திருமேனிகள், அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள், ஆன்ம ஈடேற்றம், மும்மலங்கள் போன்ற விடயங்களை ஆகமங்கள் கூறுகின்றன.
- கிரண ஆகமம் பதி படலம், பசு படலம், மாயா படலம், சத்திநிபாத படலம் போன்ற தலைப்புகளின் கீழ் சைவசித்தாந்த உண்மைகளை விபரிக்கின்றது.
- சிவாகமங்களின் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்பன சைவ சித்தாந்த சாதனைகள் பற்றிக் கூறுகின்றன.
- சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் எனும் நான்கு பாதங்களில் குருலிங்க சங்கம வழிபாடு, சிவசின்னங்கள் பற்றிய விளக்கங்கள் உண்டு.
- ஆகமங்கள் கூறும் ஆலய வழிபாட்டின் ஊடாக நாற்பாத நெறிகள் வலியுறுத்தப் பட்டுள்ளன.

- இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் அட்ட யோகங்கள் பற்றியும் இவற்றில் காணப்படுகின்றன.
- அட்டாங்க யோகம் மூலம் கைகூடும் அட்டமா சித்திகளாகிய அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, ஆகாமியம், ஈசத்துவம், வசித்துவம் பற்றியும் இவை கூறுகின்றன.
- ஆலய தரிசனத்தின்போதும் சமய அனுட்டானங்களின்போதும் சிவசின்னங்களை தரித்தல் பற்றியும் இவை குறிப்பிடுகின்றன.
- ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடுபேறாகிய சுத்தாத்துவித முத்தி பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன.

**சாக்த ஆகமங்கள்**

- சக்தியின் சிறப்பு கூறுபவை.
- இதனை தந்திரங்கள் என அழைப்பர். இவை 77 ஆகும்.

இவற்றில் 1. மகாநிருவாணதந்திரம்

2. திரிபுரரகசியம்

3. காமகலாவிலாசம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

**வைணவ ஆகமங்கள்**

- வைணவ ஆகமத்தை தந்திரம், சங்கிதை, பாகவதசாத்திரம் எனவும் அழைப்பர்.
- 108 ஆகமங்கள். ஆயினும் சிலர் 218 எனவும் கூறுவர்.
- வைணவ ஆகமங்களை பாஞ்சராத்திர மரபு, வைகாசன மரபு என இரண்டாகக் கூறுவர். இவை ஒரே தத்துவங்களைக் கொண்டவை.
- வைணவ ஆகமங்கள்

**உ-ம்:** சகஸ்தியசங்கிதை, ஈஸ்வரசங்கிதை, காசிச்சங்கிதை, அனிருத்தசங்கிதை

### 1.3.6 மௌரியர் காலம்

- இந்திய வரலாற்றில் 6 ஆம் நூற்றாண்டிலிருந்தே அரசியல் பண்பாட்டினூடாக இந்து மத நிலை பற்றி அறிய முடிகின்றது. இந்துப் பண்பாடு பற்றி அறிவதற்கு இந்திய அரச வரலாறு பற்றி அறிவது அவசியமாகின்றது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் பின் இந்தியா நான்கு பிரதான அரசியல் பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை கோசல நாடு, மகத நாடு, வற்ச நாடு, அவந்தி நாடு என்பனவாகும்.

- இந்த நான்கு நாடுகளிலும் மகத நாடு பிற நாடுகளுடன் தொடர்பு கொண்டதாய் பண்பாட்டுச் செல்வாக்கு உடைய தேசமாக விளங்கியது.

- மகத நாட்டின் தலைநகரம் பாடலிபுரம். அங்கு சமஸ்கிருத பீடங்கள் காணப்பட்டன. மகதப் பேரரசு ஆதிக்கம் பெற்ற காலத்தில் வாரணாசி முதல் வங்காளதேசம் வரை இந்துப் பண்பாட்டம்சங்கள் பல்கிப் பெருகிக் காணப்பட்டன. வட இந்தியாவின் பெரும்பகுதி மகதப் பேரரசுக்குள் உள்ளடக்கப்பட்டன.

- மகதப் பேரரசு ஆதிக்கத்தில் முதன்மையானவர்களாக விளங்கியவர்கள் நந்த வம்ச அரசர்களாவர். அவர்கள் மகதம் மட்டுமன்றி, தக்கணம், கலிங்கம், ஆந்திரா முதலிய பகுதிகளையும் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்தினர். நந்தவம்சத்தவர்கள் இந்து அரச வம்சத்தினராவர்.

- நந்த வம்ச ஆட்சி இடம் பெற்ற காலகட்டத்திலேயே வடஇந்தியா மீது அலெக்சாண்டரின் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதனால் புராதன இந்திய நாகரிகங்கள், இந்துப் பண்பாடுகள் சிதைவடைய, பின்னர் மௌரியர் ஆட்சி எழுச்சி பெற்றது.

- அலெக்சாண்டர் படையெடுப்பாலும் கிரேக்கர் படையெடுப்பாலும் கி.மு. 4 ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவில் அரசியல், சமய, பண்பாட்டுக் குழப்ப நிலைகள் ஏற்பட்டன. இத்தகைய சூழலில் அரசியல் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த, தோன்றியவரே மௌரியர் வம்சத்தின் சந்திர குப்த மௌரியர் ஆவார்.

- சந்திர குப்த மௌரியன் நந்த வம்சத்தை வென்று, பாடலிபுரத்தில் மீண்டும் பண்பாட்டைப் பேணும் தலைநகராக மீட்டுருவாக்கம் செய்தான். சந்திரகுப்த மௌரியரின் அமைச்சர் கௌடில்யர். இவருடைய நூல் அர்த்தசாத்திரம். மௌரிய அரசவம்சம் பற்றிய விரிவான செய்திகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

    - இந்து சாம்ராச்சிய அமைப்பு
    - சிறப்பான ராஜ்யக் கட்டமைப்பு
    - சமயம் தழுவிய அரசியல், பொருளாதார வாழ்வு
    - நீதி பரிபாலனம்
    - பரஸ்பர சமூக உறவுகள்
    - எல்லோரும் ஒரே குலம் என்னும் மனோநிலை ஆகியன விருத்தியடைந்தன.

- சந்திர குப்த மௌரியனைத் தொடர்ந்து, அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சி கி.மு. 250 இல் முக்கியத்துவம் பெற்றது. வடநாடு மட்டுமன்றி, கலிங்கதேசமும் அசோகனது ஆதிக்கத்திற்கு உட்பட்டது. தொடர்ந்து பின்வரும் விடயங்கள் நிகழ்வுற்றன.

    - அகிம்சைவாழ்வு முதன்மைப்படுத்தப்படல்.
    - பலியிடும் சடங்கு தடைசெய்யப்பட்டது.
    - மாமிச உணவுகள் தடுக்கப்பட்டன.
    - மரக்கறி உணவு தூண்டப்பட்டது.
    - உடல்நிலை ரீதியான தண்டனைகள் நீக்கப்பட்டன.
    - சமயச் சடங்குகளும் சமயப் பிரசாரங்களும் இடம்பெற வாய்ப்பு உண்டாகியது.
    - பௌத்த மதச் செல்வாக்கு, பௌத்த மதப் பரவல் ஏற்பட இந்து சமயத்தைப் பலப்படுத்த மேலும் இந்து சாம்ராஜ்சியங்கள் தோன்றலாயின.

- இவ்வாறு ஆட்சிசெய்த மௌரிய வம்சத்தவர்களில் பிருகத்திரதன் கடைசி அரசனாவான். அவனது அரண்மனையில் புரோகித வம்சத்தவர்களே அமைச்சர்களாக விளங்கினர்.

- அவனது அரண்மனையில் வாழ்ந்த புசியமித்திர சுங்கன் என்னும் பிராமண குலத்தவன், பின்பு ஆட்சியைக் கைப்பற்றினான். அதனைத் தொடர்ந்து இந்துப் பேரரசு வம்சங்கள் தோன்றலாயின. அவர்களில் சுங்கர், குஷாணர், குப்தர் ஆகியோர் அடங்குவர்.

### 1.3.7 குஷாணர் காலம்

- மௌரியர்களுக்குப் பின் வலிமை மிக்க அரசை நிறுவியர்கள் குஷாணர்.
- இவர்கள் காலத்தில் இந்துப்பண்பாடு, காந்தாரக்கலை, இந்து மதத் தொடர்புடைய மகாயான பௌத்தம் என்பன முதன்மை இடத்தைப் பெற்றன. கி.மு. 200 ஆண்டிலிருந்து கி.பி. 165 வரை இவர்கள் ஆட்சி செய்தார்கள்.
- குஷாணர்களில் தலைசிறந்தவன் கனிஷ்கன். அவனது நாணயங்கள் கிரேக்க செல்வாக்கை காட்டுகின்றன. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில், கனிஷ்கன் உன்னத வளர்ச்சி பெற்றான். வடமேல் இந்தியாவில் குஷாணர் ஆதிக்கம் பரவியது. கனிஷ்கன் வழியில் வாசுதேவ அரசன் முக்கியத்துவம் பெற்றான்.
- குஷாண அரசைத் தொடர்ந்து ஒரிசா, தக்கணம், ஆந்திரா, இராஜஸ்தான் பகுதிகளில் இந்துப் பண்பாடு பரவியது. நருமதா நதி மாறவ நாட்டிலும் குஷாணப் பண்பாடுகள் பரவலாயின.
- குஷாண அரசில் உருத்திரதாமன் காலத்தில் சைவ ஆட்சி நிலவியது. வடமொழிக் கல்வெட்டும் உருவாக்கப்பட்டது. வடமேல் இந்தியா முதல் பாடலிபுரம் வரை குஷாணர் ஆட்சி பரவியது. மகாயான பௌத்தக் கோட்பாட்டின் மூலமாக இந்து மதத்தின் பலியிடுதல் போன்ற பழைய கோட்பாடுகள் மறைந்து போகலாயின.
- வட இந்தியாவின் மேற்குப் பிரதேசம் முதல் வாரணாசி நகரம் வரை இவர்களது ஆதிக்கம் விரிவடைந்தது.
- குஷாண அரசர்கள் - தண்டநாயக்கர், மகாதண்டநாயக்கர் என்னும் விருது நாமங்களைச் சூட்டிக் கொண்டனர். இவர்களது காலத்தில் ஆட்சி செய்த முதலாம் வாசுதேவன் (கி.பி. 152 - கி.பி. 196) வைணவ அரசனாவான். இக்காலத்தில் நாகர் எனப்படும் இந்து வம்சத்தவர்களும் ஆதிக்கம் செலுத்தினார்கள்.
- குஷாண ஆட்சியின்போது பௌத்தம் முதலிய அவைதீக மதங்கள் இந்துமதத்துடன் போட்டியிடும் நிலை காணப்பட்டது. அக்காலத்தில் காந்தாரக்கலை மரபு செல்வாக்கடைந்தது.
- குஷாண அரசர்களில் மற்றொருவனாகிய கனிஷ்கன் (கி.பி. 176 - கி.பி. 210) வட இந்தியாவின் மேற்குப் பகுதியில் இந்துப் பண்பாட்டைப் பரப்பினான். இவனுடைய காலத்தில் பிராமணிய சமயம் செல்வாக்கடைந்தது. அஸ்வமேத வேள்விகள் இடம் பெற்றன. விக்கிரக வழிபாடும் வளர்ச்சி பெற்றது. வேத மரபைத் தழுவிய பிராமணங்கள், உபநிடத சிந்தனைகள் பரவின.
- குஷாணர் ஆட்சியில் உருத்திரதாமன் என்னும் அரசன் ஆட்சி செய்து, சைவநெறி வளர்ச்சிக்கு உதவினான். இவனது காலத்துக் கல்வெட்டுக்கள் வடமொழியில் காணப்படுகின்றன. அவற்றில் அரசர்கள் நிகழ்த்திய சமய ஆதிக்கம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. குஷாண அரசர்கள் தமது ஆட்சியை ஒரிசா வரை விரிவுபடுத்தினார்கள். இதைப்போல் வடமேல் தக்கணம் ஆந்திரா தேசங்களிலும் சமஸ்கிருத கலாசாரம் பரவ, குஷாண அரசர்கள் பணி செய்தனர். அதனால், வேத வேள்வி மரபுகள் முக்கியத்துவமடைந்தன. வேள்விக் கிரியைகளில் ஈடுபட்ட புரோகிதர்களுக்கு தானங்களும் வழங்கப்பட்டன.




**படம் - 1**

- அரசர்களது நாணயங்களில் எருது வடிவங்கள் பொறிக்கப்பட்டன. வைணவச் சார்பாக வாசுதேவ கிருஷ்ண வழிபாடு காணப்பட்டது. நாணயங்களிலும் திருமால், லட்சுமி, விசிகன் முதலிய தேவர் வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

### 1.3.8 குப்தர் காலம்

- வட இந்தியப் பண்பாட்டு வளர்ச்சியில் பிரதான காலமாக விளங்குவது, குப்தராட்சிக் காலமாகும். இந்துசமயப் பண்பாட்டு வளர்ச்சியில் இந்து அரசியல், சமயம், கலை, பக்தி, தத்துவம், இந்துக்கல்வி மரபு முதலிய பல துறைகளில் விருத்தி பெற்ற காலமாகும். கி.பி. 320 - கி.பி. 550 வரையிலான காலத்தில் சாஞ்சியை தலைநகரமாகக் கொண்ட பேரரசாக குப்தராட்சி விளங்கியது.

**குப்தர் காலத்தில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சியினை அறிய உதவும் வரலாற்று மூலாதாரங்கள்.**

**1. இலக்கிய ஆதாரம்:**

- வாயு புராணம், மச்ச புராணம் என்பவற்றில் குப்தர் கால அரசர்களின் வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன.

- தர்மசாத்திரம், காமாந்தக நீதிசாரம் என்னும் நூல்களிலும் குப்த மன்னர்களின் ஆட்சிப் பெருமைகள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் குப்தனின் ஆட்சிப் பெருமை களும் இந்துசமயத் தொடர்பும் **முத்திராட்சம்** என்னும் வடமொழிக் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

- மகாபாரத, இராமாயணக் கதைகள் இக்காலத்திலேயே தமது இறுதி வடிவத்தைப் பெற்றன.

- அரசவை இரத்தினங்கள் எனச் சிறப்பிக்கப்பட்ட காளிதாசன், பாரவி, பாணர், தண்டி முதலிய வடமொழிப் புலவர்கள் குப்தராட்சிக் காலத்தில் செல்வாக்குப் பெற்றனர்.

- சாகுந்தலம், குமாரசம்பவம், ரகுவம்சம், விக்கிரமோர்வசியம், மாளவிகாக்கினி மித்திரம் என்பன காளிதாசனது கவிப்புலமைக்குச் சான்றாகவும், குப்தர் காலத்து சமய பண்பாட்டுக் கதைகளை வெளிப்படுத்தும் மூலங்களாகவும் உள்ளன.

- பாரவியின் - கிராதார்ஜுனியம், பட்டி என்னும் புலவரின் இராவணவதம் ஆகியன இதிகாசக் கதை வடிவத்தின் இலக்கிய மரபைப் பிரதிபலிப்பன. தற்போது பின்பற்றப் பட்டு வரும் சோதிட இலக்கியங்களுள், ஆர்யப் பட்டரின் ஆரியப்பட்டீயமும், பஞ்ச சித்தாந்தமும் வராஹிமிரரின் ப்ருஹத்சங்ஹிதையும் விருத்தவாகப்பட்டரின் மருத்துவ நூல்களும் குப்தர் காலத்தைச் சேர்ந்தவைகளே. உபநிடதங்களைத் தொடர்ந்த தத்துவ தரிசன உரைகளும் குப்தர் கால இந்து தத்துவ மறுமலர்ச்சிக்கு ஆதாரமானவை.

**2. பிறநாட்டறிஞர் குறிப்புக்கள்:**

- குப்தர் காலப் பண்பாடுகள் பற்றி பாகியன், யுவாங் சுவாங் ஆகியோர் குறிப்புக்கள் பிரதானமானவை. இவர்கள் காந்தாரம், தட்சசீலம், வைசாலி, இராஜகிருகம் ஆகிய இடங்களில் சமஸ்கிருத ஆதிக்கமும் பிராமணிய ஆதிக்கமும் பரவியதாக குறிப்பிட்டுள்ளனர். இந்துமதம் மட்டுமன்றி, பௌத்த மதச் செல்வாக்கு இருந்தமையும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தொல்பொருள் தகவல்கள்:

- தொல்பொருள் சான்றுகளில் சாசனங்கள், நாணயங்கள், பொறிப்புக்கள், கோயிற் கட்டடங்கள், சிற்பங்கள் ஆகியன அடங்கும். தொல்பொருட் சின்னங்கள் அனைத்தும் அரசர்களுக்கும் இந்துசமயப் பண்பாட்டுக்கும் இடையிலான தொடர்புகளையே எடுத்துக் காட்டுகின்றன.

- சாசனங்களில் அலகாபாத் தூண் சாசனம் பிரதானமானது. அதில் அரச விழாக்கள், விஷ்ணு துதிகள் என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

- அரச நாணயங்களில் மயில், முருகன், கருடன், கஜலட்சுமி முதலிய தெய்வீக வடிவங்களைக் காணமுடிகின்றது.

- சாசனங்களில் அரசர்கள், பரமபாகவதர், மகேஸ்வரர், பரமேஸ்வரர் என்னும் தெய்வீக விருதுப் பெயர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றனர். அரசர்களின் சாசனங்களில் ‘‘நாராயணம் ஸ்துதி’’ என்னும் திருமால் தோத்திரம் காணப்படுகின்றது.

### குப்த அரசர்களும் சமயப் பண்பாடுகளும்

- ஸ்ரீகுப்தன், கடோத்கயகுப்தன், சமுத்திரகுப்தன், சந்திரகுப்தன், குமாரகுப்தன், ஸ்கந்த குப்தன் ஆகியோர் இந்துமத வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கினர். அவர்கள் சைவ, வைணவ, சாக்த சமய ஈடுபாடு உடையவர்களாக விளங்கினர். சமயம், கல்வி, கலை, பண்பாடு என்பவற்றில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. குப்தர்காலம் **இந்துசமய பண்பாட்டு மறுமலர்ச்சிக் காலம்** என்று அழைக்கப்பட்டது.

- சந்திரகுப்தன் காலத்தில் கோயில் கட்டட அமைப்பு, அரசசின்னம், அறநீதி ஆகிய வற்றில் வளர்ச்சி ஏற்பட்டது. வைணவ மதச் செல்வாக்கு ஏற்பட்டது. கருட சின்னம் அரச சின்னமாகியது. இது கருடத்துவசம் எனப்பட்டது. அரசர்கள், பிராமணர்களுக்குத் தானம் வழங்கினர். அத்துடன் சமயப் புலவர்களுக்கும் ஆதரவு வழங்கினர். வைதீகக் கல்வி மரபும் வளர்ச்சி பெற்றது. சந்திரகுப்தனுடைய நாணயத்தில் **அம்மன்** வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. திருமாலின் நாமங்களில் ஒன்றாகிய அப்ரதிரன் என்பது அரசர்களுக்கும் சூட்டப்பட்டது. வைணவ சமயத்திற்கு கூடுதல் செல்வாக்கு இருந்தமையை இது எடுத்துக்காட்டுகின்றது.

- சாசனங்களில் அரசர்கள் தெய்வீக அம்சம் பொருந்தியவர்களாகவே வர்ணிக்கப்பட்ட னர். **‘‘தேவஸ்ரீமகா ராஜாதிராஜன்’’** என்றும் அரசர்கள் போற்றப்பட்டனர்.

### இந்துசமய நெறிகளின் வளர்ச்சி (சண்மதங்கள்)

- இந்துசமயத்தின் மறுமலர்ச்சிக் காலமாகவும் இந்துசமயத்தின் பொற்காலமாகவும் குப்தர் காலத்தைக் குறிப்பிடுவர். இக்காலத்தில் இறைவழிபாடு, பக்திமரபுகள், திருக்கோயில் விழாக்கள் முக்கியத்துவமடைந்தன.

- தொல்பொருட் சின்னங்களிலும் இலக்கியங்களிலும் இறை போற்றுதல் துதிகளே கூடுதலாகக் காணப்படுகின்றன. இத்தகைய சமய மரபுகள், வழிபாடுகள் அனைத்தும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் வழிபடும் நிலை ஏற்பட்டது. குபேரன், வர்ணன், இந்திரன், யமன் முதலிய திசைத் தேவர்களும் வழிபடப்பட்டனர்.

- வைணவ சமய தசாவதாரக் கோட்பாடுகள் முக்கிய இடம் பெற்றன. கிருஷ்ண, இராம அவதாரச் சிந்தனைகளும் முதன்மை பெற்றன. சைவ ஆலயங்களும் வைணவ ஆலயங்களும் ஒருங்கே வளர்ச்சியடைந்தன. முருக வழிபாடு இடம் பெற்றமைக்கும் சான்றுகள் உள்ளன.

- திருக்கோயில் வழிபாட்டுடன் தொடர்பான திருவுருவ வழிபாடுகள் இடம்பெற்றன. வராக அவதாரச் சிற்பம் வடிக்கப்பட்டன. மகாமகத் தீர்த்தம் இடம்பெற்றது. விரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டன. இவற்றை சான்றுகளால் அறிய முடியும்.

## குப்தர் காலத்துக் கலை மரபுகள்

1. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை வளர்ச்சி

    - இக்காலத்தில் வட இந்தியாவில் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. அவற்றில் சிற்பங்களும் இடம்பெற்றன. இக்கலை மரபு, பின்னர் தக்கணப் பிரதேசத்திலும் பரவியது. கட்டடம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் வளர்ச்சி பெற்றன. தக்கணப் பிரதேசத்தில் குகைக் கோயில்களும் அமைக்கப்பட்டன.

    - கோயில் கட்டடக் கலையின் ஆரம்ப கட்டமாக மட்டுமன்றி, பல வளர்ச்சிப் பண்புகளைக் கொண்டதாகவும் குப்தர் காலம் விளங்குகின்றது.

2. ஆற்றுகைக் கலைகளின் வளர்ச்சி இடம்பெற்றிருந்தன.
   சமஸ்கிருத நாடகங்கள் இதற்குச் சான்றானவை.
   பாஷர் - 13, காளிதாசர்
   நாட்டியம் - கீதகோவிந்தம் (ஜயதேவர்)

    - சிவன், திருமால், அம்மன் ஆகியோருக்கான கோயில்களைக் காண முடிகின்றது. அவை செங்கல், கருங்கல் அமைப்புடையவை. சில மண்தளிகளால் ஆனவை. கர்ப்பக்கிரகம், தட்டையான கூரை, சிகரம் முதலிய கோயில் வடிவங்கள் பிரதானமானவை.


    - பஞ்சயதன கோயில் அமைப்பு முறையானது, சமயநெறிகளுக்கும் கோயில் வழிபாடுகளுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டுகின்றது. கோயில்கள் பக்திநெறிக்கும் அடிப்படையாக விளங்கின.

3. சோதிட, கணித, மருத்துவ அறிவியல் கலைகளும் வளர்ச்சியடைந்தன.

## குப்தர் காலத்து இந்து தத்துவ மறுமலர்ச்சி

- உபநிடதச் சிந்தனை மரபின் வளர்ச்சி. சாங்கிய காரிகை முதலிய உரைகள் காணப்பட்டமை.

- ஜைமினியின் மீமாம்ச சூத்திரம் வேதாந்த தத்துவத்திற்கு முன்னோடியானது. ஞான மார்க்கத்தின் வளர்ச்சி காணப்பட்டது. பகவத்கீதைக் கருத்துக்களும் வளர்ச்சி யடைந்தன.




**படம் - 2**

## 1.3.9 இதிகாசம்

- இதிகாச இலக்கியங்களில் மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம் என்பன அடங்கும். அவற்றுள் மகாபாரதம், இராமாயணம் சிறப்பானவை. அவை ஆரம்பத்தில் சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டன. பின்பு வெவ்வேறு இந்திய மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மகாபாரதம், இராமாயணம் ஆகியன இந்திய நாட்டின் இந்துப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் மூலங்களாக அமைகின்றன. அவை ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படுபவை. வேத இலக்கியங்களின் விரிவுபட்ட நெறியாகக் கருதப்படுவதால் **ஐந்தாம் வேதம்** என அவற்றை அழைப்பர்.

- இதிகாசங்கள் இந்துசமய கலைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. இந்து சமூகத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களை இதிகாசம் வெளிப்படுத்துகின்றன. மகாபாரதத்தின் ஒரு பகுதியான பகவத்கீதை உலகப்புகழ் பெற்றுள்ளது. சூதர்களால் ஓதப்பட்ட கதைகள் பின்பு முழுவடிவமாக தொகுக்கப்பட்ட பின்பே இன்றைய இதிகாச வடிவத்தைப் பெற்றுள்ளன. கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே தோற்றம் பெற்றாலும் குப்த நாட்டுக் காலத்திலேயே இறுதி வடிவம் பெற்றுள்ளதெனக் கூறலாம்.

**மகாபாரதம்**

- 18 பருவங்களை உடையது. ஆதிபர்வம் தொடக்கம் மோட்சபர்வம் வரை ஒரு இலட்சம் சுலோகங்களைக் கொண்டது. உபதேச முறையானது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்த விஷ்ணுவை முதன்மைப்படுத்தும் நூல். அத்துடன் விஷ்ணுவின் பரத்துவமும் விளக்கப்படுகிறது. சிவபெருமானும் போற்றப்படுகிறார். அர்ச்சுனன் சிவனருள் பெற்ற கதைகளும் கூறப்படுகின்றன. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம் முதலிய சமய நெறிகளுக்கான மூலங்களை அறிவதற்கு இந்நூல் துணையாகின்றது. பாகவதத்திற்கும் மூலமாக அமையும்.

- உலகியல் சார்பும் தெய்வீக நம்பிக்கையும் கலந்த இலக்கியமாகும். தன்னிகரில் லாத்தலைவனின் தர்மநெறியை தெளிவான சிந்தனையுடன் விளக்கும் நூல் இதுவாகும்.

- ஒவ்வொரு அத்தியாயமும் ''ஓம் நாராயணர்ம நமஸ்கிருதய'' என்று ஆரம்பிக்கின்றது. பாகவத வழிபாட்டிற்கு இந்நூல் அடிப்படையாக அமைகின்றது. மகாபாரதத்தின் ஒரு பகுதியான பகவத்கீதை, கிருஷ்ண அவதாரத்தை வெளிப்படுத்தும் தத்துவ இலக்கியமாகவும் யோக நூலாகவும் உள்ளது.

- இந்து மதத்தின் பிரதான வழிபாட்டம்சங்கள், வாழ்க்கை முறைகள் அனைத்தும் மகாபாரதக் கதையில் வெளிப்படுகின்றன. விரத வழிபாடு, தீர்த்த யாத்திரை, தல மகிமைகள், ரிஷிகளின் தவம், பூசை முறை, உருவ வழிபாடு, துறவு, தியானம் ஆகிய விடயங்களும் இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றது. துர்க்கா தோத்திரம் இங்கு இடம் பெறுகிறது.

- மகாபாரதத்தில் ராஜதர்மம் உயர்நிலையில் போதிக்கப்படுகின்றது. சாந்திபருவத்திலே அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. அறத்தால் வருவதே உண்மை வெற்றி என்பது அரசியல் நெறியாக கூறப்படுகின்றது. வீஷ்ம பருவம், துரோண பருவம் என்பனவும் அரச தர்மங்களையே போதிக்கின்றன. வில் வித்தை போதித்தல், தபோவன வாழ்வு, குருகுல மரபு, இல்லற வாழ்வு முதலிய தர்ம விடயங்களும் மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளன.

- பகவத்கீதை பாகவதநெறிக்கும், இந்து தத்துவக் கோட்பாடுகளுக்கும் அடிப்படையான தாகும். கடவுள், ஆன்மா, கன்மவினை, மறுபிறப்பு கோட்பாடு, கருமயோகம், பக்தி யோகம், ஞானயோகம் முதலிய விடயங்கள் இந்துக்கள் அனைவருக்கும் உரிய கோட்பாடுகளாக விளங்குகின்றன.

**இராமாயணம்**

- இராமாயணம் வடமொழியில் வான்மீகியால் முதலில் எழுதப்பட்டது. தமிழில் எழுந்த கம்பராமாயணம் ஏழு காண்டங்களைள் உடையது. அவை பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என்பனவாம். 24000 சுலோகமும் உடையது. வெவ்வேறு காலங்களில் இடம்பெற்ற இந்துசமய கதைகளின் தொகுப்பாக இராமாயணம் முக்கியத்துவம் பெறுகிறது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப் பட்டது. வெவ்வேறு இலக்கிய மரபுகள் தமிழ்நாட்டில் பரவியபோது தமது பிரதேச மொழிக்கேற்ப பல மொழிகளில் பாடப்பட்டது.

- தமிழில் கம்பராமாயணமும் இந்திமொழியில் துளசிராமாயணமும், வடமொழியில் ரகுவம்சக் கதைகளும் காப்பியங்களாக பாடப்பட்டன. இராம அவதாரம் விஷ்ணுவின் அவதாரமாகக் கொள்ளப்படும். இது இராமாயணத்தின் அடிப்படை கோட்பாடாகும்.

- மகாபாரதம் இந்துசமய நெறியின் அடிப்படையானது. இராமாயணம் இந்து தர்ம நெறிக்கும் மானுட விழுமியங்களுக்கும் அடிப்படையாகும். இராமாயணத்தில் நட்பு, தவம், அரச உபாயம், ஒழுக்கம் ஆகிய விடயங்கள் சிறப்பாக போதிக்கப் பட்டுள்ளன.

- இராமாயணக் கதை மூலம் வட இந்திய கலாசார மரபுகள் தமிழகத்தில் பரவிய வரலாற்றை அறியமுடியும். இவை புதிய கலை மரபுகள் தோன்றுவதற்கும் பொருளாக அமைந்தன. இந்துக்களின் விருந்தோம்பல், செய்ந்நன்றி அறிதல், யுத்த தர்மம், ஆச்சிரம வாழ்க்கை முறைகள் என்பவற்றை அவை பிரதிபலிக்கின்றன.

## 1.3.10 புராணங்கள்

### 1. புராணங்களின் அறிமுகம்

- **புராணம் என்பதன் பொருள் விளக்கம்.**

  புராணம் - புராதனம், பழமைவாய்ந்தது என்னும் கருத்துக்களைத் தரும். ‘‘பூரணாத் புராணம் இதி உச்சயதே’’- முழுமையானதால் புராணம் என்ற கருத்தும் உண்டு.

- **தோற்றம்**

  - பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
  - வைதீக ஒழுகலாறுகளைப் பேணும் வகையில் தோற்றம் பெற்றன.
  - தெய்வீக வரலாற்றைப் பரப்பும் நோக்கில் இடம்பெறுதல்.

- **காலம்**

  குப்தர் காலம்

- **புராணங்களின் பகுப்பு முறைகள்**

  புராணங்கள் தெய்வ வரலாற்றுப் புராணம், விரத புராணம் எனப் பலவாறாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
  சிவ புராணங்கள் - 10
  விஷ்ணு புராணங்கள் - 04
  அக்கினி புராணம் - 01
  சூரிய புராணம் - 01
  பிரம புராணம் - 02 எனப் பகுப்பினைக் கொண்டவை.

### 2. புராணங்களின் அமைப்பு

- வடமொழிப் புராணங்கள் 18. அவை மகா புராணங்கள் என்று அழைக்கப்படும். அவை சமஸ்கிருத மொழியில் உள்ளன. பல லட்சம் சுலோகங்களைக் கொண் டமைந்தவை.

- பஞ்ச லட்சணம் - சர்க்கம், பிரதி சர்க்கம், வம்சம், வம்சாநு சரிதம், மனுவந்தரம்
- தச லட்சணங்களை உடையது.
- தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
- சைவ, வைணவ நெறிகள் பற்றிக் கூறுவது.
- திருக்கோயில் வழிபாட்டு வழிமுறைகளை எடுத்துரைப்பது.
  - விரதம், தீர்த்தம், தவம், தலயாத்திரை, தோத்திரம்
- தெய்வீகப் பரத்துவத்தை விளக்குவது.
  சிவ பரத்துவம் - அடிமுடி தேடிய கதை
  விஷ்ணு பரத்துவம் - பாகவத புராண அவதாரம்
  சக்தி பரத்துவம் - துர்க்கை மகிடாசுரனை அழித்தது
- பக்தி மரபுகள் - மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதைகள்
- கலை, அரசியல் மரபுகள் கொண்டமைபவை.

## 3. புராண இலக்கியங்கள் பிற்காலச் சமய மரபுகளில் செலுத்திய செல்வாக்கு

- தல புராணங்களும், தமிழ்ப் புராணங்களும் தோன்றக் காரணமாக வடமொழிப் புராணங்கள் அமைந்தன
- மகாத்மியங்கள் / மான்மியங்கள் உருவாகக் காரணமானவை
  புராண படன மரபு, கந்த புராணக் கலாசாரம் என்பவை தோன்ற இடமளித்தவை
- பிற்கால வடமொழி நாடகம், காவியங்களுக்கு முன்னோடியானவை
- திருமுறைகளிலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் புராணக்கதைகள் செல்வாக்குப் பெற்றமை
- சிற்ப, ஓவிய, நடனக் கலைகளுக்கு கருவாக அமைந்தவை

## 4. முக்கியத்துவம்

- நண்பர் போல் அறிவுரை வழங்குவது
- கோயில் வழிபாடு, உருவ வழிபாடு என்பன பற்றிக் கூறுவது
- சமயக்கருத்துக்களை இலகுபடுத்தியும், எளிமைப்படுத்தியும் கூறும் பாங்குடையது.
- அறநெறிப் போதனை புரிவது
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது

- **கலை** : புராணங்களை அடிப்படையாகக் கொண்டு திருவுருவ வழிபாடு, சிற்பக்கலை மரபு, ஓவியக்கலை என்பன வளர்ச்சி பெற்றன.
- **இலக்கியம்** : இலக்கிய வடிவங்களுக்கும், குறிப்பாக பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் ஆகியவற்றுக்கு புராணங்கள் பொருள் மரபாக அமைந்துள்ளன.
  பிற்கால காவியங்களுக்கு புராணங்கள் முன்னோடியாக அமைவன.
- **சமயம்** : புராணங்கள் சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன.
  புராணங்கள் இறைநம்பிக்கையை வலுப்படுத்துவன.
  பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம் முதலான சமய அடிப்படைகளைக் கூறுவன.
  சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், சக்தி முதலான தெய்வங்களின் பரத்துவம் கூறுவன.
- **தத்துவம்** : இந்துசமயம் சார்ந்த தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு கதைவடிவில் புராணங்கள் எடுத்துக் கூறுவன.

(உ-ம்)

| | | |
|---|---|---|
| ஸ்கந்த புராணம் | - | சூரன்போர் - ஆணவத்தை அழித்தலைக் குறிக்கும். |
| மார்க்கண்டேய புராணம் | - | யம சங்காரம் - பக்தியின் சிறப்பு |

### 1.3.11 தரும சாத்திரம்

- இந்து சமய மரபில் தோன்றிய இலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் முக்கியத்துவம் உடையன.

- அவற்றில் தரும சாத்திரங்கள் இந்துக்களின் தனிமனித, சமூகவியல் வாழ்வை வகுத்துக் கூறும் சட்ட நூல்களாக அமைவன.

- தரும சாத்திரம் என்ற சொல்லுக்கு மனித வாழ்வுக்குரிய நீதி நியாயங்களை விதிகளாக விளக்கும் நூல் என்று விளக்கம் கூறுமுடியும். தரும சாத்திரங்களுக்கு ஸ்மிருதி என்ற பெயரும் உண்டு.

- வேதங்கள், இதிகாசங்கள், உபநிடதங்கள் போன்றவற்றில் கூறப்படும் சமயம், அறம், அரசியல் தொடர்பான அம்சங்களைத் தரும சாத்திரங்கள் சட்ட விதிகளாக விபரிக்கின்றன.

- தரும சாத்திரங்களின் உருவாக்கம் நீண்ட வரலாற்றுப் பின்னணியை உடையது. கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பிருந்தே பொது மக்களுக்கு தர்மத்தைப் போதிக்க தரும சாத்திரங்கள் தோற்றம் பெறத் தொடங்கி விட்டன. எனினும் குப்தர் காலத்திலேயே அதிகமான ஸ்மிருதிகள் தோன்றின.

- கிட்டத்தட்ட கி.மு. 2 தொடக்கம் கி.பி. 6 வரையான காலத்தில் 18 வரையான ஸ்மிருதிகள் தோன்றின.

- முக்கியமான தருமசாத்திரங்களாக மனு தரும சாத்திரம், விஷ்ணு ஸ்மிருதி, போதாயண ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, பிரகஸ்பதி ஸ்மிருதி, சங்கர ஸ்மிருதி போன்றன அமைகின்றன.

- இந்நூல்களை அவற்றை இயற்றியவர்களின் பெயர் கொண்டு அழைக்கும் மரபு இருந்து வருகிறது.

- தரும சாத்திரங்கள் ஆசார காண்டம், வியபகார காண்டம், பிராயச்சித்த காண்டம் எனும் மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளன.

- ஆசார காண்டம் இந்துக்களின் தனிமனித, சமூக நிலையிலமைந்த வாழ்க்கை முறைகளைக் கூறுவன. நால்வகை ஆச்சிரமத்தை கடைப்பிடிப்பவர்களும், நால்வகை வருணத்தவர்களுக்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறைகள் பற்றிக் கூறுவன.

- வியபகார காண்டம் அரச நீதி பற்றிக் கூறும் பகுதியாகும். அரசனின் ஆட்சி அதிகாரம், அரசனின் கடமைகள், அதிகாரங்கள் என்பன பற்றிக் கூறும் பகுதி.

- மனிதர் தாம் செய்யும் குற்றங்களுக்குரிய தண்டனைகள் அல்லது பிராயச்சித்தங்கள் பற்றிக் கூறுவதாக பிராயச்சித்த காண்டம் உள்ளது.

- நால் வருணத்தவர்கள் செய்யும் குற்றங்களுக்குரிய தண்டனைகள், அத்தண்டனைகள் தொடர்பான வரையறைகள் என்பன பற்றிய விளக்கங்கள் இதில் உண்டு.

**வாழ்க்கை முறை**

- தரும சாத்திரங்கள் வருணாச்சிரம தரும வாழ்க்கை முறை தொடர்பான அம்சங்களை சட்டவிதிகளாக விபரிப்பன.

- வேதங்கள் கூறும் வாழ்க்கை முறையினையும், சமூகக் கட்டமைப்பையும் ஒழுங்கு பட தெளிவுபடுத்தும் சட்ட நூல்களாக இவை உள்ளன.

- வேதங்களில் தொடங்கிய வேள்விகளும் அவை சார்ந்த நம்பிக்கைகளும் மக்களின் கட்டாய கடமைகளாக்கப்பட்டுள்ளன.

- மனித வாழ்வு மேம்படுவதற்கு வேதம் கூறும் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் எனும் ஆச்சிரம வாழ்க்கை நிலைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- சமூகக் கட்டமைப்பிற்கும், அதன் முறையான இயக்கத்திற்கும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் வருணப் பாகுபாடு அவசியம் என்பது தெளிவுறுத்தப் பட்டுள்ளது.

- தரும சாத்திரங்கள் சட்ட நூல்கள் என்ற வகையில் வருணாச்சிரம தரும வாழ்க்கை நெறியினை ஒழுங்குற வகுத்துக் கூறுவன.

- நால்வகை ஆச்சிரமங்களை கடைப்பிடிக்கும் நிலையில் ஆற்றவேண்டிய கடமைகள், பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியமங்கள் என்பன பற்றி கூறுகின்றன.

- பிரமச்சரிய நிலையில் பெறும் கல்வியும் இல்லற நிலையில் ஆற்றும் தொழிலும் அவனது வருணத்திற்கேற்ப மாறுபடும்.

- பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என அமையும் 4 வருணத்தவர்களுக்குமுரிய ஒழுக்கங்கள், கடமைகள், வாழ்க்கைமுறைகள், தொழில்கள் என்பன பற்றியும் அவை குறிக்கின்றன.

  பிராமணர் - வேள்வி செய்தல் முதலான ஆன்மீகச் செயற்பாடுகள்
  சத்திரியர் - நாட்டை ஆளுதல்
  வைசியர் - வணிகம், உழவுத்தொழில்
  சூத்திரர் - ஏனைய வருணத்தவர்களுக்கு ஊழியம் செய்தல்

- ஒவ்வொரு வருணத்தவரும் தத்தமது கடமைகள், தொழில்கள் என்பவற்றில் இருந்து மாறுபடாமல் ஆற்றவேண்டும் என்ற அவசியம் வலியுறுத்தப்பட்டது.

- தரும சாத்திரங்கள் கூறும் இத்தகைய சமூகக் கட்டமைப்பு சமூகத்தின் முறையான இயக்கத்தின் பொருட்டே கூறப்பட்டது என்பர்.

## ஆட்சி முறையும் நீதித்துறையும்

- தரும சாத்திரங்கள் அரசனுடன் தொடர்புடைய ஆட்சிமுறை பற்றியும் அரசனுக்கு கீழ்ச் செயற்பட்ட நீதித் துறையின் செயற்பாடு பற்றியும் விபரிக்கின்றன.

- அரசன் நாட்டை ஆள்பவன், மக்களைப் பகைவர்களிடம் இருந்து பாதுகாப்பவன் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றான்.

- அரசன் மக்களிடமிருந்து வரியை ஊதியமாகப் பெற்று அதற்குப் பதில் நாட்டை ஆள்பவனாகக் கூறப்படுகின்றான்.

- தரும சாத்திரங்கள் மன்னனை, சமூகசேவகன் என்று குறிப்பிடுகின்றன.

- மனுதரும சாத்திரத்தில் கொடியவர்களைத் தண்டித்தல் மன்னனின் கடமையாகும் என்று கூறப்பட்டது. இதன் மூலம் வலியவர்களிடம் இருந்து மெலியவர்களை பாதுகாப்பவனே அரசன் எனும் மேலைத்தேய அரசியல் தத்துவம் இங்கும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

- அரசின் ஓர் அங்கமாகவும் அரசனின் கீழ்ச் செயற்படும் அதியுயர் நிறுவனமாகவும் அமையும் நீதித்துறை தொடர்பான பல விடயங்கள் தரும சாத்திரங்களில் உண்டு.

- இந்நூல்கள் நீதித்துறையின் கட்டமைப்பு, அதன் செயற்பாடுகள், நீதிபதிகளின் கடமைகள், அதிகாரங்கள், நீதி விசாரணைகள் பற்றியும் குறிப்பிடுகின்றன.

- விஷ்ணு ஸ்மிருதி, நீதிபதி அநீதி இழைத்தவராகவோ, கையூட்டுப் பெற்றவராகவோ காணப்படின் அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது.

- நீதித்துறை வலுவான கட்டமைப்பாகச் செயற்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளமை இங்கு புலப்படும்.

- நீதிக்குழு தன் செயற்பாடுகள் தொடர்பாக மன்னனுக்கு பொறுப்புக் கூற வேண்டிய வர்கள் எனவும் இவை கூறுகின்றன.

- நீதிபதிகளின் செயற்பாடுகள் தொடர்பாக தரும சாத்திரங்கள் கூறும்போது வழக்கு களை விசாரித்து தீர்ப்பு வழங்குதல் அவர்களது முக்கிய கடமையாகும்.

- குற்றங்களுக்குரிய பிராயச்சித்தம், மன்னிப்பளித்தல் தொடக்கம் சரீரத்தண்டனை வரை அமைய முடியுமென அவை குறிப்பிடுகின்றன.

- குற்றம் தொடர்பான நீதி விசாரணைகளில் வேதம், மனச்சாட்சி, உலக வழக்கு, சாட்சியங்கள் போன்றவை சட்டமூலங்களாக அமைந்தன.

- ஒரு குற்றம் தொடர்பாக வருணத்திற்கு வருணம் மாறுபட்ட தண்டனைகள் பற்றியும் அவை குறிப்பிடுகின்றன.

- பிற்கால ஸ்மிருதிகளில் தண்டனை தொடர்பாகக் காணப்பட்ட முரண்பாடுகள் ஓரளவு குறைவடைந்திருந்தன எனலாம்.

- விஷ்ணு ஸ்மிருதி ‘‘குலமகளைக் கொலை செய்த, பொன்னைக் களவாடிய பிராமணர் களுக்கு கொலையே தண்டம்‘‘ என்று கூறுகின்றது.

- இங்கு குற்றமிழைத்த பிராமணரும் ஏனையவர்கள் போலவே சட்டத்தின் முன் சமம் எனும் சிந்தனை பிரதிபலிப்பதைக் காணலாம்.
- சொத்துரிமை, அது தொடர்பான பிணக்குகளுக்குரிய தீர்வுகள் பற்றியும் இவை குறிப்பிடுகின்றன.
- தரும சாத்திரங்கள் விதிக்கும் சட்டங்களின்படி வாழ்வதன் மூலம் வீடுபேறு அடையலாம் எனக் கூறுகின்றன.

**தரும சாத்திரங்களின் முக்கியத்துவம்**

- தரும சாத்திரங்கள் இந்து சமயத்தினதும் பிற்கால அரசர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்குரிய சட்ட நூல்களாகவும் அமைந்தன.
- புராதன இந்தியர்களின் சமய, சமூக, அரசியல் சார் வாழ்வியல் அம்சங்களை நெறிப்படுத்துவன.
- தரும சாத்திரங்களில் வல்ல புரோகிதர்கள் அரண்மனைகளில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.
- அர்த்த சாத்திரம், நீதி சாரம் முதலான சட்ட நூல்கள் தோன்ற முன்னோடியாக அமைகின்றன.
- திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றில் தரும சாத்திரங்களின் செல்வாக்கைக் காணலாம்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : வட இந்தியாவில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சி என்னும் தலைப்பிலுள்ள ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி II** : இந்து நாகரிகத்தின் வளர்ச்சிக் கட்டங்களின் அடிப்படையில் தகவல்கள் திரட்ட மாணவர் குழுக்களுக்கு இடமளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள.

**படி III** : திரட்டிய தகவல்களை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்த இடமளியுங்கள். குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

**படி IV** : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**


| | | |
|---|---|---|
| வியத்தகு இந்தியா | - | ஏ. எல். பசாம் |
| இந்தியா ஒரு பண்பாட்டு வரலாற்றுச் சுருக்கம் | - | இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| இந்திய வரலாறு | - | நா. தருமராசன் |
| ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும் | - | பேராசிரியர் வி. சிவசாமி |
| வாழ்வியற் களஞ்சியம் | - | ‘கு’ தொகுதி |

**தேர்ச்சி 1.0** : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** தமிழகத்தில் சைவ, வைணவ சமயங்களின் வளர்ச்சியை வரலாற்று ஆதாரங்களின் துணைக்கொண்டு காலகட்டங் களாக வகுத்து நோக்குவர்.

**பாடவேளைகள்** : 40

**கற்றற் பேறுகள்:**

- தமிழ் நாட்டில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சியைக் கால அடிப்படையில் ஆதாரங் களுடன் முன்வைப்பர்.
- தமிழகத்தில் சைவ சமயத்தின் வளர்ச்சியை ஒழுங்குமுறையில் அறிந்து கூறுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி: 1.4.1 தமிழகத்தில் இந்து நாகரிக வளர்ச்சி அறிமுகம்**

- தமிழகப் பண்பாடு கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் தற்காலம் வரையிலான வரலாற்று வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.
- சங்க இலக்கியங்களில் இந்து சமயப் பண்பாட்டிற்கான பல்வகை ஆதாரங்களை நோக்க முடியும்.
- வேத, புராண, இதிகாச மரபுகள் ஊடுருவியும் பரவியும் விளங்கிய காலகட்டமாக சங்ககாலம் குறிப்பிடப்படுகின்றது.
- தமிழ் மொழியும், சமஸ்கிருத மொழியும் கலந்த நிலையை சங்க இலக்கியங்கள் மூலமாக அறிகிறோம்.
- திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பவற்றில் இடம்பெறும் செய்திகள் இந்து சமயப் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆதாரங்களாகும்.
- களப்பிரர்களுக்கும், வைதீக பிராமணர்களுக்குமிடையிலான போராட்டம் சங்க மருவிய காலத்தில் நிகழ்ந்தது. மரபுவழி இந்து சமய அமைப்பில் அது மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது.
- களப்பிரர் சமண சமயச் சார்புடையவர்கள். அதனால் களப்பிரர் ஆட்சிக்காலம் தமிழக வரலாற்றில் பின்னடைவுக்காலம் என்று குறிப்பிடலாம்.
- பௌத்த மதச் செல்வாக்கும் தமிழகத்தில் பரவலாயிற்று.
- களப்பிரர் ஆதிக்க காலத்தைத் தொடர்ந்து பல்லவர் காலம் செல்வாக்குற்றது.
- கி.பி. 4 ஆம் நூற்றாண்டளவில் ஆந்திரா நாட்டின் தென்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய பல்லவர்கள் பினனர், கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில் காஞ்சிபுரத்தை தலைநகரமாகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் தமது ஆதிக்கத்தை விரிவு படுத்தினர்.

- பல்லவர்களில் சிம்மவிஷ்ணு, குமாரவிஷ்ணு ஆகியோர் ஆரம்ப கால அரசர்களாவர்.

- பல்லவ அரசர்களின் ஆட்சிக் காலத்தில் வைதீக சமயநெறியானது தமிழக சைவநெறியுடன் கலந்தமையைப் பின்வரும் விடயங்கள் விளக்குகின்றன.

  - பிராமணர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பட்டமை.
  - வேத, ஆகம கல்வி மரபு பரவியமை.
  - ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் எழுச்சி பெற்றமை.
  - மன்னர்களும், மக்களும் சைவ, வைணவ மதங்களைத் தழுவியமை.
  - வேதம், வேதாங்கம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டமை.
  - மரபுவழியான சைவமரபு மறுமலர்ச்சியடைந்தமை

- தமிழ்நாட்டில் வேதாகம மரபு பரவி, மரபுவழி சைவ வைணவ மதங்களில் கலந்தமை யால் சைவசமய பக்தி இயக்கமும், வைணவ பக்தி இயக்கமும் தோன்றக் காரண மாயிற்று.

- தொண்டை மண்டலத்தில் ஆரம்பித்த பக்தி இயக்கம் சோழ மண்டலத்திலும் பரவ லாயிற்று. இதன் விளைவாக சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தத்தம் சமயநெறி வளர்ச்சிக்கு பல பணிகளைச் செய்தனர்.

  - சிவனடியார்கள், பொதுமக்கள், கலைஞர்கள் முதலானோர் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் உதவினர்.
  - இந்துப்பண்பாடு இந்து அரசர்களின் ஆதரவோடும் வளர்ச்சியடைந்தது.

- தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சியைத் தொடர்ந்து, தஞ்சையிலிருந்து ஆட்சி செய்த முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் முதலான சோழ மன்னர்கள் பல்லவர்களின் ஆட்சிப் பிரதேசங்களை வென்று சோழ மண்டலத்தைக் கைப்பற்றி ஆட்சி உரிமையை நிலை நாட்டினர். அத்துடன் வட நாடு, தக்கணத்தின் சில பகுதிகள், இலங்கை முதலான நாடுகளிலும் சோழராட்சி பரவியது.

- முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோரின் ஆட்சிக் காலத்திலே இந்துப் பண்பாட்டுப் பணிகள் உச்சநிலையை அடைந்தன. குறிப்பாக சைவசமயம் உச்சநிலை அடைந்தது. முதலாம் இராஜராஜன் இலங்கையில் ஆதிக்கம் செலுத்த, முதலாம் இராஜேந்திரன் இந்தியாவின் கங்கைநாட்டை வெற்றி கொண்டான் என்று கூறப்படுகிறது.

- சோழராட்சியில் கோயில்கள் சமுதாய மைய நிறுவனங்களாகின.

- பல்லவ பக்திநெறிப் பண்பாடு சோழராட்சியில் நிறுவனமயமாகியது.

- நாயன்மார் வழிபாடுகள் விருத்தியடைந்தன. நாயன்மார் பாடல்களும் கோயில்களில் பாடப்பட்டன.

- சைவ, வைணவ சமயப் பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டன.

- கோயில்களில் ஆடல், பாடல் என்பன விருத்தியடைந்தன.

- காப்பியம் சார்ந்த சைவ இலக்கியங்களும் எழுந்தன. சைவசித்தாந்தமும் எழுச்சி யடைந்தது.

- இக்காலப் பகுதியில் வடஇந்தியாவில் ஆதிக்கம் கொண்டிருந்த இஸ்லாமிய கலாசாரம் தென்இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமிய எழுச்சியை தொடர்ந்து இந்துப் பண்பாட்டை பாதுகாக்க கி.பி. 1336 இல் துங்கபத்திரா நதிக்கரையில் காணப்பட்ட விஜய நகரத்தில் இந்து அரசு ஒன்று நிறுவப்பட்டது.
- விஜய நகர அரசர்கள், தமிழ்நாட்டிலும் தமது ஆதிக்கத்தை கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரை நிலைநிறுத்தினர்.

### 1.4.2 சங்க காலம்

- சங்ககாலமானது தமிழர் சமயநெறியின் பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் தொன்மைச் சிறப்பினைக் காட்டும் காலமாக அமைந்தது. சங்ககால நெறியில் சங்ககாலம், சங்கம் மருவிய காலம் இரண்டும் உள்ளடக்கப்படுவதைக் காண முடிகின்றது.
- சங்ககாலம் என்பது தமிழ்நாட்டின் ஆரம்பப் பண்பாட்டினைக் குறிக்கும் காலம் ஆகும். இக்காலத்திலே மௌரியர், ஜவனர், நந்தர் ஆகிய பண்பாட்டம்சங்கள் தமிழ் நாட்டில் கலந்தமை பற்றிய குறிப்புக்களும் உண்டு. அதுமட்டுமன்றி வடமொழி இலக்கியம்சங்கள் கலந்த வரலாறுகளும் காணப்படுகின்றன.
- சங்ககால அரசியல் பின்னணியில் அரசன் சமூகத்தால் ஏற்கப்பட்ட தலைவனாக மாறினான். அவன் குடிமக்களின் நலன்கருதி, பிராமணர்களுக்குத் தானம் வழங்கி மக்களை நீதிமுறை வழுவாது காத்தான்.
- சங்ககால சமுதாயப் பின்னணியில் ஐவகை நிலவாழ்வுக்கு அமைய சமுதாய அமைப்பு நிலவியது. மக்கள் வாழ்வில் இசை, நடனம் கலந்த பண்பாடு காணப் பட்டது. ஐவகை நில அமைப்புக்கேற்ப வழிபாடுகள் காணப்பட்டன. பிராமணர் களது கலாசாரப் பரவல் இக்காலத்தில் ஏற்பட்டது. இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தாலும் வழிபாடு, சடங்கு, கலையுணர்வு மிக்கவராக வாழ்ந்தனர்.
- பொருளியல் பின்னணியை நோக்கும்போது காவிரிப்பூம்பட்டணம், கடைவீதிகள், வாணிபம் என்னும் கருத்துக்கள் வணிகப் பண்பாட்டம்சங்கள் காணப்பட்டமைக்கு சான்றாகின்றது.
- கலைப் பின்னணியை நோக்குகையில் கட்டட அமைப்புக்கள், சித்திரமாடங்கள் துணங்கைக் கூத்துக்கள், பாணர் இசைகள் முதலிய காணப்பட்டன. ஆடல்களை வடமொழிக் கதை தொடர்பில் ஆடியதாக அறிய முடிகின்றது.

மேற்படி பின்னணிகளிலேயே சங்ககால சமய நெறி நோக்கப்படுகின்றது.

- **இந்துப் பண்பாட்டு நிலை**

  வடநாட்டின் வைதீக சமயநெறியும் தமிழ்த் தெய்வமரபும் கலந்து காணப்பட்டன. ''மாயோன், சேயோன், வேந்தன் வழிபாடுகள்'' இதற்கு ஆதாரமானவை.

- **சிவ வழிபாட்டில் புராணக்கதை மரபுகள் பரவியமை**

  கறைமிடற்றண்ணல், ஆலமர்கடவுள், முக்கட்செல்வன் என சிவன் போற்றப்பட்டமை. கொற்றவை சக்தி வழிபாட்டில் சங்கமித்தமை.

  சைவசமயம் சார்பான திருவாதிரை நாள் பற்றிய விரிவான குறிப்புக்கள் காணப்படு கின்றன.

  திருமுருகாற்றுப்படை பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறுகின்றது.

- **சங்ககால வைணவ வழிபாடு**

  வைணவம் மாயோன் வழிபாடாக தோற்றம் பெற்றது. தொல்காப்பியத்தில் இதுவே முதலில் கூறப்பட்டது. வைணவம் முதன்மை பெற்றது என்பதற்கு இதுவே சான்று.

- வழிபாட்டம்சங்களில் வெறியாட்டு, நடுகல், சிலம்பு, நோன்பு என்பன இடம்பெற்றன. சங்க இலக்கியம் தழுவியே வைணவ வேதாந்த வளர்ச்சிகள் ஏற்பட்டன.

- முருக வழிபாடு ஆரிய - திராவிட இணைப்பைக் காட்டுவதாய் அமைகிறது. திருமுருகாற்றுப்படையில் இரு வகை வழிபாடு, ஆறுபடை வீடுகள் என்பன கூறப்பட் டுள்ளன.

- **சங்ககால இந்து தர்மநெறி**

  ஒரு இனத்தின் பண்பாடானது அந்த நாட்டின் வளங்களை வைத்து அறியப்படுவ தில்லை. அந்நாட்டு மக்களின் பண்புநலன் பற்றியே கூறப்படும் என்று வலியுறுத்தப் பட்டுள்ளது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற ஒருமைப்பாட்டு தர்மத்தை எடுத்துக் காட்டுகின்றது.

  ''தீதும் நன்றும் பிறர்தரவாரா'' என்பது இந்துப் பண்பாட்டின் உயர் விழுமியத்தின் அடிப்படையில் எழுந்ததுவேயாகும். மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை என்பது கலித்தொகைப் பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.4.3 பல்லவ, பாண்டியர் காலம்

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் ஆந்திர தேசத்தின் தென்பகுதியில் செல்வாக்குச் செலுத்தினர். பின்னர் தொண்டை மண்டலத்திலும் அவர்கள் ஆதிக்கம் பரவியது. தொண்டை மண்டலத்தின் தலைநகரமாக காஞ்சிபுரம் விளங்கியது. அங்கு பிராகிருத மொழி ஆட்சி மொழியாகவும் பண்பாட்டு மொழியாகவும் விளங்கியது.

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் களப்பிரர் ஆதிக்கமும் பௌத்த சமயச் செல்வாக்கும் ஏற்பட்டன. இவ்வேளையிலே ஆரம்ப கால பல்லவ அரசர்கள் வைதீக சமயத்தை வளர்த்தனர். வேதக் கல்வி மரபு பரவியது. ஆலயங் களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் எழுச்சியடைந்தன. புராண இதிகாசக் கதைகளும் பரவின. சமண சமயத்தைச் சேர்ந்த மன்னர்கள் சைவ சமயத்துக்கும் வைணவ சமயத்துக்கும் ஆதரவு வழங்கினர்.

- தமிழ் நாட்டின் வடபகுதியில் காஞ்சிபுரத்தில் வடமொழிக் கல்விக்கூடம் அமைந் திருந்தது. அங்கு வேதாந்தம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டன. கூரம் செப்பேட்டில் கி.பி. 6 இல் வைதீகப் பல்லவர்கள் ஆட்சி செய்தமையைக் குறிப்பிடும்.

- கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே சிம்மவிஷ்ணு, குமாரவிஷ்ணு முதலான பல்லவ அரசர்கள் ஆட்சி செய்தனர். யுவான் சுவாங் குறிப்பின்படி கி.பி. 5 ஆம் நூற்றாண் டளவில் காஞ்சிபுரத்தில் சைவ சமயத்தைச் சேர்ந்த பலர் பௌத்த சமயத்தில் சேர்ந்த வரலாறு அறியப்படுகின்றது.

- **பல்லவராட்சியில் வேதாகம மரபுகள்**

    - பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தினர்.
    - வேதாகம மரபுகள் பரவின.
    - திருக்கோயில்கள் எழுச்சி பெற்றன. கோயில் பூசை மரபுகளும் ஏற்பட்டன. திருக்கோயில் நகரங்களும் உருவாகின.
    - அரண்மனையில் சமயச்சடங்குகள் மேலோங்கின.
    - அரண்மனைச் சடங்குகள் ஆலயச்சடங்குகளாக மாற்றமடைந்தன.
    - மன்னர்களும் வேதாகம மரபுகளைப் பேண, மக்களும் சைவசமயச் சார்புடைய வர்களாகினர்.

- **அரசர்களும் சைவ மரபும்**

    - சிம்மவிஷ்ணு வைணவ சமயத்தவனாவான். இவனது மகனே மகேந்திரவர்மன்.
    - பல்லவர் காலத்துப் பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவன் சிம்மவிஷ்ணுவே. ஆயினும் மகேந்திரவர்மன் காலத்திலேயே இந்து மத மறுமலர்ச்சியும் சமயநிலையில் திருப்பங்களும் புதுமைகளும் ஏற்பட்டன.
    - பல்லவர்களின் சமய சின்னமாகிய நந்திச் சின்னமும் சிவனின் கட்டுவாங்கக் கொடியும் அவர்கள் சைவத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்து கின்றது. கூரம், காசாக்குடிப் பட்டயங்களில் நந்திக்கு மேல் லிங்கம் அமைக்கப் பட்டுள்ளது.
    - கோயிற்பணிகளில் மாற்றமேற்பட்டது. மகேந்திரவர்மன் மண், மரம் தவிர்த்து புதிய கற்கோவில்களைக் (குணபர ஈச்சரம்) கட்டுவித்தான். வட மொழிக் கல்வி பரவி, வேள்விக் கிராமங்கள் உருவாகின. சாளுக்கியப் படையெடுப்பை முறியடித்து, சைவ சமயத்தைப் பாதுகாத்தான். சைவ சமயத்திலிருந்து சமணத்திற்கும் பின் சைவ சமயத்திற்கும் மதம் மாறினான். இவனால் சீய மங்கலம், வல்லம் முதலிய இடங்களில் குட போக ஆலயங்கள் அமைக்கப் பட்டன. விசித்திரசித்தன், வியத்தகு திறத்தோன், சங்கீர்ணஜாதி, குணபரன், மத்தவிலாசன், ஷேதகாரி, சித்திரகாரப்புலி என்னும் விருதுப் பெயர்களும் மகேந்திரவர்மனுக்கு வழங்கப்பட்டன.

- மகேந்திரவர்மன் நூலாசிரியனாகவும், கட்டட நிர்மாண சிற்பியாகவும், இசை வல்லுனனாகவும், ஓவியனாகவும் விளங்கியமையே இதற்குக் காரணமாகும்

- திருச்சிராப்பள்ளிக் (குகைக் கோயில்) கல்வெட்டு மகேந்திரவர்மனது சைவப்பணி களைக் குறிப்பிடுகின்றது. குடுமியாமலைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சிவதோத்திரம் மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துகின்றது.

- 1 ஆம் சிம்மவர்மன் திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குத் தானம் செய்ததாக, சாசனச் சான்று குறிப்பிடுகின்றது.

- 111 ஆம் சிம்மவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்று புகழ் பெற்ற சைவ அடியார் ஆவார். இவர் 24 சிவத்தலங்கள் பற்றி, ஷேத்திர வெண்பா பாடியுள்ளார்.

• பல்லவ அரசவம்சத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்.

**முற்காலப் பல்லவர் 300-600**

பப்பதேவன்

சிவஸ்கந்த வர்மன்

விஷ்ணுகோபன் (கி.பி.340)

குமாரவிஷ்ணு

ஸ்கந்தவர்மன்

வீரகூர்ச்சவர்மன்

ஸ்கந்தசிஷ்யன்

சிம்மவர்மன் — ஸ்கந்தவர்மன் (கி.பி.600) — நந்திவர்மன் — நந்திவர்மன்

விஷ்ணுவர்மன் — சிம்மவர்மன் 11 — விஷ்ணுகோபவர்மன் — சிம்மவர்மன் 111 — சிம்மவிஷ்ணு (கி.பி.575-600)

குமாரவிஷ்ணு

**இடைக்காலப் பல்லவர்**

மகேந்திரவர்மன் (கி.பி.600-630)

நரசிம்மவர்மன் 1 (மகாமல்லன்) (630-668)

பரமேசுவர்மன் 1

இராஜசிம்மன் (கி.பி.680-700)

(நரசிம்மவர்மன் 11)

பரமேசுவரவர்மன் 11     மகேந்திரவர்மன் 111

**பிற்காலப் பல்லவர்**

நந்திவர்மன் 11

இன்ன பிற அரசர்கள்

- **மாமல்லன்**

  - பல்லவ அரசர்களில் மாமல்லன், **'முதலாம் நரசிம்ம பல்லவன்'** என்று அழைக்கப்பட்டான். வாதாபிச் சாளுக்கியருடன் போராடி, தமிழகத்தை மீட்ட பெருமை இவனுக்குண்டு.
  - ரதக் கோயில்களை அமைத்து திறந்தவெளிப் பாறைகளில் சிற்பக்கூடங்களை அமைத்தவனும் இவனே. வாதாபியை வெற்றி கொண்டதை அடுத்து, வாதாபி கணபதியை தமிழ் நாட்டிற்கு வெற்றிச்சின்னமாகக் கொண்டு வந்தான்.
  - மாமல்லபுரக் கலைக்கூடத்தையும் குடபோக மண்டபங்களையும் ஒற்றைக்கல் ரதக் கோயில்களையும் அமைத்தான். புராண இதிகாசக் கதைகளைச் சிற்பங் களாக வடித்தான்.
  - வராக மண்டபம், மகிடாசுர மண்டபம், பாண்டவ ரதங்கள் என்பன இவர் காலத்தவையாகும்.
  - மாமல்லபுர ஒற்றைக்கற் கோயில்களில் அருச்சுனன் ரதம், தர்மராஜ ரதம் ஆகியவை சிவனுக்குரியவை ஆகும்.

- **பரமேசுவரவர்மன்**

  - வித்யாவிநீதன் எனும் விருதுப்பெயர் கொண்ட இவன் ''கூரம்'' என்ற இடத்தில் சிவன் கோயிலொன்றை அமைத்தான். அக்கோயிற் பூசைகளுக்கென 108 சதுர்வேதிகட்கு நிலமளித்ததாக அறியமுடிகின்றது.
  - இவன் தனது திருமுடியில் உருத்திராட்சத்திலான சிவலிங்கத்தைத் தரித்திருந் தான் என அறிஞர் கருதுவர்.
  - மாமல்லபுரக் கணேசர் கோயிற் கல்வெட்டு, பரமேசுவரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியினை எடுத்துக்காட்டும். அது வருமாறு: ''சிவனுக்குமேல் தெய்வம் இல்லை; அவனே முழுமுதற்கடவுள்; சிவனை நினையாதோர் ஆறு முறை சபிக்கப்பட்டவர்கள்.''

- **2 ஆம் நரசிம்மவர்மன் (இராசசிம்மன்) பணிகள்**

  - 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனுடைய காலத்தில் தமிழ்நாட்டில் அமைதி நிலவியது. சிவ பக்தனாகையால் இவன் காலத்தில் சைவ நெறி சிறப்பாக வளர்ச்சி கண்டது. மகாபலிபுரத்திலும் காஞ்சிபுரத்திலும் சைவ ஆலயங்களையும் வைணவ ஆலயங்களையும் அமைத்தான். காஞ்சிக் கடிகையை மறுசீரமைப்புச் செய்து, வடமொழிப் பண்பாட்டைப் பரப்பினான்.
  - பிற்காலத்தில் பல்லவர் பாண்டியர் தொடர்பு வலுப்பெற்றது. தமிழகத்தின் வடக்கில் பல்லவர்களும் தெற்கில் பாண்டியர்களும் ஆட்சி செய்தனர். அவர் களிடையே சமயப் பண்பாட்டு அடிப்படையில் ஒருமைப்பாடு நிலவியது.
  - மேற்படி அரசர்கள் முதலில் தொண்டை மண்டலத்தையும் அதனைத் தொடர்ந்து சோழ மண்டலத்தையும் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்தினர். ஆந்திர மண்டலத்தின் தென்பகுதிகளும் பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. இவ்வரசர் காலத்தில் சைவ வைணவ ஆலயங்களுக்கு தனித்தனிச் சொத்துக்கள்

வழங்கப்பட்டன. சிவாலயங்களுக்குச் சொந்தமான நிலபுலங்கள் தேவதானம் என்றும் வைணவ ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் திருவிடையாட்டம் என்றும் அழைக்கப்பட்டன.

- இக்காலத்தில்,
  - வடஇந்தியாவிலிருந்து வந்த வைதீக கலாசாரம் தமிழ் கலாசாரத்துடன் பரவியது.
  - சதுர்வேதிமங்கலங்களும் கிருஷ்ணமங்கலங்களும் பெருகின.
  - வைதீகக் கல்வி பரவியது. புராண இதிகாசக் கதைகளின் செல்வாக்கு ஏற்பட்டது.
  - சைவம், வைணவம் என்பவற்றுடன் பாசுபதம், கபாலிகம் என்னும் சைவப் பிரிவுகளும் வைசேடியம், சாங்கியம் முதலிய தத்துவக் கோட்பாடுகளும் பரவலாயின.
- சிவசூடாமணி, சங்கரபக்தன், ஆகமப்பிரியன், ரிஷபலாஞ்சனன், சைவசித்தாந்த மார்க்கன் எனும் விருதுப்பெயர்கள் அவன் சைவத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினைப் புலப்படுத்துகின்றது.
- இராசசிம்ம அரசன் அமைத்த பெரிய கற்றளி - காஞ்சி கைலாசநாதர் கோயில், தமிழகத்தின் முதலாவது கட்டுமானக் கோயில் என்ற பெருமையைப் பெறுகின்றது.
- ‘‘கலியுகத்தில் அசரீரி கேட்டவன்’’ என்று சாசனங்களில் குறிப்பிடப்படுகின்றான். பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படும் மன்னன் இவன் எனக் கருதப்படுகின்றது.

- **சைவ, வைணவ அரசர்கள்**
  - ஆலயப் பணியில் ஈடுபட்டனர். கிராமங்களைத் தேவதானமாக வழங்கினர். கலைஞர்கள், சிற்பிகள், புரோகிதர்கள் சமயப் பணிகளில் ஈடுபட்டனர். ஆலயங்கள் கல்வி, பண்பாட்டு நிலையங்களாக விளங்கின. ஆலயங்களில் வேதக்கல்வி, இதிகாச புராணக் கதை மரபு என்பன பரப்பப்பட்டன. தக்கணத்தின் வழியாக பரவிய வைணவ சமயம் தமிழகத்தில் புகுந்து, ஆழ்வார்கள் மூலமாகச் செல்வாக்குப் பெற்று, தென்கலை வைணவமாகச் சிறப்புற்றது.
  - பல்லவர் காலத்து சைவநெறி பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஆகம வழியை பின்பற்றிய மாகேஸ்வரர்கள் வீர ஆகமங்களைக் கடைப்பிடித்து வீர சைவர்கள் எனப்பட்டனர். காளாமுகர், மாவிரதி, பாசுபதர் முதலிய சைவ சமயப் பிரிவினர் காணப்பட்டனர். இவ்வேளையிலேயே நாயன்மார்கள் சைவ சமய பக்திநெறியை வெளிப்படுத்தினர்.

- **சைவ சமய பக்தி இலக்கியங்கள்**
  - புறச் சமயக்கண்டனம், சைவ சமய மீட்டுருவாக்கம், இறைவனை அன்பு வழியில் வழிபடல், தோத்திரப் பாடல்கள் உருவாக்குதல், பதிகம் பாடல், இசையுடன் பாடல், கலைஞர்களை இணைத்தல், சைவப் பெண்களைப் பக்தி இயக்கத்தில் இணைத்தல், மன்னர்களை சைவ சமயத்தில் சேர்த்தல், சிவசின்னங்களைப் பேணுதல், பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல் போன்றவற்றை

சைவ பக்தி இயக்கத்தினர் கடைப்பிடித்தனர். ஆலயத் தொண்டுகளைச் செய்தனர். ஊர் ஊராகச் சென்று, பிரசாரம் செய்தனர். புராணக் கதைகளைக் கூறினர். ஆடிப்பாடி வழிபாடு செய்தனர்.

- அன்பு நெறி வழிபாட்டில் இறையருள் மூலம் அற்புதங்கள் பல விழைந்தன பொது மக்களின் துன்பங்கள் விலகின. சிவனடியார் பக்தி இயக்கத்தில் கலந்து செயற்பட்டனர். பொதுமக்கள் நாயன்மார்களுடன் சேர்ந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றால் சைவசமயமே மெய்ச் சமயம் என வலியுறுத்தப்பட்டது. பக்திநெறியால் கல்லையும் கனியவைக்கும் இனிமையான பதிகங்கள் தோற்றம் பெற்றன. நாயன்மார்கள் பல்வேறு மார்க்கங்களில் சிவனைப் போற்றினர். அவை தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்பனவாகும்.

- **ஆழ்வார்களும் வைணவத் திருப்பணிகளும்**
    - திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்தவர்கள் ஆழ்வார்கள். திருமால் மீது தமிழில் தோத்திரப் பாடல்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த்தார்கள். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள் ஆழ்வார்கள். கடவுள் மீது இடையறாத ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள், தோத்திரப் பாடல்களைப் பஜனையாகப் பாடும் மரபையும் கொண்டவர்கள். வைணவ பிரபந்தத்திற்கு புராண, இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்டனர்.
    - பல்வேறு பாவங்களில் விஷ்ணுவைப் போற்றினர். தாஸ்ய, மதுர, வாத்தசல்ய, சகிய முதலான பாவங்கள்.
    - மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு ஆழ்வார்கள் அடித்தளமிட்டனர்.

### 1.4.4 சோழர் காலம்

- சோழ அரசர்களில் முதலாம் பராந்தகன், முதலாம் ஆதித்தன் ஆகியோர் ஆரம்ப கால அரசர்களாவர். அவர்களைத் தொடர்ந்து முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் ஆட்சி செய்தனர்.
- முதலாம் இராசராசன் மும்முடிச்சோழ மண்டலத்தையும் கங்கை நாடு, கடாரம், தொண்டை மண்டலம், வேங்கி மண்டலம் ஆகிய நாடுகளையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான்.
- சோழ அரசர்கள் சைவநெறி தழுவியவர்கள். அதனால் **திருநீற்றுச்சோழன்** என்றும் **திரிபுவனச் சக்கரவர்த்திகள்** என்றும் **சிவபாதசேகரன்** என்றும் பல விருதுப் பெயர்களால் அழைக்கப்பட்டனர்.
- நடராச சின்னம் சோழ அரசர்களது சின்னமாகியது. அத்துடன் சோழர் காலத்தில் நந்திக்கொடியும் சமய சின்னங்களில் இடம்பெற்றது.
- பல்லவ - பாண்டியர் ஆட்சியில் முத்தரையர் என்னும் அரச வம்சத்தவர்களும் ஆதிக்கம் செலுத்தினர். இதே காலத்தில் விஜயாலய சோழன், முத்தரையர்களைத்

தோற்கடித்து தஞ்சையைத் தலைநகரமாக்கினான். விஜயாலய சோழனைத் தொடர்ந்து, ஆதித்தனின் ஆட்சி நிலவியது. அவனது ஆட்சியில் சோழ மண்டலத்தில் பல்லவ ஆதிக்கம் நிலை குலைந்தது. அதனைத் தொடர்ந்து சோழ அரசர்கள் தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியைப் பரப்பி, இந்துப் பண்பாட்டைப் பேணிக் காத்தனர். சைவ ஆலயங்களையும் அமைத்தனர். ஆலயங்களுக்கு வழங்கிய அறக்கொடை களும், பிராமணர்களுக்கு வழங்கிய தானங்களும் இவர்களால் பொறிக்கப்பட்ட உத்தர மேரூர் சாசனத்திலே கூறப்பட்டுள்ளன.

**சோழ அரசும் சைவ நெறியும்**

- இராஜராஜ சோழன் சோழ அரசர்களில் தலைசிறந்தவன். நர்மதா நதி வரை தமது அரசாட்சியைப் பரப்பியவன். அவன் இந்தியத் துணைக் கண்டம் எங்கும் சைவப் பண்பாட்டைப் பரப்பினான். இராஜராஜன் ஆட்சியில் சைவசமய நெறி பல வளர்ச்சிகளைக் கண்டது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.
    - அரச சபையிலும், வீடுகளில் பயன்படுத்தப்பட்ட அளவைக் கருவிகளிலும் ஆடவல்லானாகிய நடராச சின்னம் பொறிக்கப்பட்டது.
    - பிராமணர்களுக்கு கொடைகள் வழங்கப்பட்டன.
- இராஜராஜ சோழனின் பிறந்த நாள் விழா (ஐப்பசிச் சதயம்) பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.
- சோழர் ஆட்சியில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் கோயில்கள் பல அமைக்கப் பட்டன. அவற்றில் இறை திருமேனிகளும் சிவனடியார் சிற்பங்களும் பொறிக்கப் பட்டன.
- ஆகம முறையிலான பூசைகள் இடம்பெற்றன. ஆலய பரிபாலனத்தின் பொருட்டு தேவரடியார், ரிஷபத்தளியிலார், தலைக்கோலிகள், நிருத்தவிடங்கியர் முதலானோர் நியமிக்கப்பட்டனர்.
- சைவத் திருமுறைகள் தேடப்பட்டன; பண் வகுக்கப்பட்டன; பாடப்பட்டன. ஓதுவார் கள், பிடார்கள் என்போர் அவற்றைப் பண்ணுடன் பாடினார்கள்.
- வேதவிருத்தி, புராணவிருத்தி, பாரதவிருத்தி முதலியனவற்றுக்காக மானியங்கள் விடப்பட்டன.
- கோயில்கள் செய்த சேவைகள் பெருகின. கோயில்கள், ஆதுலர் சாலைகளாகவும் விளங்கின. அரசைச் சிறப்பிக்கும் விழாக்களும் அங்கு இடம்பெற்றன.
- ஆலயங்களுக்கு அண்மையில் மடங்கள் அமைத்து, சமயப் பணி செய்யும் நிலை ஏற்பட்டது. ஆலயங்களிலும் மடங்களிலும் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன.
- **திருமுக்கூடல்** என்னும் இடத்தில் வணிகர்கள் மடங்கள் அமைத்து, சைவப்பணியில் ஈடுபட்டனர்.
- சைவ இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன. அத்துடன் நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலியோர் சைவம் தொடர்பான பதிகங்களையும் அடியார் இலக்கியங்களையும் பாடினர். அவற்றால் நாயன்மார் வழிபாடு முதன்மை அடைந்தது.

- சோழர்காலப் பகுதியில் சிவனடியார் குருபூசைகள் முக்கியத்துவம் பெற்றன. நம்பியாண்டார் நம்பி தமது பாடல்களில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரதும் திருநாவுக்கரச நாயனாரதும் வாழ்க்கை வரலாறுகளைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- சோழர்காலப் பகுதியில் சைவ சித்தாந்தக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. அதில் மெய்கண்ட தேவரது சிவஞானபோதம் பிரதானமானது. ஆகம மரபுகளும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.

- கோயில் அமைப்பு மேலும் பல விருத்திகளைக் கண்டது. தேவார சுற்றுக் கல்லூரி, நிருத்த மண்டபம், திருக்கைக்கோட்டி மண்டபம், வக்காணிப்பு மண்டபம் என்பன அவற்றுள் அடங்கும்.

- சோழர் காலத்தில் அம்மன் வழிபாடு திருக்காமக் கோட்டத்தில் இடம்பெற்றதாக அறியப்படுகிறது. விநாயகர் வழிபாடும் இக்காலத்தில் இடம்பெற்றிருந்தது.

- அரசர்களது இராஜகுருமாராக சைவக் குருமார்கள் இடம்பெற்றிருந்தனர். ஈசான பண்டிதர், சர்வசிவ பண்டிதர் முதலான பெயர்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

**சோழர் ஆட்சியில் வைணவம்**

- சோழர் ஆட்சியில் வைணவமும் வளர்ச்சி கண்டது. வைணவத்திற்கு மன்னர்கள் ஆதரவு வழங்கினர். வைணவ ஆலயங்கள் தோன்றின. வைணவ இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன.

- ஆழ்வார் மரபு ஆச்சாரியார் மரபாக வளர்ச்சியடைந்தது.

- ஆழ்வார் சிந்தனைகள், இராமானுஷர் சிந்தனையின் கோட்பாடாக வளர்ச்சியடைந்தன.

- வடகலை வைணவம், தென்கலை வைணவம் என்பன வளர்ச்சியடைந்தன.

- விசிட்டாத்வைத வேதாந்தம் விரிவான வளர்ச்சி கண்டது.

## 1.4.5 விஜய நகராட்சியில் இந்துப் பண்பாடு

### விஜயநகர தோற்றமும் தமிழகத்தில் அதன் ஆதிக்கமும்

- தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1336 இல் விஜயநகரப்பேரரசு நிறுவப்பட்டது. அவர்கள் காவிரி, வைகை, தாமிரபரணிப் பிரதேசங்களையும் கைப்பற்றினார்கள். விஜயநகரரசர்கள் தமிழகத்தை ஆதிக்கம் செலுத்த முன்பு மதுரைச் சுல்தானியர் ஆட்சி தமிழகத்தில் பேராதிக்க நிலையை ஏற்படுத்தியது. முதலாம் புக்கன் என்பவன் விஜயநகரப் பேரரசனாக முடிசூடித் தமிழகத்தை ஆட்சி செய்தான். அவனைத் தொடர்ந்து கரிகரன், குமாரகம்பணன் முதலியோரும் விஜயநகர ஆதிக்கத்தை வளர்த்தனர். விஜயநகர அரசர்களில் தமிழ் நாட்டை ஆண்டவர்களை மண்டலிதர் எனக் கூறுவது மரபாகியது. மண்டலிதர் என்பவர் மண்டல ஆட்சியில் ஈடுபட்டவர் களாவர். விஜயநகர ஆதிக்கத்தின் கீழ், தமிழ்நாட்டை ஆண்டவர்கள் மகாமண்டல ஈஸ்வரன் என அழைக்கப்பட்டனர். இத்தகைய விஜயநகர அரசர்களின் ஆட்சி தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து வலுவிழந்தது. தலைக்கோட்டைப்

போரைத் தொடர்ந்து விஜயநகர நாயக்கர் அரசர் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் ஆட்சிசெய்து தம்மை மன்னர்களாக மாற்றிக் கொண்டார்கள்.

- சோழர் காலத்தில் காணப்பட்ட **மண்டலம்** எனும் அரசமுறை தவிர்ந்து விஜயநகர ஆட்சியில் **ராஜ்ஜியம்** என்னும் ஆட்சிமுறை வலுப்பெறத் தொடங்கியது. விஜயநகர அரசர்களில் முதன்மையானவன் கிருஷ்ணதேவராயன் (1509-1529). இவனது பெருமையைப் பயசு எனும் வெளிநாட்டறிஞன் புகழ்ந்துரைத்துள்ளான். நீதியான ஆட்சி அவன் காலத்தில் இடம்பெற்றதென பயசு குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணதேவ ராயரைத் தொடர்ந்து அச்சுதராயர் ஆட்சி செய்தார். அதன் பின்பு இராமராயர் ஆட்சி இடம்பெற்றது. இராமராயரைத் தலைக்கோட்டைப் போரில் தோல்வியடையச் செய்ததன் மூலம் விஜயநகர ஆதிக்கம் சிதைவுற்றது.

## விஜயநகர ஆட்சியும் வடமொழி இலக்கியச் சிறப்பும்

- முதலாம் புக்கன் சாயனருக்கு உதவி செய்தான். அவனால் நான்கு வேதம் பிராமணங்கள் என்பவற்றுக்கு உரை எழுதப்பட்டது. இராமாயண உரையை ஸ்வரதீட்சிதர் எழுத கிருஷ்ணதேவராயர் உதவினான். கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவதிம்மர் மகாபாரதத்திற்கு கிருஷ்ணசந்தம் என்னும் உரையை எழுதியுள்ளார். விஜயநகராட்சியில் நாடக நூல்களும் எழுந்தன.

- தமிழகத்தில் ஆட்சிசெய்த நாயக்கர் அவையில் அப்பையதீட்சிதர் வடமொழி இலக்கியத் துறைக்கு பெரும்பணி செய்தார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு இலக்கியங்கள் இங்கு சிறப்பிடம் பெற்றன. கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா என்னும் ஆண்டாள் கதையை இயற்றினார்.

## விஜயநகராட்சியில் சைவமும் வைணவமும்

- சித்தாந்த சைவம், வீர சைவம், காஷ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது. பசவபுராணம் பிரதான நூல். இது வீரசைவக் கோட்பாட்டைக் கூறுகின்றது. பிரபுலிங்கலீலை, விருபாட்சகர் கோயில், விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை. சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்றது. வைணவம் பற்றித் தெலுங்கு, கன்னட மொழிப்பாடல்கள் எழுந்தன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் தெலுங்கு இலக்கியமும் முதன்மை இடம்பெற்றது. கிருஷ்ணதேவராயரே **விஷ்ணுசித்தீயம்** என்னும் நூலை எழுதியுள்ளார். சிறந்த எளியநடைக் காப்பியம். அட்டதிக்க ஐயம் என்னும் எட்டு நூல் புலவர்கள் பிரதானமானவர்கள்.

- சைவசமயத்தில் காளத்தி மகாத்மியம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் எழுதப்பட்டது. இஸ்லாமிய மதத்தைக் கண்டனம் செய்ததன் மூலம் விஜயநகரத்தின் புகழ் பரவிக் காணப்பட்டது.

- இஸ்லாமியர்கள் இந்துக்களை அழித்தனர். இந்துக்களை மதம் மாற்றினர். கோயில் களையும் படிமங்களையும் சிதைத்தனர். அத்துடன் இந்துக்களை இழிவாகக் கருதும் நிலையை ஏற்படுத்தினர். இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர்க்கத் தோன்றியதே விஜயநகர அரசாகும். கோய்சல (கௌசல) அரசின் தொடர்ச்சியாகவே விஜயநகர அரசு வளர்ச்சி பெற்றது. வித்யாரண்யர் (1305-1387) என்னும் அரசவைத் தலைவர் இதனை உருவாக்கினார்.

- விஜயநகர அரசர்களில் ஒருவரான கரிகரர் காளகஸ்தி, சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார். இவற்றினூடாக கரிகர அரசரது சைவ, வைணவப் பணி வெளிப்படுகின்றது.

- விஜயநகரத்தின் ஆரம்பகால அரசர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகர அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு கூடுதல் மானியங்களை வழங்கினர். சாருவநரசிம்மனுக்கு பின்பு ஆட்சி செய்த அரசர்கள் வைணவ அரசர்களாவர். அவர்கள் சைவ, வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி தானங்களை வழங்கினர்.

- வைணவம் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என விரிவடைந்தது. திருவரங்கத்தில் வாழ்ந்த மத்துவர் வேதாந்தத்தைப் போதித்தார். அருணகிரிநாதர் பாடல்கள் விஜயநகரர் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுவன. காளமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர்.

### விஜய நகரமும் கலை மரபும்

- விருபாட்சகர் கோயில், விட்டலாசுவாமி கோயில் என்பன கிருஷ்ணதேவராயர் அமைத்த கோயில்களாகும். அவற்றில் இராமாயணக் கதைச்சிற்பம், ராஜகோபுரம், கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபங்கள், பட்டாபிராமர் கோயில், அம்மன் சந்நிதானம் முதலான அமைப்புக்கள் இடம் பெற்றன.

- சுற்றுப்பிரகார அமைப்புக்கள் முக்கியமானவை. இராமாயண, மகாபாரத ஓவியங்கள் அதில் தீட்டப்பட்டுள்ளன. குதிரை யாழித்தூண்கள் அமைக்கப்பட்டன. திருப்பாற்கடல் கடைதல், இராவணன் கதைச் சிற்பங்கள் கூடுதலாக அதில் உண்டு.

### 1.4.6 ஐரோப்பியர் காலம்

- முகலாயப் பேரரசு வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து, உள்நாட்டு அரசியலில் ஐரோப்பியர் கூடுதலான அக்கறை காட்டத் தொடங்கினர்.

- கி.பி. 16 ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து ஐரோப்பிய வர்த்தக நிலையங்களும், களஞ்சியசாலைகளும் இந்திய நாட்டில் நிலைகொண்டன. ஒல்லாந்தர், பிரித்தானியர், பிரான்சியர் முதலான ஐரோப்பிய குடியேற்றங்கள் இடம் பெற்றன.
- இதன் மூலம் 17 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர், தமது பண்பாட்டை இந்தியாவில் பரப்பலாயினர்.
- இவ்வேளையில் இந்திய அரசியலில் ஏற்பட்ட உள்ளூர்க் கலவரங்கள், ஐரோப்பிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிகள் செயற்பட வாய்ப்பாயிற்று.
- இவ்வேளையிலே ஆங்கிலேய அரசியல் முறை பரவலாயின. ஐரோப்பியர் வருகை யால் மொழி, பண்பாடு, சமயநெறி, கல்வி ஆகிய துறைகளில் மாற்றங்கள் ஏற்படலாயின.
- ஐரோப்பியப் பண்பாடு பரவுவதற்கு பின்வரும் சூழல்கள் சாதகமாக விளங்கின.
    - இந்தியச் சமூக அமைப்பின் மரபுவழி நம்பிக்கைகள்
    - ஐரோப்பாவில் ஏற்பட்ட பகுத்தறிவு வாதத்தின் எழுச்சிகள், பண்பாட்டுப் புரட்சிகள்
    - ஐரோப்பியரின் குடியேற்றவாதப் போக்குகள் என்பனவாம்.

**இந்திய சமூக அமைப்பின் மரபுவழி நம்பிக்கைகள்**

- சாதி வேறுபாடுகள்
- உடன்கட்டை ஏறும் பழக்கம்
- பலியிடுதல், உருவ வழிபாடு போன்ற பழைமையான நம்பிக்கைகள்
- மரபு வழித் தொழில்முறைகளும் குருகுலக் கல்வியும்
- பெண் உரிமைகள் மறுக்கப்பட்டமை
- பால்ய (இளமை)த் திருமணம்
- இந்தியச் சமுதாயம் விஞ்ஞான, பகுத்தறிவு, கைத்தொழில் வளர்ச்சிக்கு உட்படாமை.
- பல கடவுட் கோட்பாட்டு நம்பிக்கை

- இவற்றினூடாக ஏற்பட்ட சமூக நம்பிக்கைகள் சமயப் பண்பாட்டில் குறைபாடுகளை ஏற்படுத்தின. இவை இந்துசமயக் குறைபாடுகள் எனக் கூறப்படுவதை விட இந்து சமூகக் குறைபாடுகள் என்று கூறுவதே பொருத்தமானது.

**ஐரோப்பியர் பண்பாட்டு ஆதிக்கம்**

- ஐரோப்பியர்கள் தமது அரசியல் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.
- ஆங்கிலம், பிரான்ஸ் மொழிகள் முக்கியத்துவம் பெற்றன. ஆங்கிலக் கல்வி பரப்பப்பட்டது.
- கிறிஸ்தவ மிசன்கள் தோன்றலாயின. மதமாற்றங்களும் நிகழ்ந்தன. மரபுவழி இந்துக்கள் கிறிஸ்தவ சமயத்தில் இணையும் நிலை ஏற்பட்டது.
- இந்துக் கோயில்கள் சிதைக்கப்பட்டன. கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டன.
- அச்சியந்திரசாலைகள் கொண்டு வரப்பட்டன. கிறிஸ்தவ பிரசுரங்களும், கண்டன நூல்களும் வெளியிடப்பட்டன.
- பிரசாரங்கள் பல்கிப் பெருகின. விஞ்ஞானமுறைக் கல்வியும் பரவியது. கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியில் தொலைத்தொடர்பு முறைகளும் வாணிபப் போராட்டங்களும் இடம்பெற்றன.
- வங்காளம், குஜராத் ஆகிய பிரதேசங்களில் ஐரோப்பியர் ஆதிக்கம் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தியது.

**தமிழ்நாட்டில் ஐரோப்பிய ஆதிக்கம்**

- கி.பி. 1800 இல் தமிழகம், வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம் முதலான இடங்களில் ஆங்கிலேயர் ஆட்சி பரவியது. தமிழ்நாட்டில் ஐரோப்பிய மயமாதல் இடம்பெற்றது. குடியேற்றவாத நிகழ்ச்சிகளும் ஆரம்பமாகின. தமிழக மக்களால் வெறுக்கப்பட்ட ஐரோப்பிய பண்பாடுகளைப் பின்பு ஏற்றுக் கொள்ளப்படும் நிலை காணப்பட்டது.

- பிராமணர்கள் இந்து சமுதாயத்தில் உயர்நிலை பெற்றார்கள். சைவ - வைணவ சமயப் போராட்டங்கள், பிராமணர் - பிராமணர் அல்லாதார் போராட்டங்கள் என்பன் இடம்பெற்றன.
- ஆங்கிலம் படித்த சமூக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. வருட முதல் நாளில் வாழ்த்துக் கூறும் வழக்கம் என்பனவும் இந்து சமூகத்தில் ஏற்பட்டன.
- ஐரோப்பியர் ஆதிக்கத்தால் இந்து சமூகம் பாதிக்கப்பட்டது. அவ்வேளையில் ராஜாராம் மோகனராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் முதலானோர் இந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டனர்.

### கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:

**படி: I** ‘தமிழகத்தில் இந்து நாகரிக வளர்ச்சி’ என்னும் தலைப்பில் அடங்கும் ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, நூலாதாரங்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி: II**
- மாணவர்கள் மேற்படி தலைப்பு தொடர்பான மேலதிக தகவல்களைத் திரட்டுவதற்காக நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, மேற்படி தலைப்பில் உள்ளடங்கும் 5 விடயங்கள் தொடர்பான தகவல்களையும் உசாத்துணை களின் பெயர்ப்பட்டியலையும் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

**படி: III**
- ஒவ்வொரு குழுவும் சேகரித்த தகவல்களை ஒழுங்குபட வகுப்பறையில் முன்வைக்க இடமளியுங்கள்.
- முன்வைத்த தகவல்களைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்து மாறு கூறுங்கள்.

### உசாத் துணைகள்:


தமிழர் சால்பு - பேராசிரியர் சு. வித்தியானந்தன்

பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் - பேராசிரியர் கைலாசபதி

தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு - பேராசிரியர் ந. க. மங்கள முருகேசன்

தமிழர் சமய வரலாறு - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை

தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை

சங்க இலக்கியம் - மகாநாட்டு மலர், இந்து கலாசார அமைச்சு

**தேர்ச்சி 1.0** : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 1.5 :** இந்து சமய வளர்ச்சியில் அறுவகைச் சமய நெறிகள் வகிக்கும் பங்கினை ஆதாரங்களுடன் முன்வைப்பர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்:**

- இந்துமதம் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்று எழுதிக் காட்டுவர்.
- அறுவகைச் சமயங்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நூல்களின் ஊடாக ஆராய்ந்து அறிந்து கூறுவர்.
- அறுவகைச் சமயங்களின் சிறப்பியல்புகளையும் விளக்கமாக எடுத்துக்கூறுவர்.
- இறைவன் திருக்கோலங்களை இனங்கண்டு வழிபடுவர்.
- திருவுருவங்களின் மூர்த்தங்களை பட்டியற்படுத்துவர்.
- அறுவகைச் சமயங்களுடன் தொடர்புடைய விரதங்களை அட்டவணைப்படுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 1.5.1 அறுவகைச் சமய நெறிகள்**

**அறிமுகம்**

- இந்து சமயம் பற்றிய அறிமுகம்
- இந்து சமயத்தை ஆறாக வகைப்படுத்தியவர் ஆதிசங்கரர்
- சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன அறுவகைச் சமய நெறிகளாகும்.

**1.5.1.1 சைவம்**

- சைவம் என்பதன் பொருள்
- சைவத்தின் முழுமுதற் கடவுள்
- சைவத்தின் தோற்றம்
  - தொன்மம்
  - பழ மரபுக் கதைகள்
  - தொல் பொருட் சான்றுகள்
- சைவம் தோன்றி வளர்ந்த இடங்கள்
- காலந்தோறும் சைவத்தின் வளர்ச்சி
  - நாயன்மார்
  - சந்தான குரவர்
  - சித்தர்கள்
  - பக்தியாளர்கள்
  - ஞானியர்
  - சமய மறுமலர்ச்சியாளர்கள்

- வழிபாடு
    - கடவுளரின் வடிவங்கள், இலட்சண விதிகள்
    - கிரியைகள், விரதங்கள்
- சைவம் ஒப்புக் கொள்ளும் பிரமாண நூல்கள்
- சைவ தத்துவ நூல்கள்
- சைவ சமய இலக்கியங்கள் - பிரபந்தங்கள், புராணங்கள்
- சமய நிறுவனங்கள்
- சைவ சமயமும் கலைகளும்
- மனிதனின் வாழ்வியல், சமயம், கல்வி, ஒழுக்கம், கலை, வீடுபேறு முதலான அம்சங்களில் சைவம் வகிக்கும் பங்கு

### 1.5.1.2 வைணவம்

- வைணவத்தின் முழுமுதற் கடவுள்
- வைணவத்தின் தொன்மம்
    - வேதம் - இருக்கு வேதத்தில் விண் சார்ந்த தெய்வமாகப் போற்றப்பட்டது
    - உபநிடதம் - கருடோபநிடதம், மகா நாராயண உபநிடதம் முதலானவற்றில் விஷ்ணு பற்றிப் பேசப்பட்டுள்ளது
    - புராணம் - நாரதீய, கருட, பாகவத, விஷ்ணு புராணங்களில் விஷ்ணுவின் அவதாரங்கள், அவதாரக் கதைகள் என்பன கூறப்பட்டுள்ளன
    - இதிகாசம் - இராமாயணத்தில் இராமர் விஷ்ணுவின் அவதாரமாகப் போற்றப் படுதலும் மகாபாரதத்தில் கிருஷ்ணர் விஷ்ணுவின் அவதாரமாகப் போற்றப் படுதலும்
    - ஆகமம் - விஷ்ணுவுக்குரிய ஆகமங்களாக பாஞ்சராத்திரம், வைகாசனம் என்பன குறிப்பிடப்படுவதுடன் அவற்றில் விஷ்ணுவின் தோற்றம், வழிபடும் முறை, பக்தர்களின் தகுதிகள் என்பன பேசப்படுதல்
    - குப்தர் காலம் - குப்த மன்னர்கள் தம்மைப் **பரம பாகவதர்கள்** என அழைத்தமை. விஷ்ணுவுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டமை.

      **உதாரணம்:** தசாவதாரக் கோயில்
      கருடச்சின்னம் - கருடக்கொடி
      ''கருடத்வஜ''

### தென்னிந்தியா

#### சங்க காலம்

- முல்லை நில மக்கள் திருமாலை ''மாயோன்'' எனப் போற்றி வழிபாடு இயற்றியமை.
- விஷ்ணுவின் பிறந்த தினம் - ''திருஓணநன்னாள்'' பற்றிய செய்திகள்.
- கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பாகவதம் இருந்தது என்பதற்கு பரிபாடலில் வாசுதேவன் நாராயணனோடு இணைத்துக் கூறப்பட்டமை சான்றாகும்.
    - திருமாலின் கருடக்கொடி
    - ஈரடியால் மூவுலகை அளந்த செய்தி
    - திருவினை மார்பில் கொண்ட இன்ன பிற செய்திகள்
    - பரிபாடல், மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை

**சங்கமருவிய காலம்**

- வைணவ சமயத்திற்கு அரும் பணியாற்றிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் போன்றோர் தோன்றினர்.
- சிலப்பதிகாரத்தில் - ஆய்ச்சியர் குரவை
  - எட்டெழுத்து மந்திரத்தை மாங்காட்டுமறையோன்பேசுகிறான்.

**பல்லவர் காலம்**

- 9 ஆழ்வார்கள் இக்காலப் பகுதியில் தோன்றி வைணவ சமயத்திற்குப் புத்துயிர் அளித்தனர்.
- ஆழ்வார்கள் பல்வேறு ‘‘பாவங்களில்’’ கிருஷ்ணனை வழிபட்டனர்.
- சிம்மவிஷ்ணு, நரசிம்மவர்மன் - பல்லவ மன்னர்கள் சிறந்த வைணவ பக்தர்கள்.
- ஜலசயனம் வைகுந்தப் பெருமாள் ஆலயங்கள், வராக மண்டபம், கிருஷ்ண மண்டபம் இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களுக்கு உதாரணங்களாகும்.

**சோழர் காலம்**

- பன்னிரு ஆழ்வார்களது பாடல்கள் ஸ்ரீநாதமுனிகளால் நாலாயிரத்திவ்விய பிரபந்தமாக தொகுக்கப்பட்டது.

**வைணவ ஆசாரிய மரபின் தோற்றம்:**

கி.பி. 10 ஆம் நூற்றாண்டு - நாதமுனி முதல்வர்

↓

யமுனாசாரியார் (ஆளவந்தார்)

↓

இராமானுஜர் → வைணவ கைங்கரியம்
→ தத்துவம் (விசிட்டாத்வைதம்)

தெலுங்கு தேசத்தில் நிம்பாக்கர் - தசசுலோகி :
(வைணவ தத்துவ உலகில் முதன்மை)

**விஜயநகர நாயக்கர் காலம்**

- விஷ்ணுவிற்கு கோயில்கள் அமைக்கப்பட்டமை.
  **உதாரணம்:** ஸ்ரீரங்கம், காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில்
  கி.பி. 13ஆம், 14 ஆம் நூற்றாண்டுகளில் வடகலை மரபு (வேதாந்த தேசிகன்), தென்கலை மரபு (பிள்ளை லோகாசாரியார்) என்பன உருவாகின.

**ஐரோப்பியர் காலம் - தற்காலம் வரை**

- விஷ்ணு ஆலயங்கள் அமைக்கப்பட்டமை
- ஆலயச் சிற்பங்களில் விஷ்ணுவின் அவதாரங்கள் இடம் பெற்றுள்ளமை
- விஷ்ணுவுக்குரிய விரதங்கள் அனுட்டிக்கப்படுகின்றமை.

  **(உ-ம்)** ஏகாதசி விரதம்

- கோயில்களில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச பாத்திரங்கள் நடித்துக் காட்டல், இந்நூல்களைப் படித்தல், சொற்பொழிவு செய்தல்.

- வைணவ சமயக் கதைகள்
    - திரைப் படங்களுக்குப் பொருளாதல்.
    - இலக்கியங்களுக்குப் பொருளாதல்.

    **உ - ம் :**

    கம்பராமாயணம், வான்மீகி இராமாயணம், மாவிந்தம்

- வைணவம் கூறும் பஞ்ச ஞானங்கள் - தத்துவம், பேறு, தகுதி, உபாயம், பலன், தடை

- விஷ்ணுவின் அவதாரங்கள்:
  அவதாரம், ஆவேசம், அமிசம்

- திருமாலின் நிலைகள் - தத்துவம்
  பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை

- பஞ்ச ஸமஸ்காரம் - வழிபாடு
  முத்திரை தரித்தல், திருமண் காப்பு, தாஸ்ய நாமம் சூடுதல், திருமந்திர உபதேசம், திருவாராதணம்

- வைணவ முறைப்படி மோட்சத்தை அடைய விரும்புகின்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய இரகசியங்கள்.
  திருமந்திரம், துவைதம், சரசுலோகம்.

### 1.5.1.3 சாக்தம்

- சாக்தம் என்பதன் பொருள்
- சாக்தத்தின் முழுமுதற் கடவுள்
- சாக்தத்தின் தோற்றம்

    தொன்மம்

    பழ மரபுக் கதைகள்

    தொல் பொருட் சான்றுகள்
- சாக்தம் தோன்றி வளர்ந்த இடங்கள்
- வழிபாடு
    - கடவுளரின் வடிவங்கள்
    - இலட்சண விதிகள்
    - வழிபாட்டு முறைகள் - மந்திரம், தந்திரம், யந்திரம்
    - விரதங்கள்
- சாக்த சமய நூல்கள்
- சாக்த தத்துவம்
- பிரசித்தி பெற்ற ஆலயங்கள்

### 1.5.1.4 காணபத்தியம்

- கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியமாகும்.
- கணபதியை வழிபடுபவரை காணபத்தியர் என்று அழைக்கப்படுவர்.
- **கணபதிக்குரிய சில காரணப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| பிள்ளையார் | - | பிள்ளைகளுக்குரிய கடவுள் |
| விநாயகர் | - | தனக்குமேல் தலைவன் இல்லாதவர் |
| லம்போதரர் | - | பெரிய வயிறை உடையவர் |
| கணபதி | - | அறிவுக்கும் வீடுபேற்றுக்கும் உரிய கடவுள் |
| கணேசன் | - | மனம், வாக்கு என்பவற்றிற்கும் அவற்றை கடந்த நிலைக்குமுரியவர். |

- **கணபதியினுடைய உருவச்சிறப்பு**

கணபதியின் உடலில் எல்லாத் தெய்வங்களும் இருக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| முகம் | - | விஷ்ணு |
| கண் | - | சிவரூபம் |
| வடபாகம் | - | சூரியரூபம் |
| இடபாகம் | - | சக்திரூபம் |
| நாபி | - | பிரம்மரூபம் |

எல்லா ஜீவராசிகளும் இவருடைய உடலில் இணைந்து இருத்தல்

- **விநாயகரின் தோற்றமும் தத்துவக் கருத்தும்**

| | | |
|---|---|---|
| பானை வயிறு | - | உலகம் முழுவதும் வயிற்றில் உள்ளடக்கம் |
| யானை முகம் | - | ஓம் என்ற பிரணவ மந்திரத்தை குறிக்கின்றது |
| பெரிய செவி | - | அன்பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடையவர் |
| மோதகம் | - | இன்ப வடிவானவர் |
| ஒற்றைக் கொம்பு | - | தியாகத்தைக் குறிக்கும் |

- **ஐந்தொழில்களை உணர்த்தி நிற்றல்**

| | | |
|---|---|---|
| எழுத்தாணி பிடித்த கரம் | - | படைத்தல் |
| மோதகம் இருக்கும் கரம் | - | காத்தல் |
| அங்குசம் ஏந்திய கரம் | - | அழித்தல் |
| அமுதகலசம் | - | அருளல் |
| பாசம் கொண்டிருக்கும் கை | - | மறைத்தல் |

- வேதங்களில் உருவ வழிபாடு இல்லை. எனினும் கணபதியுடைய குறிப்புக்கள் காணப்படுகின்றன.
  ‘‘கணானாம் த்வாம் கணபதி’’ யசுர்வேதத்தில் ‘‘கணபதிக்கு வணக்கம்’’ என்று கூறப்பட்டுள்ளது.

- **தோற்றமும் வளர்ச்சியும்**
  - வட இந்தியா
  - வேதம் - இருக்கு வேதத்தில் ''கவிஞர்களின் கவிஞன்''
    ''ஞானிகளின் ஞானி''
    ''அரசர்களின் அரசன்'' எனச் சுட்டல்.
- **பிராமணங்கள் (ஐதரேயம்)**
  விநாயகர் விக்கினங்களைத் தீர்ப்பவராகவும் அடியார்களைச் சாந்தப்படுத்துபவராகவும் விளங்குகின்றார்.

- **உபநிடதங்கள் - ஏரம்ப உபநிடதம், கணேச உபநிடதம்**
  ''ஓம் கணபதியே வணக்கம். நீயே காணும் உண்மை. நீயே படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனுமாய் உள்ளாய்'' எனும் குறிப்புக்கள் உள்ளன.

- **புராணங்கள்**
  பிறப்பு, சிறப்பு என்பன எடுத்துக் கூறப்படுகின்றன.
  **உதாரணம்:** ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியான கணேச மகாத்மியம் வடமொழிப் புராணங்களான முத்தகல புராணம், பிரம்ம கைவர்த்தன புராணத்தின் ஒரு பகுதி கணேசபுராணம்

- **குப்தர்காலம்**
  இங்கும் பிள்ளையாருடைய சிறப்பு கூறப்படுகின்றது.
  **உதாரணம்:** மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார். இடையில் எழுத்தாணி உடைய தன்னுடைய ஒற்றைக் கொம்பினை உடைத்து எழுதினார்.

- **தென்னிந்தியா**

| | | |
|---|---|---|
| சங்க காலம் | - | குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாக முருகன் காணப் படுகின்றார். எனவே அவரது அண்ணனான விநாய கரும் இருந்திருக்க வேண்டும். |
| சங்கமருவிய காலம் | - | மணிமேகலை - ''கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை'' |
| நக்கீரர் | - | விநாயகரைப் பற்றிப் பாடியுள்ளார். |

- **பல்லவர் காலம்**
  இக்காலத்தில்தான் விக்கிரக வழிபாடு ஆரம்பமானது. வட இந்தியாவில் உள்ள வாதாபியிலிருந்து கொண்டு வரப்பட்ட விநாயகர் உருவம் தென்னிந்தியாவில் சிறுத்தொண்டரால் கணபதீச்சரத்தில் வழிபாடு செய்யப்பட்டதை திருஞானசம்பந்தர் பின்வருமாறு பாடியுள்ளார். ''அங்கமும் வேதமும்............................
  ஏந்தியாடும் கணபதீச்சரம் காமுறவே''
- **சோழர் காலம்**
  இங்கு ஆலயங்கள் கட்டப்பட்டன. நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரின் (திருநாரையூர்) அருளைப் பெற்றார். விநாயகர் மீது நம்பியாண்டார் நம்பி பாடல்களைப் பாடியுள்ளார்.
  **உதாரணம்:** திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சந்த விருத்தம்.
- **நாயக்கர் காலம்**
  விநாயகருக்குரிய கோயில்கள் காணப்பட்டன.

### 1.5.1.5 கௌமாரம்

- கௌமார மதத்தின் விளக்கம்
- பிரதிமாலட்சணங்கள்
- தோற்றமும் வளர்ச்சியும்
- கௌமாரம் தொடர்பான நூல்கள்
- வழிபாட்டு முறைகள்
- பிரசித்தி பெற்ற கோயில்கள்
- விரதங்கள்

### 1.5.1.6 சௌரம்

- சௌர மதத்தின் விளக்கம்
- பிரதிமாலட்சணங்கள்
- தோற்றமும் வளர்ச்சியும்
- சௌரம் தொடர்பான நூல்கள்
- வழிபாட்டு முறைகள்
- பிரசித்தி பெற்ற கோயில்கள்
- விரதங்கள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : அறுவகைச் சமய நெறிகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி II** : மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து கௌமாரம், சௌரம் தொடர்பான தகவல்கள் திரட்ட இடமளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங் கள்.

**படி III** : திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்த இடமளியுங்கள். குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

**படி IV** : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**


| | | |
|---|---|---|
| இந்துப் பண்பாட்டு மரபுகள் | - | கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் |
| இந்திய வரலாறு 1, 11 | - | கா சுப்பிரமணியப்பிள்ளை |
| விநாயக மகோற்சவம் | - | பிரம்மஸ்ரீ ஆத்மநாபசர்மா |
| தேவிபாகவதம் | - | சங்கராச்சாரியார் |
| இந்துநாகரிகம் | - | க. சி. குலரெத்தினம் |
| இந்துநாகரிகம் | - | சொக்கன் |

**தேர்ச்சி 2.0** : இந்து சமய வளர்ச்சியில் பக்தி இயக்கத்தினதும், சமூக, சீர்திருத்த இயக்கங்களினதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** தென்னிந்திய பக்தி இயக்கங்களின் பங்களிப்புக்களை விளங்கிக் கொள்வர்.

**பாடவேளைகள்** : 14

**கற்றற் பேறுகள்:**

- பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் தோன்றியதற்குக் காரணமாக அமைந்த சூழ்நிலை களைத் தெளிவுபடுத்துவர்.
- தமிழகத்தில் சைவ சமய வளர்ச்சியில் பல்லவர் கால நாயன்மார்கள் கையாண்ட உத்திகளையும் அவர்களது பங்களிப்புகளையும் மதிப்பிடுவர்.
- பல்லவர் காலத்தில் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்காக ஆழ்வார்கள் கையாண்ட உத்திகளையும் அவர்களது பங்களிப்புகளையும் எழுதிக் காட்டுவர்.
- பக்தி இயக்கத்தால் தமிழகம் அடைந்த பயன்களைப் பட்டியற்படுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 2.1.1 தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம்**

- தமிழக வரலாற்றில் சைவ நெறி கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்ட பழமை உடையது.
- சங்கமருவிய காலத்தின் இறுதிக் கட்டத்தில் அவதரித்த காரைக்காலம்மையார் இல்லற வாழ்க்கை வாழ்ந்து, பக்தி மார்க்கத்தைத் தன் வாழ்விலும் வாக்கிலும் வெளிப்படுத்தினார்.
- அவரது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலான நூல்கள் பக்தியின் சிறப்பினைக் காட்டுவன.
- சங்க காலத்தை அடுத்து அவைதீக சமயங்களின் வருகை காரணமாக சைவ சமய நம்பிக்கைகள் வீழ்ச்சி அடையத் தொடங்கின.
- பக்திநெறி பல்லவர் காலத்தில் சைவ, வைணவ சமயங்களை மையமாகக் கொண்ட பக்தி இயக்கமாக வளம்பெற்றது.
- பல்லவர் கால பக்தி இயக்கத்தில் முக்கிய பங்கெடுத்த நாயன்மார்களுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- பக்தி இயக்கத்தவர் அனைத்து மக்களையும் தம்பால் ஈர்ப்பதற்கு ஏற்றவகையில் தமது பணிகளை மேற்கொண்டனர்.
- பக்தி இயக்கத்தவர் தமிழகத்தின் எல்லா இடங்களிலும் சைவநெறி தழைத்தோங்குவதற்குப் பணிபுரிந்தனர்.
- அவைதீக சமயங்களை ஆதரித்த அரசர்களை சைவ சமயத்தில் ஈடுபாடு கொள்ள வைத்தமை நாயன்மார்களின் முக்கிய பணியாகும்.
    - அப்பர் மகேந்திரவர்மனின் மதமாற்றத்திற்குக் காரணமாக அமைந்தார். மண்டகப்பட்டு குகைக்கோயில் சாசனம் மகேந்திரவர்மனின் மதமாற்றம் பற்றிக் கூறுகிறது.

- நின்றசீர் நெடுமாறன் சைவ சமயத்தை ஆதரிக்கவும், பாண்டிய நாட்டில் சைவ நெறி நிலைபெறவும் திருஞானசம்பந்தர் காரணமாக அமைந்தார்.

- நாயன்மார்களின் செயற்பாடுகள் பாமர மக்களிடமும் சைவ சமயத்தில் பற்றுதலை ஏற்படுத்தும் வண்ணம் பொது மக்கட் சார்புடையனவாக அமைந்தன.

- நாயன்மார்களின் சமயப் பிரசாரத்தில் இசை முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.
  - நாயன்மார் பாடல்கள் இசைத்தன்மை கொண்டவை. இறைவனை மகிழ்ச்சிக்கு உட்படுத்தத்தக்கன. அற்புதங்கள் நிகழ்த்தவல்லவை. ஆலயங்கள் தோறும் இறைவனின் இருப்பை நிரூபிப்பவை. பொது மக்களிடத்தில் இறைநாட்டத்தை ஏற்படுத்தியமை.

- இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தவும், மக்களுக்கு சமயக் கருத்துக் களைக் கூறவும், ஆலய வழிபாட்டில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் இவ்விசைப்பாடல்கள் பெரிதும் உதவின.

- சைவநெறி சார்ந்த ஆலய வழிபாடு, இறைவனின் பெருமை, சிவசின்னங்களின் சிறப்பு, நாற்பாதங்களின் மாண்பு, குரு லிங்க சங்கம வழிபாட்டின் மகத்துவம் போன்ற பல அம்சங்களை உணர்த்துவதற்கு இவர்களது பாடல்கள் உதவின.
  - சம்பந்தரின் ‘மந்திரமாவது நீறு......’ எனத் தொடங்கும் திருநீற்றுப்பதிகம் விபூதியின் பெருமையைக் கூறுகிறது.
  - அப்பர் ‘நிலைபெறுமா......’ எனத் தொடங்கும் தேவாரத்தில் ஆலய வழிபாட் டில் முதன்மையான இடத்தைப் பெறும் சரியைத் தொண்டுகளைப் பாடுகிறார்.
  - அவர் உழவாரங் கொண்டு சரியைத் தொண்டுகளைப் புரிந்தமையால் ‘உழவாரப் படையாளி’ என்று போற்றப்படுகிறார்.

- சைவநெறியை மக்களிடையே நிலைபெறச் செய்யும் பொருட்டு இதிகாச, புராணக் கதைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

- சிவனுடைய தோற்றப் பொலிவுகள், திருவிளையாடல்கள், வீரச்செயல்கள் என்பன தொடர்பாக சிவ புராணங்கள் கூறும் கதைகளை தமது பாடல்களில் நாயன்மார்கள் எடுத்தாண்டனர்.
  - சம்பந்தர் ‘இலங்கை மன்னன் எடுத்த வடுக்கன் மேல்<br>தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்’ என்று இராமாயணக் கதையின் ஊடாக சிவனின் வீரம், இராவணன் வீரம், இறை பக்தி என்பனவற்றைப் பாடுகிறார்.
  - ‘மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்.....’
  - ‘பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட.....’
  - ‘மூவார் புரங்கள் எரித்து மூவர்க்கு......’ போன்ற பாடல்கள் நாயன்மார்கள் புராணக்கதைகள் வாயிலாக சைவ நெறியைத் தழைத்தோங்கச் செய்தமையை உணர்த்துகின்றன.

- பயன்பாடு: விளைவுகள்

### 2.1.2 தமிழகத்தில் வைணவ பக்தி இயக்கம்

- தமிழக வரலாற்றில் வைணவ நெறி கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்டது.
- முல்லை நிலக் கடவுளாகிய மாயோன் பிற்காலத்தில் விஷ்ணு வழிபாடாக வளர்ச்சி பெற்றது என்பர்.
- சங்க காலத்தை அடுத்து அவைதீக சமயங்களின் வருகை காரணமாக வைணவ சமய நம்பிக்கைகள் வீழ்ச்சி அடையத் தொடங்கின.
- சங்க மருவிய காலத்தின் இறுதிக் கட்டத்தில் அவதரித்த பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முதலானோர் வைணவ பக்தி மார்க்கத்தை வெளிப்படுத்தி வாழ்ந்து காட்டினர்.
- பல்லவர் காலத்தில் பக்தி நெறி சைவ, வைணவ சமயங்களை மையமாகக் கொண்ட பக்தி இயக்கமாக வளம்பெற்றது.
- பல்லவர் கால பக்தி இயக்கத்தில் முக்கிய பங்கெடுத்த ஆழ்வார்களுள் நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார் முதலான பன்னிருவர் முக்கியமாகக் கூறக்கூடியவர்கள்.
- பக்தி இயக்கத்தவர் அனைத்து மக்களையும் இறைவன் ஈர்ப்பதற்கு ஏற்றவகையில் தமது பணிகளை மேற்கொண்டனர்.
- தமிழகத்தின் எல்லா இடங்களிலும் வைணவ நெறி தழைத்தோங்குவதற்கு ஆழ்வார்கள் பணிபுரிந்தனர். ஆழ்வார்களின் செயற்பாடுகள் யாவும் பாமர மக்களிடமும் வைணவ சமயத்தில் பற்றுதலை ஏற்படுத்தும் வண்ணம் பொது மக்கட் சார்புடையனவாக அமைந்தன.
    - ஆழ்வார்களின் இசைப்பாடல்கள், அற்புதங்கள், ஆலய வழிபாடு சார்ந்த தல யாத்திரை போன்ற செயற்பாடுகள் பக்தி இயக்கத்தின் பொது மக்கட் தொடர்பைக் காட்டுவன.
- ஆழ்வார்களின் சமயப் பிரசாரத்தில் இசைப்பாடல்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தவும், மக்களுக்கு சமயக் கருத்துக் களைக் கூறி, ஆலய வழிபாட்டில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும் இவ்விசைப் பாடல்கள் பெரிதும் உதவின.
- ஆழ்வார்களது பாடல்கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் என்ற பெயரில் தொகுக் கப்பட்டுள்ளன.
- வைணவ நெறியை மக்களிடையே நிலைபெறச் செய்யும் பொருட்டு ஆழ்வார்கள் இதிகாச, புராணக் கதைகளைக் கையாண்டு பாசுரங்களைப் பாடினர்.
- வைணவ நெறி சார்ந்த ஆலய வழிபாடு, இறைவனின் பெருமை, பஞ்ச சம்ஸ்காரங் களின் சிறப்பு, நால்வகை யோகங்களின் பெருமை முதலான வைணவ சமய உண்மைகளை உணர்த்துவதற்கு இப்பாடல்கள் பெரிதும் உதவின.
    - நம்மாழ்வார் ‘நீறு செவ்வே இடக் காணில் திருமால் அடியவரே......’ எனத் தொடங்கும் பாடலில் திருமண் காப்பிடுதல் பற்றிப் பாடுகிறார்.
- விஷ்ணுவின் தோற்றப் பொலிவுகள், அவரது அவதாரங்கள், வீரச் செயல்கள் என்பன தொடர்பாக விஷ்ணு புராணங்கள் கூறும் கதைகளைத் தமது பாடல்களில் எடுத்தாண்டனர்.

- விஷ்ணுவின் இராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், நரசிம்ம அவதாரம் முதலான அவதாரங்களைத் தமது பாடல்களில் கையாண்டு பாடியுள்ளனர்.
- நம்மாழ்வார், ‘குன்றம் ஏந்தி குளிர் மழைகாத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்’ எனும் பாடலில் விஷ்ணுவின் கிருஷ்ண அவதாரம், வாமன அவதாரம் என்பனவற்றின் சிறப் பினைக் கூறுவதனைக் காணலாம்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : தென்னிந்திய பக்தி இயக்கங்களுள் ஒன்றைத் தெரிவு செய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி II** : மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம், தமிழகத்தில் வைணவ பக்தி இயக்கம் என்பன தொடர்பான தகவல்களைத் திரட்ட இடமளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள்.

**படி III** : திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்த இடமளியுங்கள். குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

**படி IV** : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

இந்து நாகரிகம் - க. சி. குலரத்தினம்
இந்துப் பண்பாடு பாகம் - 1 - செ. கமலநாதன்

**தேர்ச்சி 2.0** : இந்து சமய வளர்ச்சியில் பக்தி இயக்கத்தினதும், சமூக, சீர்திருத்த இயக்கங்களினதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** வட இந்திய பக்தி இயக்கங்களின் பங்களிப்புக்களை விளங்கிக் கொள்வர்.

**பாடவேளைகள்** : 16

**கற்றற் பேறுகள்:**

- வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் குறிப்பிடுவர்.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்களையும் அவர்களின் பொதுப்பண்புகளையும் பட்டியற் படுத்துவர்.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் சிறப்பினையும் அவர்களின் பங்களிப்பினையும் விளக்கிக் கூறுவர்.
- வட இந்தியப் பக்தி இயக்கத்தில் தமிழ் நாட்டு பக்தி இயக்கத்தின் செல்வாக்கினை மதிப்பிடுவர்.
- வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் பல்லவர் காலப் பக்தி இயக்கத்திற்கும் இடையில் காணக்கூடிய பொதுப் பண்புகளை ஒப்பிடுவர்.

- பிற சமயங்களின் எழுச்சி இந்து சமய மரபில் பக்தி இயக்கங்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பதைக் கூறுவர்.
- தமிழகத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி நெறி வட இந்திய வைணவ சமய மறுமலர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்தமையைக் குறிப்பிடுவர்.
- இவ்விரு பக்தி இயக்கங்களுக்கும் இடையிலான அடிப்படைப் பண்புகளை ஒப்பிட்டுக் கூறுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 2.2.1 வட இந்தியாவில் வைணவ பக்தி இயக்கம்**

- **வட இந்தியப் பக்தி நெறி தோன்றிய காலச்சூழல்:**

  இந்து சமயமானது சமய உட்பூசல்களாலும் அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்களாலும் மத்திய காலத்தினை அடுத்து வந்த காலப் பகுதிகளில் வீழ்ச்சியடைந்தது. இத்தகைய சூழ்நிலையில் வடநாட்டில் பக்தி இயக்கத்தின் தோற்றத்தினைக் காணமுடிகின்றது. இந்துசமயத்தைக் குறிப்பாக வைணவ சமயத்தினை மையமாகக் கொண்டதாக, வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் செயற்பாடுகளும் அமைந்தன.

- **வட இந்தியப் பக்தி நெறியாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.**

| | | |
|---|---|---|
| இராமானந்தர் | இராமதாசர் | கபீர்தாசர் |
| சூர்தாசர் | ஸ்ரீசைதன்யர் | நாமதேவர் |
| மீராபாய் | துளசிதாசர் | |

- **வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் பொதுப் பண்புகள்**

  1. அன்பும் அருளும் நிறைந்த முதல்வனான இறைவன் மீது நம்பிக்கை
  2. ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தனியானவை. அவை பரமாத்மா எனும் இறைவனின் பகுதியாகாமை என்பதில் நம்பிக்கை.
  3. பக்திமார்க்கம் மூலம் விடுதலை பெறலாம் என்பதில் நம்பிக்கை.
  4. பக்தி என்பது கர்மம், ஞானம், கிரியைகள், சடங்கு என்பவற்றை விடவும் மேலானது என்பதில் நம்பிக்கை.
  5. சமஸ்கிருத மொழியை விட்டு ஹிந்தி மொழியில் பாடுதல்.
  6. நாம சங்கீர்த்தன முறையைப் பின்பற்றுதல்.

## இராமானந்தர்

வட இந்தியப் பக்தி இயக்கத்தின் முன்னோடி

காலம் : கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி

சீடர் : கபீர்தாஸர்

- வடநாட்டில் எழுந்த யோகம், ஞானம் என்பவற்றோடு தென்னாட்டில் எழுந்த பக்தி, சரணாகதி என்பவற்றையும் சேர்த்து அரிய பாடல்களைப் பாடினார்.
- வகுப்புவாதம், மதபேதம் என்பவற்றைப் புறக்கணித்து ஒருமைப்பாட்டைப் பேணினார்.

## கபீர்தாஸர்

| | | |
|---|---|---|
| காலம் | : | கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி |
| பிறந்த ஆண்டு | : | 1398 |
| இடம் | : | காசி |
| தந்தை | : | நூர்அலி |
| தாய் | : | நிமா |
| மனைவி | : | லோய் |
| மகன் | : | கமால் |
| சீடர்கள் | : | மனைவி, மைந்தன், சூரத்கோபால், சாஹிப், குருநானக் |

- வட இந்திய பக்தி நெறியாளர்கள் இஸ்லாமிய கருத்துக்களையும் உள்வாங்கிய நிலையில் வைணவத்தை வளர்த்தார்.
- காசியில் 1398 ஆம் ஆண்டில் கபீர்தாஸர் பிறந்தார். அவர் நூர்அலி என்ற இஸ்லாமியரால் வளர்க்கப்பட்டார்.
- இளமையில் இஸ்லாமிய சமயக் கருத்துக்களை அறிந்திருந்தபோதிலும், இந்து சமய நம்பிக்கைகளையும், அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் கற்றுக் கொண்டார்.
- இன, மத பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து, விஷ்ணு ஒருவரையே தஞ்சம் எனக் கொண்டு வாழ்ந்தார்.
- தன் பக்தி உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் கபீர்தாசர் பாடிய பாடல்கள் பக்திச் சுவை நிறைந்ததாகவும், இந்து - இஸ்லாமிய ஒற்றுமையை வலியுறுத்துவன வாகவும் அமைந்தன.
- சமய, சமூகவியல் சார்ந்த கருத்துக்களைக் கொண்ட இவரது பாடல்கள் அனைத்தும் **கபீர்பந்தி** என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன.
- இவரது பாடல்களின் சிறப்புக் கருதி இரவீந்திரநாத் தாகூர் அப்பாடல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.
- திருக்குரானை கருத்தூன்றிக் கற்ற கபீர்தாசர், அதில் கூறப்படும் பசு வதை முதலான பகுத்தறிவு வாதத்திற்குப் புறம்பான கருத்துக்களை மறுத்தார்.
- இஸ்லாமிய - இந்து சமய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக கபீர்தாசரின் வாழ்க்கை வரலாறு அமைகின்றது.
- இஸ்லாத்தின் முதன்நூலையும், இந்து சமயத்தின் முதன் நூலையும் ஒரு நிலையில் வைத்து நோக்குகின்றார்.
- இஸ்லாமியராகப் பிறந்த கபீர்தாசர் வைணவராக வாழ்ந்து, வைணவத்திற்கும், இஸ்லாத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்கினார்.
- குருநானக் நிறுவிய சீக்கிய மதத்திற்கு கபீர்தாசரின் போதனைகள் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளன என்பர்.
- கபீர்தாசர் 1518 ஆம் ஆண்டளவில் சமாதி கூடினார்.

## ஸ்ரீசைதன்யர்

- வைணவ நெறிக்கு புத்துணர்ச்சி ஊட்டிய வைணவப் பெரியார்.

  இயற்பெயர் : கௌரங்கன்

  பிரசாரஞ் செய்த மாநிலங்கள் : வங்காளம், ஒரிசா, உத்தரப்பிரதேசம்
- போதனைகளின் அடிப்படை அம்சங்கள்:
  - குருவிடம் மதிப்பும் மரியாதையும் பணிவும் காட்டல்
  - அறநெறியைக் கடைப்பிடித்தல்
  - அமைதி பேணல்
  - அறப்பண்பை வளர்த்தல்
  - சத்தியநெறியில் நிற்றல்
- இவரின் சீடர்கள் : நித்தியானந்தர், ஜீவகோஸ்வாமி, பாலதேவர், ஹிரிதாஸ் (முஸ்லிம் சீடர்)
- ஜீவன் பற்றிய கருத்து
  - ஆண்டவனின் சேவகன்
  - ஆண்டவனுடன் நெருங்கிய உறவுண்டு
  - ஜீவன் ஆண்டவனாக ஆகமாட்டான்
- இறை பற்றிய கருத்து
  - முடிவான உண்மைப்பொருள்
  - அருள், தெய்வம்
  - ஆனந்த வடிவினன்
  - அன்புத் தெய்வம்
  - நிர்க்குணன்
  - சகுணன்

## மீராபாய்

| | | |
|---|---|---|
| காலம் | : | கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி |
| பிறந்த இடம் | : | மேர்த்தா என்னும் சமஸ்தானம் |
| தந்தை | : | ரணா ரத்னசிங் |
| கணவர் | : | போஜ்ராஜ் |

- தமிழகத்தில் பக்தி நெறியினை வளர்த்த ஆண்டாளுக்கு ஒப்பாக, வட நாட்டில் வைணவ பக்தியை வளர்த்தவராக மீராபாய் திகழ்கிறார்.
- அவர் கடைப்பிடித்த பக்தி மார்க்கமும், இசைப் பாடல்களும் பல்லவர் கால பக்தி இயக்கத்தில் பங்கெடுத்த ஆண்டாளின் பணிகளுக்கு ஒப்பானவை.
- 1498 ஆம் ஆண்டில் பிறந்த மீராபாய் தனது பாட்டனாராகிய ராவ் துதாஜியுடனேயே வாழ்ந்தார்.

- மீராபாயின் கணவராகிய போஜ்ராஜ் 1521 ஆம் ஆண்டில் போரின்போது இறந்துவிட்டார். அதனைத் தொடர்ந்து துறவுக் கோலம் பூண்ட மீராபாய், தன்னை இறைவன் பணிக்காக முற்றும் அர்ப்பணித்தார்.
- தமது சமயக் கருத்துக்களை விளக்கும் வகையில் தாச போதம், சத்போதம், ஆனந்தவனபுவனம் போன்ற நூல்களை அவர் இயற்றியுள்ளார்.
- சத்போதம் எனும் நூல் அவரது தத்துவக் கருத்துக்களை விளக்குவதாகவும், தாசபோதம் வேதாந்த சிந்தனைகளை விபரிக்கும் நூலாகவும் உள்ளன.
- பிரபக்தி மார்க்கத்தை மதுர பாவனையில் வெளிப்படுத்திய பக்தி நெறியாளராக அவர் காணப்படுகிறார். தாஸிய, சகிய, வாச்சலிய உறவு முறைகளிலும் தன் இறை அனுபவத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.
- தன்னை கோகுலத்து ராதையாகவும், விஷ்ணுவை கோகுலத்துக் கண்ணனாகவும் கொண்டு தன் தெய்வீகக் காதலை இறைவனுக்கு உணர்த்தினார்.
- கண்ணனிடம் ஆழ்ந்த காதல் கொண்டிருந்த மீராபாய் கண்ணன் இல்லாத தனிமையின் ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

  ‘பார் தோழி! ஹரியின் மனம் கல்லாகி விட்டது. வருவேன் என்றான் இன்னும் வந்தானில்லை’ என்று தன்னை நாடி வருவதாகக் கூறியும் வராத நிலை கண்டு மனம் வருந்துகிறார்.
- மீராபாய் இயற்றிய இசைப்பாடல்கள், இலக்கியங்கள் என்பன பக்திச் சுவையும், கருத்தாழமும் கொண்டவை.
- இளமையிலேயே கவி பாடும் திறன் கொண்ட மீராபாய் எளிமையான சொற்களைக் கொண்டு இனிமையான பாடல்களை இயற்றினார். இவ்வாறு மீராபாய் 400 வரையான பாடல்களைப் பாடியுள்ளார்.
- பக்தி நெறியில் புதிய மரபைத் தோற்றுவித்த இவரது பாடல்கள் பக்திச்சுவையும், எளிய நடையும், கருத்தாழமும் மிக்கவை. இதனால் இப்பாடல்கள் சாதாரண மக்கள் மனதை இலகுவாகத் தொட்டன.
- மீராபாயின் பாடல்கள் இறை நம்பிக்கையை வளர்ப்பவை; தத்துவச் செறிவுமிக்கவை.
- வைணவ சமய உண்மைகளை விளக்குகின்ற கீத கோவிந்தடீகா, ராகமல்ஹார், ராககோவிந், ருக்மிணி மங்களம், சத்தியபாமானூருசன் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.
- மீரா கிருஷ்ணனே தன் காதலன் என்றும் அவரின் புகழை ஆனந்தத்தோடும் ஆவேசத்தோடும் பாடியுள்ளார்.
- இவர் கைம்மை நோற்று, துறவுக் கோலத்தில் வாழ்ந்து தனது பக்தியை அதிகரித்தார்.
- இறைபற்றிய இவரது கருத்துக்கள்:
  - இறைவன் ஒருவனே உண்மையானவன். கிருஷ்ணன் எங்கும் நிறைந்தவன். எல்லாம் வல்லவர். பக்தர்களிடம் பெருங்கருணை வைத்தவர். அவர் பக்தர்களை ஆபத்துக்களிற் காப்பவர்.
- விஷ்ணு பக்தியில் சிறந்த இவர் 1547 இல் இறையடி சேர்ந்தார்.

### 2.2.2 வட இந்தியாவில் தமிழகப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு

- வட இந்தியாவில் மத்திய காலப்பகுதியை அடுத்து பக்தி இயக்கம் தோன்றுவதற்கு சமகால சமய, சமூக சூழ்நிலைகள் காரணங்களாக அமைந்தன.
- தமிழகத்தில் பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி இயக்கமும், மராட்டிய மாநிலத்தில் தோன்றிய பக்தி நெறியும் இப்பக்தி இயக்கத்தின் உருவாக்கத்திற்கு அதிகளவு பங்களிப்பினைச் செய்தன.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் என்று பலரும் தமிழகத்துப் பக்தி நெறியை வளர்த்தனர்.
- இவ்வடியவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழகப் பக்தி இயக்கத்தின் பல்வேறு பண்புகளும் வட இந்தியப் பக்தி இயக்கத்தில் வெளிப்படுவதனைக் காணலாம்.
- பிற சமயங்களின் எழுச்சியே இவ்விரு பிரதேசங்களிலும் பக்தி இயக்கங்கள் தோன்று வதற்குக் காரணமாக அமைந்தது.
    - சமண, பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பெற்ற எழுச்சியும் அதனால் இந்து சமயம் பெற்ற வீழ்ச்சியும் பல்லவர் காலப் பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பர்.
    - அதேபோல் இஸ்லாமிய சமயத்தின் வருகையும் அதன் வளர்ச்சியும் வட இந்தியப் பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பர்.
- பல்லவர் கால அடியவர்கள், இராமனுசர், இராமானந்தர் முதலான தமிழகப் பக்தி நெறியாளர்களின் போதனைகள் வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் பணிகளுக்கு அதிகளவு பங்களிப்புகளைச் செய்தன.
- தமிழகத்தில் சைவ, வைணவ பக்தி இயக்கத்தினர் தமது தாய்மொழியான தமிழில் மேற்கொண்ட செயற்பாடுகள், வட இந்தியப் பக்தி நெறியாளர்களுக்கு முன்னுதாரண மாக அமைந்தன. அவர்களும் தத்தமது பிரதேச மொழிகளில் பக்திசார் நடவடிக்கை களை முன்னெடுத்தனர்.

  **உ- ம்:** குஜராத்தி, வங்காளி, ஹிந்தி, மார்வாரி.
- சமஸ்கிருத மொழி சார்ந்த சமய நம்பிக்கைகளுக்கும், தமிழகப் பக்தி இயக்கத்தவர்கள் முக்கியத்துவம் கொடுத்தமை போலவே, வட இந்தியப் பக்தி நெறியாளர்களும் முதன்மைத்துவம் கொடுத்தனர்.
    - சமஸ்கிருத மொழியில் எழுந்த இலக்கியங்கள் கூறும் கருத்துக்களைத் தமது பிரசாரத்திற்குப் பயன்படுத்தினர்.
    - வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், பகவத்கீதை முதலான சமஸ்கிருத இலக்கியங்களை குறிப்பிடலாம்.
    - கபீர்தாசர் 'இதயங்கள் உள்ளன்போடு கூடும் இடம் வேதமும் குரானுமே' என்று வேதத்தை திருக்குரானுக்கு நிகராகக் குறிப்பிடுகிறார்.
    - மீராபாய் 'கண்ணன் வாங்கலையோ கண்ணன் வாங்கலையோ' என்று புராணங்கள் கூறும் கிருஷ்ண அவதாரத்தைப் பாடுகிறார்.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள் கையாண்ட தோத்திர மரபின் தொடர்ச்சியை வட இந்தியப் பக்தி இயக்கத்திலும் காணலாம்.

- நாயன்மார்களின் பாடல்கள் தேவாரங்களாகவும், ஆழ்வார் பாடல்கள் பாசுரங்களாகவும் அமைந்தன.
- வட இந்தியப் பக்தி இயக்கத்தவர்களுடைய பாடல்கள் பஜனைப் பாடல்களாகவும், கீர்த்தனைகளாகவும் அமைந்தன.
- கபீர்பந்தி, ராககோவிந், ருக்மணி மங்களம் போன்ற பஜனைப் பாடல்கள் அவற்றுட் சிலவாகும்.
- பவார்த்த தீபிகா, தாசபோதம், சத்போதம் முதலான இலக்கியங்களையும் வட இந்தியப் பக்தி இயக்கத்தவர்கள் இயற்றினர்.

- பல்லவர் கால பக்தி இயக்கத்தில் காணப்பட்ட சமத்துவ நோக்கு, சமூக சேவை போன்ற பண்புகள் வட இந்தியப் பக்தி இயக்கத்திலும் உண்டு.
- இரு வேறு பக்தி இயக்கத்தவர்களும் சாதி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் அன்பு என்னும் பக்தி மார்க்கத்தால் ஒன்றுபட்டனர்.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்கள் சிறப்பாக இன மத பேதமின்றி, ஒன்றுபட்டுச் செயற்பட்டனர்.
    - வட இந்தியப் பக்தி நெறியாளர்களுள் ஞானேஸ்வரர் பிராமணராவும், துர்க்காராம் வர்த்தகராகவும் விளங்கினர்.
    - இந்து - இஸ்லாமிய சமயத்தவர்களினுடைய ஒற்றுமையின் சின்னமாக கபீர்தாசர் விளங்கினார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : வட இந்தியப் பக்தி இயக்கம் என்ற தலைப்பில் ஒரு பகுதியைத் தெரிவு செய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் அதனை முன் வையுங்கள்.

**படி II** : மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, வட இந்தியாவில் தமிழகப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு என்ற தலைப்பில் தகவல்களைத் திரட்ட இடம் அளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள்.

**படி III** : திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்த இடமளியுங்கள். குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

**படி IV** : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

பக்தி விஜயம் - மணிமேகலை பிரசுரக்குழு
இந்து நாகரிகம் - க. சி. குலரெத்தினம்

**தேர்ச்சி 2.0** **:** இந்து சமய வளர்ச்சியில் பக்தி இயக்கத்தினதும், சமூக சீர்திருத்த இயக்கங்களினதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 2.3 :** சமூக சீர்திருத்த இயக்கங்கள் மேற்கொண்ட பணிகளையும் பங்களிப்புக்களையும் அறிந்து மதிப்பளிப்பர்.

**பாடவேளைகள்** **:** 16

**கற்றற் பேறுகள்:**

- சமூக சீர்திருத்த இயக்கம் என்பதன் பொருளை விளங்கி எழுதுவர்.
- இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதன் நோக்கம், பணிகள் என்பவற்றை ஒப்பிட்டு நோக்குவதுடன் அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு தாமும் இந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி: 2.3.1 இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள்**

- பிரம சமாசம்
- ஆரிய சமாசம்
- இராமகிருஷ்ண மிஷன்

- 18 ஆம் நூற்றாண்டிலே இந்தியாவில் இந்து சமய சமூகப் பின்னடைவுகள் ஏற்பட்ட வேளையிலேயே இந்து சமூகக் குறைபாடுகளை களையுமுகமாக தோன்றிய நிறுவனங்களே நவீன கால சமூக சீர்திருத்தநிறுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இத்தகைய நிறுவனங்களில் ராஜாராம் மோகன்ராயின் பிரமசமாசமும், தயானந்த சரஸ்வதியின் ஆரியசமாசமும், சுவாமி விவேகானந்தரின் இராமகிருஷ்ணமிஷனும் முக்கியமானவை.
- 19 ஆம் நூற்றாண்டில் இந்து சமூகத்தை மறுமலர்ச்சியடையச் செய்த ஞானியர்களில் ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் முக்கியமானவர்கள்.

**ராஜராம் மோகன்ராய்**

- இவர் கி.பி. 1772 இல் வங்காள நாட்டில் பிறந்தவர். பல் மதக் கோட்பாடுகளை அறியச் செய்தவர். பல மொழிகளை அறிந்து கொண்ட பிராமண குலத்தவர். பிராமணியக் கொள்கைகளைச் சீர்திருத்தம் செய்ய முயன்று, பிரமசூத்திர உரை செய்து ஒரு கடவுட் கோட்பாட்டைப் பரப்பியவர். சமூகக் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்தவர்.

- இவர் பல்சமய ஆய்வாளர். இந்தியாவின் புதுயுகத் தந்தை. பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி. ஆயினும் மரபுவழி இந்துநெறியைப் பேணியவர். ஆன்மீக வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.

- தம் குடும்பத்திலேயே தமது சகோதரி உடன்கட்டை ஏறியதைக் கண்டு அதனைச் சதி என்னும் சட்ட மூலம் தடுத்து நிறுத்தியவர். 1815 இல் ஆத்மீக சபை அமைத்து வேதாந்தக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.

- சமூக சமத்துவமே சமூக மேம்பாட்டிற்குரிய வழி என்பதைப் போதனையாலும் தமது சமாசத்திலே சாதனையாலும் காட்டியவர்.
- 'அவர் ஒருவரே உண்மை எல்லோரும் வாருங்கள்' என்று சமய ஒருமைப்பாட்டை யும் சமூக ஒருமைப்பாட்டையும் இணைத்தவர். இவரது பணிகளில்,

  1815 இல் ஆத்மீக சபை தாபித்தமை

  1816 இல் வேதாந்த சூத்திரத்தை மொழிபெயர்த்தமை

  1817 இல் வேதாந்தக் கல்வியை பரப்பியமை

  1820 இல் மரபு வழி நம்பிக்கைகளைப் பகுத்தறிவு ரீதியாக விமர்சித்தமை

  1823 இல் பிராமணன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டமை

  1825 இல் பல்வகைப் பிரார்த்தனை, வழிபாடுகளை அறிமுகம் செய்தமை

  1828 இல் பிரமசமாசத்தை அமைத்தமை

  1829 இல் உடன்கட்டைஏறும் பழக்கத்தைச் சட்டப்படி தடைசெய்தமை

என்பன அவரது முக்கியமான பணிகளாகும்.

- இந்துப் பண்பாடு உபநிடத சிந்தனைகளை அடிப்படையாக கொண்டது என்பது இவரது கொள்கையாகும். பெண்ணுரிமையைப் பாதுகாத்து இந்து தர்மத்தை இங்கிலாந்து நாடு வரை பரப்பிய பெருமை இவருக்குரியதாகும்.
- இவரது பிரமசமாசத்தில் பிராமணரும், இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் வழிபாட்டில் ஈடுபட்டனர். வர்ணதர்மம் கடந்த வாழ்வியலை இது எடுத்துக் காட்டுகிறது.

## தயானந்த சரஸ்வதி

- தயானந்த சரஸ்வதியின் ஆரிய சமாசமானது, ராஜாராம் மோகன்ராயின் மறுமலர்ச்சிக் கொள்கையிலிருந்து வேறுபட்டும் அதேவேளை தொடர்புபட்டும் அமைவது. 1824-1883 வரை வாழ்ந்த தயானந்த சரஸ்வதி 1875 இல் ஆரிய சமாசத்தை உருவாக்கினார். விக்கிரக வழிபாட்டில் காணப்பட்ட சீர்கேடுகளை கோயில் திருவிழாக்களில் பார்த்த பின்பே கண்டித்தார்.

- இந்தியாவை இந்தியரே ஆட்சி செய்ய வேண்டும். இந்தியா இந்தியருக்கே சொந்தம் என்னும் தாரக மந்திரம் இவருடையதாக இருந்தது. சமஸ்கிருத மொழிக்கு முதன்மை கொடுத்தார். வடமொழியும் ஆங்கிலமும் கற்பிக்கும் பாடசாலையையும் அமைத்தார். ஆரிய சமாசத்தை அமைத்ததே அவரது பிரதான பணியாகும்.

- இந்து மதமே மேலானது. விஞ்ஞான, பகுத்தறிவுக் கருத்துக்களின் களஞ்சியங்களாக இந்துசமய நூல்களே விளங்குகின்றன என்னும் கருத்து இவரிடம் காணப்பட்டது. வேதநெறி, வைதீக தர்மம் என்பவற்றை நிலைநாட்டுவதும் தயானந்த சரஸ்வதியின் நோக்கமாகும். இதற்காகவே தமது 14 வயதில் வேத அத்தியயனத்தைப் பூர்த்தி செய்தார்.

- பெண்களும் வேதங்களைக் கற்றுக் கொள்ளலாம் என்பதும் இவரது கொள்கையா கும். உலகப் பிரச்சினைகளுக்கு வேத இலக்கியங்களிலே பொருத்தமான உபாயங் கள் கூறப்பட்டுள்ளன என்பதையும் வெளிப்படுத்திக் காட்டினார்.

- சடங்கு முறைகள், தேவையற்ற கிரியைகள், விக்கிரக வழிபாடு, சாதியமைப்பு என்பவற்றைக் கண்டித்து சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறிய தயானந்த சரஸ்வதி அவர்கள் பசுக்கொலை, பலியிடல் முதலியவற்றையும் மறுத்தார்.

- இந்து தத்துவம், கடவுள், மறுபிறப்பு, ஆன்மா, துதி செய்து வழிபடல், தியானம் என்பவற்றைப் போதித்தார். இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றப்பட்டபோது அவர்களுக்குச் **சுத்தி** என்னும் தீட்சா சடங்கு செய்து மீண்டும் இந்து தர்மத்தைக் கடைப்பிடிக்கச் செய்தார். அதுமட்டுமன்றி இந்துக்கள் கடைப்பிடிக்க வேண்டிய பத்துக் கட்டளைகளையும் எடுத்துக் காட்டினார்.

- கடவுள் நம்பிக்கை, வேதநூல்களின் நம்பிக்கை, சத்திய வாழ்வு, ஆன்மீக ஞானம், சமுதாய நோக்கு, பிறர்நலம் பேணல் முதலிய கட்டளைகளை இந்துக்கள் தமது நியமங்களாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

- பிரமசமாசத்தைப் போலவே தயானந்த சரஸ்வதியின் ஆரியசமாசத்திலும் உருவப் படங்கள் வைக்கப்படவில்லை. ஆரிய என்னும் புராதன இந்துமதக் கொள்கையை மீளக்கட்டி எழுப்பிய சீர்திருத்தவாதியாக தயானந்த சரஸ்வதியைக் குறிப்பிடலாம்.

- 19 ஆம் நூற்றாண்டிலே இருளில் மூழ்கிக் கிடந்த இந்து மதத்துக்கு உரமூட்டியது ஆரிய சமாசம் என்று டி. எஸ். சர்மா எடுத்துக் காட்டுகிறார். ஆரியசமாசப் பணி களைச் செய்ததன் மூலம் இந்து மதத்தின் சுயபாதுகாப்பு வடிவமாக தயானந்த சரஸ்வதி விளங்குகிறார் என ஜவர்கலால்நேரு இச் சமாசத்தை புகழ்ந்துரைத்துள்ளார்.

- இந்துமதம், இந்திய நாடு, இந்திய மொழிகள் என்பவற்றுக்கு இச்சமாசம் பங்களிப்புச் செய்ததால் தயானந்த சரஸ்வதியின் சீடர்கள் மிக நீண்டகாலம் ஆரிய சமாசப் பணிகளை மேற்கொண்டார்கள்.

## இராமகிருஷ்ண பரமஹம்சர் போதனைகளும் சாதனைகளும்

- இவர் இந்துமத மறுமலர்ச்சியாளர்களில் தலைசிறந்தவர். வங்காள நாட்டில் அந்தண குலத்தில் பிறந்தவர். சாக்த சமயப் பக்தர்.

- வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்வியலுடன் இணைத்துக் காட்டியவர். மக்களுக்குச் சேவை செய்து மானுட துன்பம் நீக்குவதே நடைமுறை வேதாந்தம் என்பதனைச் சாதனையாகக் கடைப்பிடித்தவர்.

- வேத, உபநிடதச் சிந்தனைகளையும் அவை வெளிப்படுத்தும் இந்து தத்துவத்தையும் ஜனரஞ்சகமான போதனைகளாக எடுத்துக் காட்டிய பெருமை இராமகிருஷ்ணபரம - ஹம்சரையே சாரும்.

- இந்து தத்துவத்தில் ஈஸ்வர வடிவில் இறைக்கொள்கையை வலியுறுத்தியும் பரப்பிரமம் என்னும் வேதாந்த நிலையில் பரம்பொருட் கொள்கையை வலியுறுத்தியும் தத்து வார்த்த விடயங்களைக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருகொள்கைகளையும் இணைத்தே இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது கருத்துக்களைப் பரப்பியுள்ளார்.

- அனைத்துச் சமயங்களையும் ஏற்றுக் கொள்ளும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சமயப் பொதுமைமிக்க மனப்பாங்கு மேலானதன்மையுடையது ஆகும். எல்லாச் சமயங்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இறை உண்மையை எடுத்துக் காட்டுகின்றன என்பதைத் தமது அனுபவங்களால் உணர்த்தினார்.

- சமயங்கள் பலவாறு காணப்பட்டாலும் எல்லாச் சமயங்களும் சமுதாய ஒருமைப் பாட்டையே எடுத்து விளக்குகின்றன என்றும் குறிப்பிட்டார். இதுவே இவரது நடைமுறை வேதாந்தச் சிந்தனையாகும்.

- இராமகிருஷ்ண மடத்தை சுவாமி விவேகானந்தர் தாபித்தபோது இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளே சாதனையாகக் கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார். சமயப்பொறையைப் பேணுதல் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் போற்றுதல் முதலிய கடமைகளிலும் ஈடுபட வேண்டும் என்றும் இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது போதனைகளில் வெளிப்படுத்தினார்.

- இறைவனை உணர்ந்து கொள்வதற்கான எளிய மார்க்கங்களை இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சமய அனுபவத்தினூடாகவே வெளிப்படுத்தினார். இறைவனை அன்பு வழியில் உணரலாம், சமூக வாழ்வின் விருத்தியே சமய வளர்ச்சி முதலிய கருத்துக்களுக்கு முதன்மை வழங்கினார்.

- இத்தகைய கொள்கைகளைச் சாதனையாக்கிக் காட்டவே இந்தியாவிலும், இலங்கை யிலும் உலகின் பல பகுதிகளிலும் இராமகிருஷ்ண மடங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

- வேதாந்தக் கருத்தை உலகளாவிய நிலையில் பரப்பல், ஆங்கில மொழியில் பரப்பல் என்பன இராமகிருஷ்ண மடத்தின் ஊடாக இடம் பெறுகின்றன. இராம - கிருஷ்ண விஜயம் எனும் சஞ்சிகையை வெளியிடல், ஏழை எளியவர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தல் முதலான பணிகளையும் இராமகிருஷ்ணமடம் செய்து வருகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : நவீன கால சமூக சீர்திருத்த இயக்கங்களுள் ஒன்றைத் தெரிவு செய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி II** : மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, நவீன கால சமூக சீர்திருத்த இயக்கங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட இடமளியுங்கள். தேவை யான நூல்களையும் வழங்குங்கள்.

**படி III** : ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைப்புகளை வழங்குங்கள். திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்த இடமளியுங்கள்.

**படி IV** : குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

**படி V** : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

இந்து நாகரிகம் - க. சி. குலரத்தினம்

**தேர்ச்சி 3.0** : இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை யும் சிறம்பங்களையும் இனங்கண்டு அவை பற்றிய பகுப்பாய் வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** இலங்கையின் இந்து மத வரலாற்றினைக் கால அடிப்படையில் விளக்குவர்.

**பாடவேளைகள்** : 40

**கற்றற் பேறுகள்:**

- இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் பற்றி விபரமாக எழுதுவர்.
- இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவின் செல்வாக்கு தொடர்பான தகவல்களைக் கூறுவர்.
- இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சியை அறிய உதவும் வரலாற்று மூலங்கள் பற்றி விபரிப்பர்.
- இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் அதன் அமைவிடம் ஏற்படுத்திய செல்வாக்கினை மதிப்பிடுவர்.
- பொலநறுவைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சியை வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிப்பர்.
- ஐரோப்பியர் காலத்தில் இலங்கையில் இந்து சமய மரபுகள் பற்றி கூறுவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி : 3.1.1 இலங்கையில் இந்து மத வரலாறு -

## அறிமுகம்

- இந்து சமய நம்பிக்கைகள் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் தனித்துவமும் வரலாற்றுப் பழமையும் கொண்டவை.
- இலங்கை இந்திய உப கண்டத்தில் அமைந்துள்ளமையால் இதன் இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவிற்கு முக்கிய பங்குண்டு.
- இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் ஏற்படும் அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையிலும் அத்தகைய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தின.
- இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான அரசியல், வணிகம், திருமண உறவுகள், கலாசார பரிமாற்றங்கள் போன்றவை இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் செல்வாக்கினை ஏற்படுத்தின.
    - மௌரியர் காலத்தில் இலங்கைக்குப் பௌத்தம் கொண்டு வரப்பட்டமை
    - பக்தி இயக்கத்தினர் இலங்கையிலுள்ள திருத்தலங்களைத் தேவாரங்களில் பாடியமை
    - சோழ மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்தமை
- இலங்கையின் வட பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகளால் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் சைவம் சார்ந்த அரசு தோற்றுவிக்கப்பட்டது.

**வரலாற்று மூலங்கள்**

- இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள பல புதைபொருட் சின்னங்கள் உதவுகின்றன.
- தமிழ்மொழி, பாளி மொழி, சிங்கள மொழி, சமஸ்கிருத மொழி என்பவற்றில் தோன்றிய இலக்கியங்கள், பிற நாட்டார் குறிப்புக்கள் முதலானவை இலக்கியச் சான்றுகளாக அமைவன:
    - சமஸ்கிருத மொழி நூல்களுள் இதிகாசங்கள், புராணங்கள் முக்கியமானவை.
    - தமிழ்மொழி இலக்கியங்களை தமிழகத்தைச் சேர்ந்த இலக்கியங்கள், இலங்கை யில் தோன்றிய இலக்கியங்கள் என இனங்காணலாம்.
    - பாளி மொழி இலக்கியங்களாக மகாவம்சம், சூளவம்சம் முதலானவற்றைக் கூறலாம்.
- புதைபொருட் சின்னங்களாக ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டங்களிலும் அமைக்கப் பட்ட கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலானவை உள்ளன.
- பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையில் இந்து சமயம்சார் புதைபொருட் சின்னங்கள் காணப்படுதல் சிறப்பம்சமாகும்.
- இந்து சமயம் தொடர்பான ஆரம்பகால ஆய்வுகளில் அதிகமானவை இலக்கியச் சான்றுகளாக முதன்மைப்படுத்தியவை ஆகும்.
- அண்மைக் காலத்தில் இருவேறுபட்ட வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 3.1.2 இலங்கையில் இந்து மத வரலாறு

#### அனுராதபுரக் காலம்

- இலங்கை வரலாற்றில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுரக் காலம் எனக் கொள்ளப்படும்.
- தேவநம்பிய தீசனின் காலம் முதல் 5 ஆம் மகிந்தனின் ஆட்சிக்காலம் வரையான காலப் பகுதியாக இது உள்ளது.
- இலங்கை வரலாற்றில் பௌத்த சமயம் அரச ஆதரவுடன் வளர்ச்சி பெறத் தொடங்கிய காலமாக அனுராதபுரக் காலம் அமைகிறது.
- பௌத்த சமய நம்பிக்கைகளுடன் இந்து சமய மரபுகளும் வளர்ச்சியடைந்த காலம் என்ற வகையில் இலங்கையின் இந்து சமய வரலாற்றில் அனுராதபுரக் காலத்திற்கு தனித்துவமான இடமுண்டு.
- அனுராதபுரக் காலப்பகுதியில் இந்து சமயமானது தனித்துவமான நிலையிலும், பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையிலும் வளர்ச்சியடைந்தது.
- அனுராதபுரக் கால இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை, சமய மறுமலர்ச்சி என்பன அதிக செல்வாக்குச் செலுத்தின.
- வட இந்தியாவில் மௌரியர் ஆட்சியின் போது மகிந்த தேரரினால் பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வந்த பின்பு அது அரச மதமாக வளர்ச்சி பெற்றது.

- இந்நிலையில் இந்து சமய நம்பிக்கைகள் பௌத்த சமயத்தினுள் உள்வாங்கப்பட்டன.
- தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை, சமய மறுமலர்ச்சி என்பன இலங்கையில் இந்து சமயம் தனது நிலையில் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.
- எனவே இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கு இலங்கை யில் கிடைக்கும் சான்றுகளுடன் தமிழகத்து வரலாற்றுச் சான்றுகளும் தொல்பொருட் சான்றுகளும், இலக்கியச் சான்றுகளும் உதவுகின்றன.

## மன்னர்களும் இந்து சமயத் தொடர்பும்

- இலங்கை மன்னர்கள் பௌத்த சமயத்தை தழுவிய போதிலும் இந்து சமய வளர்ச்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.
- 2 ஆம் மகிந்தன், 2 ஆம் சேனன், எல்லாளன், துட்டகைமுனு போன்ற மன்னர்களின் காலத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்நிலையில் இருந்ததாக அறிய முடிகிறது.
- சிங்கள மன்னர்கள் தமது அரண்மனைகளில் வைதீக சடங்குகளை ஆற்றுதல், இந்து ஆலயங்களை வழிபடுதல், புரோகிதர்களுக்குத் தானங்களை வழங்குதல் என்று இந்து சமயத்துடன் தமது தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.
- இலங்கை மன்னர்கள் வைதீக சடங்குகளால் தம்மைத் தூய்மைப்படுத்தியமை பற்றி சீன யாத்திரிகனாகிய பாகியன் குறிப்பிடுகிறான்.
- மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் சிங்கள மன்னர்கள் இந்து ஆலயங்களைப் புனர்நிருமாணம் செய்தமை, கதிர்காமம் போன்ற ஆலயங்களை வழிபட்டமை போன்ற செய்திகளைத் தருகின்றன.
- இந்து சமயப் புரோகிதர்கள் அரண்மனைகளில் வேள்விகளை ஆற்றுதல், பூர்வ அபரக் கிரியைகளைச் செய்தல் போன்றவற்றைச் செய்தனர்.

## இந்து சமயத் தெய்வங்களும் கோயில்களும்

- இந்து சமயத்தில் வழிபடப்படும் தெய்வங்கள் தொடர்பான ஆதாரங்களும் கிடைக்கப் பெறுகின்றன.
- சிவன், விஷ்ணு, முருகன், கணபதி போன்ற தெய்வங்கள் இக்கால மக்களால் வழிபடப்பட்டதாக அறிய முடிகிறது.
- சிவபாலித, சிவரக்கித, விணு, கோபால, வேல, வேலச, கண, கணகுட்டச என்ற தொடர்கள் மேற்கூறிய தெய்வங்கள் தொடர்பாகக் கிடைக்கின்ற பிராமிக் கல்வெட்டுச் சான்றுகளாகும்.
- இந்துத் தெய்வங்கள் தொடர்பான வேறு பல சான்றுகளும் கிடைக்கப் பெறுகின்றன.
    - கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கை மக்கள் சிவ வழிபாட்டை உடையவர்கள் என்று தொலமி கூறியுள்ளமை.
    - அனுராதபுர அழிபாடுகளுக்கு மத்தியில் இந்துத் தெய்வங்களின் வெண்கலப் படிமங்கள் கிடைக்கப் பெற்றமை.
    - இசுறுமுனியாவில் உள்ள ''காதலர் சிற்பங்கள்'' சிவன், பார்வதி ஆகியோரின் வடிவங்கள் என்பவை குறிப்பிடத்தக்கவை.

- இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இந்துத் தெய்வங்களுக்கு ஆலயங்கள் பல காணப்பட்டன.
- இந்துக் கோயில்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி, நாட்டின் தென்பகுதி களில் பௌத்த மக்கள் வாழ்ந்த பிரதேசங்களிலும் சிறப்புற்று விளங்கின.
    - கதிர்காமம் முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை
    - தேவேந்திரமுனையில் உப்புல்வன் ஆலயம் சிறப்புற்றிருந்தமை
    - வசபக் குளத்தின் அருகில் பிள்ளையார் ஆலயம் இருந்தமைக்கு அவ்வாலயத் தின் அடித்தளம் கண்டுபிடிக்கப்பட்டமை
    - திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் புகழ் பெற்று விளங்கியமை

  என்பன போன்ற ஆதாரங்களை இங்கு குறிப்பிட முடியும்.
- திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் சம்பந்தர், அப்பர் முதலான நாயன்மார்களால் தேவாரத் திருமுறைகளில் புகழ்ந்து பாடப்பட்ட பெருமை பெறுவன.

### 3.1.3 இலங்கையில் இந்து மத வரலாறு (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு - கி.பி. 15 ஆம் நூற்றாண்டு)

#### ஆ-1 பொலநறுவைக்காலம்

- பொலநறுவையில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்து மரபுசார் கோயில் வழிபாடு, சமயச் சடங்குகள் என்பன வளர்ச்சி கண்டன.
- இந்திய, தமிழக அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தின.
- சோழ மன்னர்களின் பேரரசு விரிவாக்கத்தை அடுத்து இலங்கையும் சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.
- இராஜராஜனை அடுத்து அவன் மகன் இராஜேந்திரன் 1017 இல் நாடு முழுவதையும் தமது ஆதிக்கத்தில் கொணர்ந்தான்.
- இலங்கை - மும்முடிச்சோழ மண்டலம் எனவும், பொலநறுவை - ஜனநாதமங்களம் எனவும் அழைக்கப்பட்டன. சோழ அரசர்களின் பிரதிநிதி - சோழ இலங்கேஸ்வரன் எனப்பட்டான்.
- மகாவம்சம், சூளவம்சம், ராஜவலிய, பூஜாவலிய போன்ற இலக்கியங்கள் மூலமும் கட்டிடங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலானவற்றின் மூலமும் புதைபொருட் சின்னங்கள் வாயிலாகவும் பொலநறுவைக் கால இந்து சமய வளர்ச்சியைப் பற்றி அறிய முடியும்.
- தமிழகத்துடன் இலங்கை கொண்ட தொடர்பு காரணமாக பொலநறுவையிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்துப் பண்பாடும், சைவநெறியும் பெரு வளர்ச்சி கண்டன.

- பொலநறுவைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 16 இந்துக் கோயில்களுள் சிவன் கோயில்கள் 10, விஷ்ணு கோயில்கள் 5, காளி கோயில் ஒன்றாகும்.
- சிவன் கோயில்களுள் வானவன் மாதேவீஸ்வரம் இராஜேந்திரனால் கட்டப்பட்டதாகும்.
- கந்தளாய், மண்டலகிரி, பதவியா, மாதோட்டம், திருகோணமலை போன்ற இடங்களில் இந்து சமய மரபுகள் வளர்ச்சி பெற்றன.
- இந்து, பௌத்த அரசர்கள் மற்றுக் வணிகக் குழுக்கள், படைத்தளபதிகள் என்போர் இந்துக் கோயில்களை அமைத்ததுடன் பூசைகளும் ஏனைய காரியங்களும் முறையாக நடைபெற தானங்கள், கொடைகளை வழங்கினர்.
- சிவன் கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வீதிகள், பரிவாரக் கோயில்கள் எனும் பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளன.
- திருக்கோணேஸ்வரம், விக்கிரம சோழேஸ்வரம், உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஸ்வரம் போன்ற ஆலயங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி கண்ட இந்து கோயில்களாகும்.
- குருநாகல் கல்வெட்டு ''விக்கிரம சாளமேகேஸ்வரம்'' பற்றியும் மெடிரிகிரியா கல்வெட்டு இராஜேந்திரன் காலத்தில் புகழ்பெற்ற ''பண்டித சோழேஸ்வரம்'' பற்றியும் குறிப்பிடும்.
- திருக்கேதீஸ்வரத்தில் புதிய கோயில் அமைத்து அதற்கு ''இராஜராஜேஸ்வரம்'' எனப் பெயரிட்டனர்.
- 2 ஆம் விக்கிரமபாகு முதலான சிங்கள மன்னர் பணிகளால் இக் கோயில்கள் சிறப்படைந்தன.
- குளக்கோட்டனின் திருக்கோணேஸ்வர ஆலய நிர்மாண, புனர்நிர்மாணப் பணிகளை பல சான்றுகளால் அறியலாம். குளக்கோட்டன் இக்கோவிலை புனர்நிர்மாணம் செய்தமை, கந்தளாய்க் குளத்தை புனரமைத்தமை, திருமால், அம்மன் கோயில்களை அமைத்தமை, நிலங்களைத் தானமாக வழங்கியமை பற்றிக் கூறுகின்றன.
- தட்சண கைலாய புராணம் - ''பா தாங்கும் கோயிலும் பொன் மண்டபமும்.....'' எனும் பாடலில் திருக்கோணேஸ்வரத்தில் அவனது பணிகள் பற்றிக் கூறுகிறது.
- ஆலயங்களை அமைத்ததுடன் பூசைகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் அரசர்கள் பல தானங்களை அளித்தனர்.
- தமிழகக் கோயில்களைப் போல இங்கும் ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திர பாராயணம் என்பனவற்றிற்கு ஒழுங்கு செய்தனர்.
- தாழிக்குமரன் திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைத்து அதன் தேவைகளுக்கென மாதோட்ட நகரத்து நிலத்தையும் தானமாக வழங்கினான்.
- நிலாவெளிச் சாசனம், திருக்கோணேஸ்வரத்திற்கு அதிக நிலம் தேவதானமாக விடப்பட்டமையைக் பற்றிக் கூறும்.
- பன்மகேஸ்வரர் என்பவர் திருக்கோணேஸ்வரத்து அறக்கட்டளையை மேற்பார்வை செய்தார்.
- அரசர்களால் மட்டுமன்றி, பிரதானிகள், வணிகக் கணங்கள் என்போராலும் கோயில்கள் அமைத்து நிருவகிக்கப்பட்டன.
- அக் காலத்தில் நானாதேசிகர், வீரவளஞ்சியர் முதலான வணிகக் கணங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன.

- சமூக முன்னேற்றத்திலும், கலாசார அபிவிருத்தியிலும் ஐந்நூற்றுவர் எனும் வணிகக் கணத்தின் பங்கு முக்கியமானது. ஆலயத்தை அமைத்தல், திருவுருவங்களை நிறுவுதல், மண்டபங்களை அமைத்தல் எனப் பல வகையில் அவர்களின் பணிகள் அமைந்தன.
- சாசனங்களில் ஐந்நூற்றுவர் மடம், ஐந்நூற்றுவர் மண்டபம் எனும் பெயர்கள் உண்டு.
- பதவியாக் கல்வெட்டு, காளி கணத்தவர் அமைத்த காளி கோயில் பற்றியும் அதன் நிருவாகம் பற்றியும் கூறும்.
- வேதாகம கிரியைகளை ஆற்றும் பிராமணர்கள் அக்காலத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றனர்.
- மிகிந்தலைக் கல்வெட்டு ''ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்'' பற்றிக் கூறும். கந்தளாயில் அமைந்திருந்த பிராமணர் குடியிருப்பான ''ராஜராஜன் சதுர்வேதி மங்கலம்'' ராஜராஜன் காலத்தில் சிறப்படைந்தது. கோயில்களில் மட்டுமன்றி, அரண்மனைகளிலும் இந்து சமய மரபுகளும் பிராமணிய மரபுகளும் பேணப்பட்டன.
- அரசர்கள், அவர் தம் சுற்றத்தவர்களின் நாளாந்த வாழ்க்கை, சடங்குகள், கல்வி, கலைகள் என்ற பல துறைகளும் இந்து கலாசாரத்தின் செல்வாக்கைக் காட்டுவன.
- சோழ அரசர்களினதும், சிங்கள அரசர்களினதும் அரண்மனைகளில் இம் மரபுகள் வளர்ச்சி கண்டன.
  - சூளவம்சம் - விக்கிரபாகு புரோகிதர்கள் மூலம் வேள்விகளையும், இந்து சமயக் கிரியைகளையும் நடத்தினான் எனக் கூறும்.
  - மகாவம்சம் - ''மானாபரணனின் அரண்மனையில் வேதங்களில் வல்ல புரோகிதர் கள் ஓமம் வளர்த்து யாகம் செய்தார்கள்'' எனக் கூறும்.
  - பராக்கிரமபாகு பிறந்த நாள் தொட்டு, வைதீகச் சடங்குகளை முறைப்படி பின்பற்றினான்.
  - பராக்கிரமபாகுவின் ஜாதக கருமம், கர்ண வேதனம், அன்னப்பிரசாதனம் என்பன வைதீக முறைப்படி ஆற்றப்பட்டன.
- பொலநறுவைக் கால இந்துக் கோயில்கள் கட்டிடக் கலை, சிற்பக்கலை, விக்கிரகக் கலை என்பனவற்றின் வளர்ச்சியைக் காட்டுவன.
- தமிழகத்தில் வளர்ச்சி அடைந்த திராவிடக் கலை மரபின் செல்வாக்கு இப்பிரதேசக் கோயில்களில் பிரதிபலிக்கின்றன.
- தமிழக ஆலயங்களைப் போல் அல்லாமல் அளவில் சிறிதாக இருப்பினும் திராவிடக் கட்டிடக் கலை அம்சங்களைக் கொண்டுள்ளன.
- கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், பரிவாரக் கோயில்கள், விமானம் எனும் திராவிடக் கட்டடக் கலைக் கூறுகளைக் கொண்டுள்ளன. பொலநறுவைக் கோயில்களுள் 1 ஆம் சிவதேவாலயம் கலை ஆய்வாளர்களின் கவனத்தைக் கவருவன.
- இதன் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகிய உறுப்புகள் தனித்தனியாக அமைக்கப்பட்டு பின்பே இணைக்கப்பட்டன.
- கருவறையின் அடித்தளம் முதல் சிகரம் வரையான பகுதி செம்மையான கற்பாளங் களால் அமைக்கப்பட்டுள்ளது.

- பொலநறுவைக் கோயில்களில் கல்லிலும், உலோகத்திலும் அமைந்த பல சிற்ப விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1907, 1908, 1960 போன்ற ஆண்டுகளில் பொலநறுவையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பல கடவுளர், நாயன்மார் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கடவுளர் படிமங்களுள் நடராஜர், சோமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி என்பனவற்றையும், அடியவர் படிமங்களுள் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்கால் அம்மையார் வடிவம் என்பனவற்றையும் கூறலாம்.
  - சோமாஸ்கந்த வெண்கலப் படிமத்தில் பீடத்தின் மேல் சிவன், உமை என்போர் காணப்படினும் முருகனின் வடிவம் தற்போது இல்லை.
  - திரிபங்க அமைதியில் உள்ள அப்பரின் படிமத்தின் இடுப்பும், கால்களும் சற்று வளைந்தவாறு காணப்படுகிறன.
  - காரைக்கால் அம்மையார் வடிவம் சேக்கிழார் சித்தரிக்கும் பேய் உருவைச் சித்தரிப்பதாக உள்ளது.

## ஆ- 2 இராஜதானிகளும் வரலாற்று மூலங்களும்

- இலங்கையின் இந்து சமய வரலாற்றில் பொலநறுவைக் காலத்தைப் போலவே அதனை அடுத்து வந்த காலத்திலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- பொலநறுவை இராஜதானியின் வீழ்ச்சியை அடுத்து, இலங்கை பல இராஜதானிகளாக பிளவுபட்டது.
- இலங்கையின் மேல் மாகாணத்தை மையப்படுத்தி கோட்டை இராஜதானியும் மத்திய மலைநாட்டை மையப்படுத்தி கண்டி இராஜதானியும் நாட்டின் வட பகுதியை மையமாகக் கொண்டு யாழ்ப்பாண இராஜதானியும் அமைந்திருந்தன.
- கி.பி. 13 தொடக்கம் கி.பி. 16 வரையான காலத்தில் மூன்று இராஜதானிகளாக இலங்கை பிரிந்து இருந்தது.
- இவ்வாறு ஆட்சி அதிகாரங்கள் வேறுபட்ட நிலையில் காணப்பட்டாலும் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இந்து சமய நம்பிக்கைகள் வளர்ச்சி பெற்றன.
- கி.பி. 13 தொடக்கம் கி.பி. 16 வரையான காலத்தில் இந்து சமயம் பெற்ற வளர்ச்சி பற்றி அறிவதற்கு பல்வேறு வரலாற்று மூலங்கள் உதவுகின்றன.
- சிங்கள - தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் என்பன அவற்றுள் முக்கியமானவை.
- அவ்வகையில் குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடு தூது முதலான இலக்கியங்களைக் குறிப்பிடலாம்.
- திருக்கரசைப் புராணம், தட்சண கைலாய புராணம், கோணேசர் கல்வெட்டு, கைலாச மாலை போன்றன தமிழ் மொழி இலக்கியங்களுள் முக்கியமானவை.
- பிற நாட்டவர்களின் குறிப்புகளும் இக்காலம் பற்றி அறிவதற்கான வரலாற்று மூலங்களாக அமைவன.
- இந்துக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமன்றி, பௌத்த மக்கள் வாழும் பிரதேசங்களிலும் இந்து சமய நம்பிக்கைகள் வளம் பெற்ற வகையினை அறிந்து கொள்வதற்கு இவ்வகை வரலாற்று மூலங்கள் உதவுகின்றன.

## பௌத்த சமய மரபுகளும் இந்து சமயமும்

- இலங்கையின் மூவேறு இராஜதானிகளில் வெவ்வேறு மன்னர்கள் ஆட்சி செய்தாலும் அவர்களின் ஆட்சிக் காலங்களில் இந்து சமய மரபுகளும் வளம் பெற்றன.
- யாழ்ப்பாணத்தில் சிங்கை ஆரியன், பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலி குமாரன், விஜய காலிங்கன் முதலான அரசர்களதும் ஏனைய பகுதிகளில் 1 ஆம் பராக்கிரமபாகு, 4 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7 ஆம் விஜயபாகு, ராஜசிங்கன் போன்ற அரசர்களதும் ஆட்சி இடம் பெற்றது. அக் காலங்களிலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- சிங்கள மன்னர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றினாலும் இந்து சமயத்திலும் நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர்.
- இலங்கையில் கோட்டை இராஜதானியாக விளங்கிய காலத்தில் நாட்டின் தென் பகுதியில் இந்து ஆலயங்களும், அவை சார்ந்த நம்பிக்கைகளும் நன்கு வளர்ச்சி பெற்றன.
- 1 ஆம் பராக்கிரமபாகு, 4 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7 ஆம் விஜயபாகு போன்றவர்கள் இந்து சமயத்திற்கு அளித்த ஆதரவு, வழங்கிய நன்கொடைகள் என்பன பற்றி அறிய முடிகிறது.
- 6 ஆம் பராக்கிரமபாகு சிவன் கோயில்களுக்கும், முருகன் ஆலயங்களுக்கும் தானங்களை வழங்கினான்.
- தேநுவரை விஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளை 2 ஆம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு, குவெறோஸ் முதலான வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள் போன்றவற்றில் காணலாம்.
- பூவை விடு தூது, அன்னம் விடு தூது போன்ற இலக்கியங்கள் கோட்டையில் அமைந்திருந்த முருகன் கோயில் தொடர்பான தகவல்களைத் தருகின்றன.
- சிங்கள மொழிக் கல்வெட்டு ஒன்று தெய்வேந்திர முனையில் நகரீசர், நாகர், கணேசர் முதலான தெய்வங்களுக்கு அமைந்திருந்த கோயில்கள் பற்றிக் கூறுகின்றன.
- முன்னேஸ்வரத்திற்கு 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் செய்த பணிகள் பற்றி சிங்கள, தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்து சமய வளர்ச்சி

- நாட்டின் வடக்குப் பகுதியை மையமாகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்கு நிலைபெற்றிருந்தன.
- புவனேகபாகு மன்னன் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அமைத்தமை பற்றிக் கைலாய மாலை குறிப்பிடுகிறது. யாழ்ப்பாண வைபவ மாலை விஜயகாலிங்க மன்னனின் சமயப் பணிகள் பற்றிக் கூறுகிறது.
- நல்லூர் தலைநகரமாக விளங்கிய காலத்தில் அதன் நான்கு திசைகளிலும் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன.
- உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம், அரியாலை சித்தி விநாயகர் கோயில் போன்ற கோயில்கள் புகழ்பெற்று விளங்கின.

- கிழக்கிலங்கையில் திருக்கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம், திருக்கோயில் முருகன் கோயில் போன்ற ஆலயங்களும் இக்காலத்தில் புகழ்பெற்று விளங்கின.
- திருக்கோணேஸ்வரத்தின் சிறப்பினைக் கூறும் திருக்கோணசல புராணம் இக்காலத் திலேயே இயற்றப்பட்டது என்பர்.

**கிராமிய வழிபாடு**

- ஆகமம், சிற்ப சாத்திர நெறி சாராத வழிபாடு எனக் கருதப்படும் கிராமியச் சடங்குகளின் வளர்ச்சியையும் அக்கால இலங்கையில் நாம் காணலாம்.
- கண்ணகி அம்மன், மாரியம்மன், நாச்சிமார், பெரியதம்பிரான் முதலான கிராமியத் தெய்வங்கள் அக்கால மக்களால் வழிபடப்பட்டன.
- இந்நம்பிக்கைகளின் தொடர்ச்சியை இன்றும் மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் காணமுடிகிறது.

**இலக்கிய வளர்ச்சி**

- கண்ணகியின் வரலாற்றைப் பிரதேச வழக்குகளுடன் இணைத்துக் கூறும் கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் போன்ற இலக்கியங்கள் தோன்றின.
- இந்து சமய நம்பிக்கைகள், இந்து ஆலய வழிபாடுகள் என்பன பற்றிக் கூறும் இலக்கியங்கள் பலவும் இக்காலப் பகுதியில் தோன்றின.
- சிங்கள மொழியில் தோன்றிய குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடு தூது முதலான இலக்கியங்கள் இந்து சமய நம்பிக்கைகள் பற்றிக் கூறுவன.
- இந்துக் கோயில்களினுடைய புகழ் கூறும் தலபுராணங்களும் தோற்றம் பெற்றன.
- உதாரணமாக திருக்கோணேஸ்வரத்தின் சிறப்பினைக் கூறுகின்ற திருக்கோணசல புராணத்தைக் குறிப்பிடலாம்.
- கோணேசர் கல்வெட்டு, திருக்கரசைப் புராணம், கைலாய மாலை, சரசோதிமாலை போன்ற இலக்கியங்களையும் குறிப்பிடலாம்.

### 3.1.4 இலங்கையில் ஐரோப்பியர் காலம்

- இலங்கை வரலாற்றில் 16 ஆம் நூற்றாண்டில் இருந்து ஐரோப்பியர்களின் ஆட்சி தொடங்குகின்றது.
- 1948 ஆம் ஆண்டு வரை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற அந்நியர்கள் இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர்.
- இக்காலப் பகுதிகளில் இலங்கை மக்கள் அவர்களுக்கு அடிமைப்பட்டதுடன் சுதேச சமயங்களும் வீழ்ச்சி அடைந்தன.
- ஐரோப்பியர்களின் ஆட்சிக் காலங்களில் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவம் போன்ற சமயங்களின் வருகையை அடுத்து சுதேச சமயம் குறிப்பாக சைவம் வீழ்ச்சி பெறத் தொடங்கியது.

### போர்த்துக்கேயர்களின் ஆட்சிக்காலம்

- போர்த்துக்கேயர்களின் ஆட்சிக் காலத்தில் சைவ சமயம் பெரு வீழ்ச்சி அடைந்தது.
- ஆலயங்களுக்குச் செல்லுதல், சைவ சமய ஆசாரங்களைக் கடைப்பிடித்தல், சைவ உணவு உட்கொள்ளுதல் என்பன சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டன.
- இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த இந்து ஆலயங்கள் போர்த்துக்கேயப் படைகளால் அழிக்கப்பட்டன. திருக்கேதீஸ்வரம், சீதாவாக்கை பெறண்டிக் கோயில், தெய்வேந்திரமுனை விஷ்ணு ஆலயம், முன்னேஸ்வரம் போன்ற கோயில்கள் போர்த்துக்கேயப் படைகளால் அழிக்கப்பட்டன.
- சைவ மக்கள் பலர் கட்டாயத்தின் பேரில் கத்தோலிக்கர்களாக மாற்றப்பட்டனர்.
- சைவ மக்கள் மறைவான இடங்களில் திரிசூலம் முதலான குறிகளை வைத்து தம் சமய அனுட்டானங்களை மேற்கொண்டனர். இவ்வாறு சைவ சமயத்தவர்கள் தம் சமயாசாரங்களை மறைமுகமாகவே கடைப்பிடித்தனர்.

### ஒல்லாந்தர்களின் ஆட்சிக்காலம்

- இலங்கையில் போர்த்துக்கேயரை அடுத்து இடம்பெற்ற ஒல்லாந்தர்களின் ஆட்சியானது கி.பி. 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகள் வரை நீடித்தது. ஒல்லாந்தர்கள் ஆரம்பத்தில் கடுமையான சமயக் கொள்கை உடையவர்களாக இருந்தாலும், பிற்கூற்றில் சுதேச சமயங்களுக்கு ஓரளவு சமயச் சுதந்திரம் அளித்தனர்.
- மட்டக்களப்பில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்திலேயே இந்து ஆலயங்கள் பலவும் அழிக்கப்பட்டன.
- நல்லூர் கந்தசுவாமி ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் கோயில் போன்ற ஆலயங்கள் ஒல்லாந்தரின் ஆட்சியின் போதே புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.
- இக்காலப் பகுதியில் இந்து சமயம் சார்ந்த இலக்கிய முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. பறாளை விநாயகர் பள்ளு, மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, நல்லைக் குறவஞ்சி போன்ற இந்து சமய இலக்கியங்கள் தோன்றின.

### ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலம்

- இலங்கை வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலமாக உள்ளது.
- இலங்கையர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்காக ஐரோப்பாவில் இருந்து சமயக் குழுக்கள் வரவழைக்கப்பட்டன. இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷன், வெஸ்லியன் மிஷன், மெதடிஸ்த மிஷன் போன்ற சமயக் குழுக்கள் ஆங்கிலக் கல்வியைப் போதித்ததுடன், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் சமய நிறுவனங்களாகவும் செயற்பட்டன.
- கிறிஸ்தவ சமயக் குழுக்கள் கல்வி வசதி, வேலை வாய்ப்பு, சமூக நலப்பணிகள் போன்ற வழிமுறைகள் மூலம் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பின.கிறிஸ்தவ சமயக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஆங்கிலேய அரசாங்கமும் உறுதுணையாகச் செயற்பட்டது.

  (ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தை பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்துடன் இணைத்துக் கற்பிக்கவும்.)

### 3.1.5 பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி

- சூழ்நிலை, அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகள்.
    - ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலக் கல்வியும் அரச உத்தியோகமும் அளித்து, சைவ சமயத்தவர்களைத் தமது மதமாற்றக் கொள்கைக்கு உட்படுத்தினர்.
    - கிறிஸ்தவ மிஷனரிமார்களிடம் தங்களது கல்விக் கொள்கையைக் கையளித்தனர்.
    - கிறிஸ்தவ சமயம் பரம்பலைத் தடுக்கவும், சைவ சமயத்தை வளர்க்கவும் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பல சைவ சமயப் பெரியார்கள் தோன்றினர்.

- **சைவ சமய முயற்சிகள்**

    - **பிரசங்கம் செய்தல்**
      பிரசங்கப் பொருள் - கடவுள், திருவிழா, நிலையாமை, மகளிர் ஒழுக்கம், கூடாவொழுக்கம்
      பிரசங்கம் செய்தோர் - ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், கொக்குவில் சபாரத்தின முதலியார், நீர்வேலி சங்கரபண்டிதர், சி. வை. தாமோதரம்பிள்ளை, த. கைலாசபிள்ளை
    - **கண்டனம் செய்தல்**

        1. கிறிஸ்தவ கண்டனம் செய்தல் – கண்டனம் பிரசங்கங்களாகவும், கண்டன நூல்கள் மூலமும் துண்டுப் பிரசுரங்களின் மூலமும் நிகழ்த் - தப்பட்டன
        2. சுதேசிய கண்டனம் செய்தல்
            (i) **பொருள் -** பலியிடல், ஆகமப்பிறழ்வு, மகளிர் ஒழுக்கம், ஆகமவிதி, அந்தணர் ஒழுக்கம்.
            (ii) **கண்டனம் செய்தோர் -** நாவலர், காசிவாசி செந்திநாதையர், மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை

- **சைவ சமய நிறுவனங்கள்**

    (i) சைவப் பிரகாச சபை - நோக்கம், பணிகள்
    (ii) சைவப் பிரகாச சமாஜம் - நோக்கம், பணிகள்
    (iii) சைவப் பரிபாலன சபை - நோக்கம், பணிகள்

- **பாடசாலைகள் அமைத்தல்**

    - அமைவிடம் - யாழ்ப்பாணம், வேலணை, புலோலி, வண்ணார்பண்ணை, ஏழாலை, கந்தர்மடம், நீர்வேலி, சாவகச்சேரி
    - வித்தியாசாலையின் பெயர்கள் - சைவப்பிரகாசம், நாயன்மார்கள் பெயர், சந்தானகுரவர் பெயர் முதலானவற்றைக் கொண்டிருத்தல்.

- வித்தியாசாலைகளில் கலைத்திட்டங்கள் பேணப்பட்டன. வகுப்பு - முதல் எட்டு வகுப்புகள் இருந்தன.
- கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் முதலான பாடங்களும் கற்பிக்கப்பட்டன. ஆங்கில மொழி போதிக்கப்பட்டது.
- முகாமைத்துவம் - நிறுவனங்களின் கீழும், தனிப்பட்டோரிடமும் இருந்தன.
- கல்வியின் நோக்கம் - நல்லொழுக்கம், சமயம் என்பவற்றை வளர்த்தல்.
- பாடநூல்களை எழுதுதல் - பாலபாடங்கள் எழுதுதல், நூல்களுக்கு உரை எழுதுதல், வசன நூல்கள் எழுதுதல்.
- ஆசிரியர்கள் - ஆறுமுகநாவலர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்
- சைவாங்கில பாடசாலைகளை நிறுவுதல்.
  **உ-ம்:-** (i) சைவாங்கிலப் பாடசாலை
  (ii) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
  (iii) உரும்பிராய் இந்துக்கல்லூரி
  (iv) காரைதீவு இந்துக்கல்லூரி

- நாட்டின் பல பிரதேசங்களில் கதிரேசன் கோயில்கள், சிவன், விநாயகர், அம்மன் முதலான தெய்வங்களுக்கும் பெருங்கோயில்கள் எழுந்தன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த கோயில்கள் இக்காலத்தில் பெருங்கோயிலாகவும், உற்சவங்களையும் பல்வேறு விழாக்களையும் கொண்டதாகவும் விளங்கின.
- இந்த நூற்றாண்டில் மலையகத்தில் தமிழ் மக்கள் குடியேறினர். அதனால் முத்து மாரியம்மன் வழிபாடு அப்பகுதியில் சிறப்புப் பெற்றது.
- நாட்டார் தெய்வங்களுக்கு வெளிப்படையான சடங்குகள் நடைபெற்றன.
- வன்னிப் பிரதேசத்தில் கண்ணகியம்மன், நாகதம்பிரான் முதலான தெய்வங்கள் முக்கியத்துவம் பெற்றன.
- மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகியம்மன், திரௌபதையம்மன் வழிபாடுகள் முக்கியத்துவம் பெற்றன.
- சைவாலயங்கள் மீது பல பிரபந்தங்கள் பாடப்பட்டன.
- பிரபந்த வடிவில் காவியங்களும் பாடப்பட்டன.
- **அச்சியந்திரசாலை நிறுவுதல்**
  - **பணி -** துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்
    பாடநூல்களை வெளியிடல்
    ஏட்டுச் சுவடிகளை அச்சேற்றல்
    உரை நூல்களை வெளியிடல்
    வசன நூல்களை வெளியிடல்
    பத்திரிகைகளை வெளியிடல்
    பிரபந்த நூல்களை வெளியிடல்

  - **அச்சியந்திரங்கள் அமைந்த இடங்கள்:**
    வண்ணார்பண்ணை, அச்சுவேலி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை, நீர்வேலி, சாவகச்சேரி.

- **அச்சியந்திர வருகையால் பத்திரிகை வெளியிடல்:**
  இலங்கைநேசன், இந்துசாதனம் (Hindu Organ) (1889), சைவ உதயபானு (1880)

- **இலங்கை அரசியலில் சைவர்களின் வகிபாகம்**
  **உ- ம்** சேர். பொன். இராமநாதன்

### 3.1.6 இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி

- சூழ்நிலை, அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகள்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தர், சேர். பொன். இராமநாதன், சிவபாதசுந்தரனார், சேர். பொன். அருணாசலம் என்று பலர் சைவசமய மறுமலர்ச்சிக்காகப் பணிபுரிந்தனர்.
- சைவ சமய வளர்ச்சி நிறுவன ரீதியாக ஏற்படுத்தப்பட்டமை.
  **உ-ம்:-** (i) விவேகானந்த சபை (1902)
  (ii) சைவ வித்தியா விருத்திச் சங்கம் (1922)
  (iii) இராம கிருஷ்ண மிஷன்
  (iv) அகில இலங்கை இந்துமாமன்றம் (1955)
  (v) சைவ மங்கையர் கழகம் (1930)
  (vi) சிலாபம் இந்து வாலிபர் சங்கம்
  (vii) யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை - 1988

- **பிரசங்கம்**

  தங்கம்மா அப்பாக்குட்டி தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளுக்குச் சென்று நடத்தியமை.

- **கதாப்பிரசங்கம்**
  - சமய அறிவை சாதாரண மக்களுக்கு மிகவும் எளிய முறையில் விளக்கப் பயன்படுவதாகும். **உ-ம்:-** (i) வட்டுக்கோட்டை சங்கர சுப்பையர்
    (ii) குப்பிளான் செல்லத்துரை
    (iii) அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி
    (iv) திருகோணமலை பண்டிதர் வடிவேல்
    (v) கல்முனை சிவ அன்பு
  - சச்சிதானந்த யோகிகள் தமிழ்நாடு வரை புகழ் பெற்றவர்.
  - கதாப்பிரசங்கத்திற்கு சங்கர சுப்பையர் சிறப்பானவர் எனப் புகழ் பெற்றவர்.
  - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக பரமாசாரிய சுவாமிகள் தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் கதாப்பிரசங்கம் செய்தார்.

- **பத்திரிகைகள்**
  - **உ-ம்:-** (i) சைவ சித்தாந்த பானு (1924)
    (ii) விவேகானந்தன் (1925)
    (iii) சிவதொண்டன் (1935)
    (iv) சைவக் காவலன் (1960)
    (v) மெய்கண்டார்நெறி (1972)

- கோப்பாய் சபாபதி நாவலர் சென்னையில் சித்தாந்த வித்தியானுபாலன் எனும் அச்சகத்தை நிறுவி ஞானாமிர்தம் எனும் பத்திரிகையை வெளியிட்டமை.
- சித்தாந்த தீபிகை எனும் ஆங்கிலச் சஞ்சிகையை ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை நடத்தியமை.

- **பாடசாலைகள் நிறுவப்பட்டமை**
    - **உ-ம்:-** (i) கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்
      (ii) இரத்மலானை இந்துக் கல்லூரி
      (iii) வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்
      (iv) சிலாபம் மருதங்குளம் சைவப் பிரகாச வித்தியாசாலை
- சுதந்திரத்தின் பின் சைவ சமய நிறுவனங்கள் மூலம் சமயம் வளர்க்கப்பட்டது.
    - **உ-ம்:-** அகில இலங்கை இந்துமாமன்றம் (1955)

- **பணிகள்**
    - சைவ சமயக் கல்வி அரசின் அங்கீகாரத்துடன் பாடசாலையில் கற்பிக்கப்பட்டது.
    - சைவ சித்தாந்த சமாசம் (1905) நிறுவியமை.
    - வேலணையில் நடைபெற்ற திருமுறை விழா (1955)
    - வேத சிவாகம பாடசாலைகள் நிறுவப்பட்டன.

      **உ-ம்:** - உடுவில்

      - சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயிலுக்கு அருகில் உள்ளது.
    - நாட்டுக்கோட்டை நகரத்தார் பணி

      **உ-ம்:** யாழ்ப்பாணம், புத்தளம், காலி
    - சைவப் பிள்ளைகள் பயில்வதற்கென தனியான கல்லூரிகளும், சைவ அநாதை இல்லங்களும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் நடத்தப்பட்டமை.
- 1960 ஆம் ஆண்டு 180 தனியார் பாடசாலைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்றன.
- நிறுவனங்களினால் நிறுவப்பட்ட பாடசாலைகள் சைவ ஆசார அனுஷ்டான பயிற்சி நிலையங்களாக விளங்கின.
- வெளிநாட்டினரும் இலங்கைக்கு வந்து சமய, சமூகப் பணிகளைப் புரிந்துள்ளனர். **உ - ம் :** சுவாமி தந்திரதேவா
- **ஆங்கிலத்தில் சைவக் கொள்கை**
    - எச். டபிள்யு. சோமறஸ் (ஜேர்மனி) என்பவர் சைவசித்தாந்தம் எனும் தலைப்பில் ஜேர்மன் மொழியில் நூலை (1912) எழுதியமை
    - திருவாசகத்தை (1900) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை
    - திருமதி. இரத்தினா நவரத்தினம் 256 பக்கங்களைக் கொண்ட திருவாசக விளக்கம் ஆங்கிலத்தில் எழுதியமை

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்**

**படி I** : இலங்கையில் இந்து மத வரலாறு என்னும் தலைப்பின் கீழ்வரும் ஒரு பகுதியைத் தெரிவு செய்து மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் அதனை முன்வையுங்கள்.

**படி II** : இலங்கையில் ஆரம்பகாலம் முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியில் இந்து சமயத்தின் வளர்ச்சி தொடர்பான தகவல்களைத் திரட்ட பொருத்தமான நூல்களை வழங்குங்கள்.

**படி III** : மாணவர்களை பல குழுக்களாகப் பிரித்து, காலங்களுக்கு (**உ-ம்:** அனுராதபுரம், பொலனறுவைக் காலம்) ஏற்ப தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துங்கள்.

- திரட்டிய தகவல்களைத் தொகுத்து, குழுவில் ஒருவர் வீதம் வந்து வகுப்பில் முன்வைக்குமாறு கூறுங்கள்.
- தகவல்களைக் குறிப்புகளாகத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

| | | |
|---|---|---|
| இலங்கையில் இந்து மதம் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| சிந்தனை (சஞ்சிகை) | | |
| யாழ். பல்கலைக்கழக வெளியீடு | - | பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் |
| கோணேஸ்வரம் | - | குணசிங்கம் |

**தேர்ச்சி 3.0** : இலங்கையில் இந்துநாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை யும் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவை பற்றிய பகுப் பாய்வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** இலங்கையில் இந்துசமய, சமூக நிறுவனங்கள் ஆற்றி வரும் பணிகளையும் பங்களிப்புக்களையும் அறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்:**

- இலங்கையில் உள்ள இந்து சமய, சமூக நிறுவனங்கள் பற்றியும், அவை தோன்றியமைக்கான சூழ்நிலைகள் பற்றியும் விரிவாக அறிந்து விளக்குவர்.
- மேற்படி நிறுவனங்களின் பணிகளை அறிந்து, அவற்றுடன் இணைந்து செயற்பட முன்வருவர்.
- மேற்படி நிறுவனங்களுக்கு மதிப்பளிப்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**3.2.1 இலங்கையில் உள்ள இந்துசமய சமூக நிறுவனங்கள்**

**3.2.1.1 சைவ பரிபாலன சபை:**

**அறிமுகம்:**

ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியார்களைப் போன்று, நிறுவன ரீதியாக சைவசமய வளர்ச்சிக்குந் தமிழ்மொழி அபிவிருத்திக்குமாக தோன்றிய சபையே சைவ பரிபாலன சபையாகும்.

**தோற்றம்:**

- கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் அதாவது 1888 இல் தாபிக்கப்பட்டது. தாபிப்பதற்கு முன்னோடியாக நின்றவர் நாவலரின் மாணவரும் மருகருமாகிய வித்துவசிரோமணி திரு. ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களாவார்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் எண்ணக்கனவின் நிறைவே இச்சபையாகும்.
- ‘‘எத்தனையோ சபைகள் தோன்றி மறைந்தாலும் காலத்தால் தேய்வுறாது எத்தனையோ கஷ்டங்களையும் தாங்கி நின்று இன்று வரை நிலைத்திருப்பதற்கு தாபகர்களுடைய தவமும், தியாகமும் மக்களுடைய ஆதரவுமேயாகும்.
- 1889 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சபையினை நிறுவியமை. ஐந்து வருடங்களின் பின் கல்லூரி நிர்வாகத்திடமே சபையினை ஒப்படைத்தமை.

**தோற்றத்துக்கான காரணங்கள்:**

- மேலைத் தேசத்தவரின் ஆட்சியில் சைவசமயமும், தமிழ்மொழியும் பெரிதும் பாதிப்புக் குள்ளாகியமை.
- நாட்டை ஆள்பவர்களினால் சமய ஆசாரங்கள் நசுக்கப்பட்டமை. போர்த்துக்கேயரால் புராதன சைவ ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டமை.
- சைவாசாரப் பழக்க வழக்கங்கள் குன்றத் தொடங்கியமை.
- ஒல்லாந்தருக்குப் பின் ஆங்கிலேயர் சமயச் சுயாதீனத்தை ஒருவாறு வழங்கிய போதிலும் அவர்களுடைய ஆதரவுடன் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப வந்த மிஷனரிமார் சைவசமய விருத்திக்குத் தடையாகவிருந்தமை.
- சைவப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்கத் தடை இருந்தமை.
- மிஷனரிமார் சைவசமயத்தை கண்டித்துப் பிரசாரஞ் செய்தமை. சைவசமயத்தைத் தூஷித்துப் பிரசுரங்கள் வெளியிட்டமை.
- சைவசமய சின்னங்களைக் கேலி செய்தமை. சைவசமயிகளுக்கு அஞ்ஞானிகள் என்ற நாமத்தைச் சூட்டியமை.

**பணிகள்**

- கிராமங்கள் தோறும் சமயப் பிரசாரஞ் செய்தல்
- நாயன்மார்களின் குருபூசைத் தினங்களைக் கொண்டாடுதல்
- ஆலயங்களில் புராணபடனங்கள் செய்தல்
- சைவசமய பாட வகுப்புக்கள் நடாத்தியமை.
- 1947 இல் சபைக்குச் சொந்தக்காணி பெற்று, கட்டிடம் அமைத்து தனித்துவமாக இயங்கியமை.
- ‘‘நாவலர் மண்டபம்’’ அமைத்து, சபையின் நிகழ்வுகளை அங்கே நடாத்தியமை.

### 3.2.1.2 சைவ வித்யா விருத்திச் சங்கம்

**காலமும் பின்னணியும்:**

- 1923 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- ஐரோப்பியர் காலத்தில் நலிவுற்றிருந்த சைவத்தமிழ் கல்விப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்தல்.
- சேர். பொன். இராமநாதன், இந்துபோர்ட். சு. இராசரெத்தினம் என்போரே சைவ வித்யா விருத்திச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களாவர்.

**பணிகள்:**

1. சைவப் பாடசாலைகளை அமைத்தல்.
2. சைவப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளித்தல்.
3. சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
4. சைவப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்தல்.
5. சைவ சமயப் பரீட்சைகளை நடாத்துதல்.

**பணிகள் பற்றிய சுருக்கம்:**

**1. சைவப் பாடசாலைகளை அமைத்தல்**

யாழ்ப்பாணத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களிலும் புத்தளம், வவுனியா, முல்லைத்தீவு, சிலாபம், பதுளை, நாவலப்பிட்டி, கண்டி, கலகா ஆகிய பிரதேசங்களிலும் பாடசாலைகளை நிறுவியமை, தனிப்பட்ட முகாமையாளர் களால் சங்கத்துக்கு ஒப்படைக்கும் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடாத்துதல்.

**2. சைவப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளித்தல்**

- சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளில் படிப்பதற்கு வசதியளித்து, உற்சாகமூட்டல்
- சைவப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளித்தமை.

**3. சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்**

- சைவத் தமிழ்ப் புலமையை வளர்க்கும் நோக்குடன் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையைத் திருநெல்வேலியில் அமைத்தல்.
- நான்கு கைத்தொழில் நிலையங்களை நிறுவி, பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிபுரிந்தமை.

**4. சைவப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்தல்**

- விபூதி தரிக்கும் பண்பாட்டை சைவமக்களிடையே வளர்த்தமை.
- சைவ அநாதை விடுதிகள் நிறுவியமை.
- தமிழ், இலக்கியம், சங்கீதம், நாடகம் வளர ஆவன செய்தமை.

**5. சைவ சமயப் பரீட்சைகளை நடாத்துதல்**

- மாணவர்களின் நலன் கருதி நாடளாவிய ரீதியில் பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ், பரிசில்கள் வழங்குதல்.
- சைவப் பெரியோர்களையும் சைவத் தமிழ்க் கலைஞர்களையும் பாராட்டிக் கௌரவித்தல்.

### 3.2.1.3 கொழும்பு விவேகானந்த சபை

**(அ) தோற்றம்**

- 1902 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி கொழும்பு ஜிந்துப்பிட்டியில் கொழும்பு விவேகானந்த சபை நிறுவப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது.

**(ஆ) நோக்கம்**

**கொழும்பு விவேகானந்த சபையின் நோக்கங்கள் பின்வருமாறு:**

1. சைவ சமயத்தவரது ஆத்மீகம், கலாசாரம், தேகாரோக்கியம், பொது நலச் செயற்பாடுகள் என்பனவற்றை வளர்த்தல்.
2. வேத ஆகம சாஸ்திரங்கள், திருமுறைகள் போதிக்கும் சனாதன தர்மத்தை கற்பதும், ஏனையோருக்குக் கற்பித்தலும்.
3. சைவ மாணவர்கள் சைவச் சூழலில் கல்வி கற்பதற்கேற்ற வகையில் பாடசாலை களை அமைத்தல்.

4. சைவ சமய பாடத்தினை மேம்படுத்துதலும், மாணவர்கள் மத்தியில் பரீட்சைகளை நடாத்துதலும்.
5. சமயச் சொற்பொழிவுகள், புராணபடனம், சமய ஆய்வு, கதாப்பிரசங்கம் என்பனவற்றுக்கு ஊக்கமளித்தல்.
6. சமயப் பெரியோர்களின் விழாக்களைக் கொண்டாடுதல்.

## (இ) பணிகள்

### 1. சமயப் பணி

- கொழும்பு விவேகானந்தா சபையின் பணிகளுள் சமயப் பணி முதன்மையானது. சைவ சமயத்தவரது ஆன்மீக கலாசாரங்களை வளர்த்தலும் இப்பணியுள் அடங்கும்.
- கெந்தளையில் அமைந்துள்ள தொழு நோயாளர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சைவ நோயாளர்களின் வழிபாட்டுக்கென சபை 1956 ஆம் ஆண்டு முருகன் ஆலயத்தினை அமைத்தமை
- வெலிக்கடை, மகர சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் நடத்தை மாற்றத்தின் பொருட்டும் ஆத்மீக வளர்ச்சியின் பொருட்டும் ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவ நற்சிந்தனைகளை வழங்குதலும் அங்குள்ள சைவ சமயக் கைதிகளுக்கு வருடப் பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களில் ஆடைகளை அன்பளிப்பாக வழங்குதலும்
- மக்களிடையே சமய அறிவை வளர்த்தல் பொருட்டு, சபையினர் காலத்துக்குக் காலம் ஈழத்து அறிஞர்களையும் இந்திய அறிஞர்களையும் வரவழைத்து அவர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகளையும், பிரசங்கங்களையும் நிகழ்த்தல்
- கொழும்பு வாழ் சைவ மக்கள் இறந்தோரின் இறுதிச் சடங்குகளை ஆற்றுவதற்கு உதவும்முகமாக சபையினர் கொழும்பு முகத்துவாரத்தில் அந்தியேட்டி மடம் ஒன்றை அமைத்து, பராமரித்து வருதல்
- சமயச் சான்றோரின் நினைவு தினங்களை ஆற்றுதல் என்பதற்கமைய ஆண்டுதோறும் நால்வர், சேக்கிழார், அருணகிரிநாதர், நாவலர் ஆகியோரின் குருபூசைகளையும் சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், சேர். பொன் இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோரின் நினைவு தினங்களையும் ஆற்றுதல்
- திருமுறைகளைப் பண்ணுடன் ஓதி அதனூடாக சைவ மரபுகளை வளர்த்துச் செல்லும் முகமாக சபையினர் தமிழக ஓதுவார்களைக் கொண்டு பண்ணிசை வகுப்புகளை நடாத்தி வருதல்
- சுவாமி விவேகானந்தரது இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக சபையின் வளாகத்தில், சுவாமிகளது திருவுருவச்சிலை சபையினரால் அமைத்தமையும் 1997 இல் இலங்கை விஜயம் ஞாபகார்த்த முத்திரையை வெளியீடு செய்தமையும்

### 2. கல்விப் பணி

- கொழும்பு விவேகானந்த சபையினது நோக்கங்களில் ஒன்றாகிய சைவ மாணவர்கள் சைவ சமய சூழலில் கல்வி கற்க வசதியளித்தல் என்பதற்கமைய சபை பல சைவப் பாடசாலைகளை உருவாக்கியது.

**உ-ம்:**
1. 1926 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது. அதனை ஆரம்பித்தவர் சுவாமி விபுலானந்தர் ஆவார்.
2. 1954 ஆம் ஆண்டு நீர்கொழும்பிலும் விவேகானந்த வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. (கொழும்பு விஜயரெட்ணம் இந்துக் கல்லூரி)

3. அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயமும் சபையின ரின் அனுசரணையோடு அமைக்கப்பட்டது.

- சைவ சமய பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை காலத்துக்குக் காலம் நடாத்தி, அவர்களது கற்பித்தல் செயற்பாடுகள் மேன்மையுற வழிவகுக்கின்றனர்.
- 1930 ஆம் ஆண்டு முதல் தரம் மூன்று தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கு அகில இலங்கை சைவ சமயப் பாடப் பரீட்சையை சபை நடாத்தி வருகின்றது. முதலாம் இடத்தினைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வருகின்றது.

### 3. வெளியீட்டுப் பணி

- கொழும்பு விவேகானந்த சபை சஞ்சிகை, பாட நூல்கள், பதிப்புக்கள், துண்டுப் பிரசுரங்கள் என்ற அடிப்படையில் வெளியீட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. சபையின் வெளியீட்டுப் பணிகளுள் சிறப்பானது விவேகானந்தன் என்ற சஞ்சிகை வெளியீடாகும். அது 1925 ஆம் ஆண்டு முதல் வெளிவருகின்றது. அதன் முதலாவது ஆசிரியராக சுவாமி விபுலானந்தர் விளங்கினார்.
- தரம் 3 முதல் தரம் 8 வரையிலான மாணவர்களுக்கு சைவபோதினி என்ற பாடநூலும் தரம் 9, தரம் 10 மாணவர்களுக்கு சைவசமயம் என்ற பாடநூலும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை அனைத்து சைவ மாணவர்களும் வேண்டிக் கற்க வேண்டும் என்பதற்காகக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.
- பன்னிரு திருமுறைத்திரட்டு, நீதிநூல், ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடை முதலான நூல்களை சபை மீள்பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது.

### 4. சமூகப் பணி

- காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், வன்செயல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை சபையினர் ஆற்றியுள்ளனர்.

  **உ-ம்:**

  - 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களை (320 பேர்) சபையின் மண்டபத்தில் தங்க வைத்து அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்கினர்.
  - 2004 இல் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மேல் மாகாண மக்களுக்கு சபையினர் உலர் உணவுப் பொருட்களையும் உடைகளையும் வழங்கினர்.

கொழும்பு விவேகானந்த சபையின் பணிகள் பின் வந்த சைவ சமய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைவதோடு சைவசமய வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது.

## 3.2.1.4 இராமகிருஷ்ண மிஷன்

**காலமும் பின்னணியும்:**

- 1897 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி சுவாமி விவேகாநந்தர் இந்த நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தார்.
- இந்தியாவின் ‘‘கல்கத்தாவை’’ தலைமைக் காரியாலயமாகக் கொண்டது.
- உலகளாவிய ரீதியில் சுமார் 160 கிளைகளுடன் இயங்கும் பெரிய சங்கமாகும்.

**குறிக்கோள்:**

- மனித குலத்தின் மேம்பாட்டுக்கும் ஆன்ம விடுதலைக்கும் உழைப்பது இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும்.
- உடல்ரீதியாக, மனரீதியாக, ஆன்மீக ரீதியாக மனிதனுக்கு எது உயர்ச்சியைத் தருமோ அந்த வகையில் உதவுதல்.

**செயல்முறை:**

- மக்களின் லௌகீக, ஆன்மீக மேம்பாடுகளுக்காக கல்வி தரவல்லவர்களை உருவாக்குதல்.
- சிற்பம் முதலிய கலைகளில் மக்களுக்கு ஆர்வத்தை வளர்த்தல்.
- வேதாந்தம் முதலான பல்வேறு நெறிகள் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெருவாழ்வில் எவ்வாறு விளக்கம் பெற்றனவோ அவற்றை மனித குலத்திற்கு எடுத்துக்கூறல்.

- **இந்நிறுவனத்தின் நோக்கம்:**
  - இராமகிருஷ்ணரின் சிந்தனைகளைச் செயற்படுத்தல்.
  - வேத, உபநிடத தத்துவங்களுக்கு நவீன விளக்கம் கொடுத்தல்.
  - பக்தி ஞான மார்க்கங்களுக்கு முதன்மை அளித்தல்.
  - துறவின் மேன்மையைப் பரப்புதல்.
  - சமய சமரச சன்மார்க்க நெறிகளை உணர்த்தல்.
  - இந்துக் கல்விப் பாரம்பரியத்தை வளர்த்தல்
  - நலிந்தோரைப் பேணுதல்.
  - ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்.

- **பணிகள்**

  1. **சமயப் பணிகள்**
     - ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தல்
     - துறவியர், ஆச்சிரமம், துறவு மார்க்கம் பற்றிய சிந்தனைகளை வளர்த்தல்
     - பஜனைகளை நடாத்துதல்.
     - வேதாந்தக் கோட்பாட்டிற்கு முதன்மை அளித்தல்
     - மத நல்லிணக்கம்
     - சேவையைக் கடவுளுக்கு அர்ப்பணித்தல்
     - இந்திய நாட்டிற்குள் உட்பட்ட பல்வகைசார் மனித ஈடேற்றம் பற்றிய பணிகள்
     - வெளிநாட்டாரின் வாழ்வில் தனிமனித ஈடேற்றம் கருதிய பல்வகைப் பணிகள்
     - துறவிகளுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை இராமகிருஷ்ண மிஷன் பணியில் ஈடுபடுத்தல்
     - இந்து சமயப் பாடசாலைகளை நிறுவி நிர்வகித்தல்
     - தியான வகுப்புக்களை மேற்கொள்ளல்
     - இந்து சமயப் பிரசாரங்களை மேற்கொள்ளல்
     - ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீ சாரதாதேவி அன்னையின் ஜெயந்தி, சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு தினம் என்பவற்றைக் கொண்டாடுதல்

- கிருஷ்ண ஜெயந்தியை பக்தியுடன் கொண்டாடுதல்
- இராமகிருஷ்ண சங்கத்தால் இந்து யாத்திரைகள் மேற்கொள்ளல்
- அனைத்துலக இந்து மகாநாட்டில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் துறவிகளைக் கலந்து கொள்ளச் செய்தல்.

**2. கல்விப் பணிகள்**

- வேதாந்தப் பாடசாலை நிறுவுதல்
- சமஸ்கிருதப் பாடசாலை நிறுவுதல்
- கல்லூரிகளையும் ஆங்கிலக் கல்லூரிகளையும் நிறுவுதல்
- சுதேசிய மொழிப் பாடசாலைகளை நிறுவுதல்
- ஞாயிறு பாடசாலை நடாத்துதல்
- நூல்கள், சஞ்சிகைகள் வெளியிடுதலும் சமய நூல்களைப் பதிப்பித்தலும்

**3. சமூகப் பணிகள்**

- அநாதைகளுக்குப் புகலிடம் அளித்தலும் அவர்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தலும்
- அங்கவீனர்களுக்கு உதவுதலும் நோயுற்றோரைப் பாதுகாத்தலும்
- விதவைகளுக்கு உதவியளித்தல்
- ஹரிசனங்களை உயர்நிலைக்குக் கொண்டுவரல்.
- இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளித்தலும் சர்வதேசரீதியாக உதவுதலும்
- போர்ச் சூழல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரச் செயற்பாடு களை மேற்கொள்ளல்.
- மருத்துவமனைகளை நிறுவி உடல், உள வியாதிகளைப் போக்கல்.

- **இராமகிருஷ்ணமிஷன் பணி புரியும் நாடுகள்**
  - இலங்கை, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து

**இராமகிருஷ்ண மிஷனின் சிறப்பம்சங்கள்:**

- தனக்கென்றொரு சம்பிரதாயத்தையும், கொள்கைகளையும் கொண்டது. ஆத்மஞானம் அல்லது இறைவனை நேரடியாகத் தரிசித்தலே இதன் இலட்சிய மாகும்.
- தூய்மையையும், தன்னலமற்ற சேவையினையும் தன்னகத்தே கொண்டது.
- எல்லா அவதார புருஷர்ளையும் தேவ தேவியரையும், கடவுளை அடையும் மார்க்கங் களையும் அது ஒப்புக் கொள்கிறது.
- ஜாதி, மத, இன, பால் வேறுபாடின்றி அனைவரையும் ஏற்றுக்கொள்வது.
- சகிப்புத்தன்மை, மற்றொன்றை ஏற்றுக் கொள்ளும் தன்மை, பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் தன்மை என்பவற்றை இறுக்கமாக அனுசரிக்கின்றது.
- மதம் மாறுவதையோ, மதமாற்றத்தையோ ஏற்றுக் கொள்வதில்லை.
- இந்தியாவில் வேகமான வளர்ச்சியைக் கொண்டுள்ளதுடன் இந்தியாவுக்கு வெளியில் முனைப்புடனும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றது.
- மனிதனிடம் பொதிந்திருக்கும் தெய்வத்தன்மையைச் சுட்டிக்காட்டி சேவை செய்வதே கடவுள் வழிபாடு என்பதை வலியுறுத்திக் கூறுவது.

### 3.2.1.5 அகில இலங்கை இந்துமாமன்றம்

**அறிமுகம்:**

இலங்கை முழுவதையும் உள்ளடக்கியதாக மாவட்டங்களிலுள்ள இந்துமாமன்றங்களின் உறுப்புரிமையுடன் செயல்படும் நிறுவன ரீதியான ஒரு சங்கமாகும். இது முன்னர் ஆசிய இலங்கை இந்துமாமன்றமாகச் செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்து இளைஞர்களின் அயராத விடாமுயற்சியுடன் வளர்ந்து வருகின்ற இந்த மன்றம் 2005 இல் மாபெரும் பொன்விழாவினைத் தலைநகரில் கொண்டாடியது.

**தோற்றம்:**

ஜயவருடம் தைமாதம் (1955 ஜனவரி 6) தைப்பூசத் திருநாளில் சைவப் பெரியோர்கள் கூடி அகில இலங்கை இந்துமாமன்றத்தை நிறுவினர்.

**அமைவிடம்:**

புதிய கட்டிடத்துடன் கொழும்பில் கே. சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் உள்ளது.

**நோக்கம்:**

- இந்து தர்ம அறிவினையும், சாதனையையும் இந்து கலாசாரத்தையும் கல்வியையும் விருத்தி செய்தல்
- இந்து சமய தாபனங்கள், ஆலயங்கள், சமய முக்கியத்துவம் வாய்ந்த புராதன நிலையங்கள் முதலியவற்றை அமைத்தல், பேணுதல், காத்தல், புதுப்பித்தல்.
- இந்து தாபனங்களை வலிவடையச் செய்வதோடு அவற்றுக்கிடையே அன்னி யோன்னியத்தையும் ஐக்கியத்தையும் வளரச் செய்தல்.
- இந்து சமய அர்ச்சகர்களுக்கு வேதாகம தத்துவசாத்திர அறிவும் பயிற்சியும் அளிக்கும் பொருட்டுச் சமய சாத்திரக் கல்லூரி நிறுவுதல்.
- இந்து சமூகத்தினரின் நலன்களைப் பாதுகாத்தலும் பொதுவில் காலத்துக்குக் காலம் அறிவுரை வழங்குதலும்.
- அல்லல் உறும் மக்களின் துயர்துடைத்து ''மக்கள் சேவையினை மகேசுவரன் சேவையாக ஏற்று'' இந்த நாட்டில் சமயப் பணிகள் பல செய்தல்.
- கல்வி கற்க வசதியற்ற ஏழை மாணவர்களை இனங்கண்டு, அவர்களின் கல்வியோடு தொடர்புடைய உதவிகளை வழங்க ஆவன செய்தல். இந்து நூலகமொன்றை நிறுவுதல்.
- பெற்றோர் இல்லாத நிர்க்கதியற்ற பிள்ளைகளை இனங்கண்டு பராமரிப்பு இல்லங்களை தாபித்துச் செயற்படுத்தல், பராமரிக்கக்கூடிய பெரியோர்களிடம் ஒப்படைத்து அவதானித்தல்.
- நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து

**பணிகள்:**

- மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் பஞ்சபுராணங்களும், அறிவுரை களும் கொண்ட அப்பியாசப் புத்தகங்களை அச்சிட்டு வசதியற்ற மாணவர் களுக்கு நாடளாவிய ரீதியில் வழங்குதல்.
- நாடளாவிய ரீதியில் அறநெறிக் கருத்தரங்குகளையும், சமயதீட்சை கொடுக்கும் நிகழ்வுகளையும் நடாத்தல்.

- இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரி விடுதிகளை ஆரம்பித்து சிறப்புற நிர்வகித்தல். மன்னாரில் ஸ்ரீசித்திவிநாயகர் இந்துக்கல்லூரி விடுதிக்கும் ஆதரவு வழங்குதல்
- சிவதொண்டர் அறநெறிப் பயிற்சிப் பட்டறையை நடாத்தல்
- யாழ். மாவட்ட மக்களுக்கு சுகாதார சேவையை வழங்கியமை
- இந்து ஒளி சஞ்சிகை, இந்துநாகரிக புத்தகம் முதலானவற்றை வெளியிட்டமை
- கிளிநொச்சியில் மகாதேவா ஆச்சிரம மண்டபம் ஒன்றை அமைத்தமையும், யோக சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கும் நிதியுதவிகள் வழங்கியமை.
- மட்டக்களப்பில் இந்து வாலிப சங்கம் அமைத்து அநாதரவற்ற முதியவர்களை பராமரிக்க ஸ்ரீ விபுலாநந்தர் முதியோர் இல்லம் அமைத்து அவர்களை பேண உதவிகள் செய்தமை
- முல்லைத்தீவு ''இனிய வாழ்வு இல்லம்'', கொக்கட்டிச்சோலை ''கதிரொளி சிறுவர் இல்லம்'', நல்லை ஆதீன மகா ஸ்ரீவித்தியாபீடம் போன்ற நிறுவனங்களுக்கும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ள இந்து ஆலயங்களுக்கும் உதவிகள் வழங்கியமை.
- இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கையம்மன் ஆலயத்தினரின் நிதி ஆதரவுடன் மன்னாரில் அங்கத்துவ சங்கத்துடன் இணைந்து சிறுவர் பாதுகாப்பகம் நடாத்துதல்.
- தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடாத்துதல்.
- வடகிழக்கில் யுத்தம் காரணமாக சொந்த நாட்டிலே அகதிகளாக துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கும் வெள்ளத்தினால், புயலினால், சூறாவளியினால், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களைக் கொடுத்துதவுதல்.
- சூறாவளி, புயல், வெள்ளம், சுனாமி போன்றவற்றால் பாதிப்புக்குள்ளான பிள்ளைகளைப் பராமரிக்கத் திட்டங்களை அமுல்படுத்தி நடாத்துதல்.
- பெற்றோர் இருவரையும் அல்லது ஒருவரை இழந்த நிர்க்கதியற்ற குழந்தைகளை இனங்கண்டு பல்வகை உதவிக்கரங்களை நீட்டுதல்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : இலங்கையில் உள்ள இந்து சமய, சமூக நிறுவனங்களுள் ஒன்றைத் தெரிவு செய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி II** : மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, இலங்கையில் உள்ள இந்து சமய, சமூக நிறுவனங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட இடமளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள்.

**படி III** : ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைப்புகளை வழங்குங்கள். திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்த இடமளியுங்கள்.

**படி IV** : குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

**படி V** : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

இந்து நாகரிகம் - க. சி. குலரத்தினம்

**தேர்ச்சி 3.0** : இலங்கையில் இந்துநாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை யும் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவை பற்றிய பகுப் பாய்வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** இலங்கையிலுள்ள இந்துக்கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்கள் பற்றி ஆதாரங்களுடன் அறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்** :

- இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களில் மிகப் பழமையான ஆலயங்களும் உண்டு என்பதை ஆதாரங்கள் மூலம் முன்வைப்பர்.
- தரப்பட்ட கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்களைத் தேடித் தொகுப்பர்.
- மேற்படி கோயில்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவர்.
- ஆலயம் பற்றிய பாடல்களை இசையுடன் பாடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## 3.3.1 இலங்கையில் இந்துக் கோயில்களின் வரலாறும் பண்பாடும்

### அறிமுகம்

- ஆலயம், கோயில் என்பவற்றின் பொருள் விளக்கம்:
  - ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடம் என்பது பொருளாகும்.
  - கோயில் என்பது கோ + இல் எனப் பிரிந்து, கோ - என்பது பதி எனவும், இல் - என்பது இடம் எனவும் பொருள் தந்து ஆன்மாக்களின் தலைவன் வீற்றிருக்கும் இடம் எனப் பொருள் தரும்.
- வழிபாட்டிற்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு
- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்பட்ட ஆலயங்களில் வழிபாட்டு முறை
- ஆலய அமைப்பு
- ஆலயமும் கிரியைகளும்
- சமூகமும் ஆலயமும்

### 3.3.1.1 பொலனறுவைக் கோயில்கள்

(இவற்றில் முதலாம், இரண்டாம், மூன்றாம், ஐந்தாம் சிவாலயங்கள் பற்றி சிறப்பாகக் கற்றிருத்தல் வேண்டும்.)

## முதலாம் சிவாலயம்

- வனப்புமிக்க கட்டட வேலைப்பாடுகளின் காரணமாகவும் நகரின் மத்தியில் அமைந் திருப்பதாலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.
- இக்கோயிலின் அழிபாடுகள் சுமார் 100 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலம் அடையாளங் காணப்பட்டபோது கலாவிமர்சகர்களதும் பிறரதும் கவனத்தை ஈர்த்தது.
- தொல்பொருட் திணைக்கள, ஆணையாளரான எச். சி. பி. பெல் இது பற்றி பின்வருமாறு வர்ணிக்கிறார்.

  ''கல் விகாரை நீங்கலாகவுள்ள கட்டடங்களில், அதுவே பொலனறுவையைப் பார்க்கச் செல்வோரின் கூடுதலான கவனத்தைப் பெற்றது..... தலதா மாளிகை என்று பிழையாக வர்ணிக்கப்பட்டது'' என்று கூறியுள்ளார்.
- இக்கோயிலில் வேலைப்பாடுகள் பல காணப்படுகின்றன. இக்கோயில் அதிஷ்டானம், பத்மதளம், கண்டம், கபோதம் முதலான 7 உறுப்புகளைக் கொண்டமைந்துள்ளது. அதிஷ்டானம் 4'5'' உயரமுடையது.
- இது முற்றிலும் கற்றளியாக அமைந்த கோயிலாகும்.
- இவ்வாலயம் அமைப்புருவில் 2 ஆம் சிவாலயத்தைப் போன்றதாயினும், அளவில் சற்றுச் சிறியதாகும். ஆயினும் அலங்கார வேலைப்பாடுகள் சற்று அதிகமாகக் காணப்படுகின்றன.
- இக்கோயில் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முக மண்டபம் ஆகியன ஒழுங்கு முறையாக அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.
- 2 ஆம் சிவாலயம் போல் இதுவும் அடித்தளத்திலிருந்து சிகரம் வரை செதுக்கப்பட்ட கற்பாளங்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- இவ்வாலயம் திராவிடக் கட்டடக்கலை மரபிற்குரியது. தென்னிந்திய சிற்ப, சாஸ்திர விதிக்கேற்பவும் அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 61'9'' நீளம் கொண்டது. 105' நீளமும் 75' அகலமும் கொண்ட நிலப்பரப்பினுள் அமைக்கப்பட்டுள்ளது.
- இக்கோயிலில் மூன்று பரிவார தேவர்களுக்கான கோயில்கள் அமைந்திருந்தமைக்கான சுவடுகளும் உள்ளன.
- கர்ப்பக்கிருகத்தின் தென்மேற்கில் விநாயகர் கோட்டம் அமைந்திருந்தது. அதில் 9'6'' அகலமும் 8'9'' நீளமும் கொண்ட கர்ப்பக்கிருகமும் அதற்கு ஒப்பான சுற்றளவினை உடைய அந்தராளமும் இருந்தன.
- வளாகத்தின் வடமேற்கு மூலையில் அதேயளவு கொண்ட தேவகோட்டம் ஒன்று இருந்தது. அகழ்வுகளின்போது, அவ்விடத்தில் குமாரக்கடவுள் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் வெண்கலப் படிமங்கள் காணப்படுகின்றன.
- கோயில் தூண்கள் பத்மதளம், கால், வரி, கலசம், இதழ், பலகை, பொதிகை என்னும் அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் சிவாலயம்

- இவ்வாலயம் பொலனறுவை நகரின் அரணமைந்த பகுதியிலுள்ள வடகிழக்கு மூலையின் சமீபத்திலே காணப்படுகின்றது.
- சோழர் இப்பகுதியை ஆண்ட காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகும்.
- 2 ஆம் சிவாலயத்தை **வானவன் மாதேவீஸ்வரம்** எனவும் அழைப்பர்.

- கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம், நந்திபீடம், விமானம் ஆகிய பகுதி களுடன் அமைக்கப்பட்டிருந்தது.
- 66’4’’ கோயில் வளாகத்தைச் சூழ்ந்த சுவர் 96’ நீளமும் 84’ அகலமும் கொண்ட தாகும். மதிற்சுவர்கள் செங்கட்டிகளால் அமைக்கப்பட்டிருந்தன.
- கோயில் கற்றளி அமைப்புடையது. அது கருங்கல், சுண்ணக்கல் ஆகிய இரு வகையான கற்களையும் கலந்து கட்டப்பட்டுள்ளது.
- இக்கோயில் விமானம், தென்னிந்திய கோயில் விமானங்களுடன் ஒப்பிடுகையில் விஜயாலயன் காலத்தை ஒத்தனவாகவும் மிகுந்த அழகுடையனவாகவும் காணப்படு கின்றது.
- இக்கோயில் வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலயமாகக் காணப்படுகின்றது.

**மூன்றாம் சிவாலயம்**

- இவ்வாலயம் அளவிற் சிறிய கற்றளியாகும்.
- இது யோத எல என்னும் கால்வாயின் வலதுபக்கத்துக் கரையிலிருந்து 90’ தூரத்தில் அமைந்துள்ளது.
- 51’6’’ நீளம் கொண்டது. அதன் பிரகாரம் 102’ நீளமும் 66’ அகலமும் கொண்ட தாகும்.
- இதன் விமானமும் கட்டடமும் இடிந்து வீழ்ந்து விட்டது.
- கிழக்கு நோக்கிய இச்சிவாலயம் கர்ப்பக்கிருகம், மண்டபம், அந்தராளம், முகமண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டிருந்தது.
- இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டதாகும்.
- இங்குள்ள தூண்களில் குறிப்பாக கண்டம், கலசம், பத்ம இதழ் ஆகிய அம்சங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நான்காம் சிவாலயம்**

- மின்னேரியா தோப்ப வாவி வீதியில் அமைந்துள்ளது.
- இது செங்கல்லினால் அமைக்கப் பெற்ற கோயிலாகும். இதில் இலிங்கம் பிரதிட்டை செய்யப் பெற்றிருந்தது.
- இதன் வளாகம் 136’ நீளமும் 100’ அகலமும் கொண்ட சுற்றளவினை உடையதாகும். இவ்வாலயத்துக்குத் தெற்கிலும், மேற்கிலும் நுழைவாசல்கள் அமைந்துள்ளன.
- இது மற்றைய ஆலயங்களைப் போல் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முக மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு காணப்படுகின்றது.
- மூன்று பரிவார தேவர் கோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**ஐந்தாம் சிவாலயம்**

- இதன் சுவர்களும் அவற்றின் மேலமைந்த பகுதிகளும் இடிந்து வீழ்ந்து விட்டன. இப்போது ஆலயத்தின் அத்திவாரமும் சில தூண்களுமே எஞ்சியுள்ளன. இது செங்கல்லினால் அமைக்கப்பட்ட பல கட்டடங்களின் தொகுதியாக அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 117’6’’ நீளமும் 75’ அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந் துள்ளது. இங்கு அமைந்த தூண்கள் நான்கு வரிசைகளைக் கொண்டதாய் சதுரமாகவும், எண்கோண வடிவமானதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களில்

அன்னப்பறவை வடிவங்களும் குமுதங்களும் இடம் பெற்றுள்ளன.

- இவ்வாலயம் 2 ஆம் சிவாலயம் போல் எண்கோண வடிவமாக அமைந்துள்ளது.

**ஆறாம் சிவாலயம்**

- 5 ஆம் சிவாலயத்தின் அண்மையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் 54'6'' நீளம் கொண்டதாகும்.
- இவ்வாலயம் இறையகம், அந்தராளம், அர்த்த மண்டபம், முக மண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.
- இவ்வாலயத்தின் மண்டபம் 25'6'' நீளமும் 114'9'' அகலமும் கொண்டதாக அமைக் கப்பட்டுள்ளது. அங்குள்ள ஆலயங்களின் மண்டபங்களுள் இதுவே பெரியது. இவ்வாலயம் மூன்று வாசல்களைக் கொண்டது. இவ்வாலயத்தைச் சுற்றி மூன்று பரிவார தேவ கோட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**ஏழாம் சிவாலயம்**

- நகரத்தின் வடக்கு வாசலுக்குச் செல்லும் வீதியின் வலது பக்கத்தில் அமைந்திருந்த ஆலயம் இதுவாகும். இவ்வாலயம் அழிபாடுகளுக்கு இடையில் இறையகம், அந்தராளம், அர்த்த மண்டபம், முக மண்டபம் என்னும் அமைப்புகளைக் கொண் டுள்ளது.
- இவ்வாலயம் 64' 2'' நீளமுடையது.
- கோபுர வாசலின் இருபக்கங்களிலும் சிறிய கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**ஏனைய ஆலயங்கள்**

**3.3.1.1 சிவாலயங்கள்**

- திருக்கோணேச்சரம்
- திருக்கேதீச்சரம்
- முன்னேச்சரம்
- கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

**3.3.1.2 அம்மன் ஆலயம்**

- நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்

**3.3.1.3 விநாயகர் ஆலயங்கள்**

- மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்
- கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்

**3.3.1.4 முருகன் ஆலயங்கள்**

- கதிர்காமம்
- நல்லூர் கந்தசுவாமி ஆலயம்
- மண்டூர் முருகன் ஆலயம்

**3.3.1.5 விஷ்ணு ஆலயம்**

- வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

தரப்படடுள்ள ஆலயங்களைப் பின்வரும் அடிப்படையில் நோக்குக.

1. அமைவிடம்
2. ஆலய வரலாறு
    - தொன்மம், பழமரபுக் கதைகள்
    - மன்னர் - மானியங்கள் வழங்கல்
    - மக்கள் சேவைகள்
3. ஆலயக் கிரியைகள்
   சிறப்பாக மகோற்சவம் - மூர்த்தி, தீர்த்தம், விசேட விழாக்கள்
4. ஆலயத்தின் மீது எழுந்த நூல்கள், பிரபந்தங்கள்
5. ஆலயமும் சமூக உறவும்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களில் ஏதாவதொரு ஆலயத்தின் சிறப்புக்களை மாணவர்களைக் கவரும் விதத்தில் ஆதாரங்களுடனும், அமைவிடப் படத்தோடும் முன்வையுங்கள்.

**படி II** : இலங்கையில் உள்ள தரப்பட்ட இந்துக் கோயில்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு மாணவர்களுக்கு நூல்களை வழங்குங்கள்.

**படி III** : மாணவர்களை 5 குழுக்களாக்கி பின்வரும் தலைப்புகளின் கீழ் குறிப்பிட்ட ஒவ்வொரு வகைக் கோயில்களுக்குமான தகவல்களை ஒழுங்குபடுத்தி அவற்றை வகுப்பில் முன்வைக்குமாறு கூறுங்கள்.

- அமைவிடச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும்
- ஆலயக் கிரியைகளும் விழாக்களும்
- ஆலயத்தின் மீது எழுந்த நூல்கள், பிரபந்தங்கள்
- ஆலயமும் சமூக உறவும்

**படி IV** : முன்வைத்த விடயங்களைத் தொகுத்து ஆக்கமாகத் தயாரிக்க உதவு ங்கள்.

**உசாத் துணைகள்:**


இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பேராசிரியர் சி. பத்மநாதன்
ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் - 1 - பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்
இலங்கையில் இந்து மதம் - பேராசிரியர் சி. பத்மநாதன்
இலங்கையில் திராவிடக் கட்டடக் கலை - கலாநிதி கா. இந்திரபாலா

**தேர்ச்சி 3.0** : இலங்கையில் இந்துநாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.4 :** ஈழத்துச் சைவப் பெரியார்களின் பணிகளுக்கு மதிப்பளித்து அவற்றை முன்மாதிரியாகக் கொள்வர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்** :

- ஈழத்துச் சைவப் பெரியார்களின் பெயர்களைப் பட்டியற்படுத்துவர்.
- ஈழத்துச் சைவப் பெரியார்களுள் ஆறுமுகநாவலரதும், சுவாமி விபுலாநந்தரதும் பணிகளைத் தேடித் தொகுப்பர்; அவற்றை ஒப்பிடுவர். அட்டவணைகள் தயாரிப்பர்.
- இருவரதும் பணிகளுக்கு மதிப்பளிப்பதுடன் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயலாற்றுவர். அவ்வகைப் பணிகளில் ஈடுபடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## 3.4.1 ஈழத்துச் சைவப் பெரியார்கள் - அறிமுகம்

### 3.4.1.1 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

**அறிமுகம் - பின்னணி**

- ஈழத்தில் உதித்த சைவப் பெரியார்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர்.
- 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் ஞானப்பிரகாசர் மரபில் வந்த கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக நல்லூரில் 1882 டிசம்பர் 18 ஆம் திகதி பிறந்தார்.
- பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும்.
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சியுடையவர்.
- சுப்பிரமணிய உபாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறையில் கல்வி பயின்றவர்.
- யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி) கல்வி பயின்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றார். அவர் 7 ஆண்டுகள் அக் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- ஆசிரியர் பணியை நிறுத்தியமைக்கான காரணம் ‘‘சைவசமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும்’’ என்ற பேராசையாகும்.

**பணிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | சமயப்பணி | 2. | கல்விப்பணி |
| 3. | பதிப்பாசிரியர் பணி | 4. | சமூகப்பணி |

**சமயப்பணி:**

- சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை

  **உதாரணம்:** வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம்

- புராணபடனங்கள் நிகழ்த்தியமை

  **உதாரணம்:** நல்லூர் கந்தசுவாமி கோயில்

- ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை.

  **உதாரணம்:** திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம்

  ''மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்'' என விஞ்ஞாபனம் செய்தமை குறிப்பிடத் தக்கது.

- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.

  **உதாரணம்:** சைவ வினாவிடை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், இலக்கண நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்தல்.

- பண்ணிசையினை வளர்த்தமை.

  **உதாரணம்:** நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை.

- பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை.

- பிறசமயக் கண்டனங்களையும் அகச்சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டமை. கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை.

  ''சைவதூஷண பரிகாரம்'', ''நல்லூர் கந்தசுவாமி கோயில்'',''யாழ்ப்பாணத்துச் சமயநிலை''

**கல்விப்பணி**

- சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார்.

  **உதாரணம்:**
  - 1848 வண்ணார்பண்ணையிலும் 1864 சிதம்பரத்திலும் 1872 கோப்பாயிலும் வித்தியாசாலைகளை அமைத்தமை.
  - 1871 புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையை அமைத்தமை.

- வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தார்.

- முதியோர் கல்வியில் கவனஞ் செலுத்தினார்.

- பெண்களுக்கான கல்வி ( 3 ஆம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்) முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

**பதிப்பாசிரியர் பணி**

- ஈழத்தில் வண்ணார்பண்ணையிலும் தமிழ்நாட்டின் சிதம்பரத்திலும் வித்தியாநுபால யந்திரசாலைகளை நிறுவினார்.

- அகராதிகள் பதிப்பித்தல் **உதாரணம்:** சூடாமணி நிகண்டு

- இலக்கிய நூல்கள் - இலக்கண விளக்கச் சூறாவளி

- தருக்க நூல்கள் - தருக்கசங்கிரகம்
- இலக்கிய நூல்கள் - மகாபாரதம்
- அறிவியல் சார் நூல்கள் - இலங்கை பூமிசாத்திரம்
- முதன்முதல் ஏட்டுச்சுவடிகளிலிருந்த நூல்களை அச்சுவாகனமேற்றினார்.

  **உதாரணம்:** தொல்காப்பிய சூத்திரவிருத்தி
- தொகுத்துப் பதிப்பித்தமை - அருட்பா
- சில நூல்கள், இலக்கணக் குறிப்புக்கள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சிப் பதிப்புக்கள்
- சிலவற்றுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

  **உதாரணம்:** ஔவையார் அருளிச் செய்த நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
- சில செய்யுள் நூல்களை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தார்.

  **உதாரணம்:** திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம்,
  கந்த புராண வசனம்.
- அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதிப் பதிப்பித்தார்.

  **உதாரணம்:** இலக்கணச் சுருக்கம்

  - "நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு" என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.
  - இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத்துறை வளர்ச்சியுற வித்திட்டமை.
  - இலங்கைநேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை, சைவ உதய பானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை.

**சமூகப் பணி**

- 1876/77 ஆண்டுகளில் கடும் வரட்சியால் ஏற்பட்ட பஞ்சவேளையில் கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை.
- யாழ்ப்பாண கரையூர் உள்ளிட்ட இடங்களில் பேதி நோய் பரவியபோது மக்களுடன் மக்களாக நின்று முதலுதவிகளையும் தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டமை.
- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்.
- யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார்.
- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார். செய்யுள் நடையிலுள்ள பழங்கால இலக்கியங்களுக்கு உரைசெய்தார்.
- பிறரை உரியவேளையில் கௌரவித்தமை.

  **உ- ம்:** நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பக்திரசம் சொட்டப் பாடிய கோபால கிருஷ்ண பாரதியாருக்கு நாவலர் சன்மானம் வழங்கிக் கௌரவித்தமை.
- சுதேசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட தேசிய வீரராகக் காணப்பட்டார்.
- சைவத் தமிழ் மரபிற் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி, இலங்கையின் சைவ மறுமலர்ச்சிக்குக் காரணமாகினார்.

**நிறைவு**

- 1879 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.
- 1971.10.29 இலங்கை அரசாங்கம் நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்டது.

### 3.4.1.2 சுவாமி விபுலாநந்தர்

**அறிமுகம்**

- 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆந் திகதி தமிழ் கர வருஷம் பங்குனித் திங்கள் 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் மட்டுமாநகரின் தெற்கேயுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தார்.
- சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மைக்கும் நன்மகனாக மயில்வாகனம் என்னும் இளமைப்பெயர் கொண்டார்.
- உயர்திரு க. குஞ்சித்தம்பி, புலோலி பொ. வைத்தியலிங்க தேசிகர் ஆகிய உபாத்தியாயர்களிடம் இளமைக்கல்வியைக் கற்றார்.
- இளமையில் ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றார்.
- இளமைக் கல்வியினை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் பின்னர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.
- பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கையில் கேம்பிரிஜ் ஜுனியர், கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைகளில் சித்தி பெற்றார்.
- கொழும்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமாப் பயிற்சி பெற்றார்.
- 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றார்.
- 1920 இல் லண்டன் B.Sc விஞ்ஞானமாணிப் பரீட்சையில் தேறி விஞ்ஞானப் பட்டதாரியானார்.
- கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை மட். புனித மிக்கேல் கல்லூரி, யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார்.
- 1922 வாழ்வில் திருப்புமுனை துறவு நாட்டம் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடம் சுவாமி சிவானந்தரால் ''பிரபோத சைதன்யர்'' என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டார்.
- 1924 ஆம் ஆண்டு ஞான உபதேசம் பெற்று ''சுவாமி விபுலாநந்தர்'' என்னும் தீட்சை நாமம் பெற்றார்.
- துறவு வாழ்வு மானிட நேயத்தை வளர்த்தது.
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம் முதலிய மொழிகளில் வல்லவராக விளங்கினார்.

**ஆற்றிய பணிகள்**

- சமயப்பணி
- கல்விப்பணி
- கலைப்பணி
- உரையாசிரியர் பணி
- நூலாசிரியர் பணி
- பதிப்பாசிரியர் பணி
- சமூகப்பணி

**சமயப் பணிகள்**

- இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- ஈசன் உவக்கும் இன்மலர்கள், கோயில் என்பவற்றை வினாவிடை அமைப்பில் இயற்றினார்.
- மகாலட்சுமி தோத்திரம், நடராஜ வடிவம் (ஐந்தொழில்களையும் சுருக்கமாக விளக்கும் நூல்), உமாமகேஸ்வரம் (மாதொரு பாகனாயமைந்துள்ள நுட்பத்தை விளக்குவது)
- கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமரவேள் நவமணிமாலை முதலான சமய நூல்களை ஆக்கியுள்ளார்.
- சமயப் பிரசங்கம் செய்தல், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் ஈடுபட்டவர். இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் பரவலுக்கு முன்னோடியானவர்.
- இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத் தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவி, அதன் ஆதரவில் கல்விச்சாலைகள் பல அமைத்தும், மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தரும பரிபாலனம் செய்தவர்.
- சமயம் அனுட்டிப்பதற்குரியது என்பதனை தமது போதனைகளிலும் சாதனைகளிலும் நிலைநாட்டினார்.
- சமய தத்துவக் கருத்துக்களை சாதாரண மக்களும் விளங்கக்கூடியவாறு இலகு நடையில் விளக்கினார்.
- கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள் சிந்துகளையும் கையாண்டு சமய நூல்களைப் பாடினார். உதாரணமாக நான்மணிமாலை, தோத்திரம், தேவபாணி என்பனவற்றைக் கூறலாம்.
- சமயத்துறை சார்ந்தனவாகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் அவரது கவிதைகள் காணப்படுகின்றன.
- இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலான சமயப் பெரியார்களை மதித்துப் போற்றியதுடன், அவர்களுடைய போதனைகளையும், பணிகளையும் முன்மாதிரியாகக் கொண்டவர்.

**கல்விப் பணிகள்**

- விபுலாநந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.
- தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கும் பொருட்டு சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவதை வலியுறுத்தி, சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபார்சு செய்ததுடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உதயமாவதற்கும் வித்திட்டார்.

- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார்.
- சுய மொழியபிமானமற்றதும், தேசாபிமானமற்றதும், அடிமைத்தனமானதும், நாகரிகத்தை நாசப்படுத்துவதுமான கல்வி முறையைக் கண்டித்தார்.
- மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைவாகப் போதிப்பதற்குரிய வழிவகை களைச் செய்தார்.
- ''கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது; அது உயிர்ப்பூட்டுவது; உண்மையைக் காட்டுவது; தன்னம்பிக்கையைத் தருவது'' எனும் கொள்கை உடையவராக விபுலானந்தர் விளங்கினார்.
- தன் கல்வியற் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் பல பணிகளை மேற்கொண்டார். இராம கிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை இந்து போர்ட் இராஜரத்தினத்துடன் இணைந்து உருவாக்கினார்.
- 1925 இல் இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று, தன் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.
- இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை நிறுவி நிருவகித்தார்.
- விபுலாநந்தர் இராமகிருஷ்ணமிஷனுடன் இணைந்து பணிபுரிந்த காலத்தில்
  - கல்லடி - சிவானந்தா ஆண்கள் பாடசாலை
  - ஆனைப்பந்தி - இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை
  - காரைதீவு - சாரதா வித்தியாலயம்
  - திருகோணமலை - இந்துக்கல்லூரி
  - வண்ணை - வைத்தீஸ்வர வித்தியாலயம்

  ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டினார்.
- 1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி, அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார்.
- இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூற் சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச் சபை என்பனவற்றின் உறுப்பினராகவிருந்து கல்வித்துறைசார் பணிகளைப் புரிந்தார்.
- மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு ''கலைச்சொல் அகராதியை'' உருவாக்கினார்.
- பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சி யான பல பணிகளை ஆற்றினார்.
  - வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல்.
  - பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல்.
  - வார இறுதியில் சைவ சமய வகுப்புகளையும், பண்ணிசைப் பயிற்சிகளையும் நடாத்துதல்.
- சமயக் கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல் அவரது புதிய திட்டமாகும். விபுலாநந்தரின் அத்தகைய திட்டம் இன்று செயல் முறைக்கு வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.
- இவரது கல்விப் பணிகள் அனைத்திலும் சமயம்சார் கல்விப் பணிகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

**கலைப் பணிகள்**

- இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் பொருந்திய விபுலாநந்தர் கவிதைகள் ஓசை நயம் மிகுந்தவை. ''இயலின்றி இசையில்லை; இசையின்றி இயலில்லை'' என்பது அவரது கொள்கை.
- காலத்திற்கேற்ப கவிதை அமைந்துள்ளது.
- அவரது நூல்களில் செந்தமிழ் நடை கையாளப்பட்டுள்ளது.
- குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுகநாவலர், கங்கையில் விடுத்த ஓலை என்பவற்றை எழுதியுள்ளார்.
- அவர் உள்ளத்தில் அனுபவித்த உணர்வுகளைக் கவிதையிலே தீட்டிக் காட்டும் திறமை உள்ளவர்.
- பல்வேறு ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள், சிந்துகளையும் கையாண்டுள்ளார்.
- நாடகநூல் - மதங்கசூளாமணி. இசைத்தமிழ் - யாழ்நூல்
- ஆங்கிலவாணி, பூஞ்சோலைக்காவலன்
- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் (1936) சொல்லாக்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லவர் என்பதால் ''முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்'' எனப் போற்றப்படல்.
- தமிழ்க் கவிதையின் போக்கிலே புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த பாரதியாரைப் பண்டிதர்கள் தீண்டாதிருந்த வேளையில் பாரதி கழகம் அமைத்து, பாரதி புகழைத் தமிழ் நாட்டில் பரப்பிய பெருமைக்குரியவர்.

**உரையாசிரியர் பணிகள்**

- தெளிவான நடை, எளிமையான மொழி நடை என்பவற்றைக் கையாண்டவர்.
- ஓசை நயத்தாலும் உணர்ச்சி வெளியீட்டுச் சிறப்பாலும் தம் உரைநடையிற் கூட பல இடங்களில் கவிதையின் எல்லையைத் தொட்டவர் விபுலானந்தர்.
- அவரது உரைநடை நூல்கள் -
  - விஞ்ஞானக் கட்டுரை
  - கலைச்சொற்கள்
  - விஞ்ஞான தீபம்
  - மொழிபெயர்ப்பு

  **உ-ம்:-** சுவாமி விபுலானந்தர் சம்பாசணை
  விவேகானந்த தீபம்
  விவேகானந்தரின் சொற்பொழிவு நூல்கள்

**பதிப்பாசிரியர் பணிகள்**

- விபுலாநந்தரின் நூல்கள் பிழையற்ற பதிப்புக்களாக கால, இட விபரங்களுடன் எழுதப்பட்டவை.
- அவர் தமிழரின் பழம் பெருமைகளைப் பத்திரிகைகளில் கட்டுரை வடிவில் வெளியிட்டார்.
  **உ-ம்:** செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி
- வேதாந்த கேசரி, இராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத முதலான வெளியீடுகளுக்குப் பத்திரிகாசிரியாக விளங்கினார்.

**சமூகப் பணிகள்**

- விபுலானந்தர் மக்களை நேசித்தவர். அவர்களுடைய நன்மை தீமைகளில் ஈடுபட்டவர்.
- ஒருமுறை கடவுள் நேரில் வந்தால் ... என்று பேச்சு எழுந்தபோது, சுவாமி பின்வருமாறு கூறினாராம். ''நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது.'' இவ்வாறு பிறருக்குப் பணி புரிவதே பெருமின்பம் தருவது என்ற திடசித்தம் கொண்டவர்.
- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
- அன்னார் தன் சொந்த நலன்களைத் துறந்த வேளையிலும் நாட்டு நலனையும், மக்கள் நலனையும், மொழி நலனையும் துறவாதிருந்த சிறப்பு போற்றத்தக்கது.
- அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடைத் திட்டங் களை ஏற்படுத்தினார்.
- விபுலானந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஏழை மாணவர்களினதும், அநாதைக் குழந்தைகளதும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்த சமூகப் பணிகளே என்பர்.

**நிறைவு**

- இறைபதம் - 1947 ஜுலை 19 ஆம் நாள்
  சமாதி மட். கல்லடி உப்போடையில் உள்ளது.

''முத்தமிழும் பெருஞ்சீர் முதல்வனார் திருக்குமரா
பக்தியுடன் பணிபவர்க்கு பல கலையும் பாலிக்கும்
சித்தி புத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில்
நிலைத்து நிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ''

(சுவாமி விபுலாநந்தர்)

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I** : ஈழத்துச் சைவப் பெரியார்களில் ஆறுமுகநாவலரதும் விபுலானந்தரதும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியை மாணவருக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

**படி III** : மேற்படி சைவப் பெரியார்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட மாணவர்களுக்கு நூல்களைக் கொடுத்து உதவுங்கள்.

**படி III** : மாணவர்களை 2 குழுக்களாகப் பிரித்து, ஆறுமுகநாவலர் பணிகளையும் விபுலானந்தவரின் பணிகளையும் ஒப்பீடு செய்வதற்கான தகவல்கள் திரட்ட ஆலோசனை வழங்குங்கள்.

**படி IV** : இரு குழுவிலிருந்தும் 5 பேர்கள் வீதம் தெரிவு செய்து மேற்படி பணிகள் பற்றிய விவாதம் ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்.

**படி V** : விவாதத்தில் செவிமடுத்த தகவல்களைத் தொகுத்து, ஆக்கமாகத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**

வே. கனகரத்தின உபாத்தியாயரின்
ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம் - பதிப்பு. வை. கனகரத்தினம்
நாவலர் நூற்றாண்டு விழா மலர் - நூற்றாண்டு விழாச்சபை (வெளியீடு)
நாவலர் ஆளுமையும் புலமையும் - பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம்
அடிகளார் படிவ மலர் - தொகுப்பு. ம. சற்குணம்
விபுலானந்த ஆராய்வு - அருள் செல்வநாயகம்
இலங்கைத் தமிழ் இலக்கியம் - பேராசிரியர் எஸ். தில்லைநாதன்
இலக்கியக் கட்டுரைகள் - உயர்திரு விபுலாநந்த அடிகள்

**தேர்ச்சி 4.0** : தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்துக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்** :

- தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்களைக் கண்டறிந்து எழுதிக் காட்டுவர்.
- இந்து நாகரிகம் பரவிய தென்கிழக்காசிய நாடுகளையும், இந்து நாகரிகம் செல்வாக்குச் செலுத்திய விடயங்களையும் எடுத்துக் கூறுவர்.
- அந்நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்கு இழந்தமைக்கான காரணங்களைக் பட்டியற்படுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**4.1.1 தென்கிழக்காசியாவில் இந்து நாகரிகம்**

**தென்கிழக்காசிய நாடுகள்**

- தென்கிழக்காசிய நாடுகள் ஆசியாவின் தென்கிழக்கிலுள்ள நாடுகளையும் தீப - கற்பங்களையும் குறிக்கும். அவற்றில் தாய்லாந்து, பர்மா, மலேசியா, கம்போடியா, சம்பா என்பவை நாடுகளாகவும் இந்தோனேசியா, யாவா, சுமத்திரா, பாலித்தீவு என்பவை தீவுகளாகவும் விளங்குகின்றன.
- வணிகம், அரசியல் ஆகிய இரு தொடர்புகளால் இந்துப் பண்பாடு தென்கிழக்காசிய நாடுகளில் பரவியது. அரசியல் ஆதிக்கம், வர்த்தகம் என்பன சாதகமான போக்கு வரத்து அமைப்பால் இலகுவாயிற்று. விவாகத் தொடர்புகளும் அரச உறவுகளும் வலுவடைந்தன. அரசசபைகளில் பிராமணர்கள் முதன்மை பெற்றார்கள். இந்திய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் காரணமாகவே இத்தகைய குடியேற் றங்கள் ஏற்படலாயின. அந்நாடுகள் சுவர்ணபூமியாக விளங்கியதால் வர்த்தக நடவடிக்கைகள் பெருகின.
- அதனால் இந்தியமக்கள் தென்கிழக்காசிய சுதேசிகளுடன் வாழ்வியல் அடிப்படையிலும் கலந்து கொண்டனர். குப்தர்காலம் தொடக்கம் சோழர் காலம் வரை உள்ள கால கட்டம் இந்தியப் பண்பாடு பரவிய காலமாகும். பௌத்த கலாசாரப் பரவலும் இந்தியப் பண்பாடு பரவக் காரணமாயிற்று.

**பரவிய விடயங்கள்**

- அரசர்கள், வணிகர்கள் இந்தியாவில் இருந்து குடியேறினர். அதனால் பிராமணர் நெறி, கலையம்சங்கள், இந்து இலக்கிய மரபுகள், சமயம், வாழ்க்கை அம்சங்கள், அரசியல் முறைமைகள் அனைத்தும் பரவின. சுருக்கமாகக் கூறின் இந்துப் பண்பாட்டம்சங்கள் அனைத்துமே பரவின எனலாம்.

**இந்து அரசியல் முறைகளின் பரவலும் சமயத் தொடர்பும்**

- அரச சபைகளில் அர்த்தசாத்திரம், தர்மசாத்திரம் என்பவற்றின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.
- அரச சபைகளில் இந்து சமய முறைப்படி பட்டாபிஷேக விழாக்கள் இடம்பெற்றன.
- அரசர்கள் தம்மைத் திருமாலின் அவதாரமாகக் கருதினர். இது தேவராஜ வழிபாடாக மாற்றம் பெற்றது.
- அரச சபைப் புரோகிதர்கள் 'இராஜகுரு' என அழைக்கப்பட்டனர்.
- அரசர்கள் பிராமணர்களுக்குத் தானம் வழங்கினர். ஜாவாவில் பூரணவர்மன் சிவநெறி தழுவி 1000 அந்தணர்களுக்கு தானம் வழங்கினான்.
- அரசர்கள் கடவுளர்களால் அனுப்பப்பட்டவர்கள் என்னும் கருத்து சம்பா நாட்டில் நிலவியது.
- பல்லவ, சோழ அரசவம்சங்கள் 'வர்மன்' என்னும் பெயர்களுடன் பரவியமை. சயாம் நாட்டின் தலைநகரில் மணசீகிராமம் பகுதியில் இந்துக் குடியிருப்பு காணப்பட்டது. அங்கு காணப்பட்ட விஷ்ணுகோயில் அவனிநாரணம் என்னும் திருக்குளத்துடன் காணப்படுகின்றது.

**கோயில்களும் இந்து சமய விழாக்களும்**

| | | |
|---|---|---|
| கம்போடியா | - | அங்கோ வாட் சிவாலயம் சூரியவர்மனால் கட்டப்பட்டது. |
| சம்பா | - | பத்திரவர்மன் பத்திரேஸ்வரர் கோயில் அமைக்கப்பட்டது. |
| ஜாவா | - | பிரம்பனால் கோயில், பொரதூர் - விநாயகர் ஆலயம் |
| தாய்லாந்து | - | வாட்போ கோயில், பொரதூர் - அரசசபையில் திருவெம்பாவைப் பாடல் முதலிய இடம்பெற்றமை. |
| மலேசியா | - | பத்துமலைக்கோயில், இது முருகன் ஆலயமாகும். இங்கு தைப்பூசம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. |

**இந்து இலக்கியங்களின் செல்வாக்கு**

- இந்தியப் பண்பாடுகள் தென்கிழக்காசியாவில் பரவியதால் பண்பாட்டின் கூறுகளாகிய இலக்கியங்களும் பரவலாயின. அவை தென்கிழக்காசிய மொழிகளிலே எழுதப்பட்டுள்ளன.
- மகாபாரதக் கதை, அர்ச்சனவிவாக, பாரத யுத்த என்னும் பெயர்களில் பரப்பப்பட்டுள்ளது.
- சமஸ்கிருத மொழி தென்கிழக்காசிய மொழிகளுடன் சங்கமமாகியதை இது எடுத்துரைக்கின்றது.
- இராமாயணக் கதை, இராமகாதை என்று தாய்லாந்தில் புகழப்படுகின்றது. பாலித்தீவில் இராமகவசம் என்னும் பெயரில் இந்நூல் அழைக்கப்படுகிறது.

- இந்து அரசமுறை தழுவிய அர்த்தசாத்திரம், கலைநூலாகிய நாட்டிய சாத்திரம் பக்தி இலக்கியமாகிய திருவெம்பாவை முதலியனவும் தென்கிழக்காசிய நாடுகளில் செல்வாக்கடைந்துள்ளன.
- அரண்மனைகளிலே அர்த்தசாத்திரம், பகவத்கீதைக் கூற்றுக்கள் ஆலோசனையாக கூறப்பட்டன.
- யாவா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பல வடமொழிச் சாசனங்கள் இலக்கிய மரபை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

**இந்து சமயச் சடங்குகள்**

- பட்டார குரு வழிபாடு இந்திய நாட்டின் செல்வாக்கினை எடுத்துக் காட்டுகின்றது.
- முடிசூட்டு விழாக்களில் திருமுறைகள் ஓதும் பழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. வாழ்வியல் அம்சங்களுடன் தொடர்பான புரோகிதர் பணிகள், பஞ்சாங்கம் பார்த்தல், புனிதநீரால் நீராட்டுவிழா நடத்துதல், அர்ச்சனை செய்தல் முதலியவற்றுடன் கார்த்திகைப் பௌர்ணமி மழைத்திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. மார்கழி ஊஞ்சல் போன்ற விழாக்களும் இடம்பெறுகின்றன.

**இந்துக் கலை மரபுகள்**

- பௌத்தக் கோயில்களில் இராமாயணச் சிற்பங்கள் காணப்படுகின்றன.
- இராமாயணக் கதைகளைத் தழுவி, ஜனரஞ்சகமாக கூத்து வடிவங்களும் ஆடப்பட்டன.
- அசோகர் காலம் தொடக்கம் கலைவடிவங்கள் பரப்பப்பட்டுள்ளன. செங்கல், கருங்கல் கொண்டு கட்டடங்களைக் கட்டும் பழக்கம் பின்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து ஆந்திர பிரதேசக் கலைமுறை, கலிங்கக் கலைமுறை, பல்லவக் கலைமுறை என்பன பின்பற்றப்பட்டன.

**தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்கிழந்தமைக்கான காரணங்கள்**

- இந்தியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்களும், வாசனைத் திரவியங்கள் நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சியும், வர்த்தக நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின.
- இந்திய மன்னர்கள் தமது உள்ளூர் அரசுகளை விரிவுபடுத்தியதால் தென்கிழக்காசிய நாட்டுடனான உறவுகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்ட முடியவில்லை. சுதேசிகளின் எழுச்சி, சுதந்திரப் போராட்டம், இஸ்லாமிய, ஐரோப்பிய கலாசாரங்களின் தாக்கம் என்பன தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு நலிவடையக் காரணங்களாக அமைந்தன. பௌத்த கலாசாரம் உயர்நிலையில் வளர்ச்சி பெற்றமையும் தென்கிழக்காசியவில் இந்துப் பண்பாடு வீழ்ச்சியடையக் காரணமாயிற்று.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி I**
- உலகப் படத்தில் தென்கிழக்காசிய நாடுகளை இனங்காண மாணவர் களுக்கு இடமளியுங்கள்.
- அவற்றுள் இந்து நாகரிகம் பரவிய நாடுகளை மாணவர் கண்டறிந்து, பெயர் குறிப்பிட அவகாசம் வழங்குங்கள்.

**படி II**
- தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகம் என்னும் தலைப்பிலுள்ள ஒரு பகுதியைத் தெரிந்து மாணவர்களுக்கு விருப்பு ஏற்படக்கூடியவாறு முன்வையுங்கள்.

**படி III**
- மாணவர்களை ஏழு குழுக்களாகப் பிரித்து பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள ஏழு தலைப்புகளின் கீழும் தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரிகம் தொடர்பான தகவல்களைத் தேட இடமளியுங்கள்.
- திரட்டிய தகவல்களை ஒழுங்குமுறையில் தொகுத்து வகுப்பறையில் அறிக்கையாக முன்வைக்குமாறு கூறுங்கள்.

**படி IV**
- ஏழு குழுவிலிருந்தும் ஒருவர் வீதம் முன்வந்து தகவல்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- முன்வைத்த தகவல்களை ஒழுங்குபட ஆக்கமாகத் தயாரித்து காட்சிக்கு வைக்குமாறு கூறுங்கள்.

**உசாத் துணைகள்:**

தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு - திருநாவுக்கரசு

**தேர்ச்சி 4.0** : தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்துக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** புலம்பெயர்ந்த நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள் :**

- இந்து நாகரிகம் அனைத்து மக்களும் பின்பற்றக்கூடிய சனாதன தர்மம் எனக் குறிப்பிடுவர்.
- மேலைநாடுகளில் புகழ்பெற்ற சிவ, முருக, விநாயக அம்மன் ஆலயங்களின் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- அங்குள்ள இசை, நடனக் கலாமன்றங்களின் பணிகளைத் தொகுத்து எழுதுவர்.
- புலம்பெயர்ந்த மக்களிடையே தோன்றிய இந்து சபைகள் இந்து சமூகத்திற்காற்றி வரும் பணிகளைப் பட்டியற்படுத்துடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 4.2.1 புலம்பெயர்ந்த நாடுகளில் இந்து நாகரிகம்**

- **புலம்பெயர்ந்த நாடுகள் - விளக்கம்**
  மக்கள் ஏதோ ஒரு காரணத்தினால் தாங்கள் வாழ்ந்த தாய்நாட்டை விட்டு, வேறு நாட்டுக்குச் சென்று நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ வாழும் நாடுகள் புலம்பெயர்ந்த நாடுகளாகும்.
- புலம்பெயர்ந்த நாடுகளை மேற்குலக நாடுகள், கிழக்குலக நாடுகள் என இரு

வகைக்குள் அடக்கலாம். மேற்குலக நாடுகளில் இங்கிலாந்து (லண்டன்), பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, ஹவாய் தீவுகள், அமெரிக்கா, நியூயோர்க், நோர்வே, சுவீடன், இத்தாலி முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

- கிழக்குத் தேச நாடுகளில் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர் முதலான நாடுகளைக் குறிப்பிடலாம்.
- **புலம் பெயர்ந்தமைக்கான காரணங்கள்:**
    - ஆரம்பத்தில் போர், வர்த்தகம், திருமணம், தொழில்வாய்ப்பு என்பன காரணங்களாக அமைந்தன. பின்னர் நாடுகளைப் பிடித்து குடியேற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.
    - தற்காலத்தில் உள்நாட்டுக் கலகங்கள், வளமின்மை, கல்வி, கலப்புத் திருமணம், உத்தியோகம் முதலான காரணங்களால் புலம்பெயர்தல் இடம்பெறுகின்றது.
- புலம் பெயர்வு காரணமாக குடியேற்றம் ஏற்படும்.
- **ஆலயங்களும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும்**

  இந்துக்கள் குடியேறிய நாடுகளில் தங்கள் பண்பாட்டை நிலைநிறுத்திக் கொள்வதற்காக, பல்வேறு நிறுவனங்களை அமைத்து அதன் மூலம் இந்து சமயத்தை வளர்க்க முற்பட்டனர்; வளர்த்தும் வருகின்றனர். அவ்வகையில் ஆலயங்கள், மன்றங்கள், சபைகள் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

## (I) இலண்டன்

### இந்து ஆலயங்கள்

- இலண்டனில் இன்று 16 இந்துக் கோயில்களை உருவாக்கி வழிபாடு செய்து வருகின்றனர்.
- நீண்ட வரலாற்றைக் கொண்ட ஆலயமாக இலண்டன் ஈஸ்ற்காம் ஸ்ரீ முருகன் கோயில் உள்ளது. இவ்வாலயம் அங்குள்ள தமிழர்களால் உருவாக்கப்பட்டது.
- அச்சே - உயர் குன்று வாசல் முருகன் கோயில் ஈழத் தமிழர்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. கல்வி கற்கச் சென்று அங்கு குடியேறி வாழ்ந்த ஈழத்தவர்களால் எழுபதுகளில் அமைக்கப்பட்டது.
- அவ்வகையில் விம்பிள்டன் - ஸ்ரீ கணபதி கோயில், ரூட்டிங் - ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

### இந்து சமய நிறுவனங்கள்

#### (1) இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்

- 1977 ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் பல சைவ சமயத் தொண்டுகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக சமய விழாக்கள், சமய அறிவுப் போட்டிகள் என்பனவற்றை நடத்துதலும் முதியோர் நிலையங்களைப் பராமரித்தலும் அதன் பணிகளாகும்.

#### (2) இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை

- இந்து சமயத்தையும், சைவத் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்ப்பதிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு உதவுவதிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

- **ஏனைய பணிகள்**
  - பதியிலர், கதியிலர் உதவி நிலையம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. உதாரணமாக சிவயோகம் அன்னையர் குடியிருப்பு உருவாக்கியமை (கந்தரோடை கிராமத்திலுள்ள விதவைப் பெண்களுக்கு அமைக்கப்பட்ட இல்லம்).

**(3) இலண்டன் திருக்கோயில் ஒன்றியம்**

- வருடாவருடம் சைவத் தமிழ் ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு சைவத் தமிழ் ஆய்வு மாநாடுகளை நடத்தி வருகின்றது.

**(II) கனடா**

**இந்து ஆலயங்கள்**

- கனடாவிலுள்ள ரொரன்டோ மாநிலத்தில் ஐந்து இந்துக் கோயில்களும் மொன்றியலில் மூன்று இந்துக் கோயில்களும் வன்கூவரில் இரண்டு கோயில்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

**இந்து சமய நிறுவனங்கள்**

கனடா இந்து சமயப் பேரவை, கனடா இந்து கலாசார மன்றம், கனடா தமிழ்க் கலாசார சங்கம், கியூபேக் சைவ மகாசபை, வேதாந்த ஞானமன்றம், கனடா ஆதி அருள் நெறி மன்றம், கனடா சைவசித்தாந்த மன்றம், கனடா சிவதொண்டன் நிலையம், இலண்டன் திருக்கோயில் ஒன்றியம் முதலான சமய நிறுவனங்கள் கனடாவில் சைவம், தமிழ் என்பவற்றை வளர்க்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

**(III) அவுஸ்ரேலியா**

**இந்து ஆலயங்கள்**

- அவுஸ்ரேலியாவில் உள்ள பல மாகாணங்களில் இந்துக்கள் பரவலாக வாழ்கின்றனர்.
- சிட்னி முருகன் கோயில் உட்பட பத்துக்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் அவுஸ்ரேலியாவில் உள்ளன.
- இவ்வாலயங்களில் பெரும்பாலானவை தென் இந்திய சிற்பக் கலையைத் தழுவிக் கட்டப்பட்டுள்ளன. சில ஆலயங்களில் இராஜகோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**இந்து சமய நிறுவனங்கள்**

- கோயில்களுடன் இணைந்து அவுஸ்ரேலியாவிலுள்ள சிட்னி சைவ மன்றம், மெல்போர்ன் இந்துமன்றம், சிவதொண்டர் நிலையம், ''அவுஸ்ரேலியா அபயகரம்'' முதலான ஆன்மீக நிறுவனங்கள் சமயப் பணிகளை ஆற்றி வருகின்றன.
- இந்நிறுவனங்கள் பண்பாட்டு வளர்ச்சியிலும் கூடிய அக்கறை காட்டி வருகின்றன. எடுத்துக்காட்டாக - ஆத்திசூடி, தேவாரங்கள் என்பனவற்றை ஆங்கிலத்தில் அச்சிட்டு சிறுவர்களுக்குப் பரப்புகின்றனர்.

**(IV) ஜேர்மனி**

**இந்து ஆலயங்கள்**

- ஜேர்மனியில் வாழும் இந்துக்களால் பெரிய கணேசர் ஆலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.
- இங்கு கூட்டு வழிபாடு, கோயில் விழாக்கள் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

**(V) பிரான்ஸ்**

**இந்து ஆலயங்களும் பணிகளும்**

- பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் நகரில் ஆறு இந்துக் கோயில்கள் உள்ளன.
- இக் கோயில்கள் சைவம், தமிழ் என்பவற்றைக் கற்பிக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளன.
- இங்கும் இசை, நடன வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

**(VI) சுவிற்சலாந்து**

**இந்து ஆலயங்களும் பணிகளும்**

- இங்கு பதின்மூன்று இந்து ஆலயங்கள் உள்ளன.
- இவ்வாலயங்களைப் புலம்பெயர்ந்து வாழும் மக்களே அமைத்துள்ளனர்.
- இவ்வாலயங்களில் சமய வகுப்புக்கள், நற்சிந்தனைகள், கூட்டு வழிபாடுகள், விழாக்கள் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

**(VII) அமெரிக்கா**

**இந்து ஆலயங்களும் இந்து நிறுவனங்களும்**

- நூற்றுக்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் இங்குண்டு.
- அமெரிக்காவில் ஆகம முறையிலும் பல்லவர் கால சிற்ப அமைப்பிலும் அமைந்த கோயிலாக நியூயோர்க்கில் கட்டப்பட்ட மஹாவல்ல கணபதி கோயில் உள்ளது.
- அமெரிக்காவில் பல இந்து நிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இராமகிருஷ்ண மிசன் பெரிய அளவில் தனது கிளையை நிறுவிச் செயற்பட்டு வருகிறது.

**(VIII) நியூசிலாந்து**

**இந்து ஆலயங்கள்**

- தற்போது இரு இந்துக் கோயில்களை உருவாக்கி உள்ளனர். அவை வளர்ச்சி பெற்று வருகின்றன.

**(IX) ஹவாய் தீவு**

**இந்து ஆலயங்கள்**

- இங்கு யோக சுவாமிகளின் சீடரான சிவசுப்பிரமணிய சுவாமிகளால் சிவன் கோயில், ஆச்சிரமம் என்பன தாபிக்கப்பட்டுள்ளன.
- இன்று இவை உலகப் பிரசித்தி பெற்றனவாக விளங்குகின்றன.

**ஏனைய நாடுகள்**

**இந்து ஆலயங்களும் பணிகளும்**

- டென்மார்க்கில் சைவ மன்றங்கள், மண்டபங்கள் என்பவற்றில் கோயில் வழிபாடுகளையும் சமய வகுப்புக்களையும் நடத்தி வருகின்றனர்.
- ஹொலண்ட் நாட்டில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் கோயில் மிகவும் சிறப்பாக இயங்குகின்றது. சைவ சமய வகுப்புக்கள் நடத்தல், பண்பாட்டைக் காப்பாற்றல் என்பவற்றில் இவ்வாலயத்தின் பணி குறிப்பிடத்தக்கது.

- **புலம் பெயர்ந்த நாடுகளில் கோயில்களை நிறுவனமாகக் கொண்டு,**
  1. பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன.
     ஊஞ்சல், பதிகம் என்னும் பிரபந்தங்கள் கூடுதலாக எழுந்துள்ளன.
  2. ஈழநாடு முதலான பத்திரிகைகளின் மூலம் சமயக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.
  3. சைவநீதி, ஆத்ம ஜோதி, தமிழ் மகன், அன்பு நெறி முதலான சஞ்சிகைகளும் சமயப்பணி புரிகின்றன.
- பண்ணிசை வகுப்புகளும் கர்நாடக இசை வகுப்புக்களும் ஒழுங்காக நடத்தப்படுகின்றன.
- பரத நாட்டியம் பயிற்றுவிக்கப்படுகின்றது. இவற்றுக்கான நாட்டிய மன்றங்களும் உண்டு.
- பிறநாடுகளிலிருந்தும் இலங்கை, தமிழ் நாடு முதலான நாடுகளிலிருந்தும் சைவப் பெரியோர்களை வரவழைத்து சொற்பொழிவுகள் ஆற்றுவிக்கப்படுகின்றன.
- சைவ மகாநாடு ஆண்டுதோறும் நடத்தப் பெற்று, சைவம், சைவ சித்தாந்த ஆராய்ச்சி நடத்தப்படுகின்றன. அவை ஆராய்ச்சி நூலாக வெளியிடப்படுகின்றன.
- ஆலயங்களில் கும்பாபிஷேகம், மகோற்சவம் என்பவற்றை நடத்தும்போது இந்தியா, இலங்கை, மலேசியா முதலான நாடுகளிலிருந்து சிவாசாரியர்கள், மேள வாத்தியக் குழுவினர் வரவழைக்கப்படுகின்றனர்.
- மேற்கூறிய வகையில் உலகளாவிய ரீதியில் இந்து சமயம் இன்று வளர்ச்சி பெற்று வருகின்றது. நவீன இணையத்தள வசதிகளூடாக இந்து சமயச் செய்திகள் பல மொழிகளிலும் பரப்பப்படுகின்றன. மேலை நாட்டவர்களும் இந்து சமயத்தின்பால் ஈடுபாடு காட்டி வருகின்றனர்.
- இவ்வகையில் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்கள் இந்து சமயத்தையும், எமது பண்பாட்டையும் பாதுகாப்பதில் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:

**படி I** இலங்கையில் இருந்து புலம் பெயர்வுகள் இடம்பெற்றமைக்கான காரணங்களைக் கூறி, புலப்பெயர்வின்போது இந்துப் பண்பாடும் பரப்பப்படுவதை மாணவர்களுக்கு முன்வையுங்கள்.

**படி II** புலம் பெயர்ந்த நாடுகளில் இந்து சமயம் தொடர்பான தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துங்கள்.

**படி III** மாணவர்கள் தொகுத்து திரட்டிய விடயங்களை முன்வைக்க இடமளியுங்கள்.

**படி IV** முன்வைத்த விடயத்தை ஆக்கமாக தொகுத்துக் காட்சிப்படுத்துங்கள்.

## உசாத் துணைகள்:

ஈழத்துச் சிவாலயங்கள் - வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

**தேர்ச்சி 5.0** : இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் நுண்கலைகள் வகிக்கும் சிறப்பினை அறிந்து நயக்கும் திறனை விருத்தி செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** இந்து நுண்கலைகளின் சிறப்பம்சங்களை அறிந்து நயந்து போற்றுவர்.

**பாடவேளைகள்** : 24

**கற்றற் பேறுகள்** :

- இந்து நுண்கலைகளில் அடங்கும் கவின்கலைகளை எடுத்துக் கூறுவர்.
- சிற்ப, நடன, ஓவியக்கலைகளுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் கூறுவர்.
- சிற்பங்களின் வகைகள், பிரதிமாலட்சணங்களை விபரிப்பர்.
- நுண்கலைகளுக்கும் சமய அனுபவங்களுக்குமிடையிலான தொடர்புகளை ஒப்பிடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 5.1.1 இந்து நுண்கலைகள்**

5.1.1.1 நுண்கலைகள் அறிமுகம்
5.1.1.2 இந்து கலைக் கோட்பாடுகள்
5.1.1.3 கோயிற் கட்டடக் கலை
  5.1.1.3.1 குப்தர் காலக் கட்டடக் கலை
  5.1.1.3.2 பல்லவர் காலக் கட்டடக் கலை
  5.1.1.3.3 சோழர் காலக் கட்டடக் கலை
5.1.1.4 சிற்பக்கலை
5.1.1.5 விக்கிரகக் கலை
  5.1.1.5.1 நடராஜர் மூர்த்தம்
  5.1.1.5.2 தட்சணா மூர்த்தி மூர்த்தம்
  5.1.1.5.3 திரிபுராந்தகர் மூர்த்தம்
  5.1.1.5.4 இலிங்கோற்பவர் மூர்த்தம்
5.1.1.6 ஓவியக் கலை
5.1.1.7 நடனக் கலை
5.1.1.8 இசைக் கலை

### 5.1.1.1 இந்து நுண்கலைகளின் அறிமுகம்

- இந்து நுண்கலைகள் லலித கலைகள் எனவும், அழகியல் கலைகள் எனவும் கவின் கலைகள் எனவும் அழைக்கப்படும். கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன நிலைத்த கலையாக அமையும். இசை, நடனம், நாடகம் என்பன அவைக்காற்றுக் கலையாக அமையும். அவைக்காற்றுக் கலைகள் என்பது சபைகளிலும் மேடைகளிலும் அரங்கேற்றம் செய்யப்படுவது ஆகும்.
- இந்துக்கலை வடிவங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை என்று விஷ்ணுதருமோத்திரம் கூறுகின்றது. கலைகள் யாவும் வாழ்வைப் பண்படுத்துவனவாக வும், இந்துக்களின் பண்பாட்டைப் பேணுவனவாகவும் அமைகின்றன.

- பண்பாட்டில் கலைகள், சரித்திரச் செய்திகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன. இறைநம்பிக்கையையும் ஆத்மீகச் செய்திகளையும் வெளிப்படுத்தும் ஊடகங்களாகவும் இந்துக்கலை வடிவங்கள் விளங்குகின்றன.
- நுண்கலைகளில் அடங்கும் நாடகம் என்பதில் இசையும் நடனமும் இணைந்திருப்ப தனை நோக்க முடியும். நாட்டிய சாத்திரம் நாடகம், நடனம் என்பவற்றுக்கும் இசை நூல்கள் இசைக்கும் இலக்கணமாகும். சிற்ப சாத்திரம் சிற்பத்திற்கும் உரியதென்பர். இவ்வாறு இவ்வழகுக் கலைகளுக்கு இலக்கணம் கற்பிப்பதனை அவதானிக்க முடிகின்றது.
- நடனக்கலைக்கு இலக்கணம் வகுத்த பரதரின் நாட்டிய சாத்திரம் "நடனம் என்பது பல பாத்திரங்களாக நடித்தும் இசைவாத்தியம் இசைத்தும், நாடக அபிநயம் பலவற்றை ஏற்படுத்தியும் நாடகத்தின் தலைவனாக நின்று நடாத்துபவனே பரதக்கலைஞன்" என்று குறிப்பிடப்படுகின்றது.
- இந்துப் பண்பாட்டின் ஒரு கூறு கலையாகும். அவற்றில் ஒரு பகுதியான உருவ வழிபாட்டில் கோயில் விக்கிரக, சிற்பக்கலைகள் தொடர்புபடுகின்றன. தெய்வங்களே கலை வெளிப்பாட்டுடன் வருணனை செய்யப்படுகின்றன. சிதம்பர நடனம் என்னும் நடராச வடிவம் இறை வழிபாட்டின் உன்னத நிலையை சுட்டிக் காட்டுகின்றது.
- கலை என்பது ஒரு வகையில் வழிபாடாகும். நடனம் இறை உபசாரமாக அமையும். இசை இறை உபாசனைகளில் இணைந்து கொள்கிறது. இதனால் கலைகள் சமய ஆசாரங்களாகவும், சமய அனுபவங்களாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றன.
- கலை என்பது ஒருவகையில் அழகியல் ரசா அனுபவமாகும். மற்றொரு வகையில் இறைவெளிப்பாட்டு அனுபவமாகிறது. இந்துப் பண்பாட்டு வரலாற்றுக்கு கலைவரலாற் றுடன் நெருக்கமான தொடர்பு உண்டு. சிந்துவெளிக் காலம் தொடக்கம் இந்துப் பண்பாட்டில் கலை தொடர்ச்சியான செல்வாக்கைப் பெற்று வந்துள்ளது. வட இந்தியா, தென்னிந்தியா முழுவதிலும் வெவ்வேறு கலை வடிவங்கள் முதன்மை பெற்றுள்ளன. வேசர, நாகர, திராவிட, கலிங்க மரபுகளில் கோயிற் கட்டட மரபுகள் விருத்தி பெற்றன.
- ஆடற்கலை வடிவங்களும் இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களின் அமைப்பிற்கேற்ப வேறுபட்டு வளர்ந்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. கதகளி, கதக், மணிப்புரி, குச்சிப்புடி, பரதம், சதிர், பாகவதமேளா, விலாசம் முதலிய நடன வடிவங்கள் சமயச் சார்பானவையாயும் பொதுமக்கட் சார்பானவையாயும் விளங்கின.
- இசைவடிவங்களும் இறை வழிபாடு, பக்தி என்பவற்றுடன் தொடர்பானவை. சாமவேதம் மந்திரோபாசனையுடன் தொடர்பானதாகும். நாட்டிய சாத்திரம் நடனக்கலையுடன் தொடர்பானதாகும். சிற்ப சாத்திரங்களிலும் ஆகமங்களிலும் ஆலய அமைப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- இசைநூல்களிலும் தேவாரப் பதிகங்களிலும் பண்ணும் இசையுமே இறை உபாசனை யாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயங்களில் வழிபாடுகளும் பண்பாடுகளும் வளர்ச்சி பெற்று வருவதனால் அவை நுண்கலைகளின் உறைவிடங்களாகவும் அமைகின்றன.

### 5.1.1.2 இந்துக்கலைக் கோட்பாடுகள்

- பண்பாட்டின் ஓரம்சமாகவே கலைகள் அமைகின்றன. ஆய கலைகள் அறுபத்தி நான்கு எனக் கூறப்பட்டாலும் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்பன பிரதான கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. கலை என்பது கலா என்னும் சமஸ்கிருத சொல்லின் தமிழ் வடிவமாகும். ஆங்கில மொழியில் Art என்று இது குறிப்பிடப்படும்.
- கட்டிட, சிற்ப, ஓவியங்கள் (Visual Art) கட்புலக் கலைகளாகும்.
- இசை, நடன, இலக்கியங்கள் அவைக்காற்றுக் கலைகளாகவும் (Performing Art) கட்புல வடிவங்களாகவும் விளங்குகின்றன. இலக்கியம் வாய்மொழிக் கலையாக குறிப்பிடப்படுகின்றது (Verbal Art). இவ்வகையில் கலைகள் பலவகையாக பாகுபடுத்தப் படுகின்றன.
- இந்துக்கலையானது இந்து தத்துவம், ஆக்கத்திறன், அழகியல், மனமகிழ்ச்சி வெளிப்பாடு முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். கலை அனுபவமும் ஆத்மீக அனுபவமும் ஒரே அனுபவத்தின் வெளிப்பாடுகளாகும்.
- கலை அனுபவத்தில் தூய்மை, மன ஒருமைப்பாடு, ஆன்மீக இன்பம் என்பன சமய சாதனையாகவும் அதனால் கிடைக்கும் இலட்சியமாகவும் வலியுறுத்தப்படுகின்றது.
- கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் ''கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு'' எனச் சமயத்திற்கும் கலைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுகின்றார்.
- திருநாவுக்கரசர் ''உயிராவணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக்கிளியில் உருவெழுதி'' என்று பாடுவது கலைகள் உள ஒருமைப்பாட்டையும் பூரண அமைதியையும் ஆன்மீக இன்பத்தையும் தருவதை காட்டுவதாகும்.
- மனித உள்ளத்தைத் தன்வயமாக்கி இறைசிந்தனையில் செலுத்துவதே கலை என்றும் கலை ஒரு யோக சாதனம் என்றும் கூறப்படுகிறது. கலை தன்னல மில்லா உலகத்திற்கு ஒருவரை அழைத்துச் செல்கின்றது எனக் குறிப்பிடப்படுகிறது.
- கலை என்பது இயல்பாகவே ஒழுங்குவிதியைக் கொண்டுள்ளது. கோயில், சிற்பம், விக்கிரகம் என்பன அமைக்கப்படும்போது அளவும், பொருத்தமும் அதனுள் அடங்கி இருப்பதைக் கண்டு கொள்ளலாம். அளவும் பொருத்தமும் தத்துவ வடிவமாகும். இதுவே கலைக் கோட்பாடாக அமைகிறது. இயற்கையும் கலையும் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளன.
- பிரபஞ்சப் படைப்பு நாதாந்த நடனத்தின் மூலம் வெளிப்படுகின்றது. நடனம் ஐந்தொழில் தத்துவமாகும். இசை மனதை இசைவிக்கும் தன்மை உடையது. இசையால் வழிபடுவது இயல்பானது. இறைஞானத்திற்கும் அது அடிப்படையானது.
- இந்துக்கலையானது மனத்தூய்மை, மனவலிமை, மனமேம்பாடு, கருணை, செல்வம், தவம், யோகம், ஞானம் ஆகியவற்றைக் கொடுப்பதுடன் மேலான பேரின்ப அனுபவத்தையும் ஏற்படுத்துகின்றது.
- கலை உணர்வானது ஒருவனைக் கீழான விலங்கு உணர்வில் இருந்து விடுபடச் செய்து, மானுட நிலைக்கும் தெய்வீக நிலைக்கும் உயர்த்திவிடுகிறது. அதனால் கலையானது எல்லா மக்களிடையேயும் இனமதபேதம் கடந்த ஒருமைப்பாட்டுணர்வை ஏற்படுத்தி விடுகின்றது. இனம், மதம், மொழி என்பன வேறுபட்டாலும் கலை உணர்வு ஒரே அமைப்பாக விளங்குகின்றது.

- முத்தமிழில் கலை மரபு இயல், இசை, நாடகமாக வெளிப்படுகின்றது. இயலும் இசையும் கலந்தே நாடகம் பிறக்கின்றது. இசை இல்லாமல் இறைவழிபாடே கிடையாது. தேவாரப் பாடல்கள் பண்சுமந்த பாடல்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.
- பரதமுனிவரின் நாட்டிய சாத்திரம் சிருங்காரம், ஹாஸ்யம், காருண்யம், ரௌத்திரம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம் ஆகிய எட்டு விதமான அபிநயங்களை விபரிக் கின்றது.
- பின்பு அபிநவகுப்தர், சாந்தம் என்னும் ஒன்பதாவது ரசனையும் இணைத்துள் ளார். இத்தகைய கலை ரசனைகள் பக்தி இலக்கியங்களில் தொன்றுதொட்டு வளர்ந்து வந்துள்ளமையைக் காணமுடிகிறது.

### 5.1.1.3 கட்டடக் கலை

### அ. குப்தர் காலத்தில் கட்டடக் கலை வளர்ச்சி

- வட இந்திய இந்துப் பண்பாட்டு வரலாற்றில் குப்தர் காலம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.
- கி.பி. 318 - கி.பி. 570 வரை குப்த மன்னர்களின் ஆட்சிக் காலமாக உள்ளது.
- இந்து சமயம் சார்ந்த சமயம், கலை, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகள் வளர்ச்சி அடைந்தன.
- இக்காலத்தில் நாகர கட்டடக் கலைப்பாணி இந்து மரபு தழுவியதாக வளம் பெற்றது.

### குப்தர்களும் கோயில்களும்

- குப்தர் காலத்தில் சந்திர குப்தன், சமுத்திர குப்தன், ஸ்கந்த குப்தன், 2 ஆம் சந்திரகுப்தன் முதலான மன்னர்கள் ஆண்டனர்.
- குப்தர் அமைத்த கோயில்கள் வட இந்தியாவின் உத்தரப் பிரதேசம், பீகார் பிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற இடங்களில் உண்டு.
- இக்காலத்தில் சிவன், விஷ்ணு, சக்தி போன்ற தெய்வங்களுக்கு ஆலயங்கள் பல அமைக்கப்பட்டன.
- கோயில்கள் குடைதளிகளாகவும் கருங்கல், செங்கல் என்பன கொண்டு கட்டப்பட்ட கட்டுத்தளிகளாகவும் உள்ளன.
- அந்நியர்களின் படையெடுப்பு, இயற்கை அனர்த்தம் போன்ற காரணங்களால் அவை சிதைவடைந்துவிட்டன.
- குப்தர் கால கட்டடக் கலை வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.
- கட்டடங்களின் தன்மையின் அடிப்படையில் அவற்றை குடை வரை கோயில்கள், சிறிய சதுரக் கோயில்கள், சிகரங்களைக் கொண்ட கோயில்கள் என்று பல கட்டங்களாக வகைப்படுத்தியுள்ளனர்.
- முதலாம் கட்டக் கோயில்கள் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக் கோயில்களாகும்.
- ஏனைய கோயில்கள் கருங்கல், செங்கல் கொண்டு அமைக்கப்பட்ட கட்டுத்தளிகளாகும்.

## குகைக்கோயில்களும் கட்டுத்தளிகளும்

- குப்தர் கால கட்டடக் கலை வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தினைக் காட்டுவன குகைக் கோயில்கள் எனப்படும் குடைதளிகளாகும்.
- ஏரன் நரசிம்மர் கோயில், உதயகிரி என்பன குகைக் கோயில்களாகக் காணப்படுவன. இவ்வகைக் கோயில்கள் சிகரம் இன்றி தட்டையான கூரையும், சதுரமான கருவறை யும், அதன் முன் சிறு மண்டபமும், குட்டையாகவுள்ள தூண்களையும் உடையனவாக அமைக்கப்பட்டுள்ளன.
- குப்தர் கால கட்டடக் கலை வளர்ச்சியின் அடுத்த கட்டக் கோயில்கள் கட்டுத்தளி களாகும்.
- கட்டுத்தளி அமைப்பில் சாஞ்சி 17வது கோயில், குடைவரை கோயில்களைப் போலவே கருவறை, முகமண்டபம் ஆகிய பகுதிகளை மட்டும் உடையது.
- கருங்கல் படைகளால் அமைக்கப்பட்ட சாஞ்சி 17வது கோயில் கற்படைகளைத் தாங்கக்கூடிய பலமான அடித்தளத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது.
- கருவறை, முகப்பு மண்டபத்தையும், தட்டையான கூரையையும் உடைய இக்கோயிற் சுவர்கள், கூரை என்பன நாற் சதுரமான கற்பாளங்கள் கொண்டு அமைக்கப்பட் டுள்ளன.
- மூலஸ்தான சுவரை ஒட்டி ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு தூண் இடம்பெறுகிறது.

## சிகரக் கோயில்கள்

- குப்தர் காலக் கட்டடக் கலை வளர்ச்சியில் முக்கியத்துவம் உடைய கோயில்களாக அமைவன சிகரத்தோடு கூடிய கோயில்களாகும்.
- கருவறை, முகப்பு மண்டபம் ஆகியவற்றையுடைய கட்டுத்தளி ஆலயங்களின் கருவறைக்கு மேல் சிகரம் அமையும்.
- கட்டட அழிபாடுகளின்படி கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே சிகரங்களுடன் கூடிய கோயில்கள் அமைக்கப்பட்டன என்பர்.
- தியோகா தசாவதாரக் கோயில், பட்டாரி மகாதேவன் கோயில், வீதர்கோன் மட்டளி போன்றன சிகரங்களோடு கூடிய கோயில்களாகும்.
- தியோகா தசாவதாரக் கோயில் சிகரத்தையுடைய கற்றளிகளுள் முக்கியத்துவம் உடைய கோயிலாகும்.
- பௌத்த தூபியை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட இக் கோயில் மிக அகலமான தளத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது.
- தியோகா தசாவதாரக் கோயில் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், சிகரம், நடைபாதை என்பனவற்றை பிரதான பகுதிகளாகக் கொண்டுள்ளது.
- மண்டபங்கள் இரும்புத் தீராந்திகளால் இணைக்கப்பட்டுள்ளமை அக்காலப் பொறிமுறை நுட்பத்தைக் காட்டுவதாக அமைகிறது.
- மூலஸ்தானத்தின் சுவர்களின் வெளிப்புறம் தேவகோட்டங்களும், பக்கங்களில் அரைத் தூண்களும் உண்டு.
- கருவறைக்கு மேல் 40 அடி உயரமுடைய சிகரம் இன்று சிதைவடைந்த நிலையில் காட்சியளிக்கிறது.
- ஆலயத்தின் வாயிற்புறச் சுவரின் இருபுறமும் கங்கை, யமுனை ஆகியவற்றின் வடிவங்கள் சிற்பங்களாக உள்ளன.

## ஆ. பல்லவர் காலக் கட்டடக் கலை

- தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக் காலம், பக்தி இயக்கக் காலம் என்று பலவாறு அழைக்கப்படுகிறது.
- கி.பி. 6 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தமிழகத்தில் பல்லவ மன்னர்களினது ஆட்சி நடைபெற்றது.
- பல்லவர் கால சைவ, வைணவ மறுமலர்ச்சியில் கட்டடக்கலையின் வளர்ச்சியும் பிரதான இடத்தைப் பெறுகின்றது.
- தமிழகத்தில் முக்கியத்துவம் பெற்ற திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்த காலமாக பல்லவர்காலம் உள்ளது.
- பல்லவர் மன்னர்களால் அமைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட ஆலயங்கள், அக்கால கட்டடக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.
- பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சியை நான்கு கட்டங்களாக இனங்காண்பர்.
  1. மகேந்திரவர்மன் பாணி
  2. நரசிம்மன் பாணி
  3. இராஜசிம்மன் பாணி
  4. நந்திவர்மன் பாணி
- மற்றொரு வகையில் குடைதளிகள், மலைதளிகள், கட்டுத்தளிகள் எனவும் வகைப்படுத்துவர்.

### குடைதளிகள்

- பல்லவர்கால கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்ப கட்டமாக அமைவது குடைவரைக் கோயில்களாகும்.
- குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலை ஆரம்பித்து வைத்தவர் மகேந்திரவர்மன் ஆவார்.
- மண்டகப்பட்டு, மகேந்திரவாடியம், மாமண்டூர், வல்லம், பல்லாவரம் போன்ற குடைவரைக் கோயில்கள் சிறந்த சான்றுகளாகும்.
- சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, தளவானூர் போன்ற இடங்களில் உள்ள குடைவரைகள் சற்றுப் பிற்பட்ட குடைவரைகளாகும்.
- குடைவரைக் கோயில்கள் கருவறை, அர்த்தமண்டபம், முகப்பு மண்டபம் என்பன வற்றையும் பிரதான வாயிலையும் கொண்டுள்ளன.
- ஆரம்பகாலக் குடைவரைகளின் முகப்பு மண்டபத்தில் 7 அடி உயரமும் 2 அடி அகலமுங் கொண்ட தூண்கள் இடம்பெறுகின்றன.
- இக்குடைவரைகளில் உள்ள கருவறைகளில் இறைவடிவங்களைக் காணமுடியவில்லை.
- இறைவடிவங்கள் சுதை அல்லது மரத்தால் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர்.
- பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டுவன மண்டபங்கள் ஆகும்.
- மண்டபங்களுள் அதிகமானவை 1 ஆம் நரசிம்மன் காலத்தில் அமைக்கப்பட்டவை யாகும்.

- திரிமூர்த்தி மண்டபம், ஆதிவராக மண்டபம், மகிஷாசுரமர்த்தினி மண்டபம், தர்மராஜ மண்டபம், மாமல்லபுரம் போன்றவை உதாரணங்களாகும்.

- இம்மண்டபங்களில் பொதுவாக 7 அடி உயரமுள்ள தூண் நிரைகள் காணப்படு கின்றன. இதன் மேற்புறமும், அடிப்புறமும் சதுர வடிவமைப்பையும், நடுப்பகுதி எண்கோண அமைப்பையும் கொண்டன. மேற்பகுதியில் கும்பமும், தாமரை மொட்டும் தொங்குவது போல் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களின் அடியில் சிங்கங்கள் இடம் பிடிக்கும்போது தூண்களின் பாரத்தை சிங்கங்கள் தாங்கிக் கொள்வதுபோல் அமைக்கப் பட்டிருப்பது சிறந்த கலை நயப்பின் வெளிப்பாடாகும்.

- கொடிக்கால் மண்டபத்தின் கருவறையின் இருபுறமும் காவற்பெண்கள் காணப்படுவதால் கொற்றவைக்குரிய கோயிலாக இருக்கலாம் என்பர்.

- கொடிக்கால் மண்டபத்தின் பிரதான கருவறையுடன் முகப்பு மண்டபச் சுவர்களிலும் கருவறைகள் உள்ளன.

- மண்டபக்கோயில்கள் குடைவரைகள் போல கருவறை, அர்த்தமண்டபம், முகப்பு மண்டபம் என்பனவற்றைப் பிரதான பகுதிகளாகக் கொண்டன.

- மண்டபக்கோயில்களில் கருவறையின் எண்ணிக்கை வாயில்களின் அமைப்பு, காவற் சிற்பங்கள் அமைப்பு என்பனவற்றில் மாற்றங்களைக் காணலாம்.

- மண்டப கோயில்களுள் சில மண்டபங்கள் இறை வடிவங்களை உடைய கருவறை களைக் கொண்டனவாக உள்ளன.

- பல்லவர் கால கட்டடக்கலையின் 2 ஆம் கட்ட வளர்ச்சியைக் காட்டுபவை மலைதளி களாகும்.

- மலைதளிகளை ரதக்கோயில்கள், பாறைக்கோயில்கள், செதுக்குத்தளிகள் எனவும் கூறுவர்.

- மரத்தில் இரதத்தை செதுக்குவது போல பாறைகளைக் கீழ் இருந்து மேலாக செதுக்கி அமைக்கப்பட்ட கோயில்களாக மலைதளிகள் உள்ளன.

- மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள மலைதளிகள், மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

- மாமல்லபுர மலைதளி, தரும ரதம், வீம ரதம், நகுல ரதம், சகாதேவ ரதம், அர்ச்சுன ரதம், கொற்றவை ரதம், வடக்குப் பிடாரி ரதம், தெற்குப் பிடாரி ரதம், வலையான் குட்டை ரதம் எனும் பெயர்களினால் அழைக்கப்படுகின்றன.

- மலைதளிகள் நாகரம், திராவிடக் கலைப்பாணிகளைப் பிரதிபலிக்கின்றன.

- மாமல்லபுரக் கோயில்களுள் தர்மராஜ ரதம் தனித்துவம் உடையது.

- மூன்று தளங்களை உடைய தர்மராஜ ரதம் புத்த விகாரை அமைப்பைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.

- தருமராஜ ரதத்தின் மூன்று தளங்களிலும் இந்து சமயச் சார்புடைய பல சிற்பங்கள் காணப்படுகின்றன.

- இதனால் தருமராஜ ரதம் ''சிற்பக்கலைக் களஞ்சியம்'' என்று போற்றப்படுகின்றது.

### கட்டுத்தளிகள்

- கற்களைச் சீராகப் பொளிந்தெடுத்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து கட்டுகின்ற கட்டுமானக் கட்டக்கலையே கட்டுத்தளியாகும்.
- கட்டுத்தளிக் கலைமரபு இராஜசிம்ம பல்லவ மன்னனது கலைமரபாகும்.
  **உ- ம்**: மாமல்லபுரக் கடற்கரைக்கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பனைமலைக்கோயில், காஞ்சி புரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில்.
- மாமல்லபுர கடற்கரைக்கோயில் பாதுகாப்பற்ற திறந்தவெளியில் நிற்கின்ற இக்கோயில் கடல்நீரிலிருந்து வரும் உப்புக்காற்றாலும், காற்றில் வரும் மணலாலும் இன்னும் சிதைவடையாது இருப்பது பல்லவர்கால கட்டுமான வேலையின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது.
- மாமல்லபுர கடற்கரைக் கோயிலை **ஜலசயனம்** என தற்போது அழைக்கின்றனர்.
- இராஜசிம்மனால் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் கலை வனப்புடையது. **பெரிய கற்றளி** என பிற்கால சாசனங்கள் கூறுகின்றன.
- காஞ்சி கைலாசநாதர் கோயிலில் தென்னிந்திய திராவிடக் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களான விமானம், மண்டபங்கள், பரிவாரத்தேவர் கோட்டம், சுற்றாலை, கோபுரம், பிரகாரம் ஆகிய யாவும் அமைக்கப்பட்டுள்ளன.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் கருவறையில் 16 பட்டை கொண்ட இலிங்கம் உள்ளது. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி வருவதற்கு பாதை அமைப்பு உண்டு.
- கர்ப்பக்கிரகத்தின் கிழக்குப் பக்கம் தவிர்ந்த ஏனைய மூன்று திசைகளிலும் உள்ள பக்கச் சுவர்களின் நடுவிலும் தேவகோட்டம் இணைந்திருப்பது சிறப்பம்சமாகும்.
- விமானம் பல தள அமைப்பும் அது உள்நோக்கிய சரிவுடன் மேலே ஓங்கியெழும் பாங்கில் கலைவனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. நாற்சதுர வடிவிலான அதன் தளங்களில் மாடங்களும் புராணக்கதையை விளக்கும் சிற்பங்களும் சிகரத்தின் மேலே தூபியும் உண்டு.
- திருச்சுற்றாலையைச் சுற்றி 58 சிறிய தேவகோட்டங்கள் உள்ளன.
- காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப்பெருமாள் கோயிலே பல்லவர் காலக் கட்டடக்கலையின் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு எனக் கூறலாம். அது கைலாசநாதர் கோயிலைக் காட்டிலும் ஓரளவு பெரியது.
- சுற்றாலை மண்டபம், கருவறை, முக மண்டபம் என்பன அக் கோயிலின் முக்கிய உறுப்புக்களாகும்.
- கருவறை ஏறக்குறைய 90 அடி நீளமுள்ள பக்கங்களைக் கொண்டதாக சதுர வடிவில் அமைந்துள்ளது.
- சுற்றாலை மண்டபத்தில் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள தூண் வரிசையும், பல்லவ அரச மரபினது முக்கிய நிகழ்ச்சிகளைக் கூறும் செய்திகள் பொறிக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன.
- முக மண்டபம் கருவறையைப் போல சதுர வடிவானது. கருவறையின் மேலுள்ள விமானம் சதுர வடிவிலானது.

- அதனது உயரமானது தரை மட்டத்திலிருந்து 60’ உயரமானது.
- விமானம் நான்கு மாடிகளைக் கொண்டுள்ளது. அதைச் சுற்றிலும் நடைவழியும் உள்ளது.
- விமானத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் பார்ப்போரைக் கவர்வதாகவும் உள்ளது.
- ஆலயத்திலே பிரகாரத்தின் உட்புறத்திலுள்ள திருச்சுற்றானது கூடங்கள் பொருந்திய சாலைகளுடன் காணப்படுகின்றன.
- சாலை நெடுகிலும் யாழித்தூண் நிரைகள் உண்டு.
- தூணின் பாரத்தை யாழிதாங்குவது போல் மிகத் தத்துவரூபமாக சிற்பி தன் கைவினைத் திறனைக் காட்டியுள்ளான்.
- பல்லவர் கால கட்டடக்கலையிலும் கலை வேலைப்பாடுகளிலும் மிக உயர்ந்த வளர்ச்சிக் காலம் இராஜ சிம்மனது ஆட்சிக்காலம் எனக் கூறலாம்.

### நந்திவர்மன் கட்டடக்கலை (கி.பி. 800 - கி.பி. 900 வரை)

- இம்மன்னனது கட்டடக்கலைப் பிரிவானது கி.பி. 800 - கி.பி. 900 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் எழுந்த ஆலயங்களைக் குறிக்கும். இப்பிரிவுக்குள் இடம்பெறும் ஆலயங்கள் அளவிலே சிறியவை.
- கலைப் பண்புகளைப் பொறுத்தவரையில் இராஜசிம்மன் காலத்தைக் காட்டிலும் வளர்ச்சி பெற்றது என்று கூறமுடியாது.

  **உ-ம்:** காஞ்சியிலுள்ள முத்தீஸ்வரர் கோயில், மதங்கேஸ்வரர் கோயில், செங்கற் பட்டிற்கு அருகிலுள்ள ஓரகடத்திலுள்ள வாடாமல்லீஸ்வரர் கோயில், திருத்தணியிலுள்ள வீரட்டானேஸ்வரர் கோயில்.

- இவற்றுள் காஞ்சியிலுள்ள முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர் கோயில்கள் முதலில் கட்டப்பட்டவை எனக் கருதலாம். அவற்றின் நுழைவாயிலில் இரு தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கும் முகமண்டபம் இருக்கிறது.
- இப்பிரிவைச் சேர்ந்த ஏனைய நான்கு கோயில்களும் அரைவட்ட வடிவில் அமைந் துள்ளன. அவை மாமல்லபுரத்திலுள்ள சகாதேவ ரதத்தை முன்மாதிரியாகக் கொண்டன.

### முடிவுரை

- பல்லவர் காலக் கட்டடக்கலையானது முதலாம் மகேந்திரவர்மனால் ஆரம்பிக்கப்பட்ட குடவரைக்கோயிலில் தொடங்கி அவனது மகன் முதலாம் நரசிம்ம பல்லவனது காலத்தில் குடவரைக்கோயிலாகவும், ரதக்கோயிலாகவும், சிற்ப வேலைப்பாட்டுடனும் வளர்ச்சி பெற்றது.
- இராஜசிம்மனது காலக் கோயில்கள் அளவில் பெரியதோடு, சிற்ப ஓவியக்கலை வனப்பிலும் முதிர்ச்சி பெற்று முழுமை பெற்றதாக மாறியது.
- அதற்குப் பின்பு நந்திவர்மனது ஆட்சிக்கால ஆலயம் மிகச்சிறிய கோயிலாகும். கலைப் படைப்புக்கள் குறைந்ததாகவும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

### 5.1.1.3.3 சோழர் காலக் கட்டடக் கலை

- தமிழக வரலாற்றில் கி.பி. 850 - 1270 வரையான காலம் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலமாகும்.
- இந்து சமயம் குறிப்பாக சைவநெறியானது கோயில் வழிபாடு, கலை, இலக்கியம், தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டது.
- சோழ மன்னர்கள் போரில் பெற்ற வெற்றிகளுக்காகவும், மக்களின் ஆன்மீக தேவையை நிறைவேற்றுவதற்காகவும் பல கோயில்களை அமைத்தனர்.
- சோழ மன்னர்கள் அமைத்த கோயில்கள் அக்காலக் கட்டடக்கலை வளர்ச்சியைக் காட்டுவனவாய் உள்ளன.
- சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியை வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களாக இனங்காண்பர்.

    (அ) **முற்காலச் சோழர் பாணி -** கி.பி. 850 - 985 வரை விஜயாலயன் கால கட்டத்தில் அமைக்கப்பட்ட கோயில்களாகும்.

    (ஆ) **இடைக்காலச் சோழர் பாணி -** கி.பி. 985 - 1070 வரை ராஜராஜன் தொடக்கம் ராஜேந்திரன் வரையான காலத்தில் கட்டப்பட்ட கோயில்களாகும்.

    (இ) **பிற்காலச் சோழர் பாணி -** கி.பி. 1070 - 1270 வரை 1 ஆம் குலோத்துங்கன் தொடக்கம் 3 ஆம் ராஜேந்திரன் வரையான காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்.

(அ)
- முற்காலச் சோழர்களின் கோயில்கள் பல்லவர் கால கோயில்களைப் போலவே அளவில் சிறியன.
- பல்லவர் கால கட்டடக்கலை மரபின் தொடர்ச்சியாக சோழர்களின் ஆரம்ப கால கோயில்கள் உள்ளன.
- நார்த்தா மலை விஜயாலய சோழேஸ்வரம், புதுக்கோட்டை மூவர் கோயில் போன்றன முற்கால சோழர் கோயில்களுள் சில.

(ஆ)
- சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சநிலையைக் காட்டுவன இடைக் காலச் சோழர்களின் கோயில்களாகும்.
- தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழேஸ்வரம் என்பன அவற்றுள் முக்கியமானவை.

(இ)
- பிற்காலச் சோழர் கோயில்கள் சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் முதிர்ச்சியை காட்டுவதுடன், விஜயநகர கால கட்டடக்கலை வளர்ச்சிக்கு முன்னோடியாகவும் அமைவன.
- பிற்காலச் சோழர் கோயில்களுள் சிதம்பரம், ஐராவதேஸ்வரம் என்பன சில.

### கட்டடக்கலையின் வளர்ச்சி

- சோழர் கால கட்டடக்கலையின் தொடக்கத்தைக் காட்டுவது விஜயாலய சோழேஸ்வர மாகும்.
- கருவறை, விமானம், முன்மண்டபம், பரிவாரக் கோயில்கள் எனும் பகுதிகளைக் கொண்டதாக இவ்வாலயம் உள்ளது.

- நான்கு தளங்களைக் கொண்ட விமானம் மேல் நோக்கி சிறுத்த வண்ணம் செல்கிறது.
- விமானத்தின் முதல் மூன்று தளங்கள் சதுரமாகவும், நான்காவது தளம் வட்டமாகவும் அமைந்துள்ளது.
- புதுக்கோட்டையில் உள்ள மூவர் கோயில் மூன்று பிரதான கோயில்களை கொண்ட ஒரு கோயிலாக உள்ளது.
- மூன்று மையக் கோயில்களுக்கும் மகா மண்டபம், நந்தி மண்டபம் என்பன பொதுவாக அமைந்துள்ளன.
- ஒவ்வொரு மையக்கோயிலும் கருவறை, அர்த்த மண்டபம் எனும் பகுதிகளை உடையன.
- மையக்கோயில் ஒவ்வொன்றும் 21 அடி நீளமும், மகா மண்டபம் 91 அடி நீளமும், நந்தி மண்டபம் 11 சதுர அடி நீளமும் உடையன.
- ஆலயத்தின் ஒவ்வொரு திசைக்கும் துணைக் கோயில்கள் உள்ளன.
- சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சநிலையை வெளிப்படுத்துவதாக தஞ்சைப் பெருங்கோயில் உள்ளது.
- சாளுக்கிய மன்னனை ராஜராஜன் வெற்றி கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்டதே தஞ்சைப் பெருங்கோயிலாகும்.
- 500 அடி நீளமும் 250 அடி அகலமுடையதாக இக்கோயில் உள்ளது.
- தென்திசைமேடு, பெரிய கோயில், பெருவுடையார் போன்ற பெயர்கள் தஞ்சைப் பெருங்கோயிலின் கட்டடக்கலைச் சிறப்பை உணர்த்துவன.
- பிரதான கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி மண்டபம், நர்த்தன மண்டபம், வாச்சிய மண்டபம் என்று 6 பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ஆலயத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஆகம விதிப்படி நிருமாணிக்கப்பட்டுள்ளன.
- 45 அடி நீளமும் 9 அடி அகலமும் கொண்ட கருவறையின் நாற்புறமும் நான்கு வாயில்கள் உள்ளன.
- தஞ்சைக் கோயிலின் பிரதான பகுதியாக அமைவது பிரமிட் வடிவில் அமைந்த அதன் விமானம் என்பர்.
- ஆலயத்தின் விமானம் 216 அடி உயரத்தை கொண்டிருப்பதுடன், 15 அடுக்குகளையும் உடையது.
- தஞ்சைக்கோயிலின் 3 விமானங்களும் கேரளந்தகன் வாயில், ராஜராஜன் வாயில், திருவணுக்கன் வாயில் எனும் பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- ராஜேந்திரன் கங்கையை வெற்றி கொண்டதன் நினைவாக அமைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழேஸ்வரம் தஞ்சைக் கோயிலின் மறுபதிப்பு என்று கொள்ளப்படுகிறது.
- இவ்வாலயம் 567 அடி நீளமும் 318 அடி அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந்துள்ளது. ஆலயத்தின் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய பிரதான பகுதிகள் ஒரு பொதுவான பிரமாண்டமான அதிட்டானத்தின் மேல் அமைந்துள்ளன.

- கங்கை கொண்ட சோழேஸ்வரத்தின் பிரதான பகுதியாக அமைவது விமானமாகும்.
- தஞ்சைப் பெருங்கோயிலின் விமானத்தின் தளங்கள் நாற்புறமும் நேராக அமைந் திருக்க, கங்கை கொண்ட சோழேஸ்வரத்தின் விமானம் வில் வளைவாகக் காட்சி யளிக்கின்றது.
- விமானத்தில் ஐந்து பக்க வடிவிலும், நாற்சதுர வடிவிலும் அமைந்த மாடங்கள் தளங்களை அலங்கரிக்கின்றன.
- கருவறையின் இருபுறமும் வட கைலாயம், தென் கைலாயம் எனும் இரு சிவாலயங் கள் உள்ளன.

**பிற்காலச் சோழர் கலைப்பாணி**

- பிற்கால சோழ மன்னர்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் இடைக்கால சோழ கட்டடக் கலைப்பாணியின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டுவன.
- இக்கோயில்கள் சோழர் கால கட்டடக் கலையின் முதிர்ச்சியைக் காட்டும். அதே நேரம் சோழப் பேரரசின் வீழ்ச்சியையும் வெளிப்படுத்துவன.
- 1 ஆம் குலோத்துங்கன், 2 ஆம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்ற அரசர்களால் அமைக்கப்பட்ட கோயில்களாக இவை உள்ளன.
- சிதம்பரம், திரிபுவனேஸ்வரம், ஐராவதேஸ்வரம் போன்ற கோயில்கள் பிற்கால சோழர் கால கலைப்பாணியை பிரதிபலிப்பன.
- விக்கிரம சோழன் போன்ற அரசர்கள் - சிதம்பரத்தில் நிருத்த சபை, கோபுரங்கள், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற கட்டட அம்சங்களை நிருமாணித்தனர்.
- சிதம்பரத்தின் திருச்சுற்று மாளிகையின் சுவர்கள் 1 ஆம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்றவர்களின் காலங்களில் நிருமாணிக்கப்பட்டவை.
- இடைக்கால கோயில்களின் விமானங்கள் உயரமாக அமைய, பிற்கால சோழர் கோயில்களின் கோபுரங்கள் உயரமாக இருந்தமை இக்கால கட்டடக்கலை வளர்ச்சியில் காணப்படும் முக்கிய அம்சம்.
- சிதம்பரத்தின் 7 வாயில்களிலும் 7 உயரமான கோபுரங்கள் உள்ளன.
- 2 ஆம் ராஜராஜனால் நிருமாணிக்கப்பட்ட ஐராவதேஸ்வரம், இராஜஇராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது.
- இவ்வாலயம் கருவறை, அர்த்த மண்டபம், பெரு மண்டபம் என்பனவற்றைப் பிரதான பகுதிகளாகக் கொண்டுள்ளது.
- ஐராவதேஸ்வரத்தின் விமானம், தேவகோட்டம், சுவர் போன்ற பகுதிகளில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- இக்கோயில் பல சிற்பங்களைக் கொண்டுள்ளதனால் ‘‘சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்’’ என்று வருணிக்கப்படுகிறது.
- எனவே சோழர்களின் பிற்காலக் கோயில்கள் விஜயநகர நாயக்கர் கால கட்டடக் கலை வளர்ச்சிக்கு முன்னோடி என்பர்.

### 5.1.1.4 சிற்பக் கலை

- இந்து நுண்கலைகளுள் கட்டடக்கலையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய கலையென்ற வகையில் சிற்பக்கலைக்கு முதன்மையான இடமுண்டு.
- ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் சிற்பக்கலை வளர்ச்சியடையத் தொடங்கியதும் அக்கலை தொடர்பாக விளக்கும் ஆகமங்கள், சிற்ப சாத்திர நூல்கள் என்பன தோற்றம் பெறத் தொடங்கிவிட்டன.
- சாத்திர நூல்கள் சிற்பங்களுக்குரிய மூலப்பொருள்கள், அவற்றைக் கொண்டு அமைக் கப்படும் வடிவங்கள், அளவுப் பிரமாணங்கள், பங்க அமைதிகள், அங்க இலட் சணங்கள் என்று பல அம்சங்களை விதிகளாக விபரிக்கின்றன.
- ஆகமங்கள், சிற்ப சாத்திர நூல்கள் என்பனவற்றில் கூறப்பட்டுள்ள விதிகளை விளக்கும் வகையிலான பல சிற்பங்கள் வரலாற்றுக் காலகட்டங்களில் செதுக்கப் பட்டுள்ளன.
- சிற்பங்கள் அமைக்கப்படும் நோக்கம், அவற்றின் தன்மை என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு சிற்பங்களை வகைப்படுத்தும் மரபு உள்ளது.
- வடிவங்களை இருத்தும் நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மூன்றாக வகைப்படுத்துவர்.
  - சல வடிவங்கள் - இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய வடிவங்களாகும்.
  - அசல வடிவங்கள் - ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுகின்ற வடிவங்களாகும்.
  - சலாசல வடிவங்கள் - இடத்துக்கிடம் நகர்த்தக்கூடியனவாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக்கூடாது என்ற நோக்கத்தில் நிறுவப்படுகின்ற வடிவங்களாகும்.
- சிற்பங்களினுடைய தோற்றத்தைக் கொண்டு அவற்றைச் சிற்ப நூல்கள் மூன்று வகையாக இனங்காண்பர்.
  - அமைதித் தோற்றம் - அமைதியான நிலையில் அடியவர்களுக்கு வேண்டுவனவற்றை வழங்கும் திருக்கரங்களுடன் கூடிய வடிவங்கள்.
  - அருளும் தோற்றம் - ஊர்திகளுடன் நின்ற நிலையில் அணிகலன்களுட னும், படைக்கலங்களுடனும் அச்சம் அகற்றி காத்தருளும் நிலையில் உள்ள வடிவங்களாகும்.
  - அச்சுறுத்தும் தோற்றம்- பகைவர்களைக் கொல்லும் தோற்றத்தில் படைக் கருவிகளுடன், அச்சுறுத்தும் போர்த் தொழிலில் ஈடுபடும் வடிவங்கள் ஆகும்.
- சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள விதத்தை அடிப்படையாகக் கொண்டும் சிற்பங்களை வகைப்படுத்துவர்.
  - முழுவடிவச் சிற்பங்கள் - வடிவத்தின் முழு அங்கங்களும் வெளியே தெரியும்படியாக அமைக்கப்படும் வடிவங்கள்
  - புடைப்புச் சிற்பங்கள் - வடிவத்தின் அங்கங்களின் ஒரு பகுதி மட்டும் தெரியும்படியாகச் செதுக்கப்படும் சிற்பங்கள்

    **உதாரணம்:** சுவர்கள், கோபுரங்களில் செதுக்கப் படும் சிற்பங்கள்

## சிற்பக் கலையின் தோற்றம், வளர்ச்சி

- இந்திய வரலாற்றில் சிற்பக்கலை சிந்து வெளிக்காலப் பழமையுடையது.
- சிந்து வெளிப் பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற நடன மாதின் வெண்கலப் படிமம், ஆணின் வடிவம், குட்டிகளுடன் கூடிய குரங்கின் வடிவம் போன்ற சிற்பங்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.
- மௌரியர், சுங்கர், குஷாணர் காலத்திற்குரிய சிற்பங்கள் அதிகம் பௌத்த சமயச் சார்புடையன.
- வட இந்தியாவில் கி. பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்து சமயச் சார்புடைய சிற்பங்கள் தோன்றத் தொடங்கின.
- உதயகிரி, தியோகா, வடமதுரை போன்ற இடங்களில் வைணவ சமயச் சார்புடைய விஷ்ணு அவதாரச் சிற்பங்கள் காணப்படுகின்றன.
- லிங்கராஜர் கோயில், பரசுராமர் கோயில், கோனராக் சூரியனார் கோயில் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள் இந்து சமயச் சார்புடையன.
- தக்கிணம், தமிழகம் போன்ற இடங்களிலும் இந்து சமயச் சார்புடைய சிற்பங்களைக் காணமுடிகிறது.
- தக்கிணப் பிரதேசத்தில் வாதாபிச் சாளுக்கியர்கள், கல்யாணிச் சாளுக்கியர், ஹொய்சலர் முதலான மன்னர்கள் அமைத்த ஆலயங்களில் இந்து சமய சிற்பங்கள் பல காணப்படுகின்றன.
- வாதாபிச் சாளுக்கியர்களின் குகைக் கோயில்களில் விஷ்ணுவின் அனந்தசயன வடிவம், வராக அவதார வடிவம் போன்ற சிற்பங்களைக் காணலாம்.
- ஐகோளே துர்க்கையம்மன் ஆலயத்தின் அடித்தளத்தில் மகிடாசுரமர்த்தனியின் வடிவம் சிற்பமாக உண்டு.
- கல்யாணிச் சாளுக்கியர்களின் சிற்பங்களை குக்கனூர் கல்லேஸ்வரம், சௌத்தம்பூர், முக்தேஸ்வரம் போன்ற இடங்களில் காணலாம்.
- கொய்சல மன்னர் காலச் சிற்பங்களை அவர்கள் அமைத்த கோயில்களில் காணலாம்.
- கொய்சல ஈஸ்வரத்தின் தூண்களில் நர்த்தன விநாயகர், நடன சரஸ்வதி, நரசிம்மர் என்போரின் வடிவங்கள் காணப்படுகின்றன.

## தமிழகத்தில் சிற்பக்கலை வளர்ச்சி

- தமிழகத்தில் கி.பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்தே சிற்பக்கலை தொடர்பான புதைபொருட் சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன.
- பல்லவர், சோழர், விஜயநகர நாயக்கர் முதலான மன்னர்களின் ஆட்சிக் காலங் களில் சிற்ப சாத்திர விதிகளுக்கமைவான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பல்லவர் காலச் சிற்பங்களை கட்டடக் கலையின் அடிப்படையில் குடைதளிச் சிற்பங்கள், செதுக்குத்தளிச் சிற்பங்கள், கட்டுத்தளிச் சிற்பங்கள் என வகைப்படுத்துவர்.
- விஜயநகர நாயக்க மன்னர்களால் செதுக்கப்பட்ட சிற்பங்களுள் இறை வடிவங்கள் முக்கியமான இடத்தைப் பெறுவன.

- அவ்வாறான வடிவங்களுள்:
    - லெபாஷி வீரபத்திரர் கோயிலில் உள்ள வீரபத்திரர் வடிவம், கல்யாண சுந்தரேஸ்வரர் வடிவம், நாகலிங்கம் போன்றவற்றையும்
    - மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் உள்ள லிங்கோற்பவர் வடிவம், அர்த்த நாரீஸ்வரர் வடிவம், கங்காதரர் வடிவம் போன்றவற்றையும்
    - தேவிகாபுரத்தில் உள்ள லிங்கோற்பவர், கால சங்காரர் போன்றவற்றையும்

  இங்கு குறிப்பிடலாம்.
- இதிகாச புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் பல இக்காலக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ளன.
    - மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் இராவணன் கயிலை மலையைத் தூக்கும் காட்சியும்
    - திருவண்ணாமலை ஆலயக் கோபுரத்தில் மகிடாசுரமர்த்தனி மகிடாசுரனை வதம் செய்யும் காட்சியும் கிருஷ்ணாபுரத்தில் கர்ணன் - அருச்சுனன் போர் செய்யும் காட்சியும்

  சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.
- தமிழ் மொழிப் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்களும் கோயில்களில் காணப்படுகின்றன.
- கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற புராணக்கதை களுடன் தொடர்புடைய வடிவங்களை இந்த வகையில் குறிப்பிடலாம்.
- லெபாஷி வீரபத்திரர் கோயிலில் பெரியபுராணம் கூறும் சிறுத்தொண்டர் நாயனார் தனது மகனை உணவாகச் சமைத்து, சிவனடியாருக்குப் பரிமாறிய கதை தொடர் சிற்பமாக இடம்பெறுகிறது.

### 5.1.1.5 விக்கிரகக் கலை

- இந்து நுண்கலைகளுள் சிற்பக் கலையுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக விக்கிரகக் கலை உள்ளது.
- திருவுருவங்களை ஆலயத்தின் தூண்கள், சுவர்கள், அதிட்டானங்கள் போன்ற இடங்களில் செதுக்குமிடத்து அவை சிற்பங்களாக அமைகின்றன.
- சிற்பங்களாக அமையும் வடிவங்களது எல்லா அங்கங்களும் வெளித் தெரியும்படியாக அமைக்கும்போது அது **விக்கிரகம்** எனப்படும்.
- ஆரம்ப காலத்தில் விக்கிரகங்கள் அமைப்பதற்குரிய மூலப்பொருளாக கருங்கற்களே பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில் உலோகங்களதும் வேறு பொருட்களதும் பயன்பாடு விக்கிரகங்களின் உருவாக்கத்தில் பிரதான இடம்பெற்றன.
- விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள்கள் பற்றி **மானசாரம்** என்னும் சிற்ப சாத்திரம் "பொன், வெள்ளி, செம்பு, கல், மரம், சுதை, சர்க்கரை, பளிங்கு, ஓடு முதலியவற்றால் உருவங்கள் அமைக்கப்பட வேண்டும்" என்று கூறுகின்றது.
- விக்கிரகங்களுள் அசையும் தன்மை கொண்ட விக்கிரகங்களை அமைப்பதற்கு பொன், வெள்ளி, செம்பு, சுதை, சர்க்கரை, ஓடு முதலானவற்றையும், நிலையாக நிறுவப்படும் அசல விக்கிரகங்களுக்கு கல், மரம் என்பனவற்றையும் பயன்படுத்த வேண்டும் எனவும் சிற்ப சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன.

- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு அமைய அமைக்கப்படும் விக்கிரகங்கள், அவை நிறுவப்படும் நோக்கத்தைக் கொண்டு மூன்றாக வகைப்படுத்துவர்.
    - சல விக்கிரகம் - இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய விக்கிரகங்கள்
    - அசல விக்கிரகம் - நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்
    - சலாசல விக்கிரகம் - நகர்த்தக்கூடியதாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது என்னும் நோக்கத்தில் நிறுவப்படும் வடிவங்கள்.
- ஆகமங்கள், சிற்ப சாத்திரங்கள் கூறும் விதிகளைப் பிரமாணமாகக் கொண்டு திருவடிவங்கள் விக்கிரகங்களாக அமைக்கப்படுகின்றன.
- உலோகங்களில் வார்க்கப்பட்ட பல படிமங்களைப் பல்லவர், சோழர், விஜய நகர நாயக்கர் காலங்களில் சிறப்பாகக் காணலாம்.
- சிறப்பாக இந்துத் தெய்வ வடிவங்களுள் சிவனின் பல மூர்த்தி பேதங்கள் சோழர் காலத்தில் (தமிழகத்தில்) வெண்கலப் படிமங்களாக வார்க்கப்பட்டன.

  உதாரணமாக நடராஜர், தட்சணாமூர்த்தி, திரிபுராந்தகர், இலிங்கோற்பவர் போன்ற மூர்த்தங்களைக் குறிப்பிடலாம்.

### 5.1.1.5.1 நடராஜ மூர்த்தம்

- சிவமூர்த்தங்கள் 64 ஆகும்.
- இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- இதில் நடராஜ வடிவமும் ஒன்று.
- நடராசர் வடிவத்தின் தோற்றம் சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களின்படி அமைக்கப்படுகிறது.
- அங்க இலட்சணங்களும் அவை உணர்த்தும் உண்மைகளும்

| | | |
|---|---|---|
| முயலகன் | - | ஆன்மா |
| பாம்பு | - | ஆணவம் |
| புலித்தோல் | - | கோபத்தைக் கட்டுப்படுத்துபவன் |
| முக்கண் | - | இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி |
| சிலம்பு | - | பல வினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதைக் குறிக்கின்றது |
| திருவாசி | - | ஓங்காரத்தைக் குறிக்கின்றது |
| பவளநிற (சிவந்த) திருமேனி | - | தூய்மைப்படுத்தும் தன்மையைக் காட்டும் |
| நான்கு திருக்கரம் | - | திசைகளைக் குறிக்கும் |
| திசைகள் | - | எல்லையில்லா ஆற்றலைக் குறிக்கும் |
| நெற்றிக்கண் | - | உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் புன்முறுவலால் நீக்குகிறார் என்பதை குறிக்கும் |
| சடாமுடி | - | ஞானத்தைக் குறிக்கும் |
| பிறை | - | பேரழகைக் குறிக்கும் |
| திருநீறு | - | பராசக்தியைக் குறிக்கும் |
| சூலம் | - | முச்சக்தியைக் குறிக்கும் |
| கோடரி | - | பேராற்றலைக் குறிக்கும் |
| மான் | - | வேதநாயகனைக் குறிக்கும் |

- **இவ்வடிவம் விளக்கும் தத்துவங்கள்**

- **பஞ்சகிருத்திய விளக்கம்**

(சிருஷ்டி) படைத்தல் - உடுக்கை ஏந்திய கை
(ஸ்திதி) காத்தல் - அபயகரம்
(சங்காரம்) அழித்தல் - தீ ஏந்திய கரம்
(திரோபவம்) மறைத்தல் - ஊன்றிய திருவடி
(அநுக்கிரகம்) அருளல் - தூக்கிய திருவடி

- ''தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''
- உண்மை விளக்கம்

- நடராஜ வடிவம் தூல, சூக்கும பஞ்சாட்சரங்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கப் படுகிறது.

- திருவைந்தெழுத்தின் தொடர்பு
ந - திருவடி
ம - திருவயிறு
சி - திருத்தோள்
வா - திருமுகம்
ய - திருமுடி

- சைவசித்தாந்தம், திருமந்திரம், புராணம் முதலானவை நடராசரைப் போற்றும் பண்பு கொண்டவை.
- தோத்திரப் பாடல்களில் நடராஜர் வருணனை
''குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயிற் குமிண்சிரிப்பும்''
என்னும் அப்பரின் தேவாரப்பாடல்.
- வழிபாடுகள்
  - திருவாதிரை
  - திருவெம்பாவை
  - சிதம்பரத்தில் சிறப்பான வழிபாடுகள்
- நடராஜர் விக்கிரகம் சமய, கலாதத்துவ, தத்துவம் தொடர்பானதென ஆய்வாளர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
- ஆனந்தகுமாரசுவாமியின் ஆய்வுநூல் சிறப்பானது.
- சைவ சித்தாந்தத்தின் அனைத்துக் கோட்பாடுகளையும் நடராஜ மூர்த்தம் பிரதி பலிக்கிறது.
- சிவன்கோயில்கள் எல்லாவற்றிலும் நடராஜர் வடிவம் நிறுவப்படும்.
- சிற்ப, விக்கிரகக் கலைகளுடன் நடராஜ வடிவம் தொடர்புபட்டது.
- ஆடல்வல்லனாகச் சிறப்புப் பெறுவது.
- இலங்கையில் பொலநறுவையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடராஜர் வடிவம் சிறப்பானது.
- சிதம்பரத்தில் தில்லைக்கூத்தன் எனப்போற்றப்படுதல்.

### 5.1.1.5.3 தட்சணாமூர்த்தி மூர்த்தம்

- சிவமூர்த்தங்கள் 64 ஆகும்.
- இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- இதில் தட்சணாமூர்த்தி வடிவமும் ஒன்று.
- இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவமே தட்சணாமூர்த்தி வடிவமாகும்.
- தட்சணாமூர்த்தி வடிவ வகை - 04
  1. யோக தட்சணாமூர்த்தி
  2. ஞான தட்சணாமூர்த்தி
  3. வியாக்கியான தட்சணாமூர்த்தி
  4. வீணாதர தட்சணாமூர்த்தி
- இவற்றில் வியாக்கியான தட்சணாமூர்த்தியே சிவாலயங்களில் கூடுதலாக நிறுவப் பட்டுள்ளது.

**பிரதிமாலட்சணங்கள்**

- புலித்தோல் மூடப்பட்ட இருக்கையின் மீது அமர்ந்த பாவனையில் தோற்றம் பெறும்.
- பத்மாசனம். வலதுகால் கீழே தொங்க இடதுகால் மடிந்து தொடையின்மீது பொருந்தும்.
- முக்கண், நான்கு தோள்கள், வலக்கரம் சின்முத்திரையைக் கொண்டு விளங்கும்.
- இடதுகரம் வரதம் அல்லது தண்டம் மற்றொரு வலக்கரம் உருத்திராக்கமாலை.
- இன்னோர் இடக்கரம் பாம்பு
- சடாபாரம், சடாபந்தம், சடாமண்டலம், சடாமகுடம் என்பனவற்றுள் யாதாயினும் ஒன்றை இம் மூர்த்தம் கொண்டிருக்கும். இதில் கங்கையும் மதியும் கபாலமும் கொன்றையும் காணப்படும்.
- திருமுகம் சாய்ந்த நிலையிலும் திருநயனம் தியான பாவனையில் மூக்குநுனியை நோக்கிய நிலையிலும் திருமேனி பளிங்கு போன்ற வெண்ணிறத்திலும் விளங்கும்.

**தத்துவக் கருத்துக்கள்**

- சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் போன்ற நான்கு முனிவர்களின் சந்தேகம் நீக்க சின் முத்திரையை இறைவன் காட்டினார்.
- வலக்கையை சின் முத்திரையாகப் பிடித்து மார்பிலே சேர்த்து ஒருகணம் யோக சமாதியில் அமர்ந்தார்.
- பெருவிரல் - இறைவன்
- சுட்டுவிரல் - ஆன்மா
- ஏனைய மூன்று விரல்களும் - ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைக் குறிக்கும்.
- சுட்டுவிரலையும் பெருவிரலையும் ஒன்று சேர்த்து ஏனைய மூன்று விரல்களையும் தனித்து நிறுத்தி சின் முத்திரை காட்டினார்.
- சின் முத்திரை மூலம் சிவன் முப்பொருட்களின் (பதி, பசு, பாசம்) இயல்புகளையும் பசுவானது பாசத்தில் இருந்து நீங்கி பதியை அடைதலையும், முத்தியின் இயல்புகளை யும் உணர்த்தி முனிவர்களுக்கு அருள்புரிந்தார்.
- இறைவன் மலங்களுக்கு அப்பாற்பட்டவனாக இருக்கின்றான் என்ற தத்துவத்தை இந்து மக்கள் வாழ்வில் இது உணர்த்தி நிற்கின்றது.
- சந்தான குரவர் மரபின் மூல வடிவம்.
  ‘‘கல்லால் நிழன்மலை வில்லார் அருளிய’’ - மெய்கண்டதேவர்

- தட்சணா மூர்த்தம் உணர்த்தும் சமயக் கருத்துக்கள்
  - சச்சிதானந்த நிலை - இறைவனது ஞானவடிவம்
  - யோகம், கூத்து, இசை முதலிய கலைகளைப் பயில்வோர் தட்சணாமூர்த்தியை வணங்குவர்.

- தட்சணா மூர்த்தம் சிவாலயங்களில் பெறும் இடம்
  - தட்சணாமூர்த்தி என்றும், தென்முகக் கடவுள் என்றும் திருப்பெயர்களால் போற்றி வணங்கப்படுகிறார்.
  - ஆலயத்தின் கருவறையின் தெற்குப் பக்கத்து வெளிச்சுவரில் அமைந்த மாடத்தில் தெற்கு முகமாக விளங்கும்படி இம்மூர்த்தியை நிறுவுதல் மரபாகும்.
  - திருஞானசம்பந்தர் "பண்டுநால் வருக்கற முரைத்தருளி..." என்று தொடங்கும் திருக்கேதீச்சரப் பதிகத்தில் தட்சணாமூர்த்தம் பற்றி குறிப் பிட்டுள்ளார்.

### 5.1.1.5.3 திரிபுராந்தகர் மூர்த்தம்

- சிவபெருமான் எடுத்த பல வடிவங்களில் திரிபுராந்தகமூர்த்தி வடிவம் குறிப்பிடத்தக்கது.

- **புராண வரலாறு**

  தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுர சகோதரர்கள் பெரும் தவம் புரிந்து பறந்து திரிந்து உலவும் தன்மையுடைய பொன், வெள்ளி, இரும்பு ஆகிய உலோகத்தால் அமைந்த மூன்று பெரும் கோட்டைகளைப் பெற்றனர். அவற்றைக் கொண்டு அம் மூவரும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெரும் கொடுமைகள் புரிந்து வந்தனர். அவர்களின் செருக்கை அடக்கி அவர்களை அழிக்க சிவன் திருவுளம் கொண்டார். தேவர்கள் எல்லோரும் படைகளாகவும் சூரிய, சந்திரர்கள் சக்கரமாகவும், உலகம் தேராகவும் அமைய அத்தேரின் மீது ஏறி திரிபுர அசுரர்கள் மீது போர் செய்தார். அப்போது தேவர்கள் எல்லோரும் இவர் நம்முடைய துணையைக் கொண்டன்றோ போர் புரியச் செல்கின்றனர் என எண்ணிச் செருக்குற்றனர். அதை அறிந்த சிவன் தேவர்களின் அறியாமையை நினைத்து சிறிது புன்முறுவல் தோன்றச் சிரித்தார். அச்சிரிப்பினாலேயே திரிபுரங்களும் அழியச் செய்தருளிய நிலையே திருபுராந்தக மூர்த்தம் எனப்படும்.

- சிவன் திரிபுரம் எரித்த வீரச் செயல் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.
  **உ-ம்:** பரிபாடலில் இறைவன் முப்புரம் எரித்த விரிசடைக் கடவுள் எனவும் புறநானூற்றில் திரிபுரம் எரித்தவரும் நஞ்சுண்டவரும் சந்திரனைச் சூடியவருமான சிவன் எனவும் கூறப்பட்டுள்ளது. கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் திரிபுரமெரித்த வரலாறு உள்ளது.

- தேவாரப் திருப்பதிகங்கள் திரிபுரம் எரித்த செயல், அதற்கான காரணம், வில், நாண், தேர், தேவர்களுக்கும் அடியவர்களுக்கும் அருளியது பற்றிக் கூறுகின்றது.

- திரிபுராந்தகர் மூர்த்தம் பற்றி பல்லவ பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் (கி.பி.7 - 9) கூறுகின்றன. மன்னர்கள் போரில் வெற்றி பெறுவ தற்கும், வெற்றி பெற ஊக்கமளித்ததற்கும் காரணமாக இருந்தது.
  **உ- ம்:** அசுமத்தாமன் திரபுராந்தகரின் வடிவமாகக் கருதப்படுகின்றான்.

- இராசிம்மன் பரமேசுவரன் எனப் பட்டம் பெற்றான். இரண்டாம் பராந்தகன் "ஆற்றலில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானுக்குச் சமமானவன்" என்று சாசனச் செய்தி குறிப்பிடுகின்றது.

- சோழர் காலத்தில் செப்புத் திருமேனிகளாயும், சிற்பவடிவிலும் திரிபுராந்தக மூர்த்தம், பெருவழக்குப் பெற்றுத் திகழ்ந்தது.

- **சிற்பங்கள்**
    - மாமல்லபுர சிற்பம் வடக்குச்சுவர், கொடித்தூண்
    - காஞ்சிபுர கைலாசநாத கோயில் சிற்பம், வடக்குச்சுவர், சிவன் தேரில் ஏறிச் செல்லும் காட்சி
    - பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டு
    - சோழர்காலத்தில் தேவகோட்டங்கள்
    - கொடும்பாளூர் விமானத்தில் திரிபுர தகனக் காட்சி
    - தஞ்சைக்கோயில் கருவறையின் மேல் நிலையில் திரிபுராந்தகர் புராண வரலாற்றுத் தொடர் சிற்பம் உள்ளது.
    - பிற்காலச் சோழர்களின் பணிக்கு எடுத்துக்காட்டாக சிதம்பரக் கோயில் கலைக் கோபுரங்களில் திரிபுராந்தகர் தேவியுடன் வில்லேந்தி நிற்கும் கோலம்.
    - நாயக்கர் காலத்தில் தூண்களில் திரபுராந்தகர் சிற்பத்தை காணலாம்.

- **செப்புத் திருமேனிகள்**
    - சோழர்கால கல்வெட்டுக்களில் திரிபுரவிசபர், திரிபுவனசுந்தரர் எனக் குறிக்கப் படுகிறது.
    - திருநல்லம் கோணேரிராசபுரம் கோயிலுக்கு செம்பியன் மாதேவி திரிபுராந்தகரை யும் தேவியையும் செப்புத்திருமேனியாக வழிபாட்டிற்காகத் தானமளித்திருக் கிறார்.
    - முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் திரிபுராந்தகர் திருமேனி காணப் படுகிறது.
    - இத்திருமேனியின் பீடத்தில் இதனுடைய வழிபாட்டிற்காகச் சோழப் பேரனாயன் என்பவனால் நிலம் தானம் செய்த செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.
    - பின்னைய மன்னர்களின் வெற்றிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் திருபுராந் தகரின் வரலாறு அமைந்திருந்ததால் கலை மற்றும் வரலாற்றில் திரிபுராந்தகரின் திருவுருவம் சிறப்பிடம் பெறுகின்றது.

### 5.1.1.5.5 இலிங்கோற்பவர் மூர்த்தம்

- **சொற் பொருள் விளக்கம்**

**இலிங்கோற்பவம்** என்ற சொல் இலிங்கத்தினுள் இடம்பெறும் தோற்றம் அல்லது செயற்பாடு என்ற பொருளைக் கொண்டது.

- **ஆலயத்தில் அமைவிடம்**

சிவாலயங்களில் கருவறையின் மேற்குத் திசைச் சுவரின் புறத்தே உள்ள கோஷ்ட பஞ்சரத்தில் மேற்கு நோக்கியவாறு இந்த மூர்த்தம் அமைக்கப்பட்டிருக்கும். இதனை உத்தர காரணாகமம் குறிப்பிடும்.

- **கதைத் தொடர்பு**

- விஷ்ணுவும் பிரமாவும் சோதிப்பிழம்பின் அடி - முடி தேடிய புராணக் கதையுடன் தொடர்புபட்டது இலிங்கோற்பவ மூர்த்தம்.
- அடியும் முடியும் காண ஆற்றல் அற்றவர்களாக விஷ்ணுவும் பிரமாவும் திரும்பி வந்தனர்; சோதிப்பிழம்பை வணங்கி நின்றனர். அவர்களது கர்வத்தை அடக்கி சிவன் ஒளிவடிவு நீங்கி, அவர்களுக்குப் புலனாகித் திருவருள் பாலித்தார். புராணங்களில் விளக்கிக் கூறப்பட்ட இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது இலிங்கோற்பவ மூர்த்தம்.

- **இலிங்கோற்பவ மூர்த்த அமைப்பு**
    - நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படும்.
    - மேலே ஒருபங்கும் கீழே ஒருபங்கும் நீக்கி நடுவில் இரு பங்குகளாக அமைந் திருக்கும்.
    - மேற்பக்கமும், கீழ்ப்பக்கமும் பிறைபோன்று வளைந்திருத்தல் வேண்டும்.
    - நான்கு கரங்கள் உண்டு.
    - நெற்றியிலிருந்து முழந்தாள் வரையும் உள்ள பகுதி மட்டுமே வெளியில் தெரியுமாறு அமைத்தல் வேண்டும்.
    - இம்மூர்த்தத்தின் முன்னர் விளங்கும் இரு கரங்களும் அபய கரமாகவும் வரத கரமாகவும் அமைகின்றன.
    - குண்டலம், ஆரம், கேயூரம், முத்துமாலை என்னும் அணிகலன்கள் திருவுரு வத்தை அலங்கரிக்கின்றன.
    - வலது பக்கத்தில் மேலே பறக்கும் நிலையில் அன்னமும், இடது பக்கத்தில் கீழே பன்றியும் சித்தரிக்கப்படும்.

- **இலிங்கோற்பவ மூர்த்தம் உணர்த்தும் தத்துவம்**
    - சிவனே முழுமுதற் கடவுள்
    - அகந்தை கொண்டவர்களால் இறைவனை அடைய முடியாது.

      ''செங்கணானும் பிரமனும்'' என்ற நாவுக்கரசரது பாடல் இத்தத்துவத்தை உணர்த்துகிறது.

### 5.1.1.6 ஓவியக்கலை

- இந்துக்களின் சமய, சமூக வரலாற்று நிகழ்வுகளை வெளிப்படுத்துவதில் ஓவியக்கலை பிரதான இடத்தைப் பெறுகின்றது.
- ''கலை அழியாது'' என்பதனை எடுத்துக்காட்டுவது ஓவியக்கலையாகும்.
- ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் தனித்துவமானது ஓவியக்கலை. இக்கலை மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி இறைவனை அடைய வழிவகுப்பது.
- பண்டைக்காலம் முதலாக ஓவியக்கலை இந்தியாவிலே சிறப்புப் பெற்றிருந்தது. ஓவியங்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய விடயங்களையும் இயற்கைக் காட்சி களின் அம்சங்களையும் சமயச் சார்புடைய விடயங்களையும் கொண்டனவாக அமைந்துள்ளன. இவையே பண்பாட்டுக் கோலங்களைப் பிரதிபலிக்கும் சாதனங் களாகும்.
- ஆரம்ப காலத்தில் ஓவியங்கள் மட்பாண்டம், மரம் என்பவற்றில் தீட்டப்பட்டன. பின்னர் குகைகளிலும் கோயிற் சுவர்களிலும் தீட்டப்பட்டன.

- **ஓவியக்கலைப் பீடங்கள்**
  - வட இந்திய ஓவியங்கள் - அஜந்தா, வாதாபி, எல்லோரா, ராஜபுத்திர
  - தென் இந்திய ஓவியங்கள்

| | | |
|---|---|---|
| பல்லவ பாண்டியர் காலம் | - | சித்தன்னவாசல் |
| சோழர் காலம் | - | தஞ்சாவூர் |
| நாயக்கர் காலம் | - | மதுரை |

- **வட இந்திய ஓவியங்கள்**
  - அஜந்தா
    - குகை ஓவியம்
    - 64' சதுரமான மண்டபத்தில் இத்தகைய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. உள்விதானம், சுவர், தூண்
    - வைதிக மதத்திற்கும் அவைதிக மதத்திற்கும் ஏற்பட்ட தொடர்பை வெளிக்காட்டும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. பௌத்த சார்புடைய ஓவியங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. இந்து ஓவியங்களும் உள்ளன.
    - 1 ஆம், 2 ஆம், 9 ஆம், 10 ஆம், 19 ஆம், 26 ஆம், 29 ஆம் குகை களில் கூடுதலான ஓவியங்கள் உள்ளன.
    - 16 ஆம், 26 ஆம் குகைகளில் துலக்கமான ஓவியங்கள் உள்ளன.
      - புத்தரின் ஜாதகக் கதை
      - சாதாரண மக்களின் உருவம்
      - இயற்கை வர்ணனைகள்
      - இந்து தெய்வங்களின் உருவங்கள்
    - புத்தரின் கையில் இருக்கும் தாமரைப்பூவும் அவருடைய முகபாவனையும் ஓவியனது கலைத்திறனைக் காட்டுகிறது.

- தாமரை இதழ் ஒன்றன்பின் ஒன்றாக இளவரசனின் உருவம், மணிமுடி தரித்த நிலையில் புத்தரின் உடம்பில் பொருத்தப்பட்டிருக்கும் ஆடையின் மடிப்புக்கள் என்பன நன்கு வடிக்கப்பட்டுள்ளன.
- நடனமாடும் பெண்கள், உழவர்கள், கூலித்தொழிலாளர்கள், அவர்களது தொழிலுக்கேற்றவாறு முகபாவனைகள் வேறுபடுத்திச் சித்தரிக்கப்பட் டுள்ளன.
- இந்து தெய்வங்களிலே துவாரபாலகர் வடிவம், சிவனது திரிமூர்த்தி வடிவம், தேவகன்னியர் ஓவியம் என்பன சிறப்பு வாய்ந்தவை.

- **வாதாபி (சாளுக்கியர்)**
  - காலம் கி.பி. 6 - கி.பி. 7 ஆம் நூற்றாண்டு (600 - 800)
  - வாதாபி ஓவியங்களில் இந்துக்கடவுள் உருவங்களை விட இயற்கைக் காட்சிகளே கூடுதலாக உள்ளன.
  - மிருகங்கள், போர் வீரர்கள், சாதாரண மக்கள் ஆகியோரது வடிவங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
  - பௌத்த, சமணர்களைப் போல இந்துக்களும் குன்றுகளைக் குடைந்து கோயில் களை அமைத்து அழகிய ஓவியங்கள் தீட்டினர்.
  - ஒருவர் குழலூத இரு பெண்கள் நடனமாடும் காட்சியும் அரசனாகிய மங்களசனின் ஓவியமும் உள்ளன.

- **எல்லோரா ஓவியம்**
  - இராஷ்டிரகூட ஓவியங்களை எல்லோரா ஓவியத்தில் காணலாம்.
  - பௌத்தம் சார்பான ஓவியங்கள் சிதைந்துவிட்டன.
  - இந்துமதக் கோயில்களான கைலாசநாதர் கோயில், தசாவதாரக் குகை, கணேசர் குகை ஓவியங்கள் காணப்படுகின்றன.
  - கைலாசநாதர் கோயிலில் ரங்க மகாலில் சில ஓவியங்கள் உள்ளன.
    **உ- ம்:** போர்க்காட்சிகள், யானைப்படை, குதிரைப்படை
  - சிவனது வீரச் செயல்களைச் குறிக்கும் ஓவியம், சிவன் பரிவார தெய்வக்காட்சி.

- **இராஜபுத்திர ஓவியம்**
  - காலம் 18 ஆம் நூற்றாண்டு
  - திருவனந்தபுரம், ஸ்ரீபத்மநாப சுவாமி கோயில் கருவறையைச் சுற்றி ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. **உ- ம்:** இராமாயணம், மகாபாரதம், பாகவதம்
  - வைணவம் சமயம் சார்ந்த கதைகள். **உ-ம்:** இராதாகிருஷ்ண பிருந்தாவனலீலை
  - தேவிமகாத்மியம். **உ- ம்:** நளன் -தமயந்தி, மார்க்கண்டேயபுராணம்
  - இராகஇராசினி நாயக - நாயகி பாவனையில் அமைந்த ஓவியங்கள்

**தென்னிந்திய ஓவியங்கள்**

- **சிந்தன்ன வாசல் ஓவியங்கள்**
  - தமிழ்நாட்டு ஓவியங்களிலே வரலாற்று புகழ் பெற்று விளங்குவது சித்தன்ன வாசல் ஓவியங்களாகும்.
  - இத்தலம் புதுக்கோட்டை நகரத்துக்கு வடமேற்கில் பத்து மைல் தூரத்தில் அமைந்துள்ளது.
  - திருநாவுக்கரசு நாயனார் இவ் ஓவியத்தை தமது தேவாரப் பாடலிலே வெளிப் படுத்தியுள்ளார்.
  - இளமைக்கோலத்துடன் அரசனும் அரசியும் காணப்படும் காட்சி - இவ்வுருவங்கள் மகேந்திரவர்மனையும் அவன் பட்டத்து ராணியையும் குறிப்பதாகக் கருதுவர்.
  - நடனப்பெண்ணின் அபிநயம், மிருகங்கள், மீன்கள், ஓவியங்களும் உண்டு.

- **தஞ்சாவூர் ஓவியம்**
  - சோழர்கள் ஓவியக்கலைக்குத் தனித்துவம் கொடுத்தார்கள் என்பது தஞ்சைக் கோயில் மூலமாகக் காணலாம்.
  - ராஜராஜசோழன் அமைத்த தஞ்சைக்கோயிலின் கருவறை உள்ளிட்ட உட்பிர காரமானது ஓவியக் கூடமாக வர்ணிக்கப்படுகின்றது.
  - சிவன் திரிபுரம் எரித்த கதை
  - நடனமாடும் பெண்ணின் லாவண்ணியம்
  - தட்சணாமூர்த்தி, நடராசர் மூர்த்தங்கள்
  - சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட கதை என்பன ஓவியங்களாக உள்ளன.

- **விஜய நகர நாயக்கர் கால ஓவியங்கள்**
  - வீரபத்திர ஓவியம் - லேபாஷ
  - திருவாவரூர், மதுரை, சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய கோயில்களில் நாயக்கர் கால ஓவியங்கள் உண்டு.
  - சைவக் கோயில்களில் திரிபுராந்தகர் ஓவியங்கள் காணப்படுகின்றன.
  - வைணவக் கோயில்களில் இராமர் பட்டாபிஷேகம், இராமாயணக் கதைகள் என்பன இடம் பெறுகின்றன.
  - திருவாரூரில் அதன் தல புராணக்கதை ஓவியமாக மண்டப விதானத்தில் தீட்டப்பட்டுள்ளது.
  - மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஓவியக் கலைக்கூடம் (சித்திரமண்டபம்) அமைக்கப்பட்டுள்ளது.
  - நவீன கால ஓவியங்கள்

- **ஓவிய நூல்கள்**

சிற்ப சாத்திரம், விஷ்ணு தர்மோத்திரம்

### 5.1.1.7 நடனக் கலை

**நடனக்கலை - அறிமுகம்**

- ஆரம்பத்தில் அரண்மனை, சமஸ்தானங்களில் அரங்கேற்று கலையாக இருந்தது.
- பரதரின் நாட்டிய சாத்திரம் நடனக்கலைக்கு இலக்கணம் கூறுகிறது. நடனக்கலை இரச பாவங்களுடன் தொடர்பானது.
- கிரியைகளில் அபிநயங்களும் பாவனைகளும் முக்கியத்துவமுடையன.
- சிலப்பதிகாரத்தில் சமயம் சார்பான ஆடல்கள் காணப்படுகின்றன.

**சங்க இலக்கியங்களில் நடனக்கலை**

- எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் நடனங்களைப் பற்றியும் நடனங்களைப் பயின்றோர் பற்றியும் குறிப்புக்கள் உள்ளன.
- அரசவைகளிலும் நகர்ப்புறங்களிலுள்ள பொது அரங்குகளிலும் நடனமாடும் வழக்கம் காணப்பட்டது.
- சடங்கு, கடவுள் வழிபாடு, களியாட்டம் முதலானவற்றில் நடனம் இடம்பெறலாயின.
- நடனத்தை கூத்து, ஆடல் என பலவாறு குறிப்பிட்டனர்.
- நடனமாடுவோரை கூத்தர், கோடியர், வைடியர், கண்ணுளர், விறலியர் என குறிப் பிட்டனர்.
- மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூலாக அமைந்துள்ளது.
- நடனமாடுவோரின் வசீகரத்தோற்றம், ஆடை அலங்காரங்கள், அபிநயச்சிறப்பு முதலானவை பற்றி சங்க நூல்களான அகநானூறு, பரிபாடல், புறநானூறு என்பன குறிப்பிடுகின்றன.
- வள்ளிக்கூத்து, களநிலைக்கூத்து பற்றி தொல்காப்பியம் கூறுகின்றது.

  முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, வெறியாடல், துணங்கை போன்றவை சங்ககால நடனக்கலை மரபில் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியன.

**பல்லவர் காலத்தில் நடனக்கலை**

- சாஸ்திரிய நடனங்கள் தென்நாட்டில் வழக்கில் இருந்தன.
- காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவனின் லலாட திலகம், லதா விருக்ஷிகம் முதலிய நடன வடிவங்கள் உள்ளன.
- ரதக் கோயில்களில் நடன சிற்பங்கள், நடராஜர் உருவம், சித்தன்னவாசலில் நாட்டிய ஓவியங்கள்.
- கலிங்கதேசக் கோயில்களில் ''நடனமந்திர்'' நாட்டிய மண்டபமாக அமைந்து, அங்கு மகரி என்னும் நாட்டியப் பெண்கள் கோயில் உற்சவ விழாவில் ஆடினர்.

### சோழர் காலத்தில் நடனக்கலை

- கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் கோயில் வழிபாட்டில் நாட்டியம் ஒரு உபசாரமாக அமைந்தது. சோழர்கால நடனப் பெண்கள் தேவரடியார், தளிர்ச்சேரிப் பெண்கள், ரிஷபத்தளியிலார், ஸ்ரீவைணவ மாணிக்கத்தார், உருத்திர கணிகையர் என அழைக்கப் பட்டனர்.
- தஞ்சைக்கோயிலில் மட்டும் 400 பெண்கள் நாட்டிய உபசாரத்திற்கெனத் தேவர - டியாராக நியமிக்கப்பட்டிருந்தனர்.
- ‘‘தலைக்கோலி விருது’’, ‘‘நிருத்தப்பேரரையன் பட்டம்’’ போன்றவை நாட்டியக்கலைக் கிருந்த அரச ஆதரவினைப் புலப்படுத்துகிறது. கூத்தக்காணி, நட்டுவக்காணி.
- ஆரியகூத்து, சாந்திக்கூத்து, சாக்கைக் கூத்து முதலியன ஆடப்பட்டன. நாயன்மார் வரலாறுகளும் ஆடிக்காட்டப்பட்டன.
- தஞ்சைக்கோயிலில் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்ட 108 நாட்டிய கரணங் களைச் சிற்ப வடிவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி. ஆனால் 81 கரணங்கள் மட்டும் பூர்த்தியடைந்துள்ளன.
- சீனப் பிரதானியான கௌஜீகுவா என்பவர் 3000 நடனமாதர் சோழரின் அரண்மனை யிலே நாள்தோறும் மாறிமாறிப் பணிபுரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

### விஜய நகர நாயக்கர் காலத்தில் நடனக்கலை

- விஜயநகரக் கோயில்களில் நடனமாட உருத்திர கணிகையர் நியமிக்கப்பட்டனர்.
- நடன மண்டபங்கள் அமைக்கப்பட்டன.
- தஞ்சைநாயக்கர் காலத்திலும் பரதநாட்டியம் செல்வாக்குப் பெற்றது.

### 5.1.1.8 இசைக் கலை

### அறிமுகம்

- திருக்கோயில்கள் வளர்ந்த நுண்கலைகளில் இசைக்கலை முக்கியமானதாகும். இசை இயைபுபடுத்தும் சாதனமாகும்.
- இறைவனே இசை வடிவினன் (நாதப் பிரம்மம்) என்பது இந்துமத நம்பிக்கை
- இசையானது செவிக்கு இன்பம் ஊட்டுவதோடு மட்டுமல்லாது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றையும் தரவல்லது.
- இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலையானது மிக உன்னத கலையாக மிளிர்கின்றது.

**இசைக்கலையின் தோற்றம் - வட இந்தியா**

- **வேதங்கள்**
  - நான்கு வேதங்களுள் ஒன்றாக காணப்படும் சாமவேதம் இசைப்பாடல்களால் அமைந்தவை.
  - பிற்பட்ட காலத்தில் இசைக்கலை வளர்வதற்கு வித்திட்ட பெருமை சாம வேதத்தையே சாரும்.

- **புராண, இதிகாசம்**
  - புராணக் கதைகளில் இறைவனே இசைவடிவினன் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.
  - கடவுளர் திருவுருவங்கள் இசைக்கருவிகளோடு சித்தரிக்கப்படுகின்றன.

    **உ-ம்:** சிவன் - உடுக்கு
    நாரதர் - தம்புரா
    சரஸ்வதி - வீணை
    கண்ணன் - புல்லாங்குழல், சங்கு
  - தேவசபையில் இந்திரனுக்கு முன்னால் மேனகை, ஊர்வசி இசைமீட்டி நடனம் ஆடுவதாகக் கூறப்பட்டுள்ளது.
  - இராமாயணத்தில் வரும் இராவணன் சாமகானம் பாடுவதில் வல்லவன். தனது பத்துத் தலைகளில் ஒன்றினை வெட்டி எடுத்து, நரம்புகளின் துணையுடன் இசை மீட்டி சிவனிடம் வரம் பெற்றதாக வரலாறு உண்டு.

- **குப்தர் காலம்**
  - கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சமுத்திரகுப்தன் வீற்றிருந்து வீணை வாசிப்பது போன்ற நிலை உள்ளது.
  - சமுத்திரகுப்தன் பெரிய கவி என இலக்கியங்கள் போற்றுகின்றன.

**தென் இந்தியா**

- **சங்க காலம்**
  - சங்ககாலத்தில் மக்களது வாழ்க்கையுடன் இசையானது இரண்டறக் கலந்து காணப்பட்டது.
  - இசை பற்றி சங்க நூல்களான பரிபாடல், சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவற்றில் கூறப் பட்டுள்ளது.

- **ஐவகைப் பண்**
  - குறிஞ்சிப் பண், முல்லைப் பண், மருதப் பண், நெய்தல் பண், பாலைப் பண் என்ற அடிப்படையில் மக்கள் தத்தம் நிலங்களில் சங்கீத மரபைக் கொண்டிருந்தனர்.
  - பண்களைப் பாடியவர்கள் பாணர் எனப்பட்டனர்.
  - யாழே இசைக்கருவிகளில் சிறப்பானது.
  - பெருநாரை, பெருங்குருகு, தாள சமுத்திரம் போன்ற இசைநூல்கள் இருந்தமை பற்றிய குறிப்புகள் உள்ளன.

- **சங்கமருவிய காலம்**

  - சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், காரைக்காலம்மையார், முதல் ஆழ்வார் மூவர் பாடல்களிலும் இசையின் சிறப்பினை அறியலாம்.
  - சிலப்பதிகாரம் தமிழரின் சங்கீதம், செந்நெறிச் சங்கீதமாக இருந்ததை உணர்த்துகின்றது.
    ''யாழும் குழலும் சீரும் மிடரும்
    தாழ்குரல் தண்ணுமை ஆடலோடு இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்''
    என சிலப்பதிகாரம் கூறுகின்றது.
  - காரைக்காலம்மையார் தோத்திரங்கள் இறைவனுடன் இசையச் செய்பவை.
    **உ- ம்:** அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை

- **பல்லவர் காலம்**

  - **நாயன்மார்கள், ஆழ்வார்கள்**
    ''ஏழிசையாய் இசைப் பயனாய்'' எனச் சுந்தரரும்
    ''ஓசை ஒலி எலாம் ஆனாய்'' என அப்பரும்
    ''பண்ணும் பதமேழும்'' எனச் சம்பந்தரும்
    ''பண் சுமந்த பாடல் பரிசு'' என மணிவாசகரும் இசையினைப் போற்றிப் பாடியுள்ளனர்.

  - ஆழ்வார்களது பாடல்களில் திருமாலின் ஆயிரம் நாமங்களையும் பண் இசைந்து பாடுவது.
    **உ- ம்:** ''அறுகால் வலி வண்டுகளா யிரநாமஞ்''

  - **மன்னர்களும் இசைக்கலையும்**
  - மகேந்திரவர்மன் பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை ''சங்கீரண சாதி'' எனக் கூறியுள்ளான்.
  - மேலும் ''பரிராதினி'' என்னும் பெயர் கொண்ட வீணையில் வல்லவனாக இருந்தான்.
  - இராசசிம்மன் இசையில் புலமை பெற்றிருந்தான்.
    **உ-ம்:** ''வாத்ய வித்யாதரன்'', ''வீணாதரன்'' எனும் பெயர்கள் கொண்டிருந்தமை.

- **சோழர் காலம்**
  - ஆலயங்களில் பல் வகை இசைக்கருவிகள் ஆராதனைகளில் வாசிக்கப்பட்டன.

    **உ- ம்:** தக்கை, தண்ணுமை முதலியன.
  - இசைச் சிற்பங்கள், இசை மண்டபங்கள், இசைக்கலைஞருக்குரிய நிலபுலங்கள் ஆலயத்துக்கு உரியனவாகும்.
  - முதலாம் இராஜராஜன் கோயில்களில் தேவாரங்களை ஓதும் வழக்கத்தை முறைப்படுத்தினான்.
  - சோழர் காலத்தில் ''வாச்சிய மாராயன்'' பட்டம் இசைக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது.
  - தேவாரம் ஓதுபவர்களை மேற்பார்வை செய்ய, **தேவார நாயகம்** என்னும் அலுவலகரை நியமித்தனர்.

- **நாயக்கர் காலம்**
  - தமிழ்நாட்டில் கீர்த்தனை வடிவம் - நந்தனார் கீர்த்தனை, இராம நாடகக் கீர்த்தனை என்பன இக்காலத்தில் அறிமுகமானது.
  - இசைத்தூண்கள் அமைக்கப்பட்டன.

    **உ-ம்:** மதுரை அழகர்
  - அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் - திருப்புகழ் சிறந்த சந்த லயம் உடைய நூலாகும்.

- **தற்காலம்**
  - கருநாடக இசையில் மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், தியாகராஜ பாகவதர் போன்றவர்களின் பங்களிப்பு.
  - விபுலாநந்தரின் யாழ்நூல் சிறந்த இசைநூலாகும்.
  - பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இசை ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.

    **உ-ம்:** விபுலாநந்தர் இசைநடனக் கல்லூரி, இராமநாதன் இசைநடனக் கல்லூரி
  - ஆலயங்களில் பஜனை, பிரார்த்தனை, நாமகீர்த்தனம், கதாகலாட்சேபம், என்பன இசைவளர்ச்சியைப் பிரதிபலிப்பனவாகும். மேலும் நாதாஞ்சலி, புராணபடனம், இசைக்கருவிகள் ஆலய வழிபாட்டில் பயன்பட்டமை, பஞ்ச புராணம் பாடும் மரபு தோன்றியமை.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

**படி 1 :** அழகியற்கலைகள் சமயச் சார்பானவை என்றும் கோயில் கலைகளுடன் தொடர்பானவை என்றும் மாணவர்களுக்கு முன்வையுங்கள்.

**படி 2 :** மாணவர்களை இந்து நுண்கலை தொடர்பான தகவல்களைத் திரட்டவும்,

படங்களைச் சேகரிக்கவும் வழிகாட்டுங்கள்.

**படி 3 :** மாணவர்களை 8 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு கலைகள் பற்றி, தேவையான தகவல்களைத் திரட்டி ஒழுங்குபடுத்துமாறு கூறுங்கள். சேகரித்த விடயங்களை வகுப்பறையில் முன்வைக்க இடமளியுங்கள்.

**படி 4 :** அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத் துணைகள்:**


| | | |
|---|---|---|
| இந்து கலாசாரம் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| நடனங்களும் ஓவியங்களும் | | |
| ஓவியக்கலை | - | இராமமூர்த்தி |
| தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் | - | மயிலை சீ. வேங்கடசாமி |
| வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 9 | - | தஞ்சைப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் |
| தென்னிந்திய வரலாறு | - | நீலகண்டசாஸ்திரி |
| தென்னிந்திய சிற்ப வடிவங்கள் | - | க. நவரெத்தினம் |
| சிவானந்த நடனம் | - | கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி |
| இந்துக் கோயில்களும் சிற்பங்களும் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| இந்து கலைக் களஞ்சியம் | - | தொகுதி 07 |

# பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல், முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்

15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லா பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத் திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 1

**தவணை** : முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : 01

**தேர்ச்சி** : 1.0

**தேர்ச்சி மட்டம்** : 1.1

**கருவியின் தன்மை** : **கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள்**

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.**

  (அ) நாகரிகம், பண்பாடு என்பவற்றின் விளக்கங்களையும், அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் எழுதுக.

  (ஆ) இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களைத் தொகுத்து எழுதுக.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| | நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. | தலைப்பை அறிமுகஞ் செய்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. | பாடங்களின் முக்கியத்துவம், தலைப்புக்குப் பொருத்தமான தாக இருத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. | ஒழுங்கமைப்பு பந்தி பிரித்தல், ஒழுங்கு பல்வேறு உத்தி களைப் பயன்படுத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. | மொழிச்செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத்தக் குறிகள், மொழிசார்ந்த பிரயோகங்கள், தெளிவு, ஆக்கபூர்வத்தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. | முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களைத் தர்க்கரீதியில் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| | இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 2

**தவணை** : முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : 02

**தேர்ச்சி** : 1.0

**தேர்ச்சி மட்டம்** : 1.3

**கருவியின் தன்மை** : **ஒப்படை**

- 'இந்து நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை அறிவதில் மூலாதாரங்கள் வகிக்கும் இடம்' எனும் தலைப்பில் ஒப்படை தயாரிக்க மாணவரை வழிப்படுத் - துங்கள்.
    - எடுத்துக்காட்டுக்கள், உதாரணங்கள் என்பன கால அடிப்படையில் அமைய வேண்டும் என்பதனையும் கூறுங்கள்.

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. ஒப்படையின் குறிக்கோளை விளக்குதலும் குறிக்கோள் களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தரவு /தகவல்கள் சேகரிப்பதற்காக கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தரவு / தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுக்கு வருதலும் அவற்றுக்குக் காரணங்காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 3

**தவணை** : முதலாம் தவணை

**கருவி இலக்கம்** : 03

**தேர்ச்சி** : 1.0

**தேர்ச்சி மட்டம்** : 1.3

**கருவியின் தன்மை** : **கண்காட்சி**

- இதிகாசங்களையும், அவற்றுடன் தொடர்புடைய நூல்களையும் உள்ளடக்கி ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய வழிப்படுத்துங்கள்.
  - அதில் நூல்கள், மாணவர்களது ஆக்கங்கள், பிறரால் ஆக்கப்பட்ட ஆக்கங்கள், இணையம் மூலம் தேடிப் பெறப்பட்ட விடயங்கள் போன்றவற்றைக் காட்சிப் படுத்துங்கள்.

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| **நியதிகள்** | **புள்ளிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | **தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார்** | | **தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை** | |
| 1. கண்காட்சியின் தலைப்புக்கேற்ற பொருத்தப்பாடும் தொடர்பும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. கண்காட்சியை ஏற்பாடு செய்ய கையாண்ட வழிமுறைகள் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. கண்காட்சியை ஒழுங்கமைத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்பாடும் உத்திகளின் பொருத்தமும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. ஆக்கத்தின் விளைவும் முடிவும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 4

**தவணை** : இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : 01

**தேர்ச்சி** : 1.0

**தேர்ச்சி மட்டம்** : 1.5

**கருவியின் தன்மை** : **சுவர்ப்பத்திரிகை**

- இந்து சமய வளர்ச்சியில் அறுவகைச் சமயநெறிகளின் பங்களிப்பினை (முழுமுதற் கடவுள், இலட்சண விதிகள், பிரமாண நூல்கள், தோற்றம், வரலாறு, வழிபாடு, தத்துவம், விரதங்கள், விழாக்கள், இலக்கியங்கள், மனித வாழ்வியலில் அது வகிக்கும் பங்கு என்பவற்றை உள்ளடக்கியதாக) விளக்கக்கூடிய சுவர்ப்பத்திரிகை ஒன்றைத் தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| | | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| **நியதிகள்** | **புள்ளிகள்** | **தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார்** | | **தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை** | |
| 1. கற்றல் - கற்பித்தல் செயன் முறை காட்டும் தொடர்பு, பொருத்தப்பாடு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. ஒழுங்கமைவும் பொதுவான தாக இருத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. அழகுபடுத்துவதற்காக கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும் தர்க்கரீதியான தன்மையும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. சுவர்ச்செய்திப்பத்திரிகை என்ற வகையில் ஆக்கத்திறனின் வெற்றிகரமான தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 5

**தவணை** : இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : 02

**தேர்ச்சி** : 2.0

**தேர்ச்சி மட்டம்** : 2.2

**கருவியின் தன்மை** : **உடனடிச் சொற்பொழிவு**

- வட இந்தியாவில் வைணவ பக்தி இயக்கம் என்ற தலைப்பில் ஸ்ரீசைதன்யர், இராமானந்தர், மீராபாய், கபீர்தாசர் ஆகியோரில் ஒருவர் பற்றி உடனடிச் சொற் பொழிவு ஒன்றை நிகழ்த்த மாணவரை வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| | | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| **நியதிகள் (சொற்பொழிவுக் குரிய நியதிகள்)** | **புள்ளிகள்** | **தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார்** | | **தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை** | |
| 1. அணுகுமுறையும் தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல். மொழிச் செம்மை | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. சிறப்பான மொழிப் பிரயோகங்கள் மேற்கொள்ளல் போன்றவற்றைப் பயன்படுத்துதல், ஆக்கபூர்வமான தன்மை | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. தெளிவு, குரல், கட்டுப்பாடு, முகபாவனை, அங்க அசைவுகள், நேரக்கட்டுப்பாடு, சரியான உச்சரிப்பு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. தொகுப்பு, முடிவுகளுக்கு வருதல், காரணங்காட்டல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 6

**தவணை** : இரண்டாம் தவணை

**கருவி இலக்கம்** : 03

**தேர்ச்சி** : 2.0

**தேர்ச்சிமட்டம்** : 2.3

**கருவியின் தன்மை** : **விவாதம்**

- ‘‘இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் என்பவற்றை விட இராமகிருஷ்ண மிஷன் அதிகளவு பணிகளையும், பங்களிப்புகளையும் செய்துள்ளது.’’

- இத்தலைப்பின் கீழ், மாணவரை ஒட்டியும் வெட்டியும் விவாதிக்க வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| | நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. | அணுகுமுறை, தலைப்பைத் தெளிவாக அறிமுகஞ் செய்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. | தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தலும் ஒழுங்கமைப்பும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. | தகவல்கள் ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியிலும் முன்வைக்கப் பட்டிருத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. | பொருத்தமான முகபாவனையும் அங்க அசைவுகளும் நேர்முக மாகவும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. | பொழிப்பாக்கல் முடிவுகளையும் அம்முடிவுகளுக்கான காரணங் களையும் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| | பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| | இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 7

**தவணை** : மூன்றாந் தவணை
**கருவி இலக்கம்** : 01
**தேர்ச்சி** : 3.0
**தேர்ச்சிமட்டம்** : 3.3
**கருவியின் தன்மை** : **ஒப்படை**

- ஈழத்து திருத்தலங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றி (பாடத்திட்டத்தில் உள்ளவை),
  - அமைவிடம்
  - இறைவன்
  - இறைவி
  - தீர்த்தம்
  - விருட்சம்
  - தல வரலாறு
  - விழாக்கள்
  - விரதங்கள்
  - இலக்கியங்கள்
  - சிறப்பு
  - சமூக உறவு

  என்ற விடயங்களை உள்ளடக்கிய ஒப்படை ஒன்றைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. ஒப்படையின் குறிக்கோளை விளக்குதல், குறிக்கோள் களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தரவு / தகவல்கள் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தரவு / தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்கரீதியான தன்மையும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுக்கு வருதலும் அவற்றுக்குக் காரணங்காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 8

**தவணை** : மூன்றாந் தவணை

**கருவி இலக்கம்** : 02

**தேர்ச்சி** : 4.0

**தேர்ச்சிமட்டம்** : 4.2

**கருவியின் தன்மை** : **கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள்**

- புலம் பெயர்ந்த நாடுகளில் இந்து நாகரிகப் பரம்பலை பின்வரும் தலைப்புகளின் கீழ்க் கட்டுரையொன்றை எழுதுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  - குடியேற்றம்
  - ஆலயங்கள்
  - விழாக்கள்
  - சடங்குகள்
  - கலை
  - இலக்கியம்

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பை அறிமுகஞ் செய்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. பாடங்களின் முக்கியத்துவம் தலைப்புக்குப் பொருத்தமானதாக இருத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஒழுங்கமைப்பு, பந்தி பிரித்தல், ஒழுங்கு, பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. மொழிச்செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத்தக் குறிகள், மொழிசார்ந்த பிரயோகங்கள், தெளிவு, ஆக்கபூர்வத்தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களை தர்க்கரீதியில் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 9

**தவணை** : மூன்றாந் தவணை

**கருவி இலக்கம்** : 03

**தேர்ச்சி** : 5.0

**தேர்ச்சிமட்டம்** : 5.1

**கருவியின் தன்மை** : **குழுக் கலந்துரையாடல்**

- பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள சிவ மூர்த்தங்களுள் ஏதாவது ஒன்றை பற்றி,
  - தோற்றப்பொலிவு
  - புராணக்கதைத் தொடர்பு
  - தத்துவம்
  - ஆலயத்தில் அதன் அமைவிடம்
  - திருமுறைப்பாடல்களில் அதன் செல்வாக்கு

  என்ற விடயங்களின் அடிப்படையில் குழுக் கலந்துரையாடலை மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. குழுவாக்க கலந்துரையாடலை ஒழுங்கு செய்தல், நெறிப்படுத்தல், தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத்தக்க வகையில் விருத்தி கரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான கணிசமான தர்க்கரீதியான தன்மையும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. பொழிப்பாக்கலும் முடிவுகளும் முடிவுகளுக்கான காரணங்களை யும் முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |